T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: XLV NO: 4

March 18th 1983

V2.11,31'N83
N83·45·4
136003

வெளியீடு 28–10–1983] [Issued 28-10-1983

2695

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## அணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை மார்ச் 18 ,1983— தொகுதி XLV எண் 4

**Friday, 18th March 1983—Volume XLV No. 4**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009

**Legislative Assembly Department, Fort St. George**
**Madras-600009**

விலை ரூ. 3-15 காசுகள்] [Price Rs. 3-15 Paise

ல
Y811, 51 N83
N83-45-4
136003

18—3—1983

உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள்:— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 301—336 |
| 2 | தகவல் கோரல்:— | |
| | (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை | 336—337 |
| | (ஆ) உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கைகள பற்றி அளிக்கப் பெறும் விளக்கக் குறிப்புகள். | 337—338 |
| 3 | ஒத்திவைப்புத் தீர்மானம்:— | |
| | போலீஸ் லாக்கப்பில் இருந்த ஒரு பெண் மரணம் அடைந்துள்ளது. | 339—350 |
| 4 | கவன ஈர்ப்பு:— | |
| | இலங்கைக் கடற்படையினரால் இராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள். | 350—354 |
| 5 | வரவு-செலவுத் திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி) | |
| | (அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை (ஆ) கோரிக்கை எண். 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 354—431 |
| | மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து | 354—355, 420—429 |
| | திரு. பெ. சு. திருவேங்கடம் | 360—367 |
| | திரு. என். விஜயபாலன் | 367—371 |
| | திரு. ந. சிவஞானம் | 371—378 |
| | திரு. ஏ. பாலுச்சாமி | 378—380 |
| | திரு. டி. மணி | 380—386 |
| | திரு. எம். வி. இரத்தினம் | 386—390 |

| | பக்கங்கள் |
|---|---|
| திரு. பொ. உத்திராபதி | 390—396 |
| திரு. கே. ஆர். கணபதி | 396—399 |
| திரு. நன்னிலம் அ. கலையரசன் | 399—403 |
| திரு. பி. முகமது இஸ்மாயில் | 403—407 |
| திரு. இரா. சண்முகம் | 407—411 |
| திரு. ஆர். சக்கரபாணி | 411—413 |
| திரு. இரெ. இராசமாணிக்கம் | 414—420 |
| அறிவிப்பு:— | |
| பேரவை அலுவல் | 429—430 |
| பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 431—432 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1983 மார்ச் 18.

பங்குனி 4, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு, 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை."

உழவருடைய கை தொழில் செய்யாமல் மடங்கி இருக்குமானால், விரும்புகின்ற எந்தப் பற்றையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் வாழ்வு இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

அமராவதி ஆற்றில் உடுமலைப்பேட்டை அணைக்கு மேல் நீர்த்தேக்கம் கட்டி மின்நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 454—திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அமராவதி ஆற்றில் மேல்மட்ட (உடுமலைப்பேட்டை அணைக்கு மேல்) நீர்த்தேக்கம் கட்டி, மின்நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, அமராவதி ஆற்றில் மேல்மட்ட (உடுமலைப் பேட்டை அணைக்கு மேல்) நீர்த்தேக்கம் கட்டி மின் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றுக்கு மேல் உடுமலைப்பேட்டை அருகே நீர்த்தேக்கம் கட்டி மின் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் திட்டத்தினால் எத்தனை மெகாவாட் மின்சாரம் கிடைக்கும், அதனுடைய எஸ்டிமேட் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 மெகாவாட் கிடைக்கும். சுமார் 11 கோடி ரூபாய் செலவாகும்.

**கோதையாறு கீழ் முகாமில் களவுபோன பொருட்கள்.**

*வினா எண். 455—திரு டி. மணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோதையாறு கீழ்முகாமில் பாதுகாப்பாக வைத்திருந்த உயர்ரக கேபிள்கள், ஸ்டீல் ரோப்புகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் திருடு போயுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) கோதையாறு கீழ் முகாமில் பாதுகாப்பாக வைத்திருந்த விலை உயர்ந்த பொருள்கள் திருடு போகவில்லை. ஆனால் 10-6-81-ல் 63 கிலோ கிராம் எடையுள்ள எம். எஸ். ஸ்க்ராப் களவு போயிற்று.

(ஆ) இது சம்பந்தமான குற்ற முறையீடு ஒன்று குலசேகரம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோதையாறு கீழ் முகாமில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட பொருள் காணாமல் போனதாகச் சொன்னார்கள். ஆனால் உள்ளே இருக்கக்கூடிய பொருள் அல்ல. வெளியே போடப் பட்டிருந்த ஸ்டீல் ரோப்தான் திருடு போய் இருக்கின்றது என்றுதான் அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஊழியர்கள் மத்தியிலே இருந்து புகார் வந்தது. நான் நேரடியாக அது குறித்து விசாரித்தபோது அது பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கவில்லை; அதனால் திருடு போய்விட்டதாக அறிந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு பொருட்கள் காணாமல் போய் இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே இனியாவது அந்தப் பொருட்களை வெளியே போட்டு வைக்காமல் பாதுகாப்பாக ஸ்டீல் ரோப்புகளை வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள் வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தூத்துக்குடியில் மூன்றாவது அனல் மின்நிலையம் அமைக்கும் பணி.**

*வினா எண் 456—திரு சி. கோபால்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் மூன்றாவது அனல் மின்நிலையம் எப்போது ஏற்படுத்தப்படும்?



(ஆ) அது எப்போது உற்பத்தியைத் துவங்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது பிரிவின் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16—ம் நாளன்று இயக்கி வைக்கப்பட்டுவிட்டது.

(ஆ) இந்தப் பிரிவு 1982 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து மின் உற்பத்தியைத் துவக்கியுள்ளது.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் மேலும் ஒரு அனல் மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசினைக் கேட்டுள்ளதா? அதற்கு மத்திய அரசு ஏதாவது தயக்கம் காட்டு கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் மேலும் 710 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க வேண்டும் என்று மாநில அரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது. அதற்கு இன்னும் அவர்கள் அனுமதி கொடுக்கவில்லை போதுமான நிலக்கரி ஒதுக்குவதில் காலதாமதம் இருப்பதாக அறிகிறேன்.

திரு சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையம் எப்போதும் நல்ல முறையில் இயங்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நிலக்கரியினை எப்போதும் கையிருப்பாக வைத்துக் கொள்கின்ற வகையில் நிலக்கரியினை இறக்குமதி செய்து கொள்வதற்கு மத்திய அரசினிடத்திலே ஒரு வேண்டுகோளை தமிழக அரசு வைத்திருக்கின்றதா? அதற்கு மத்திய அரசு ஏதாவது அனுமதி அளித்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் ஒரு முறை தெரிவித்ததைப் போல் தூத்துக்குடி அனல் மின்நிலையம் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. 630 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள அந்த அனல் மின் நிலையம் 500 மெகாவாட் அளவுக்கு இப்போது மின்சாரம் உற்பத்தி செய்து வருகிறது. நிலக்கரியைப் பொறுத்தவரையில் அது சுரக்கும் காய்க்கும் என்று சொல்வார்களே அதுபோல் அன்றாடத் தேவைக்கு சரியாக இருக்கிறது. திடீரென்று நிலக்கரி வருவதில் தடை ஏற்பட்டால் நிலக்கரி இல்லாத காரணமாக மின் உற்பத்தி நின்று விடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே பஃபர் ஸ்டாக் (Buffer stock) என்ற அளவுக்கு நிலக்கரியை தேக்கி வைத்து அவசரமான நேரத்திற்குப் பயன்படுத்த 5 லட்சம் டன்னாவது இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டோம்.

மத்திய மின் சக்தித் துறையைப் பொறுத்தவரையில் 2 லட்சம் டன் இறக்குமதி செய்து கொள்ளலாம் என்ற அளவில் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் அதற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி 3-வது அனல் மின்நிலையம் உற்பத்தி சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் துவங்கியது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த 3 வது அனல் மின் நிலையத்தின் மூலமாக உற்பத்தி ஆகக்கூடிய மின்சக்தியின் அளவு எவ்வளவு? இதிலே தமிழகத்திற்கு எவ்வளவு மின்சாரம் கிடைச்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுவதும் தமிழகத்திற்குத்தான் கிடைக்கிறது. டிசம்பர், ஜனவரி இவைகளில் எல்லாம் அந்த ஒரு யூனிட்டைப் பொறுத்தவரையில் 86 மில்லியன் அதாவது 8 கோடியே 60 லட்சம் யூனிட்டுகள் நமக்குக் கிடைத்திருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இப்போது 630 மெகாவாட் மின்உற்பத்தி திறன் கொண்ட அனல் மின் நிலையம் இயங்கிக் காண்டிருப்பதாகவும் மேலும் 710 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு அனல் மின் நிலையம் அமைக்க மத்திய அரசை நாம் கேட்டிருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், அந்த 710 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மின்நிலையத்தை துவங்க எத்தனை கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை கோடி என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. நாங்கள் ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் இதைத் தந்திருக்கிறோம். நாம் இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அவர்கள் அதை அனுமதித்தால்தான் நாம் அதை நிறைவேற்றமுடியும். இந்த ஆண்டாவது அனுமதி தரவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். ஏன் என்றால் இந்த ஆண்டு அதை அனுமதித்தார்களானால் அந்த வேலை முடிவதற்கு 5 ஆண்டுகள் ஆகும். அதற்குப் பிறகாவது மின் பற்றாக்குறை நீங்கும்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய கடுமையான மின்நெருக்கடி காலத்தில் தூத்துக்குடி ஒரு ஆபத்பாந்தவனாக உதவி செய்யக் கூடிய ஒரு அனல் மின்நிலையமாக இருக்கிறது. அதில் திடீர் திடீர் என்று மாதத்திற்கு ஒரு முறை உற்பத்தி தடைபடுகிறது. அதனுடைய நிலைமையை மாற்றுவதற்கு தடையில்லாமல் நிரந்தரமான ஒரு நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என அறியவிரும்புகிறேன்?



மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒன்றும் திடீர் திடீர் என்று நின்று விடுவது இல்லை. ஏதாவது ஒரு காலத்தில் ஏதாவது ஒரு நேரத்தில் ஒரு கோளாறு ஏற்பட்டு விடுகிறது. மற்றபடி அல்ல. பொதுவாக அனல் மின் நிலையங்கள் இயங்க மத்திய மின் குழுவும் Central Electricity Authority—ஒரு நார்ம் வைத்திருக்கிறார்கள். முதல் ஆண்டில் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும் இரண்டாவது ஆண்டில் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும் என்று நார்ம் வைத்திருக்கிறார்கள. தூத்துக்குடிக்கு மத்திய மின் குழு நியமித்து இருக்கிற அந்த நார்ம் ஸ்டாண்டர்டை விட அதிகமாகவே இயங்கி வருகிறது. நமக்கு இருக்கிற அசுரப் பசிக்கு அது போதவில்லை. அது ஒரு மணி நேரம் தடைப்பட்டால் கூட அது நமக்கு பெரும் கோளாறாகத் தெரிகிறது, வேறு அல்ல.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு புதிய மின் நிலையங்களுக்கு அனுமதி தருவதில் தாமதம் ஏற்பட்டாலும் ஏற்கனவே இருக்கிற மின் நிலையங்களை விரிவாக்கம் செய்வதற்கு முன்னுரிமை அளிக்க மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் வற்புறுத்த எப்போதும் கஞ்சத்தனம் காட்டுவதில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய நிலக்கரித் தேவை 5 லட்சம் டன் என்றும் அதிலே மத்திய அரசு 2 லட்சம் டன் தான் தற்போது கொடுத்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இன்னும் பற்றாக்குறையாக இருக்கக் கூடிய 3 லட்சம் டன் நிலக்கரியைப் பெறுவதற்கு நாம் மேற்கொண்டு என்ன முயற்சி செய்திருக்கிறோம் என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே மாதம் ஒன்றுக்கு நமக்குத் தேவைப்படுகிற நிலக்கரி $1\frac{3}{4}$ லட்சம் டன். ஆனால் இப்போது அங்கே இருக்கிற நிலக்கரி கையிருப்பையும் வருவதையும் பார்க்கிறபோது அன்றன்றைக்குச் சரியாகிற நிலைமைதான் இருக்கிறது. நாம் என்ன சொல்கிறோம் என்றால் ஸ்டாக் 5 லட்சம் டன்கள் இருக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். மத்திய அரசைப் பொறுத்தவரையில் 5 லட்சம் டன் தேவையில்லை, 2 லட்சம் டன்னாவது வைப்போம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசின் நிதித்துறை அதற்கு ஒப்புக்கொண்டால் இறக்குமதி செய்வதற்கு அனுமதி கிடைக்கும். ஆனால் அதிலே பிரச்சினை இருக்கிறது. அதனால் நமக்குக் கிடைக்கவில்லை.

[1983 மார்ச் 18

திரு. சு. பாலன்: மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு நமக்கு நிலக்கரி கிடைப்பதிலே இருக்கிற தாமதத்தின் காரணமாக மின் உற்பத்தி குறைவாக இருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆனால் சென்னை போன்ற இடங்களில் தனியார்கள் ஏராளமான நிலக்கரியை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படி நிலக்கரி கிடைக்கிறது? அந்த நிலக்கரியை அரசே கைப்பற்றி முக்கியமான அரசுப் பணிகளுக்கு மின் உற்பத்திக்கு வழிவகை செய்வதற்கான முறையிலே தனியார்கள் விற்கிற நிலக்கரியை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனியாரிடத்திலே இருப்பது மிகமிகக் குறைவாக இருக்கும். நமக்கு தூத்துக்குடிக்கே மாதம் 2 லட்சம் டன் தேவைப்படுகிறது. ஆகவே தனியார்களுக்கு ஏதோ கிடைக்கிறது என்று அதை எடுத்துக்கொள்ளுவதன் மூலமாக அதைச் சரிக்கட்டிவிட முடியாது. தனியார்களுக்கு எப்படிக் கிடைக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் தெரிவிக்கிறேன்.

**சென்னையில் மகாகவி பாரதிக்கு நினைவாலயம் கட்டும் திட்டம்.**

*வினா எண் 457—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை ஆயிரம் விளக்கு பகுதியிலுள்ள சுதந்திர நகரில் பாரதிக்கு நினைவாலயம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: சென்னையில் மகாகவி பாரதிக்கு சிறப்பான நினைவு மண்டபம் கட்ட அரசு முடிவெடுத்துள்ளது. ஆயிரம் விளக்கு பகுதியில் இந்த மண்டபம் அமைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டதால், தற்பொழுது மெரினா காமராசர் சாலையும் அவ்வை சண்முகம் சாலையும் கூடும் இடத்தில் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சி சார்பற்ற முறையில் அனைத்துத் தலைவர்களுக்கும் இந்தியா முழுவதும் நினைவுச்சின்னங்கள் எழுப்பும் தமிழக அரசும் மாண்புமிகு செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் நடந்து முடிந்த தமிழ்காககும் போராட்டத்தில் உயர்நீத்த உத்தமத் தியாகிகள், துப்பாக்கிக் குண்டுகளைத் தாங்கி கல்லறைக் காவியங்களான நம் குலக்கொழுந்துகளுக்கு மாவட்டந்தோறும் நினைவுச்சின்னங்கள் எழுப்ப அரசு முன் வருமா? அதற்கு அரசியல் சட்டத்தில் ஏதாவது வாய்ப்பு ஏற்படுத்தித் தருவார்களா?



1983 மார்ச் 18]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தனிக் கேள்வி போட்டால் அதைப்பற்றி விரிவாகப் பதில் அளிக்க முடியும்.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, பாரதியார் நினைவாலயம் கட்ட திட்டமிடுவது பற்றி மகிழ்ச்சி. அது வெறும் கட்டட அளவிலே ஆலயமாக மட்டும் இருக்குமா அல்லது அவர் இயற்றிய கவிதைகளை நூல்களைப் பரப்புவதற்கு வழிவகை செய்யக்கூடிய முறையிலே அதிலே ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, நினைவாக எழுப்பப்படுகிற கட்டடம் அல்ல. இது ஒரு மண்டபம். பல்வேறு பணிகளுக்கும் பயன்படுகிற வகையில் கலை நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் நாடகங்கள், மாநாடுகள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் நடத்துவதற்கான வகையிலும், ஒரு நூல் நிலையம் அமைக்கின்ற வகையிலும் அமையும். இதிலே இன்னொரு கருத்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மாநாடுகள் தேசிய அளவிலே மாநாடுகள் நடத்துகின்ற ஒரு மண்டபமாகவும் அதைப் பயன்படுத்தலாமா என்பதையெல்லாம் பரிசீலித்து மிகப் பெரிய நல்ல பாரதி நினைவைத் தெரிவிக்கின்ற வகையிலே, அதே நேரத்திலே மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலும் அந்த மண்டபம் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்குப் பகுதியில் அமைக்க இருந்த பாரதியார் நினைவாலயம் அமைப்பதற்கு என்ன தடை ஏற்பட்டது? தற்போது அமைக்கிற இடத்தில் அமைக்க எவ்வளவு தொகை ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது? பாரதியார் இயற்றிய நூல்களை எல்லாம் மலிவு விலையில் தருவதற்கு அந்த மண்டபத்தில் அமைக்கப்பட இருக்கிற வாசகசாலையில் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே தாகூர் நூற்றாண்டு விழாவை ஒட்டி மத்திய அரசால் ஓரளவு நிதியுதவி செய்து மாநில தலைநகரங்களில் தாகூர் அவர்கள் பெயரால் நினைவு மண்டபம் எழுப்பவேண்டுமென்று ஆணையிடப்பட்டது. அதையொட்டி ஆயிரம் விளக்கு பகுதியில் இருந்த இடம் தாகூர் நினைவு மண்டபத்தை எழுப்புவதற்காக ஒதுக்கப்பட்டது. பின்னாலே அதை தாகூர் பெயராலே, பாரதி பெயராலே எழுப்பலாம் என்று கருதி பாரதி சங்கத்திற்கு இந்த இடத்தை அளித்தார்கள். ஆனால் அதிலே ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறவர்கள் குடிசைகளைப் போட்டுக் கொண்டு அவற்றை அப்புறப்படுத்த மறுத்துவிட்டார்கள். மீண்டும் அரசு நடவடிக்கை எடுத்த நேரத்தில் அரசை எதிர்த்து உயர்நீதி மன்றத்திலே தடையாணை பெற்றுவிட்டார்கள். ஆகவே இந்தத் தடையாணைகளை எல்லாம் நீக்கி அந்த இடத்தைப்

பெறுவதென்பது சிக்கலான காரியம் என்பதை மனதிலே வைத்து மகாகவி பாரதிக்கு மாத்திரமாவது நினைவு மண்டபம் எழுப்புகிற பணியை துரிதப்படுத்தவேண்டுமென்று அரசு முடிவெடுத்து இப்போது இந்த இடத்தை ஒதுக்கியிருக்கிறது. ஆகவே இதற்கு சுமார் 75 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு அரசு 10 லட்சம் நிதியுதவி செய்வதற்கும் முன்னாலே ஒப்புதல் அளித்து இருக்கிறது. அந்த மண்டபம் அமைக்கப்படுகிறபோது பாரதியாருடைய நூல்கள் எல்லாம் அங்கே கிடைப்பதற்கான வழிவகை செய்யப் படுவதைப் பற்றி ஆராயப்படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, நம்முடைய சுற்றுலா அமைச்சர் அவர்கள் ஆயிரம் விளக்குப் பகுதியிலே பாரதியாருடைய நினைவு மண்டபம் கட்டுவதற்கு அங்கே ஏற்பாடு செய்யப்பட்டு தடங்கல் காரணமாக நிறுத்தப்பட்டதாகவும் வேறு இடத்தில கட்டவிருப்பதாகவும் தெரிவித்தார்கள். தென்சென்னை ஒரு சுற்றுலா மையமாகிக் கொண்டிருக்கிறது. வட சென்னை அந்தளவிற்கு ஆகவேண்டுமென்றால் பாரதியாருடைய நினைவு மண்டபம் வியாசர்பாடி பகுதியில் வரவேண்டும். அங்கே ஏராளமான இடங்கள் வீட்டுவசதி வாரியத்திற்கும் சர்க்காருக்கும் சொந்தமான இடங்கள் இருந்துகொண்டிருக் கின்றன. தற்போது கூட குடியிருப்புப் பகுதிகள் பாரதியாருடைய பெயரால் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த மண்டபத்தை வியாசர்பாடி பகுதியில் கட்டி அந்தப் பகுதியை சுற்றுலா மையமாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, மகாகவி பாரதியாருக்கு நினைவு மண்டபம் அமைப்பது சுற்றுலா வளர்ச்சியின் அடிப்படையில் அல்ல. அவருடைய நினைவாலே ஒரு மண்டபம் எழுப்பி மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பது அந்தத் திட்டத்தினுடைய நோக்கம், ஆகவே சென்னை மாநகரத்தில் இருக்கிற மக்களுக்கும், தமிழ்நாட்டின் மற்றப் பகுதிகளிலிருந்து வருகிற மக்களுக்கும் பயன்படுகிற அளவிற்கு அந்த மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்று தான் இந்த இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல வியாசர்பாடி பகுதியிலே கொண்டுபோய் பாரதியாருக்கு மண்டபம் எழுப்புவதால் வியாசர்பாடி பகுதிக்குப் பயன்படுமே தவிர மாநகரம் முழு வதற்கும் பயன் தராது. மாண்புமிகு உறுப்பினரின் கருத்தை வேறு ஒரு கோணத்திலிருந்து பரிசீலிக்கலாம்,



**ஆன்மீக நெறிகளை ஆலயங்கள் மூலப் மக்களிடையே பரப்பும் திட்டம்**

***வினா எண்—458 திரு. சி. கணேசன்:** மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆன்மீக நெறிகளை ஆலயங்கள் மூலமாக மக்களிடையே இந்து சமய அறநிலையத்துறை மூலமாக பரப்புவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதாவது உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ,ஆ) திருக்கோயில் களில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின் போது சமய வல்லுநர்களைக் கொண்டும், பிரசாரகர்களைக் கொண்டும் சமய சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டு வருகின்றன. அதுதவிர சிறந்த தமிழ் அறிஞர்களை, தமிழ் புலவர்களைக் கொண்டும் ஆன்மீக நெறிகளை அந்த நிகழ்ச்சிகளின் போது மக்களுக்கு போதிக்கப்பட்டு வருகின்றது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆன்மீக நெறிகளைப் பரப்புவதற்காக திரு விழா நேரங்களில், மற்ற முக்கிய நிகழ்ச்சிகளில் பிரச்சாரங்கள் ஏற்படுத்தப்படுகின்றன என்று தெரிவித்தார்கள். குறிப்பாக திருவிழா நேரங்களில் என்றில்லாமல் எல்லா நாட்களிலும் சொல்லிக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? இந்த சமய அறநிலையத் துறையின் மூலமாக கோவில்களிலிருந்து ஏராளமான பணம் நாம் செலவழித்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக சுவாமி விவேகானந்தர் அவர்களின் போதனைகளை எடுத்துச்சொல்கிற வகையிலே ஏற்பாடுகள் செய்யப்படுமா? மாணவர்களுக்குப் பயன்படுகிற வகையில் யோகாசனப் பயிற்சி கூட இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக ஏற்படுத்தப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்வி, ஆன்மிக நெறிகளைப் பரப்புவதற்கு அறநிலையத் துறை என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக் கிறது என்பது. அதற்கு பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோகாசனம் பற்றியும் மற்றும் விவேகானந்தர் போன்ற அறிஞர் பெருமக்களைப் பற்றியும் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அவைகளைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அது அறநிலையத் துறைக்குள்ளே வருகிறதா இல்லையா என்பதைப் பரிசீலித்து அதற்குத் தக்க பதில் அளிக்க இயலும்.

திரு எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆன்மிகத் துறை மூலம் செய்யவேண்டியவை களை பல ஆலயங்கள் செய்யாமல் இருக்கின்றன. அவைகள் அறநிலையத் துறைக்குக் கட்டுப்பட்ட ஆலயங்களாக இருக்கின்றன. அவைகளுக்கு அறிக்கை மூலம் அல்லது குறிப்பு மூலம்—நல்ல சொத்துள்ள ஆலயங்களைச் சொல்கிறேன், ஏழை ஆலயங்களைச் சொல்லவில்லை—தெரிவித்து, அந்த ஆலயங்கள் கட்டாயமாக ஆன்மீகத் துறையிலே செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டுமென்று அரசு குறிப்பிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல ஆலயங்களிடத்திலே பொருளாதார வசதி இல்லாத அந்த நிலையில்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தடைப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று பொருளாதார வசதிகள் இருக்கின்ற ஆலயங்களில் கண்டிப்பாக இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அற நிலையத்துறை— எல்லா ஆலயங்களிலும் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு இந்த ஆன்மீக உணர்வை விளக்குகின்ற சொற்பொழிவுகள், தேவாரம், திருவாசகம் பற்றிய, அந்தத் திருப்பாசுரங்களைப் பற்றிய உரைகள் எல்லாம் நிகழ்த்தப்பட வேண்டும். அந்தத் துறையிலே அதிக கவனம் செலுத்தவேண்டுமென்றும் இப்பொழுது அறிவுறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறைமூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆன்மீக நெறிகளை வேகமாகப் பரப்பும் போது, ஏதோ இந்த அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு மதத்திற்குத்தான் சொந்தம் என்ற அடிப்படையில் தவறான பிரச்சாரத்தைக் கிளப்பி விட்டிருப்பது அமைச்சருடைய பார்வைக்கு வந்ததா? அதற்குரிய வழிகளை முன்ஜாக்கிரதை யாகயிருந்து இந்த ஆன்மீக நெறிகளைப் பரப்புவதற்கு இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை அந்தச் சமய அறநெறிகளைப் போதிப்பதற்கான அல்லது பரப்பு வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது. இதைப் போன்று மற்ற மதங்களைச் சேர்ந்த துறைகளும் அவர் களுடைய போதனைகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இதிலே யாருடைய போதனையிலும் யாரும் தலையிடுகின்ற நிகழ்ச்சிகள் எங்கேயும் நடைபெறுவதில்லை. அரசு அதற்காக ஆக்கமோ ஊக்கமோ தருவதில்லை; காரணம் ஒருமதச்சார்பற்ற அரசு என்கிற வகையில் எந்த எந்த மக்கள், எந்த எந்த மதத்தை விரும்புகிறார்களோ, அந்தந்த மதங்க[illegible]



பின்பற்றுவதற்கும் வழிபடுவதற்கும் அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது. ஆகவே, தவறான கருத்தைப் பரப்புகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற அந்த அடிப்படையிலேயே தவறாகச் செல்கிறவர்களைப் பற்றி நாம் நியாயமாக இருப்பவர்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. யார் தவறானவர்கள், யார் நியாயமானவர்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் தெளிவாக உணர்ந்து கொண்டு தானிருக்கிறார்கள்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற பொருட்காட்சியில் இந்து அறநிலையத் துறையின் சார்பாக நடந்த நிகழ்ச்சியில் விஞ்ஞான ரீதியாக கோயில்களில் பூஜை முறைகளைப் பற்றி ரொம்ப அற்புதமாக விளக்கம் தெரிவிக்கப்பட்டது. அதை மாநிலம் முழுவதும் மக்களிடையே பரப்புவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வி கொஞ்சம் விளக்கம் அளிப்பதற்குப் பயன்படுகிற கேள்வியாக அமைந்திருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற சுற்றுலாப் பொருட் காட்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைந்திருந்த அந்த அரங்கில் இந்து சமயத்துடைய வழிபாட்டு முறைகளில் விஞ்ஞான அடிப்படைகள் இருக்கின்றன என்று குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்கள் ஒருமிகச் சிறந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் சில கருத்துக்களைக் காட்டுகிற அந்தக் கண்காட்சியை அங்கே ஏற்படுத்தியிருந்தார்கள். அதற்கு மிகப் பெரும்பான்மையான மக்களிடத்திலேயிருந்தும் அறிஞர்களிடத்திலேயிருந்தும் ஆதரவுகள் கிடைத்திருக்கின்றன.

அதே நேரத்திலே சில தனிப்பட்ட, அந்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாத சிலர் அரசு நடத்துகிற பொருட்காட்சியிலே இது எப்படி இடம் பெறலாம் என்றுகூட கருத்துக்களைத் தெரிவித் தார்கள். அரசு நடத்துகிற பொருட்காட்சியில் அரசின் செலவிலே நடத்தப்படவில்லை அறநிலையத் துறை தன்னுடைய ஆலயங்கள் சார்பில் ஆலய நிதியிலிருந்து அமைக்கப்பட்ட அரங்கு. அதற்காகத் தான் அந்தக் கருத்துக்களை விளக்குகிற அந்தப் பொருட்காட்சி அங்கே அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற கருத்து பரவலாக எல்லோராலும் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அந்த முயற்சி முன்பே மேற்கொள்ளப்பட்டு முதன்முதலாக இது திருநெல்வேலியில் நடைபெற்ற பொருட் காட்சியில்தான் பராசக்தி மகளிர் கல்லூரி சார்பில் அங்கே பொதுமக்களுக்காக அறநிலயத் துறை அரங்கில் வைக்கப் பட்டது. அதிலிருக்கிற சிக்கல், அந்தக் கல்லூரியைச் சார்ந்த

ஆசிரியர்கள் அதில் கலந்து கொள்வதில் சங்கடம் இருக்கிறது. ஆனால் அதில் பயிற்சி கொடுத்து மாவட்டந்தோறும் நடைபெறுகிற பொருட்காட்சிகளில் அறநிலையத்துறையால் அமைக்கப்படுகிற அரங்கங்களில் அறநிலையத் துறை செலவில், ஆலயங்கள் செலவில் அந்தக் கருத்துக்கள் பரப்பப்படுகிற அந்த முடிவு அறநிலையத்துறையினிடத்தில் இருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, ஆலயங்களில் ஆன்மீக நெறியைப் பரப்புகிறபோது இதற்கு சம்பந்தமில்லாமல் இதற்கிடையில் சில ஆலயங்களில் சில இயக்கத்தினர் தொண்டர் படைப் பயிற்சி என்று தமிழ்நாட்டில் நடத்திவருகிற ஒரு தவறான நிலை இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு இத்துறை கவனம் செலுத்தவில்லையா, செலுத்தவில்லை என்றால் இனி மேலாவது அப்படிக் கவனம் செலுத்தி அதைத் தடுக்க முயற்சி எடுக்குமா என்றுஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்றதகவல் இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படி எந்தத் தொண்டர் படையும் ஆலயங்களுக்குள்ளே பயிற்சி நடத்தவோ அல்லது வேறு முயற்சியில் ஈடுபடவோ அனுமதி அளிக்கப்படவில்லை. அப்படி எங்கேயாவது நடைபெறுகிறது என்றால் அந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் சொல்வார்களானால் அது உடனடியாக தடுத்துநிறுத்தப்படும்.

## சுதந்திர போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் திட்டம்.

*வினா எண். 459— திரு.ப. தீர்த்தராமன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுதந்திர போராட்ட வீரர் சுப்பிரமணியசிவா அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, திரு சுப்பிரமண்ய சிவா அவர்கள் பிறந்த ஊரான வத்தலகுண்டில் அவர்களுக்கு ஒரு நினைவுமண்டபம் அமைக்கவும் அவர்கள் இறந்த இடமான பாப்பாரப்பட்டியில் உள்ள சமாதியைப் புதுப்பித்து அங்கே ஒரு நினைவுச்சின்னம் அமைப்பதாகவும் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். அதையொட்டி இந்த நூற்றாண்டுவிழா நேரத்திலாவது அவர்கள் பிறந்த இடத்திலும் மறைந்த இடத்திலும் நினைவுச்சின்னங்கள் அமைப்பதற்கு அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே அவர்கள் இறுதிகாலத்தில் வாழ்ந்து பாரத மாதா பெயரால் ஒரு ஆலயம் எழுப்ப முயற்சித்து மறைந்த அந்த பாப்பாரப்பட்டியில் அந்த நினைவுச்சின்னத்தை எந்த வகையில் நிரந்தரமான நினைவுச் சின்னமாக மாற்றுவது என்பதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சி எடுத்து ஒரு குழு அமைத்து அரசுக்கு சில கருத்துக்களை அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்து அதற்கேற்ற முடிவுகளைமேற்கொள்ளும் என்று முன்பே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற திரு சுப்பிரமண்ய சிவா அவர்கள் பிறந்த ஊரான வத்தலகுண்டு கிராமத்தில் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு அரசு மாத்திரம் முயற்சியெடுப்பதை விட இப்படிப்பட்ட மிகப் பெரிய தியாகிகள், சிறந்தவீரர்கள் வாழ்ந்து மறைந்தார்கள் என்ற உணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்துவதற்கு இன்றிருக்கிற இளம் தலைமுறையினர் உணர்ந்துகொள்ளவும் அதை பொது மக்கள் முயற்சியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து அப்படிப் பட்டதொரு நினைவுச்சின்னத்தை அமைக்க முயல்வார்களானால் அரசு தக்க உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.க. இரா. சின்னராசு: சுதந்தரப் போராட்ட வீரரான திரு சுப்பிரமண்ய சிவா அவர்கள் காலமான இடம் பாப்பாரப்பட்டி ஏற்கனவே ஒரு கேள்விக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் அவர்களுக்கு ஒரு நினைவுச்சின்னம் எழுப்புவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையில் அதற்குரிய ஆயத்தங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னபோது அதுபோதாது, மிகப்பெரிய அளவில் கட்ட வேண்டும் என்று கேட்டநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் எங்கள் கட்சி சார்பாக நிதி வசூலித்துத் தருகிறோம் என்றும் அதன் மூலம் அந்த நினைவுச்சின்னத்தை சிறிது விரிவாகக் கட்ட வேண்டும் என்று அந்த நேரத்தில் கேட்டபோது, அதற்குரிய முயற்சியை மேற்கொள்ளுங்கள் நாங்கள் மேற்கொண்டு கூடுதலான நிதி ஒதுக்கி மிகப் பெரிய அளவிற்கு ஒரு நினைவுச்சின்னம் ஏற்படுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் பதலளித்தார்கள். எந்த அளவிற்கு எவ்வளவு ரூபாய் திட்டத்தில் அது கட்டப்படும், எவ்வளவு நிதி அதற்காக ஒதுக்கப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, நூற்றாண்டு விழா நடத்துவது பற்றிய கேள்வியாகும் இது. அதுபற்றிய குறிப்புகள்தான் என்னிடம் உள்ளன.

அவருக்கு பாப்பாரப்பட்டியில் நினைவுச்சின்னம் எழுப்பப் படுவது பற்றி தனியாக கேள்வி போட்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக் கெல்லாம், எந்த அளவிற்கு நடைமுறைப் படுத்தப்படுகிறது, முயற்சிகள் மேற் கொள்ளப்படுகிறது என்பதைப் பற்றிய குறிப்புகள் அவைக்கு தரப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தில் சுதந்திரம்பெற்றுதந்த வீரர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் அவர்களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. இன்றையதினம் தமிழகத்திலே திராவிட ஆட்சி வந்ததற்குப் பிறகு இந்த நாட்டிற்கு தமிழ்நாடு என்றும் தமிழக அரசு என்றும் பெயர் சூட்டினார்கள். அதே நேரத்தில் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று 67க்கு முன்னால் சங்கரலிங்க நாடார் 45 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். தமிழ்நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்த அவருக்கு இந்த அரசால் நினைவுச் சின்னம் எழுப்பப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுப்பிரமணிய சிவாவிலிருந்து சங்கரலிங்க நாடாருக்குப் போய்விட்டீர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், பதில் தரப்படும்.

### சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயப்பெருமாள் கோயில் இராஜகோபுரத்திருப்பணி

*வினா எண், 460 திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோயில் இராஜகோபுரம் திருப்பணிக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு?

(ஆ) வேலை எப்பொழுது முடியும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ மற்றும் ஆ) குமரிமாவட்டம் சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயப் பெருமாள் திருக்கோயில் இராஜகோபுர திருப்பணிக்கு ரூ. 4 இலட்சத்திற்கு ஆணையரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ரூ 2 இலட்சம் அரசு மான்யம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திருப்பணியில் 70 சதவீத வேலைகள் முடிக்கப்பட்டு, இந்தத் திருப்பணிகள் 1983 மே மாத முடிவிற்குள் முடிந்து விடக்கூடிய நிலையில் உள்ளது.

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, 4 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி. இந்தப் பணம் திருப்பணி வேலைக்கு மட்டும் ஒதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதோடு சேர்ந்த கோரிக்கையாக, இந்தத் திருப்பணி நடைபெறுகின்ற இராஜ கோபுரத்திற்குப் பக்கத்திலே ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளம் மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே இந்தத் திருப்பணி நடைப்பெறுகின்ற நேரத்தில், இந்தக் குளத்தையும் சேர்த்து சரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணியோடு இந்த திருக்குளத்தையும் சீர் செய்யவேண்டும் என்று கேட்டு முன்பே அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது ஆகவே, இந்தத் திருப்பணியைத் தொடர்ந்து, இந்தக் குளத்தை சீரமைக்கும் பணியையும் எடுத்துக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரத் திலிருக்கும் அருள்மிகு தாணுமாலையப் பெருமாள் கோவிலிலுள்ள இராஜகோபுர திருப்பணிக்கு 4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டி ருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் 2 இலட்சம் ரூபாய்கோவிலிருந்து வசூலிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கனவே 7½ கிலோ தங்கம் விற்கப்பட்டதாகச் சொல்லப்படு கிறதே, அதிலிருந்து இந்த நிதி ஒதுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள. சுசீந்திரத் திலுள்ள இந்தக் கோவில் மாத்திரம் ஒரு தனி நிர்வாகத்திலே இல்லை. அங்கே இருக்கின்ற தேவஸ்வம் போர்டு என்ற ஒரு அமைப்பின்கீழ், நூற்றுக்கும் மேற்பட்ட கோவில்கள் இதன் நிர்வாகத்தின்கீழ் இருக்கின்றன. ஆகவே, இந்த வருமானங்கள் எல்லாம் ஒன்றாகக் கணக்கிடப்படுகின்றன. இந்த 2 இலட்சம் ரூபாய் என்பது பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. அப்படி குறைவாக இருக்குமானால், இந்த ஆலயத்தின் நிதி யிலிருந்து போடப்படுகிறது. எனவே, தங்கம் விற்றதற்கும், இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கன்னியா குமரி தேவஸ்வம் போர்டைப் பொறுத்தவரையில், அதன் நிதி நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்னால், சுமார் 2, 25 ஆண்டுகளுக்கு முன்னால் ஒதுக்கப் பட்ட ரூ. 13 இலட்சம், எப்போதும் அதே தொகை ஒதுக்கப் படுகிறது. அந்த நிதியிலிருந்து இந்தத் திருப்பணிக்காக 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறபோது, தொடர்ந்து பணிகளை நிறைவேற்றுவதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, இந்த முழுத் தொகையையும் அரசே மானியமாக அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது இந்தத் திருப்பணிகளைப் பொறுத்தவரையில் அநேகமாக நடந்து முடிகின்ற நிலைமைக்கு வந்துவிட்டன. இரண்டு இலட்சம் ரூபாயில் ஆலய நிதியிலிருந்து செலவு செய்வதற்கு இல்லாமல் எப்படியாவது வெளியிலே பொதுமக்களிடத்திலிருந்து வசூல் செய்ய வேண்டுமென்று அங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி அவர்கள் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த தேவஸ்தானத்திற்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்து தனியாக அரசின் பரிசீலனையிலே இருக்கிறது.

### அரசு முதலீடு செய்துள்ள தொழில்கள்

*வினா எண். 431—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு என்னென்ன தொழில்களில் எவ்வளவு முதலீடு செய்துள்ளது?

(ஆ) அவற்றின் மூலம் 1980-1981 ஆம் ஆண்டு எவ்வளவு வருமானம் கிடைத்தது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ/ஆ) விவர அறிக்கை ஒன்று **அவைமுன் வைக்கப்பெற்றுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, நஷ்டம் ஏற்பட்டிருக்கிற 7 நிறுவனங்கள் எவை எவை? எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நஷ்டம் ஏற்பட்டிருக்கின்ற நிறுவனங்கள் ஏழு. கேள்வி எவ்வளவு வருமானம் என்பதைப் பற்றியது. நஷ்டத்தைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

திரு. தி. க. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறிக்கையிலே நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவேதான், அதுபற்றிய கேள்வியைக் கேட்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிறுவனங்கள் எவை எவை என்று அறிவிப்பார்களா அல்லது இது மாதிரி நஷ்டம் ஏற்படுகின்ற அந்த நிறுவனங்களுடைய கணக்குகளையும் அறிக்கையாகச் சமர்ப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**432-433ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழு நிறுவனங்களில் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு தொழிலமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள். இந்த நஷ்டத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்குப் பதில் சொல்வது என்றால் எனக்கு அரை மணி நேரம் தேவைப்படும். அவ்வாறு சொல்வதற்கு தாங்கள் அனுமதிக்கிறீர்களா அல்லது மானியக் கோரிக்கை வரும் பொழுது பதில் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையிலே ஞாபகம் இருந்தால் பதில் சொல்லுங்கள்.

### சிமெண்ட் விநியோகத்தைக் கண்காணிக்க மக்கள் குழு அமைக்கும் திட்டம்.

*வினா எண். 462—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சிமெண்ட் விநியோகத்தைக் கண்காணிக்க வட்ட அளவில் மக்கள் குழு அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தமிழகத்தில் சிமெண்ட் விநியோகத்தைக் கண்காணிக்கும் வகையில் மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைப்பது பற்றி இவ்வரசு பரிசீலித்தது. ஆனால், 1982 மார்ச் மாதம் முதல் சிமெண்ட் மீதமான கட்டுப்பாடு ஓரளவு தளர்த்தப்பட்டதன் பேரில் வெளிச்சந்தையில் சிமெண்ட் பெற வசதியாக லெவி முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் இப்போது தற்காலிகமாக குழுக்கள் தேவையில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. அதற்கிணங்க, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சிமெண்ட் விநியோகத்தை சீரான முறையில் நடத்த கடிதங்கள் மூலமாக அரசு ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த லெவி சிமெண்டை மைய அரசு மாநில அரசுக்கு எவ்வளவு வழங்குகிறது? அது போதுமானதாக இருக்கிறதா? போதுமானதாக இல்லை என்றால் அதைச் சரிக்கட்டுவதற்கு மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன? மேலும், இந்த லெவி சிமெண்டை ப்ளு பிரின்ட் போட்டு 300, 400 மூட்டைகள் என்று வாங்கிக்கொண்ட பிறகும்

அதைப் பயன்படுத்தாத சூழ்நிலை இருக்கிறது. இவைகளைக் கண்காணிப்பதற்கும், இவைகளை முறைப்படுத்துவதற்கும், இந்த சிமெண்ட் தட்டுப்பாட்டை நீக்குவதற்கும் என்ன நடைமுறைகளை மாநில அரசு பின்பற்றி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு கால் ஆண்டிக்கு சுமார் 1¼ இலட்சம் டன்கள் மைய அரசு மாநில அரசுக்கு லெவி சிமெண்டாக வழங்குகிறது. நம்முடைய தேவை சுமார் ஒரு கால் ஆண்டிற்கு 5 இலட்சம் டன்கள் ஆகும். எனவே, இந்தப் பற்றாக் குறையைப் போக்குவதற்காக வெளிநாடுகளிலேயிருந்துகூட சிமெண்டை இறக்குமதி செய்து கொள்ளலாம் என்று மைய அரசு மாநில அரசுகளை அனுமதித்த பின்னாலே இரண்டு இலட்சம் டன்கள் ஏற்கனவே வட்ட காரியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு அந்த சிமெண்ட் வந்து கொண்டிருக்கிறது.

பற்றாக்குறையைப் போக்குவதற்காக மேலும் சிமெண்டை வாங்குவதற்கான முயற்சிகளிலே சிமெண்ட் கார்ப்பரேஷன் ஈடுபட்டிருக்கிறது.

லெவி சிமெண்டைப் பொறுத்தவரைக்கும் 400 டன்கள், 500 டன்கள் என்று ப்ளு பிரிண்டைக் கொடுத்து விட்டு, வாங்கிக் கொண்டு, கட்டாமல் அல்லது தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற கேள்வியைப் பொறுத்தவரைக்கும் அதிகாரிகள் வழங்கும் பொழுது மொத்தமாக எவ்வளவு சிமெண்ட் தேவையோ அவ்வளவு சிமெண்டையும் அப்படியே வழங்குவதில்லை. பார்ட் பார்ட்டாகத்தான் பேஸ் மட்டத்திற்கு இவ்வளவு, அதற்குப் பிறகு சீலிங் போடுவதற்காக இவ்வளவு என்று ஒவ்வொரு ஸ்டேஜ்வாரியாகத்தான் பார்த்து, அதற்குப் பிறகு தான் கொடுக்க வேண்டும். அதிலே ஏதாவது தவறு இருக்கிறது என்று சொன்னால் அல்லது மொத்தமாக யாருக்காவது கொடுத்திருக்கிறார்கள் என்ற நிலைமை இருந்தால் அப்படிப்பட்ட குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் வருமேயானால் அதைப்பற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 9-40)

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, லெவி சிமெண்ட் வழங்குகிற போது, தொழிற்சாலைக் கட்டுவதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் கொடுக்கிறார்கள். ஆனால், விவசாயத்திற்காக, கிணறுகள் கட்டுவதற்கும், அதன் சுற்றுச் சுவர்களைக் கட்டுவதற்கும், மோட்டார் வைக்கும் அறைகட்டுவதற்கும் சிமெண்ட் கேட்டால் அதற்கு அதில் இடமில்லை என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே விவசாயக் காரியங்களுக்கு லெவி சிமெண்டிலே கொடுப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே ஏற்கனவே சொன்னது போல், லெவி சிமெண்ட் நமக்கு ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. எனவே இப்போது அரசுத் துறையைச் சார்ந்த பல்வேறு கார்ப்பரேஷன்களும், அல்லது பல்வேறு கட்டடங்களும் லெவி சிமெண்ட் பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அது தவிர, லெவி சிமெண்ட் எந்தெந்த 'கேடகரிகளுக்கெல்லாம்' கொடுக் வேண்டும் என்று மைய அரசு ஒரு 'பார்முலா' கொடுத்திருக்கிறார்கள். அதை பேஸ் பண்ணி விதிகளை வகுத்திருக்கிறோம். இப்போதுள்ள நிலைகளிலிருந்து மாற்றம் ஏற்படுவதற்கான சூழ்நிலை இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, தமிழகத்தில் சிமெண்ட் விநியோகத்தில் இரட்டை விலை நிலை உள்ளது. சிமெண்ட் எந்த துறைக்கோ அல்லது தனிப்பட்டவர்களுக்கோ தரப்படுவதாயின், ஒரே விலைதான் என்று மாற்றி அமைத்திட வேண்டும் என்று மைய அரசினை நமது மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா? அப்படி வலியுறுத்தவில்லையென்றால், இனிமேலாவது வலியுறுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரு விலைக் கொள்கை சிமெண்டிலே மட்டுமல்ல, சிமெண்ட், சர்க்கரை இப்படி பல்வேறு பொருள்களின் மீது மைய அரசு வைத்திருக்கிறது. இது மைய அரசினுடைய கொள்கையாகும். எனவே இதிலிருந்து ஒரு மாநிலம் மட்டும் விடுபடுவது என்கின்ற பிரச்சினை இல்லை. ஏனென்றால், அப்படி நிர்ணயிக்கின்றபோது, பல்வேறு மாநிலங்களில், தொழிற்சாலையுடைய லாபநஷ்டங்கள், அதேபோல் பொதுமக்களுடைய நன்மை இரண்டையும் கணக்கிலே கொண்டு, நாம் கொடுக்கிற காரணத்தாலே, தமிழ்நாட்டிலே விலக்குக் கொடுக்கப்படுவது, தொழிற்சாலையையோ, அல்லது பொதுமக்களையோ பாதிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். இது அகில இந்திய அளவிலே ஏற்படும் ஒரு பிரச்சினையாகும். மாண்புமிகு கிட்டப்பா இதிலே தீவிரமாக இருந்தால், நாடாளுமன்றம் நடக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்கச் சொல்லலாம்.

**திரு. கோ. விஸ்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான்—லெவி சிமெண்ட் பொறுத்தவரையில், அநியாய விலைக்கு விற்கப்படுகிறது. இதைக் கேட்பதற்கு அரசிற்கு அதிகாரம் உள்ளதா? ஆம் எனில், இதுவரையில் 60, 62 ரூபாய் என்று பில் போட்டு, ரூபாய் 80, 90க்கு விற்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: நான்—லெவி சிமெண்டைப் பொறுத்தவரைக்கும், இன்ன விலைக்குத் தான் விற்கவேண்டும் என்று சட்டபூர்வமாக கேட்கமுடியாது. அந்த அதிகாரம் மாநில அரசிற்கும் கிடையாது. இருந்தாலும், உற்பத்தியாளர்களை யெல்லாம் ஓரளவிற்கு 'ரீசனபிள் பிரைசிற்கு' விற்கவேண்டும் என்று தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பொரேஷன் அவர்களுக்கு ஒரு 'பார்முலா' கொடுத்து இந்த அளவுக்கு விற்றால் லாபம் இருக்கும் என்று சொல்லியிருக்கிறது. அந்த விலைக்குத்தான் விற்கப்படுகிறது. நீங்கள் சொன்னதுபோல், ரூ. 65க்கு வாங்கினால், பில் கொடுப்பதில்லை என்று புகார் வந்ததில்லை. அப்படி புகார் வந்தால், நடவடிக்கை எடுக்கமுடியும். நடவடிக்கை எடுக்கக் கூடிய ஆதாரங்களோடு தவறு செய்வதில்லை.

திரு. க. பாரமலை: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொல்கிறபோது, மொத்தமாக வீடு கட்டுவதற்கு சிமெண்ட் வழங்குவதில் தவறுகள் ஏற்படுவதால், கட்டம் கட்டமாக —பேஸ்மெண்ட், சூப்பர்ஸ்ட்ரக்சர்' என்று சிமெண்ட் வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்கள் அதை ஓரளவிற்கு ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இப்போது இருக்கிற நடைமுறையில் நானே பாதிக்கப்பட்டிருக்கிறேன். அதனால் இந்தக் கேள்வியைப் போடுகிறேன். கான்கிரீட் போடுவதற்கு தேவையான சிமெண்ட் 50 மூட்டைக்கு மேல் கொடுக்கமுடியாது என்று அதிகாரிகள் கண்டிப்பாகச் சொல்கிறார்கள். 1000 ஸ்கொயர் பீட் வரை உள்ளவர்களுக்கு இந்த சிமெண்ட் வழங்கப் படுகிறது. 65, 70 மூட்டைகள் தேவைப்படுகிறபொழுது, கேட்டால் 50 மூட்டைகள் தான் கொடுக்கிறார்கள். இந்த 20 மூட்டையை எங்கே போய்வாங்குவது? வெளி மார்க்கெட்டில் வாங்கினால், அதிக விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டியிருக்கிறது. அப்படி 50 மூட்டைகளுக்கு மேல் கொடுக்க வேண்டாம் என்ற விதிமுறை இருக்கிறதா? அல்லது கட்டம் கட்டமாக தேவைப்படுகிற சிமெண்ட் வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவைப் பொறுத்தவரைக்கும் 50 மூட்டை என்று அப்படி நிர்ணயிப்பது இல்லை. அந்தந்த கட்டிடங்களுடைய அளவுக்கு ஏற்றவாறு, முதலிலே பவுன்டேசன் கட்டுவதற்கு, அடுத்து இருக்கக்கூடிய சீலிங் என்று இப்படி ஒவ்வொரு ஸ்டேஜையும் இன்ஸ்பெக்ட் செய்து எவ்வளவு அளவு தேவை என்பதைப் பார்த்துக் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல இதிலே 50 மூட்டை, 60 மூட்டை என்று சொல்கிறபோது, ஏதாவது 10 மூட்டைகள் வித்தியாசம் இருக்குமானால், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே கேட்டால் அவர்கள் அதைத் தர கடமைப்பட்டிருக்கிறார்கள். கட்டிடங்களைக் கட்டும்போது ஒவ்வொரு



ஸ்டேஜுக்கும் எவ்வளவு தேவைப்படுகிறது என்பதைப் பார்த்த பிறகு அதற்குரியவற்றைக் கொடுக்கவேண்டும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு அறிவுரைகள் வழங்கப் படும்.

வால்பாறைப் பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 463—திரு ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் மத்திய அரசின் உதவியோடு காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிவிப்பைக் கொடுத்தார்கள். அதாவது கோவை மாவட்டத்தில் மத்திய அரசு நிதி உதவியோடு ஒரு காகித தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அதை எந்தத் தொகுதியிலே ஆரம்பிக்கலாம் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இருக்கக்கூடிய மெம்பர்களாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டார்கள். அப்போது நான் என்னுடைய தொகுதியில், வால்பாறை தொகுதியில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான மூலப்பொருள் இருக்கிறது, எனவே அங்கே அமைக்கலாம் என்று நான் வேண்டிக்கொண்டேன். ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது அறிவிக்கிறபோது, அந்தமாதிரி காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் இல்லை என்று கூறினார்கள். எனவே இனிமேலாவது அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் யோசிப்பார்களா? என்னுடைய தொகுதியில் அந்தக் காகித தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் சுருக்கமாகக் கேள்விகளைக் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் புகளூரில் சுமார் 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பெரிய காகித செய்தித் தாள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப் பட்டு, அதற்கான கட்டுமானப் பணிகள் துவங்கியிருக்கின்றன. இதிலே அரசு முனைப்பான கவனம் செலுத்தி வருகிறது. இது தவிர பெரிய அளவிலே எந்த மாவட்டத்திலேயும் காகித செய்தித் தாள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இல்லை. ஒருவேளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் குறிப்பிட்டு இருப்பது மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டத்திலே இதுபோல ஒரு தனிப்பட்ட எண்ணம் அவரிடத்திலே இருந்திருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட எண்ணம் அரசிடத்திலே இல்லை.

**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் ஓரளவு இருப்பது அமைச்சருக்குத் தெரியும். ஆனால் வால்பாறையில் அப்படிப்பட்ட தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. இந்த காகித உற்பத்தி செய்வதற்குத் தேவையான மரக்கூழான மூலப்பொருள் நிறைய இருக்கிறது. தமிழ்நாட்டுக்கு இந்தப் பகுதியில் காகிதம் செய்கிற தொழிற்சாலை மிகவும் முக்கியம். கரும்புச் சக்கையிலேயிருந்து காகிதம் தயாரிப்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே இந்த பொள்ளாச்சி வட்டத்திலே உள்ள வால்பாறை என்ற இடம் மலைப் பிரதேசமாக உள்ள காரணத்தால், அங்கே மூலப்பொருட்கள் நிறைய இருக்கின்றன. எனவே இந்த இடத்தில் காகித தொழிற்சாலை ஒன்றைக் கட்டுவதற்கு வேண்டிய திட்டத்தை மத்திய அரசுக்கு நமது அரசு பரிந்துரை செய்து அனுப்புமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே இருக்கின்ற வளங்களை யெல்லாம் மைய அரசுக்கு எடுத்துச்சொல்லி, என்னென்ன தொழில்கள் எல்லாம் இங்கே துவங்க வேண்டும் என்று கேட்கிற போது, அந்த வளங்களை மட்டும் வைத்துக்கொண்டு மைய அரசு தொழில்களைத் துவங்குவது இல்லை. குறிப்பாக இந்த செய்தி காகித்தாள் தொழிற்சாலையைத் துவங்க நாம் 40கோடி ரூபாய் அளவிற்குச் செலவு செய்கிறோம். மற்றும், ஐ.டி.பி.ஐ., உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களும் அதற்குக் கடன் வழங்குகின்றன. ஆகவே, நமக்குள்ள நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு, இப்போது 190 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புகளூரில் அந்தத் தொழிற்சாலைக் கொண்டுவருவதற்கான முழு முயற்சியையும், கவனத்தையும் அரசு செலுத்தி வருகிறது. அந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் துவங்கிட அரசு முழு கவனம் செலுத்திக்கொண்டு இருக்கிறது. அதற்குப் பின்னாலே நிதி ஆதாரங்கள் இடம் அளிக்குமானால், இந்தப் பிரச்னையைப் பற்றி நாம் முடிவு செய்ய முடியும்.



**திரு. எம். வி. இரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் பொள்ளாட்சிப் பகுதியில் காகிதத் தொழிற்சாலைக்கு வேண்டிய அனைத்து மூலப் பொருள்களும் கிடைப்பதோடு, தண்ணீர் வசதியும் நிறைந்து இருக்கிற காரணத்தால் மத்திய அரசின் நிதி உதவி இல்லா விட்டாலும் மாநில அரசே தன்னுடைய நிதி நிலை ஆதாரங் களைக் காண்டு அங்கே காகிதத் தொழிற்சாலை அமைக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். முதலில் புகளூர் காகிதத் தொழிற்சாலை உற்பத்தி தொடங்கும் அதற்குப் பின்னர் மற்ற இடங்களைப் பற்றி யோசிப்போம்.

### தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில்கள் தொடங்கும் திட்டம்

*வினா எண் 464—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களில் தான் புதிய தொழில்களைத் தொடங்கலாம் என மத்திய அரசு மாநில அரசுக்கு யோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) அதன்மீது மாநில அரசு கூறிய கருத்தென்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) 27-2-1982-ல் வெளியிட்ட மைய அரசின் அறிக்கையின்படி பெரிய மற்றும் நடுத்தர தொழில் இல்லாத மாவட்டங்களில் இருந்து உரிமம் கோரி வரும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவிருக்கிறது. அதன் அடிப்படையில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் எதுவும் இல்லாத 87 மாவட்டங்கள் பற்றி அட்டவணை ஒன்றை மைய அரசு வெளியிட்டு உள்ளது. இம்மாவட்டங்களில் தொழில் துவங்க உரிமம் வழங்குவதில் மற்ற பகுதிகளை காட்டிலும் முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. ஆனால் தமிழகத்தில் மேற்குறித்த அடிப்படையில் எந்த மாவட்டமும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இப்படி மாவட்ட ரீதியாக அறிவிப்பதை விட, தாலுகா ரீதியாக அறிவிப்பு செய்யவேண்டும் என்று மைய அரசை இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. இந்தக் கருத்தை அவ்வப்போது மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லி வருகிறோம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, பின் தங்கிய மாவட்டம் என்ற வகையில் தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு மாவட்டமும் மைய அரசின் பட்டியலில் சேர்க்கப் படாத காரணத்தால், புதிய தொழில்கள் துவங்க வாய்ப்பில்

லாமல் இருக்கின்றது, என்று மத்திய அரசின் அறிவிப்பைச் சுட்டிக் காட்டி மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றார். தமிழ் நாட்டில் மிகவும் பின்தங்கிய, தொழில்களே இல்லாத பல மாவட்டங்கள் இருக்கின்றன. இதனால் அந்த மாவட்டத்து மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அதை வட்டப்பகுதிகளாகப் பிரித்து, அந்தப் பகுதிகளை பின்தங்கிய பகுதிகள் என்று அறிவிக்கும்படி மத்திய அரசைக்கேட்டுள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு மைய அரசிடமிருந்து பதில் ஏதாவது வந்துள்ளதா? அதைப்பற்றி மேற்கொண்டு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை நான் அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல தமிழ் நாட்டிலே இருக்கின்ற மாவட்டங்களிலே ஏதாவது ஒரு பெரிய தொழிற்சாலையோ நடுத்தர தொழிற்சாலையோ இருப்பதால், அந்த மாவட்டம் முழுவதும் முன்னேறிய மாவட்டம், தொழில்துறையிலே முன்னேறிய மாவட்டம் என்று கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லித்தான், மாவட்டங்கள் என்று எடுத்துக் கொள்ளாமல், அதற்குப் பதிலாக தொழில் துறையிலே பின் தங்கிய தாலுக்கா என்கிற வகையில்-ஏற்கனவே 87 மாவட்டங்கள் என்று அறிவித்துள்ளதற்குப் பதிலாக-அதிகமான வட்டங்களை தொழில் துறையில் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்க வேண்டும் என்று சொல்லி, தமிழ் நாட்டில் 45 வட்டங்கள் அந்தமாதிரி நிலையில் இருக்கின்றன. அவற்றை அறிவித்தால் அங்கேயிருக்கும் தொழில் அதிபர்கள் அங்கே தொழில் துவங்க முடியும் என்று நாம் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசு நம்முடைய கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்று நாம் மனபூர்வமாக நம்புகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்குச் சொன்னதுபோல் இங்கே எப்படி சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பிக் கேட்கின்றார்களோ அதைப்போலவே இதுபோன்ற பிரச்னைகளை நாடாளுமன்றத் திலே உள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் நாடாளு மன்றத்தில் எழுப்புவார்களானால், அதற்கு மைய அரசு பதில் சொல்லும் அல்லது அதைப் பற்றி பரிசீலிக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அங்கேயுள்ள திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பிற கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி வற்புறுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வேண்டிக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த வட்டாரத்தில் பின்தங்கிய வட்டாரம் என்ற அடிப்படையில் தொழில் தொடங்க மத்தியஅரசு அனுமதிஅளிக்க வேண்டுமென்று





தமிழக அரசின் கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்போது புதிதாக வந்த ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்கள் கூட டெல்லியிலே ஆந்திர மாநில நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து, ஆந்திரமாநில வளர்ச்சி பற்றி பேசினார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதைப்போன்று நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அல்லது தொழில் அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா தி.மு.க இன்னும் மற்ற கட்சிகளின் உறுப்பினர்களை எல்லாம் அழைத்துப் பேசி, தொழில் பிரச்சனையில் தமிழ்நாட்டில் பின்தங்கிய வட்டாரங்கள் என்ற அடிப்படையில் முடிவுசெய்து, தொழில் தொடங்க உதவ வேண்டுமென்று அங்கே வலியுறுத்த வேண்டுமென்று சொல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைநான்அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, இந்த சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்த பின்னால் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து, அவர்களிடம் நமக்கு இருக்கிற பிரச்சனைகளை எடுத்துச் சொல்லலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு அந்தவகையில் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அதுவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்தான். தமிழ்நாட்டின் நிலைமை அவர்களுக்கு நன்றாகத் தெரியும்; தெரிந்துகொள்ள வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. எனவே பத்திரிகை களில் வருகிற, இங்கே பேசுகிற செய்திகளை வைத்து, மேற் கொண்டு முயற்சி ளில் ஈடுபடலாம் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற ஒரு மாவட்டம் கூட தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். காரணம், தமிழ்நாட்டில் பெரிய மாவட்டங்களாக இருப்பதுதான் உண்மையா? அப்படி என்றால் உத்திரபிரதேசம் மற்ற மாநிலங்கள் இருப்பதைப் போன்று சிறிய, சிறிய மாவட்டங்களாகப் பிரித்து, தமிழ் நாட்டிலும் அதிகமான மாவட்டங்களை உருவாக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. ''சன்னியாசி பூனை வளர்த்த கதைமாதிரி'' என்று சொல்வார்கள். அதாவது ஒரு சன்னியாசி பூனை ஒன்றை வளர்த்தான். பூனைக்கு பால் கொடுப்பதற்காக பால் மாடு ஒன்றை வாங்கினார். அந்த பால் மாட்டைப் பார்த்துக்கொள்ள ஒரு பெண்ணை

வேலைக்கு அமர்த்தினான். பிறகு அந்த பெண்ணையே திருமணம் செய்து கொண்டான். அதைப்போல இப்போது நாம் மத்திய அரசிடம் உதவி பெறுவதற்காக இருக்கிற பெரிய மாவட்டங்களை சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கும்போது அதற்கு ஏற்படும் செலவே அதிகமாக இருக்கும். ஏற்கெனவே சப்சிடி கொடுக்க அல்லது தொழில் தொடங்க அனுமதி அளித்தல் போன்றவற்றை மத்திய அரசு தாலுகா அடிப்படையில் முடிவு செய்து, அந்த அடிப்படையிலே மத்திய அரசு 33 தாலுகாக்களை தமிழ்நாட்டில் அறிவித்திருக்கிறது. அந்த வட்டாரங்களே இன்னும் வளர்ந்தபாடில்லை. சில தாலுகாக்களில் தொழிற்பேட்டையோ அல்லது தொழிலோ தொடங்கப் படவில்லை. ஏற்கெனவே அறிவித்திருக்கிற 33 தாலுகாக்களை கூட முன்னுரிமை கொடுத்து, உதவிட மத்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம்

*வினா எண் 465 திரு செ. செம்மலை: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் உருக்காலைத் திட்டத்திற்கென்று ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எவ்வளவு?

(ஆ) இந்நிறுவனம் பயன்படுத்தாத நிலத்தை திரும்பப பெற அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) 24,445, 00 ஏக்கர் நிலம்.

(ஆ) ஆம்.

திரு. செ. செம்மலை: தலைவரவர்களே, தங்களுடைய முயற்சியால்தான் இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரை அழைத்து, இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் கூட நாட்டப்பட்டது. ஆனால் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கும்போதும், நில ஆர்ஜிதம் செய்கிறபோதும் அதனுடைய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த பிறகுதான் இந்தத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த முடியும் என்ற நிலைக்கு மத்திய அரசு வந்திருக்கும். இருந்தாலும் இத்திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தவில்லை. எனவே ஏற்கெனவே திட்டமிட்ட அளவுக்கு முழுமையாக அந்த உருக்காலையை அமைக்க தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்தியதா? அதற்கு மத்திய அரசின் பதில் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் இருக்கிற தகவலைத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சேலம் உருக்காலையை மத்திய தொழில் அமைச்சர் மாண்புமிகு திவாரி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அந்த மேடையில் அவர்கள் இருக்கும் போது, மற்ற அதிகாரிகளும் அங்கே இருக்கும்போது நான் குறிப்பிட்டேன், ''சேலத்தில் நாங்கள் கேட்டது உருக்காலை, நீங்கள் உருட்டாலையைத்தான் - ரோலிங் மில்ஸ்-தந்திருக்கிறீர்கள்' என்று. அவர்கள் பதில் சொல்லும்போது முழுமையான உருக்காலையாகமாற்ற அரசு முயற்சிக்கும் என்று சொன்னார்கள். எனவே, 150 கோடியில் கஞ்சமலைப்பகுதியில் இருக்கிற இரும்புத் தாதுவை பயன்படுத்தி முழு அளவிலான் உருக்காலை ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து மைய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தில் எத்தனை ஏக்கரை இந்த உருக்காலைக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்கிற விவரத்தைப் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்காக திட்டமிட்டு தமிழ்நாடு அரசு இதிலே முதலிலே ஒதுக்கிய நிலம் 24,445. அதிலே சேலம் உருக்காலைக்காக, அதன் சொந்தத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம் 3495 ஏக்கர், சேலம் உருக்காலையை ஒட்டிய உப தொழில்களுக்காக தேவை என்று கணக்கிடப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலம் 2814 ஏக்கர். தொழில் துறையின் சார்பிலே உப தொழில்களுக்குத் தேவை என்று ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிற நிலம் 846 ஏக்கர். தமிழக அரசால் முதலிலே ஒதுக்கீடு செய்யப்பட்டு சேலம் உருக்காலை தொழிற்சாலை பயன்படுத்தியது போக, மொத்த நில ஆர்ஜிதத்திலிருந்து நீக்க வேண்டிய நிலம் 486 ஏக்கர். ஏற்கெனவே நீக்கம் செய்யப்பட்ட நிலம் 16,804 ஏக்கர். மற்றவை ஸ்டீல் பிளாண்டுக்கும், அதனுடைய உப தொழில்களுக்கும், ஆக உபரியாக இருக்கும், நில ஆர்ஜிதத்திலிருந்து நீக்க வேண்டிய நிலம் 484 ஏக்கர் தான்.

செல்வி. ப. விஜயலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைத் திட்டத்திலிருந்து பல பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டிருக்கிறதே, அந்தப் பகுதிகளிலே பல ஆண்டுக்காலமாக வாழ்ந்து வரும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு தடை விதித்திருக்கிறதே, அந்தத் தடையை நீக்கி, அவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைத் திட்டத்தினால் நீக்கப்பட்ட பகுதிகள் அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா செய்வது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். தயவு செய்து அந்தக் கேள்வியை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைத் திட்டம், உருட்டாலையாகத்தான் வழங்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு வெறும் வேண்டுகோளாக மட்டும் வைக்காமல், சர்வ கட்சி தலைவர்களும் கலந்து முடிவெடுத்து அப்படி மத்திய சர்க்கார் உருக்காலை திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க மறுத்தால், எதிர்த்து போராட்டம் நடத்துவதற்கு, அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் இன்றியே மத்திய அரசு இதனைப் பரிசீலிக்கும் என்று முதலிலே நம்புவோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக்கு ஒரு முக்கியமான தொழிலாக இருக்கக்கூடிய இந்த சேலம் உருக்காலையை நமக்குக் கொடுக்க வேண்டும் என்று, தமிழ்நாடு முழுவதும் ஒரு பெரிய எழுச்சிப் போராட்டமே ஏற்கெனவே நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு தான் அப்படிப்பட்ட ஒரு திட்டம் வருவதற்கான நிலை ஏற்பட்டது. ஆனால் அதுவும் தற்போது முழுமையாக நடக்கவில்லை என்கிற தகவலை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே எவ்வளவு காலதாமதம் ஆனாலும், அந்தத் திட்டம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை அரசுக்கு உண்டா? அப்படியில்லையென்றால், அதற்கென்று ஒதுக்கப்பட்ட நிலத்தை எடுத்து வேறு ஏதாவது தொழில் ஏற்படுத்துவதற்காகவாவது அரசு முன் வருமா? இந்த இரண்டில் எது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொன்னேன். 24,445 ஏக்கர் நிலத்தை இதற்காக அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்றும், அதில் அந்த தொழிற்சாலைக்காக 3495 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது போக, அதன் உப தொழில்களுக்காக 21.84 ஏக்கர் இண்டஸ்ட்டீரிஸ் டிபார்ட்மெண்டின் மூலமாக தொழில்கள் துவங்க, 846 ஏக்கர் என்றும், மீதி உள்ள நிலங்களில் ஏற்கெனவே 16,804 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதிலிருந்து நீக்கப்பட்டன என்றும், இன்னும் நீக்க வேண்டிய நிலையில் உள்ள நிலங்கள் 486 ஏக்கர்தான் என்றும் சொன்னேன். மைய அரசு நம்முடைய கோரிக்கையை ஒப்புக்கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது. தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பிரச்னைகள் வேண்டாம். ஆகவே, அதை நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

திரு. ஏ. கி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, உருக்காலை இப்போது உருட்டாலையாக மாற்றப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதுகூட சரியாக இயங்காத நிலைமை ஏற்பட்டு அங்கே வேலை செய்பவர்களுக்கு வேலையில்லாமல் போகக்கூடிய நிலைமை வரும் என்று சொல்லப்படுகின்றதே, அப்படிப்பட்ட நெருக்கடி இருக்கின்றதா? அதுகுறித்து அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (விடை இல்லை)

### ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் திட்டம்

*வினா எண் 466—திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான நிலம் ஆர்ஜிதம் செய்வதில் உள்ள காலதாமதத்தை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்க 23-9-1979 வரை மைய அரசு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. அச்சட்டத்தில் உள்ள விதி முறைகளை பின்பற்றுவதில் காலதாமதம் ஏற்படக்கூடிய காரணத்தால், இவ்வரசு தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத்திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சட்டம் (1978ம் ஆண்டின் சட்டம்) கொண்டுவந்து 24-9-79 முதல் செயல்படுத்தியது. இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. ஆனால் இச் சட்டம் செல்லாதென சென்னை உயர்நீதி மன்றம் 9-9-81ல் தீர்ப்பளித்தது. இம்முடிவை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் (Supreme Court) மேல் முறையீடு செய்ய உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. நீதி மன்றங்களில் வழங்கப்படும் தடை ஆணைகள் நீங்கலாக நிலம் கையகப்படுத்துவதில் கால தாமதம் ஏதுமில்லை.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட ஏழை மக்களுக்காக வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டும் என்ற வகையில் நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற காலத்திலே அது குறித்து வழக்குமன்றத்திற்கு சென்றதன் காரணத்தால் 1981-ஆம் ஆண்டு அந்தச் சட்டத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் அதனால் உச்சநீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யப் போவதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஆதி திராவிட ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க உதவுகின்ற வகையில் சிலர் தாங்களாகவே நிலத்தைக் கொடுப்பதற்கு முன்வந்தாலும் கூட சம்பந்தப்பட்ட இலாக்கா அதை எடுத்து அவர்களுக்கு வினியோகிப்பதிலே காலதாமதம் ஏற்படுகின்றது. அதைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நிலைமை இதுவரையில் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அத்தகைய பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொன்னால் அதன்மீது அரசு தயங்காமல் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பல கிராமங்களில் ஆதி திராவிட ஏழை எளிய மக்கள் நத்தம் போன்ற இடங்களில் 40, 50 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள் அப்படிப்பட்ட இடங்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? இப்போது அரசாங்கம் அறிவித்து இருக்கக்கூடிய அடிப்படையில் நிலம் ஆர்ஜிதம் செய்வதில் பிரச்சினைகள் இருக்கின்ற சூழ்நிலையில் அப்படி ஏற்கெனவே 40, 50 ஆண்டுகளாக குடியிருந்து வருகின்ற நிலங்களுக்காவது பட்டா கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம், புறம்போக்குப் பகுதிகளிலே ஏற்கெனவே இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு இந்த அரசைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே பட்டா அளித்து வருகின்றது



என்பதை உறுப்பினர்களும் மற்வர்களும் ஏற்றுக் கொள்வார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கு இந்த அரசைப் பொறுத்த வரையில் மாறுபாடான கருத்து இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உயர்வின் அடிப்படையில் ஏற்கனவே அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. தொடர்ந்து அந்த நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, இந்த ஆதி திராவிட மக்களுக்காக குடியிருப்பு மனை பெறுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற போது நஞ்சை நிலங்களையும், தோப்பு நிலங்களையும் ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்ற தடையினை அரசு விதித்துள்ளதா? அந்த மாதிரி தடையை விதித்ததன் காரணத்தால் தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் காவேரி டெல்டா பகுதியிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்குத் தேவையான வீட்டு மனை கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை அரசு அறியுமா?

(முற்பகல் 10—10)

மாண்புமிகு. திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு நஞ்சை நிலங்களை எடுக்கக் கூடாது என்று இந்த அரசு உத்தரவிடவில்லை. தவிர்க்க இயலாத காரணங்களால் நஞ்சை நிலங்கள் தவிர வேறு நிலங்கள் இல்லை என்று சொன்னால் அந்த அந்த இடங்களில் அரசு முன் அனுமதி பெற்று அந்த இடங்களை அந்த மக்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலையை இந்த அரசு எடுத்திருக்கிறது.

செல்வி ப. விஜயலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட ஏழை மக்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய பலயிடங்களில் நகரமைப்பு இயக்குநர் அவர்கள் அனுமதி இல்லாமல் இன்னும் வீட்டு மனை வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு விரைவில் பட்டா வழங்குவதற்கு அரசு ஆவனச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற நிலமை ஒரு சில இடங்களில் இருப்பதை நான் உணர்ந்து இருக்கிறேன். அதன்மீது அரசு தனியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் ஜில்லாவில் டவுனில் 4-வது 5-வது வார்டில் கல்விக்குழு என்ற இடத்தில் கோர்ட் தடை உத்தரவு எதுவும் கிடையாது. ஆதிதிராவிட துறையில் கடந்த 10 ஆண்டு

காலயாக இருக்கிறது. இது சம்மந்தமாக முதலமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னோம் அது சம்மந்தப்பட்ட துறையிலும் சொன்னோம். 1978 ம் ஆண்டு உத்தரவுப்படி செய்யவேண்டிய கஷ்டம் எதுவும் அதில் இல்லை. நீண்ட நாட்களாக பட்டா கொடுக்காமல் இந்த துறை செயலற்று இருப்பதற்கு என்ன காரணம்? அது போன்று சென்னைப் பகுதியிலே 50, 60 ஆண்டுகளாக கஷ்டம் இல்லாமல் அரசாங்க நிலங்களை பட்டா கொடுப்பதற்கு வாய்ப்பு இருந்தும் அதை செய்யாமல் அந்த துறை செயலற்று இருப்பதற்கு காரணம் என்ன? இனியாவது உடனடியாக செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியை சொல்லி கேட்கிறார்கள். அதுபற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அரசு தனியாக பரிசீலனை செய்ய ஆவன செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க பலயிடங்களில் நிலங்கள் ஆர்ஜிதம் பண்ண சம்மந்தப்பட்டவர்களுக்கு பணத்தை கொடுத்தும் இவர்களுக்கு பட்டா கொடுக்கப்பட அந்த நிலத்தை பிரித்து அளந்து கொடுக்காமல் இருக்கிறது. அப்படி அளந்து கொடுக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் சம்மந்தப்பட்ட அந்த அதிகாரிகளை சென்று கேட்டால் நீங்கள் பணம் கொடுத்தால் தான் அளந்து பிரித்துக் கொடுக்க முடியும். என்று சொல்லக் கூடிய நிலமை இருக்கிறது. இது இந்த அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அந்த அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற ஒருநிலைமை இருப்பதை சில பகுதிகளுக்கு நான் நேரில் சென்ற போது சொன்னார்கள். அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அந்த நிலங்களை அளந்து கொடுப்பதற்குண்டான செலவினையும் அந்த கற்களை அமைத்துக் கொடுப்பதற்குண்டான செலவினையும் அரசே ஏற்றுக் கொள்கிறது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி எந்த அதிகாரியாவது நடந்து இருப்பாரானால் அது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அதிகாரி என்று சொன்னால் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது. தொடர்ந்து இந்த நிலமைகளை அரசு உணர்ந்து கொண்டு இதிலே கண்ணும் கருத்துமாக செயலாற்றி வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



**கொல்லிமலையில் தொழிற்பயிற்சிக் கல்லூரி அமைக்கும் திட்டம்.**

(வினா எண் 467) திரு. சி. சிவவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியான கொல்லிமலையில் தொழிற் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு, எம். விஜயசாரதி: கொல்லிமலையில் தற்பொழுது புதிய தொழிற் பயிற்சி நிலையம் துவங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. சி. சிவபிரகாசம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பழங்குடி ஆதிவாசி மக்கள் வாழும் வேறு பகுதிகளில் அரசு புதிய தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள் அதிகமாக வசிக்கக் கூடிய பகுதிகளில் தனியாக அவர்களுக்கு என்று தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் என்ற பரிந்துரையை தமிழ்நாடு பழங்குடி ஆலோசலன குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் ஏலகிரி பகுதியில் பழங்குடி மக்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால் அந்த பகுதியில் அந்த பழங்குடி மக்களுக்காக தனியாக தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை துவங்க அரசு தற்போது பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலையை விட சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலம் பகுதியில் பழங்குடி மக்கள் அதிக அளவில் வசிக்கிறார்கள். ஆகவே ஏற்காடு சேந்தமங்கலம் பகுதியில் மலைவாழ் பழங்குடி மக்களுக்காக தனியாக ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த பகுதியில் உள்ள கொல்லி மலையில் பழங்குடி மக்களுக்காக தனியாக ஒரு தொழிற் பயிற்சி நிலயம் அமைத்து தர மீண்டும் அரசு பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள் வசிக்கக் கூடிய பகுதியில் அவர்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் தனியாக தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் . என்று நாம் ஏற்றுக் கொண்டாலும் கூட அங்கே சுற்றுப்புறத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிந்துக் கொண்டும், அந்த தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க தேவையான இட வசதியையும், போக்குவரத்து வசதியையும் ஆராய்ந்து

கொண்டு இந்த பணியினை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற உணர்வுபடி கொல்லிமலைப் பகுதியிலு இருக்கக்கூடிய பழங்குடி மக்களுடைய எண்ணிக்கையை பார்த்து அரசு இதனை பரிசீலனை செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப சுந்தரம்; தலைவர் அவர்களே, ஏலகிரி மலையில் தொழிற் நுட்பக் கல்லூரி ய அமைப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; தலைவர் அவர்களே, நான் சொன்னது தொழிற் நுட்பக் கல்லூரியல்ல, தொழிற் பயிற்சி நிலையம். அந்தப் பகுதியிலே உள்ள மக்களுடைய நலனுக்கு தற்போது ஆரம்பிக்கப்படுவதற்குத் தேவையான சில விவரங்களை ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநரிடம் கேட்டு அரசு எழுதியிருக்கிறது. அந்த குறிப்பு கிடைத்தவுடன் அதன் மீது அரசு நடவடிக்கை எடுக்கும். ஆகவே எப்போது என்று வரையறுத்துக் கூற இயலாது.

திருமதி. தா. இராசாம்பாள்; தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் வாழும் பகுதியில் அரசு சட்டத்திட்டத்திற்கு உட்பட்டு மாணவர்களின் ஸ்டென்த், பாபுலேஷன், டிஸ்டன்ஸ் பப்ளிக் கான்ட்ரிபியுஷன் இவைகள் எல்லாம் இருக்க வேண்டுமென்ற சட்டங்களைத் தளர்த்தி அவைகளை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் அங்கே தொழிற்பயிற்சிக் கல்லூரி நிறுவ அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, தொழிற் பயிற்சி நிலையத்தை நாம் ஆரம்பிக்கிற போது அந்தப்பகுதியிலே இருக்கக் கூடிய உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையைப் பார்த்து அந்த உயர்நிலைப்பள்ளிகளிலே பயில்கின்ற மாணவர்கள் பழங்குடி மாணவர்களாக இருப்பார்களானால் அவர்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய வகையில் அரசு சட்டதிட்டங்களைப் போட்டிருக்கிறது. அதனைத் தற்போது மாற்றுகிற எண்ணம் இல்லை.

### அரசு பதிப்பகத்தின் விற்பனைப் பிரிவு ஒன்றை மதுரையில் நிறுவும் திட்டம்

வினா எண் 4684—திரு. என் பழனிவேல்? மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசினால் நடத்தப்பட்டு வரும் அரசு பதிப்பகத்தின் விற்பனை பிரிவு ஒன்றை (Government publication) மதுரை நகரில் ஏற்படுத்தி அரசின் பிரசுரங்களை அங்கும் விற்பனை செய்வது குறித்து அரசிடம் செயற் குறிப்பு உண்டா?



(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தால் நடத்தப்படும் அரசு பதிப்பகத்தல் விற்பனைப் பிரிவு ஒன்றை இனிமேலாவது மதுரையில் ஏற்படுத்தி அந்த மாவட்டத்திலே வசிக்கக் கூடிய மக்களுக்கு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, மதுரையைப் பொறுத்தவரையில் அரசு அத்தகய விற்பனை நிலையத்தை ஒரு சோதனைக்காக ஆரம்பித்தது. பொது மக்களோ அல்லது முகவர்களோ தேவையைக்கேட்டு ஆரம்பிக்கப் படவில்லை. மதுரை துணை வற்பனை நிலையத்திலே விற்பனை மிகவும் குறைவாக இருந்தது, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் மாதத்திற்கு 300 ரூபாய தான் விற்பனை இருந்தது. போதுமான வ்ற்பனை இல்லாததான் காரணமாக அந்த விற்பனை நிலையம் மூடப்பட்டது என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய புத்தகங்களோ பிரசுரங்களோ கிடைப்பதிலே சிரமம் இருக்சிறது. அரசே நேரடியாக கடைகளை இவ்வாறு திறக்காமல் ஏற்கனவை இருக்கக்கூடிய பிரசுராலயங்களின் மூலமாக இதை விற்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா அல்லது மாவட்ட தலைநகரிலே இவ்வாறு செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாநில, மைய அரசுகளின் பதிவேடுகளை கொடுக்க பல பகுதிகளில் இருக்கக்கூடிய அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களுக்கு ஏற்கனவே அரசு வசதிகளை செய்து கொடுத்து இருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில் 2 இடங்களிலும் மாவட்டங்களில் அரசு அங்கீகாரம் பெற்றிருக்கக்கூடிய விற்பனை நிலையங்களிலும் அரசு ஏற்கனவே அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, பாடபுத்தக நூல் நிறுவனம்மூலம் நோட்டுப் புத்தகம் தயாரிக்கும் முறையிலே தற்போது தனியார்களுக்கு வழங்கப்பட்டுள்ளஉரிமையை—அரசுப் பதிப்பகத்திற்கே வழங்க அரசு ஆவன செய்யுமா?

(முற்பகல் 10–20)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள்; தலைவர் அவர்களே, நம்முடைய அரசு மூலமாக விற்பனை செய்யப்படுகிற நேரத்தில் தீண்டாமை ஒழிப்புச் சட்டம், மற்றும் உரிமை பாதுகாப்புச் சட்டம் தமிழில் கிடைப்பதில்லை என்று அரசிற்கும் கடிதம் எழுதி இருக்கிறோம். ஆங்கிலத்திலே தான் இருக்கிறது. அந்த விற்பனை நிலையங்களில் தமிழ் பதிப்பில் மேற் கூறப்பட்ட சட்டங்கள் கிடைப்பதற்கு வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்திற்கு ஏற்றவாறு அதற்கு தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு;—ஓர் உரையின் தொடக்கத்தில் (உ) அடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2 தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிக்கை

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இன்றைய தினம் இந்த அவையிலே பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய உரிமை பறிக்கப் பட்டிருக்கிறது. நேற்று இரவு செயலாளரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்த கடிதத்திலே என்னுடைய உரிமை மீறல் பிரச்னை தள்ளப் பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அவர் மீது தான் உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்தேன் விதி 347-ன்கீழ் தள்ளப் பட்டிருக்கிறது என்று சொல்லயிருக்கிறார். விதி 247 என்று சொல்லி விட்டு காரணங்களைச் சொல்கிற போது அந்த விதிக்கே முரணான காரணங்களைச் சொல்கிறார். அதை விளக்குவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்தால் விளக்கிச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய உரிமை பறிக்கப்படவில்லை. அந்த கடிதத்தை இங்கு விவாதிக்கக் கூடாது அதை எடுத்துக் கொண்டு என்னுடைய அறைக்கு வந்தால், அது பற்றிப் பேசலாம்.

திரு. எஸ். சிவராமன்; தலைவர் அவர்களே, இன்றைய தினம் தமிழகத்தில் அரிசி பற்றாக்குறை என்று சொல்லிக் கொண்டிருக் கிறோம். அதே நேரத்தில் கிராமங்களில் கொடுக்கப்படுகிற அரிசியைப் பார்த்தால் புழு பூத்த அரிசியாக இருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை ஒத்தி வைப்புத் தீர்மானமாக கொண்டு வாருங்கள்.





தகவல் கோரல்

திரு. வெ. கு. திருவேங்கடம்; தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக திருவண்ணாமலை, கலசபாக்கம் பகுதிகளில் மின்சாரம் வாரமல் பயிர்கள் எல்லாம் காய்வதாக தகவல் வந்திருக்கிறது. அது பற்றி அரசினுடைய கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வர விரும்புகிறேன். என்ன நிலைமை என்பதைக் குறித்து நாங்கள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை விளக்கச் சொல்வீர்களானால் காய்கிற பயிர்களை காப்பாற்றுவதற்கு நலமாக இருக்கும். மின்சாரம் வராததற்கு என்ன காரணம் என்பதை விளக்கச் செய்ய வேண்டும்....

திரு. ஜே. எஸ். இராசு: என்னுடைய தொகுதியான பெரம்பலூரில் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் மின்சாரம் குறைந்த பட்சம் இரண்டு மணி நேரம் கூட கிடைப்பதில்லை..

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மின்சார மானியக்கோரிக்கையில் பேசிக் கொள்ளலாம். உட்காருங்கள்.

### (ஆ) உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கைகள் பற்றி அளிக்கப் பெறும் விளக்கக் குறிப்புகள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையினுடைய மானியக் கோரிக்கை மீது இன்று விவாதம் நடைபெற இருக்கிறது. இன்றைக்கு எங்களுடைய மேசையின் மீது தமிழ்நாடு அக்ரிகல்சுரல் யூனிவர்சிட்டியின் பத்தாவது ஆண்டு அறிக்கை. 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

The Audit Report on the Accounts of the TamilNadu Agricultural University for the year 1980-81, the Annual Accounts of the Tamil Nadn Agricul ural University for the year 1980-8 என்ற மூன்று விவரங்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு விவாதம் எடுத்துக் கொள்கிற நேரத்தில் இன்றைக்குக் காலையில் தான் வைக்கப்படுகிறதென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் எப்படி படித்துக் கொண்டு பேச முடியும்? மேலும் 80-81-ம் ஆண்டிற்கான அறிக்கையை முன்னாலேயே அனுப்பியிருக்க வேண்டும். நேற்றைய தினம் கூட உள்ளாட்சித் துறை விவாதம் நடக்கிற போது ஊரக வளர்ச்சி பற்றிய குறிப்பு நேற்று காலையில் தான் வைக்கப் பட்டது. இந்த முறையை மாற்றி முன்னாலேயே வைப்பதற்கான முறையை நீங்கள் கொண்டு வர வேண்டும்; அப்படி வைத்தால் தான் உறுப்பினர்கள் படித்து விட்டு வந்து பேசுவதற்கு வாய்ப்பாக இருக்கும், காலதாமதத்திற்கான காரணத்தைச் சொன்னால் நலமாக இருக்கும்,

[1983 மார்ச் 18

## தகவல் கோரல்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஏற்கனவே அனுப்பப்பட்டிருக்கிறது. இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறவை வேளாண் பல்கலைக் கழகத்திற்கு தொடர்பான ஆண்டு அறிக்கைகள். இதனோடு தொடர்புடையன அல்ல. வழக்கமாக இந்த அவையிலே வைக்கப் படுகிறவை என்ற அளவிலே தான் வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதிப்பதற்கு அந்த அறிக்கைகள் ரெலவன்ட் இல்லை என்று சொலவது சரியல்ல, (குறுக்கீடு), ரெலவன்சி இல்லை என்று ஒரு அமைச்சரவர்கள் அன்-அபிஷியலாக சொல்கிறார்கள், ரெலவன்சி இல்லை என்று சொல்வது தவறு. ரெலவன்சி இருக்கிறது. ராட்டீனாக கொடு கப்படுவது என்பதற்கு முன்பு ஒரு முறை பிரச்னையை எழுப்பியிருக்கிறேன். 80-81-ம் ஆண்டிற்கு இப்போது 1983-லே அறிக்கை வைக்கிறது என்று சொன்னால், தலைவர் அவர்களே, நீங்களும், பல அமைச்சர்களும் இங்கே பேசியிருக்கிறீர்கள். ஏராளமான டாக்குமெண்ட்ஸ், நீங்கள் படிப்பதில்லை என்று சொல்வீர்கள். படிக்கிற உறுப்பினர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள், அந்த உறுப்பினர்களுக்கு 1980 ஆம் ஆண்டின் அறிக்கை 83-ல் கொடுத்தால் We are deprived of our opportunity to read that and then put question அல்லது இன்றைக்கு மானியம் வருகிறபொழுது அதை பிராப்பர் ஆக போக்கஸ் செய்வதற்கு our right is being deprined. ஆகவே ஒரு general direction to all the ministers should be given. இந்த மாதிரி documents should be given at the earliest moment. அவைகள் 'ரொட்டீன்' ஆக இருந்தாலும்- கிராண்ட் வருகிற பொழுது கட்டாயமாக இரண்டு நாள் முன்னதாகவே கொடுககவேண்டும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. உமாநாத் அவர்களும், திரு. சித்தன் அவர்களும் எழுப்பிய பிரச்னை உண்மையிலே வரவேற்கக் கூடிய ஒன்று தான், அது எல்லோருடைய கவனத்திற்கும் வர வேண்டியது. அவரவர்களுடைய இலாகாவிலிருந்து ஒரு சில நாட்கள் முன்னதாக வந்தால் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலே கொஞ்சமாவது கவனத்தைச் செலுத்தி கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும் என்பதை அனைவரும் உணர்வீர்கள். ஆகவே, அமைச்சர்கள் தங்கள், தங்கள் இலாகாவிற்கு, அவர்களுடைய செயலளர்களுக்கு அறிவிப்பு தந்து, ஒரு வார காலம் முன்னதாகவே, அந்தந்த இலாகா சம்பந்தப்பட்ட தாள்கள், புத்தகங்கள், மற்றவைகள் அத்தனையும் உறுப்பினர்களுக்கு கிடைக்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் உள்ளபடியே கேட்டுக்கொள்கிறேன் அது மிகமுக்கியமான, கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும் நான் எடுத்துச் சொல்கிறேன்.



1983 மார்ச் 18]

## போலீஸ் லாக்கப்பில் இருந்த ஒரு பெண் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திருவாளர்கள் டி. மணி, ரா. கிருஷ்ணன், அ. ரகுமான் கான், ப. பொன்னுரங்கம், எஸ். இராசாராமன், பெ.சு திருவேங்கடம் உ. சுப்பிரமணியன், கே. கல்லன், சு பாலன், ஜி. மூர்த்தி, கே. எம். தங்கமணி, எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, திருமதி டி யசோதா, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஆகியோர் போலீஸ் காவல் வைக்கப்பட்ட தெய்வயானை என்கிற அரிசனப்பெண் கடந்த செவ்வாய் கிழமை அன்று போலீஸ் லாக் அப்பில் இறந்துள்ளதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி ''வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும் படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னாலே சேலம் கிச்சிபாளையம் கஸ்தூரிப்பாய் தெருவைச் சேர்ந்த குட்டியம்மாள் மகள் தெய்வயானை என்ற அரிசனப் பெண் ஒரு புகாரின் பேரில் போலீசாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளாள். அந்தப் போலீஸ் நிலையத்திற்குள் சுமார் 1½ மணி அளவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, 4½ மணி அளவுக்கு பார்க்கும் போது பிணமாகக் கிடந்தார் என்ற ஒரு செய்தினை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக, போலீஸ் நிலையங்களுக்கு, ஏதாவது புகார்களின் பேரில், யாரையாவது அழைத்துச் செல்கின்ற பொழுது, அவர்கள் உள்ளே செல்கின்ற காலத்தில் திடகாத்திரமாக, ஆரோக்கியமாக உள்ளே செல்கிறார்கள். சில மணி நேரங்களைத் தாண்டினாலும் சரி, சில நாட்களைத் தாண்டினாலும் மரணமடைந்த செய்தியினைப் பார்க்கிறோம். போலீசாரால் அழைத்துப் செல்லப்படுகின்றவர்கள் நேரடியாக 24 மணி காலத்திற்குள்ளாக அவர்களைக் கோர்ட்டிலே ஆஜர் படுத்தியாக வேண்டுமென்ற விதிமுறையிருக்கிறது. அதற்கு முன்னாலே— போலீஸ் நிலையத்திலே பல்வேறு விதமான துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டு, விசாரணை என்ற பெயரினாலே அவர்கள் கொலை செய்யப்படுகின்ற நிகழ்ச்சி இன்றைக்குச் சர்வசாதாரண மாக, நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு மாவட்டங் களிலே நாம் பார்க்க முடிகிறது. இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், நாமெல்லாம் அச்சப்படக்கூடிய அல்லது நமக்கெல்லாம் ஐயம் அளிக்கக்கூடிய இன்னொரு பிரச்னை என்னவென்றால், 1½ மணி அளவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, 4½ மணிக்குள்ளாக ஒரு பெண்மணி பிணமாக, லாக்-அப்பிலே, அந்த போலீஸ் நிலைய சிறை அறைக்குள்ளே கிடக்கிறாள் என்பதுதான். அவர்கள் சொல்லுகின்ற வாதம், அவள் தன் கையாலே, தன்னுடைய சேலையினுடைய முந்தானையைக் கழுத்திலே இறுக்கிப் போட்டு மாண்டு விட்டார் என்பது.

இப்படி ஒரு வாதத்தை அவர்கள் கிளப்பி இருக்கிறார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன், ஏற்கனவே கடந்த சட்ட மன்றக் கூட்டத்தில் இந்தச் சென்னை மாநகரத்திலேயே, இதே போன்ற ஒரு நிகழ்ச்சிபற்றி குறிப்பிடப்பட்டது. ஒரு வாலிபனை ஒரு புகாரின் பேரில் கைது செய்து கொண்டு சென்றார்கள். அங்கேயிருந்த சில பாதைகளைத் தாண்டுகின்றபொழுது அவன் பிணமாக வருகின்ற காட்சியைத்தான் காணமுடிந்தது. அதற்குப் பதில் சொல்லுகின்ற, அல்லது விவரங்கள் தருகின்ற நேரத்தில், அவன் போலீஸ் பிடியிலிருந்துத் திமிறிப் போய் இன்னொரு இடத்தில் விழுந்து, கைகால் முடமாகி இறந்து விட்டான் என்ற செய்தியைத் தந்தார்கள். அதே மாதிரிதான் இரண்டுமூன்று மாதங்களுக்கு முன்னால் ஒரு புகாரின் பேரிலே கொல்லங்கோடு போலீஸ் நிலையத்திலே ஒரு தாயையும் மகளையும் அழைத்துச் சென்றார்கள். விசாரணையின்பொழுது அந்த 11 வயதான பெண்மணியினுடைய விரல் நகத்திலே குண்டூசி அடித்து மிகவும் சித்திரவதை செய்திருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட புகார்கள் கொடுக்கப்பட்டு ஒரு விசாரணை நடந்திருக்கிறது. விசாரணையின்பொழுது, என்ன செய்திருக்கிறார்கள் என்றால், இடமாற்றம் மட்டும்தான் செய்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே, இதுபோன்ற பல சம்பவங்களை இந்த மன்றத்திலே நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இப்படிப்பட்ட போலீஸ் லாக்கப்பிலே இருக்கும்போது துன்புறுத்துவதன் காரணமாக கொலை செய்யப்பட்டு. அல்லது மாண்டுபோகக் காரணமாக இருந்த அந்தப் போலீசார்மீது முறையான நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தால், முறையான தண்டனை வழங்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிச்சயமாக நம்முடைய தமிழ்

(முற்பகல் 10—30)

நாட்டில் நடவாது. அல்லது அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆகவே, இரண்டு மூன்று மணிக்குள்ளாக இந்த அரிசனப் பெண்மணி இறந்தாள் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கைதுக்குப் பின்னாலே இருக்கின்ற சம்பவம் என்ன வென்றால், ஒரு சிறு புகார்தான் இருக்கிறது. அதாவது ஒரு தட்டை அல்லது பாத்திரத்தைத் திருடியதாகக் குற்றச்சாட்டு. அதை வைத்துக்கொண்டு இவ்வளவு பயங்கரமான தண்டனை. போலீஸ் அதிகாரிகளே கொலை செய்யக் கூடிய அல்லது அடித்துத் துன்புறுத்திக் கொலை செய்யக் கூடிய நிகழ்ச்சி நம்முடைய மாநிலத்திலே மீண்டும் நடக்கக் கூடாது. போலீசாரால் அழைத்துச் செல்லப்படக் கூடியவர்கள் திரும்பி வரக் கூடிய அளவிற்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலேயும் நடக்கக்கூடிய சர்வசாதாரண நிகழ்ச்சிகளாக இவை இருப்பதால், இந்தச் சம்பவம் குறித்து மிகத் தெளிவாக விசாரணை செய்ய வேண்டும். போஸ்ட் மார்ட்டம் நடத்தப்பட்டிருந்தாலும்கூட, அதுகூட சாதாரண மருத்துவ அதிகாரியைக் கொண்டு நடத்து வதால் பெரிய அளவில் நியாயம் வரவில்லை. [illegible]



மெடிகல் ஆபீசர்கள் மட்டுமல்லாமல் பெரிய போலீஸ் அதிகாரி களும் ரெவின்யூ துறையைச் சேர்ந்தவர்களும் இருந்திருந்தால் நியாயம் இருந்திருக்கும். எனவே, இதுபற்றித் தெளிவான முறையில் விசாரணை நடத்த வேண்டுமென்பதற்காகவும், இப்படிப்பட்ட சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவும் விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, சேலம் கிச்சிப்பாளையத்தில், தெய்வமணி என்ற 19 வயதுடைய அரிசனப் பெண்மணி எவர்சில்வர் தட்டைத் திருடியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு, அந்தக் காவல் நிலையப் போலீஸ் அதிகாரிகள் அந்தப் பெண்மணியை அழைத்துச் சென்று போலீஸ் லாக்கப்பில் பகல் 1½ மணி முதல் 4½ மணி வரையில் வைத்திருக்கிறார்கள். சுமார் 4½ மணி அளவில் அந்தப் பெண்மணி இறந்து கிடந்தாள் என்ற தகவல் சொல்லப்படுகிறது. ஆனால் போலீஸ் தரப்பிலே, அந்தப் பெண்மணி தற்கொலை செய்து கொண்டதாகவும், காவலிலே இருக்கும்பொழுது, போலீஸ் லாக்கப்பில் இருக்கும்பொழுதே தன்னுடைய சேலையினுடைய இரண்டு முந்தானைகளையும் பயன்படுத்தி, போலீஸ் லாக்கப்பிலே இருக்கும் ஜன்னல் கம்பி களிலேயும், அதைப்போலவே போலீஸ் லாக்கப்பிலே இருக்கின்ற கதவுகளின் கம்பிகளுக்கு இடையிலேயும் அவற்றைக் கட்டி அதில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என்று போலீஸ் தரப்பிலே சொல்லப்படுகிறது.

ஆனால், அந்தப் பகுதி மக்கள் தெளிவாகச் சொல்வது, அந்தப் பெண்மணியின் தாயார் உட்பட தெளிவாகச் சொல்வது, விசாரணை என்று போலீஸ்காரர்கள் அந்தப் பெண்மணியை அழைத்துச் சென்று, கற்பழித்து, அதோடு அங்கே அடித்தே கொன்று விட்டார்கள் போலீஸ் லாக்கப்பிலே என்றுதான். அந்தப் பகுதி மக்கள் தெளிவாகச் சொல்லி, காவல் நிலையத்தின் முன்பு மிகப்பெரிய கிளர்ச்சி நடைபெற்றிருக்கின்றது; இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

ஆனால், இதிலே ஒரு உண்மையை நாம் கண்டறிய வேண்டும். சம்பவம் நடந்திருப்பது பகலில். போலீஸ் லாக்கப்பில் 1½ மணி முதல் 4 மணி வரையில் அந்தப் பெண்மணி இருந்திருக்கிறாள். போலீசாரின் பாதுகாப்பில், போலீசாரின் பார்வையில், போலீஸ் லாக்கப்பில் பகலில் இருந்திருக்கிறார்கள். தற்கொலை செய்து கொள்வதற்கு அல்லது சேலையைக் கிழித்து அதைப் பயன்படுத்தித் தூக்குப் போட்டுக் கொள்வதற்கு எந்தவிதமான சந்தர்ப்பம் இருந்தாலும் அது போலீசாருடைய கவனத்தில் இருந்திருக்க வேண்டும். அப்படியிருந்திருந்தால் அதைப் போலீசார் தடுத் திருக்க முடியும். எனவே, போலீசாருக்குத் தெரியாமல் பகல்

1½ மணி முதல் 4 மணிக்குள்ளாக இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்க முடியாது. எனவே, இது தற்கொலை, சேலையைப் பயன்படுத்தித் தூக்குப் போட்டுக்கொண்டார் என்ற வாதம் சரியான வாதமே இல்லை. கற்பழித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், போலீஸ் ஸ்டேஷனிலே அந்தப் பெண் மணியை போலீஸ் லாக்கப்பிலே வைக்க வேண்டிய அவசியமே கிடையாது. திருட்டுக் குற்றமாக இருந்தாலும் விசாரணை என்று சொல்லி அழைத்துச் சென்று விசாரிக்கலாம் அல்லது சொந்தப் பொறுப்பிலேயே அவர்கள் வீட்டிற்கே சென்று விசாரிக்கலாம் அல்லது கூப்பிடும்பொழுது வர வேண்டும் என்று சொல்லலாம். அவ்வாறு விசாரித்து, உடனடியாக நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல், பெண்மணியாக இருந்தும்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

போலீஸ் லாக்கப்பிலே பகல் 1½ மணி முதல் 4½ மணி வரையில் வைக்க வேண்டிய அவசியமே கிடையாது. கற்பழிப்பு நோக்கமும், அதையடுத்த சம்பவங்கள் நடக்கவும் அதுதான் காரணமாக இருந்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பெண் திருடி விட்டாள் என்ற குற்றச்சாட்டை, நீதி விசாரணை செய்த ஆர்.டி.ஓ.கூட ரொம்ப வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். அந்தப் பெண்மணி ஏற்கனவே திருட்டுக் குற்றத்தில் ஈடுபட்ட பெண் என்ற குற்றச்சாட்டும் சொல்லப்படுகிறது. அதை ஒத்துக் கொள்வதில் தடை இல்லை. அந்தப் பெண் திருடியாகக் கூட இருக்கலாம். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கூட இருக்கலாம். ஆனால் அதற்காக அந்தப் பெண்மணிக்குத் தண்டனை கொடுக்க வேண்டியது நீதிமன்றம் தானே தவிர, போலீஸ் அதிகாரிகள் அல்ல. விசாரணை செய்து நீதிமன்றம்தான் தண்டிக்க வேண்டும். ஒரு நாயைக் கொல்வதற்குக் கூட போலீசாருக்கோ, வேறு யாருக்குமோ அதிகாரம் கிடையாது; உரிமை கிடையாது. ஆனால் அங்கே அநியாயமாக ஒரு பெண்மணி கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கின்றாள். நம்பத் தகுந்த ' ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்ல, நான் இன்னொன்றையும், இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். கர்பூரி தாகூர் ஒரு முறை சொல்லியிருக்கிறார்கள். அதுபோல், போலீஸ் லாக் அப்பிலே நடந்த' யாருக்கும் தெரியாமல், போலீசாருக்குக் கூட தெரியாமல், இந்தக் காரியம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால், போலீஸ்காரர்களாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, கிரிமினல் குற்றம் செய்தவர்களை, 'இந்தியன் பினல் கோட்-சட்டத்தின்படி' நீதிமன்றத்தில் தான் விசாரிக்கவேண்டும். இன்றைக்கு கற்பழித்து, கொலை செய்யப்பட்டார்கள் என்ற சூழ்நிலை அங்கே இருக்கிறது, 302-செக்‌ஷன்படி அவர்கள் போடப்பட்டு, அவர்கள் பெரிய அதிகாரியாக இருந்தாலும் சரி, பெரிய நபராக இருந்தாலும் சரி, அல்லது பெரிய போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் சரி. கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்ல, இந்த அண்ணா தி. மு. க. ஆட்சியில் தொடர்ந்து போலீஸ் லாக்-அப்பிலே பலர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். சுமார் 150 பேர்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, போலீஸ் லாக்-அப்பில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன் மீது எந்த வித நடவடிக்கையும் இல்லை. வழக்கமாக அந்த அதிகாரிகளை 'சஸ்பெண்டு' தான் செய்கிறார்கள். ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தி, அது தற்கொலை என்றும், தற்கொலை என்று போஸ்ட் மார்ட்டெம் சர்டிபிகேட்டும் வந்துவிட்டது என்பதோடு அவர்களுடைய வேலை நின்று விடுகிறது. இதுபோன்ற காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இன்றைக்கு அங்கே எல்லோருக்கும் பயமாக இருக்கிறது. போலீஸ் லாக்-அப் விசாரணை என்று அவர்களை அழைத்துக் கொண்டுபோய், போலீஸ் லாக் அப்பில் யாரை வேண்டுமானாலும் அடித்துக் கொன்று விடலாம் என்ற கேட்பாரற்ற-நாதியற்ற நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தி, வழக்கம் போல் அது தற்கொலை தான் என்று முடிவு செய்து, மருத்துவப் பரிசோதனையும் தற்கொலை என்று வந்து விட்டது என்று சொன்னால் அது நியாயம் ஆகாது. கற்பழிக்கப்பட்டு, போலீஸ்காரர்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆர்.டி.ஓ. விசாரணை என்பது வெறும் கண் துடைப்பு. ஒரு நீதி விசாரணை நடத்த வேண்டும். அதன்மூலம் இந்த அக்கிரமத்திற்கு முடிவு கொண்டுவரவேண்டும். ** ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை எப்படி ஒத்தி வைக்கவேண்டும் என்பதற்கான காரணங்களைச் சொல்லுங்கள். ஜெனரல் டிஸ்கஷனாகப் பேசக்கூடாது. ஆகவே ** என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தொடர்ந்து போலீஸ் லாக்-அப்பிலே பல பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு போலீஸ் ராஜ்யமாக இருந்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, இந்த அவசர முக்கியத்துவத்தைக் கருதி, இந்தப் பிரச்சினையை வாதிப்பதற்காக, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், கிச்சிப் பாளையத்திலுள்ள, கல்லூரி சாலைத் தெருவிலே, பச்சையம்மாள் வீட்டில் திருடு நடைபெற்றதாகக்கூறி, மாரியப்பன் மகள் தெய்வமணி என்ற ஆதித்திராவிட வகுப்பைச் சார்ந்தவர், திருட்டுப் பட்டம் சாட்டப்பட்டு, விசாரணை செய்வதற்குப் போலீசாரால் அழைத்துச் செல்லப்பட்டார். அப்படி அழைத்துச் செல்லப்பட்ட அந்த தெய்வமணி என்ற பெண் பருவ மங்கை, வயது 19, இளம் வயதுடையவள். அவர் மாலை 4 மணி அளவிலே போலீஸ் லாக் அப்பில் தூக்குப்போட்டுக்கொண்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் லாக் அப்பில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டது, . . இது முதல் தடவையல்ல, . . குற்றம் சாட்டப் பட்டதாக அழைத்துச் செல்லப்பட்டது—ஏற்கனவே இரண்டு முறை இதே காரணத்திற்காக லாக் அப்பில் வைக்கப்பட்டிருக் கிறார். எனவே அவமானம் தாங்கமுடியாது அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்லப்பட்டிருப்பது சரியான வாதம் அல்ல. அவரைக் கற்பழித்து தான் அங்கே கொலை செய்தார்கள்—லாக் அப்பில்—என்பதற்கு போதுமான சாட்சி யங்கள் இருக்கின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள மக்கள் இதைத் தெரிவிக்கிறார்கள். தனி இலாகா பூர்வமான விசாரணை நடத்து வதாக அதிகாரிகள் வட்டத்திலே சொல்லப்படுகின்றன. ஆகவே ஹரிஜன சமுதாயத்திலுள்ள ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, அதுவும் போலீஸ் லாக்-அப்பிலே வைத்திருந்த பெண்மணி-கொலை செய்யப்பட்டு கிடக்கிறார் என்றால், இலாக்கா பூர்வமான விசாரணை, எந்த விதமான குற்றவாளியையும் கண்டுபிடிக்க முடியாது. உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்கவேண்டுமென்றால், அவர்களை நீதி மன்றத்திற்குக் அனுப்பவேண்டுமென்றால், நீதி விசாரணை தேவை என்பதை வலியுறுத்தி, இன்றைய பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. ஜி. மூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிச்சிப்பாளையம் என்ற கிராமத்தில் தெய்வயானை என்ற ஆதிதிராவிடப் பெண்மணி பிணமாகக் கிடந்தார் என்பது எல்லாப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது. அந்த வட்டாரத்திலே இது மிகப் பெரிய பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. ஆதி திராவிட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு காவல்துறையினரால் பாதுகாப்பு இல்லை என்ற அச்சத்தை இந்தச் சம்பவம் உண்டாக்கியிருக்கிறது. பொதுவாகவே தாழ்த் தப்பட்ட மக்களைப் பழிவாங்கவேண்டும் என்று இந்த மேல் ஜாதிக்காரர்கள் நினைத்தால், அவர்களுக்கு ஒரு எளிய வழி, திருடிவிட்டார்கள், என்னுடைய நிலத்திலே அத்து மீறி நுழைந்து விட்டார்கள், தென்னை மரத்திலே ஏறி தேங்காய் பறித்து விட்டார்கள் என்று ஒரு சாக்கைச் சொல்லி, அதன் மூலம், அவர்கள் பெண்களானாலும், ஆண்களானாலும் சரி, அவர்களை



போலீஸ் ஸ்டேசனுக்கு அழைத்துச் செல்கிற ஒரு பழக்கம், இருக் கிறது. நீண்ட நெடுநாட்களாக, பல்லாண்டுகளாக இந்தச் சமுதாய மக்கள் அதை அனுபவித்து வருகிறார்கள். இந்தப் பிரச்னையிலே அந்த ஆதி திராவிடப் பெண்மணி காவல் நிலையத்திலே பிணமாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். பட்டப் பகலிலே அந்தப் பெண்மணியை பிணமாக ஆக்கியிருக்கிறார்கள் என்றால், எந்த அளவுக்கு காவல்துறை கண்காணிப்பு இதிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதற்கு பதில் சொல்லவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரம் அல்ல, இந்த நேரத்திலே நான் ஒன்றைக் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜாதி இந்துக்கள் என்று சொல்கிற வர்கள் அவர்களுக்கு இருக்கிற போலீஸ் ஆதரவை வைத்துக் கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்படிக் கொடுமைகள் செய்து வருகின்ற நிலைமையை நாம் தடுத்தாகவேண்டும். இது போல் ஒவ்வொரு கிராமத்திலேயும் நடந்துகொண்டிருக்கிறது. எத்தனை ஆட்சி மாறினாலும், இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரை தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் விடுபட்டதாகத் தெரியவில்லை. இந்த நாட்டிலே தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேராதவர்கள் தங்களுக்கு இருக்கின்ற போலீஸ் ஆதரவை வைத்துக்கொண்டு தாங்கள் நினைத்ததை செய்யக் கூடிய நிலைமையிருக்கிறது. ஒரு பெட்டிக் கேசுக்காக, ஒரு திருட்டு வழக்கிற்காக காவல் நிலையத்திலே வைக்கப்பட்டார். ஆனால் அந்த வட்டாரத்திலே இருக்கின்றவர்கள் இதைக் கேட்பதற்கு துணிவு இல்லாதவர்கள். போலீஸ் ஸ்டேசனிலே போய் வெளியே அனுப்பு என்று சொல்வதற்கு தைரியம் இல்லாத வர்கள். ஆனால் இதே ஜாதி இந்துக்களைச் சேர்ந்தவர்கள் யாராவது காவல் நிலையத்திலே வைத்திருப்பார்களானால், அவரை வெளியே அனுப்புகின்றவரை கேரோ செய்கின்ற அளவிற்கு ஜாதி இந்துக்கள் போராட்டம் செய்திருப்பார்கள். ராணிப்பேட்டையிலே கூட ஒரு கொலை நடந்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தச் சம்பவத்தை பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. ஜி. மூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி பொய்க்குற்றம் சாட்டி போலீஸ் ஸ்டேஷனிலே வைத்து உள்ளே தள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்த விஷயத்திலே எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல், இருக்கிறது. அவர்களுடைய உரிமையை அது கட்டுப்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே இவைகளுக்கு எல்லாம் ஒரு முடிவு காணவேண்டும். அந்தப் பெண்மணியார் பிணமாகக் கிடந்த அந்த நிலைமைக்கு மாற்று யோசனை அங்கே இருக்கின்ற காவல்துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கிச்சிப் பாளையம் என்ற கிராமத்தில் 19 வயதுப் பெண்மணி, அரிஜனப் பெண்மணி, கல்யாணம் ஆகாதவள், அது மாத்திரம் அல்ல, பார்ப்பதற்கு சற்று அழகாகக்கூட இருப்பாள். அப்படிப்பட்ட அந்தப் பெண்மணியை திருட்டுக் குற்றம் சாட்டி, அந்தப் போலீஸ் ஸ்டேஷனிலேயே வைத்து மானபங்கப்படுத்தப்பட்டு, அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் நிலையத்திற்கு திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்ட அந்தப் பெண்மணி, அங்கே மானபங்கப்படுத்தப்பட்டு அதன் காரணமாக அவர்கள் இறந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படிப் பட்ட சம்பவங்கள் இந்த போலீஸ் துறைக்கு மாத்திரம் அல்ல, இன்றைக்குக்கூட பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. 2½ வயது குழந்தை ஒருவனால் மானபங்கப்படுத்தப்பட்டு, அதனால் அவனுக்கு 15 நாட்கள் ரிமாண்ட் போடப்பட்டதாக செய்தி வந்திருக்கிறது. ஆகவே இந்த அளவுக்கு பெண்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களுடைய மரியாதைகள் போகக் கூடிய அளவிற்கு இந்த நாட்டிலே உள்ள பெண்களுக்கு ஒரு பெரிய மோசமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இதைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டும். அதோடு இப்படி எங்கெங்கு பெண்கள் எல்லாம் மானபங்கப்படுத்தப்படுகிறார்களோ, அப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்கின்றவர்களுக்கு தூக்கு தண்டனை கொடுக்கக்கூடிய அளவுக்கு நாம் வழிசெய்யவேண்டும். அல்லது அவர்களை நிற்க வைத்து துப்பாக்கியை வைத்து கொண்டு சுடக்கூடிய ஒரு தண்டனையை கொடுக்கவேண்டும். அப்போதுதான் இந்த நாட்டிலே உள்ள பெண்கள் மானபங்கப் படுத்தப்படாமல், தங்களுடைய காரியங்களைச் செய்ய முடியும். ஆகவே இவைகளைப் பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல் களை ஒத்திவைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டம், கிச்சிப்பாளையம் என்ற கிராமத்தில் இருக்கும் காவல் நிலையத்தில் திருட்டு வழக்குச் சம்பந்தமாக தெய்வானை என்ற 19 வயது அரிசன பெண் கைது செய்யப்பட்டு, மர்மமான முறையில் மாண்டார் என்று சொல்லப்படுகிறது. அண்மையில் நடைபெற்று இருக்குச் சம்பவம் திருட்டு வழக்கிலே அடைக்கப் பட்ட நேரத்தில் நடைபெற்றது என்று சொல்லப்பட்டாலும்கூட அவர் மீது விசாரணை செய்து சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாகவே, 3 மணி நேரத்திலே அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்ததாக போலீஸ் தரப்பிலே சொல்கிறார்கள். அங்கேயுள்ள மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த 19 வயதுப் பெண்ணை போலீஸ் அதிகாரிகள் கற்பழித்து, அவள் போலீஸ்





அதிகாரிகளாலும், போலீஸ்காரர்களாலும் கொலை செய்யப் பட்டு இருப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. இன்று இருக்கும் சூழ்நிலையில் தமிழகத்திலே உள்ள சேலம் மாவட்டத்திலே மட்டும் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படவில்லை.

நான் சார்ந்து இருக்கும் கோவை மாவட்டத்திலேகூட ஆலந்துறை என்ற போலீஸ் நிலையத்திலே இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இருக்கும் கைதியை காவல் நிலையத்திலேயே பெட்ரோல் ஊற்றி, நெருப்பு வைத்து, கொளுத்திவிட்டபிறகு, தானாகவே தற்கொலை செய்து கொண்டதாக போலீஸ் தரப்பிலே சொல்லப்பட்டு இருக்கிற ஒரு சம்பவம் அங்கே நடைபெற்று இருக்கிறது. அதேபோல், கோவை யில் இருக்கும் பி–2 போலீஸ் ஸ்டேஷனில் குடும்பத்திலே இருக்கக் கூடிய ஒரு தகராறைப் பயன்படுத்தி, கணவர் கொடுத்து இருக்கக் கூடிய புகாரைப் பயன்படுத்தி, ஒரு பெண்ணை விசாரணைக்கு அழைத்துச்சென்று 6 மணிக்கு மேலே காவல் நிலையத்திலே வைத்து, கற்பழிக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே, அவரே தற்கொலை செய்து கொண்டதாகவும் போலீஸ் அதிகாரிகள் மட்டத்தில் சொல்லப்பட்டு, 6 மணிக்குமேல் காவல் நிலையத்தில் அந்தப் பெண்ணை வைத்து இருந்தது தவறு என்று சொல்லி தற்போது அந்த போலீஸ் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் கோவை மாவட் டத்திலே மட்டுமல்ல, சேலம் மாவட்டத்திலே மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் 1980–ஆம் ஆண்டு முதல் 1982–ஆம் ஆண்டு ஜூன் முடிய எவ்வளவு நடைபெற்று இருக்கிறது என்று ஆங்கிலப் பத்திரிகையான "இல்லஸ்டிரேடட் வீக்லி" தெளிவாகச் சொல்லியிருக்கிறது. காவல் நிலையத்தில் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்படுகிற பெண்கள், கைதிகள் போலீஸ் அதிகாரிகளால், போலீஸ்காரர்களால் கொல்லப்படுகிறார்கள் என்று சொல்லி, கிட்டத்தட்ட 152 பேர் இவ்வாறு கொல்லப் பட்டு இருக்கிறார்கள் என்று அந்த ஆங்கில வார ஏடு தெளிவாகச் சொல்லியிருக்கிறது. எனவே தமிழகத்திலே காவல் நிலையத் திற்கு அழைத்துச் செல்லப்படும் பெண்களாக இருந்தாலும் சரி, கைதிகளாக இருந்தாலும் சரி, காவல் நிலையத்திற்குச் சென்று, மீண்டும் வீடு திரும்ப முடியுமா என்ற ஐயம் தமிழகத்திலே ஏற்பட்டுள்ளது. அந்த அளவிற்கு இங்கே போலீஸ் ராஜ்யம் நடந்துகொண்டு இருக்கிறது. ஆகவே இப்போது சேலம் மாவட்டத்தில் நடைபெற்று இருக்கும் சம்பவத்தை அடிப்படை யாகக்கொண்டு, தமிழகம் முழுவதும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்பொருட்டு, விவாதிக்கவேண்டும் என்பதற்காக இந்த சேலம் கிச்சிபாளையம் சம்பவம் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சேலம் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் திருட்டுக்குற்றம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டு, போலீஸ் லாக்-அப்பில் மரணம் அடைந்த அரிசனப்பெண் தெய்வமணி சம்பவம் குறித்து கொண்டு வரப் பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப் பினர்கள் கருத்துக்களைச் சொல்கிறநேரத்தில் சில பல கருத்துக் களை எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். பொதுவாக காவல் நிலையத்திலே கைது செய்யப்பட்டு அடைக்கப்படுகிறவர்கள் காவல் நிலையத்திலேயே இறந்து விடுகிறார்கள் என்பது வருந்தத் தக்கது. அதிலும் குறிப்பாக இந்த நிகழ்ச்சி மிகவும் வருந்தத் தக்கதாகும்.

இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுவது வருந்துதற்குரியது தான். ஆனால் இவைகள் எல்லாம் சர்வ சாதாரணமாக நடை பெறுவது இல்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக அவ்வப் போது நடைபெறுகின்றன. வெவ்வேறு காரணங்களுக்காக நடைபெறுகின்றன. சில சமயங்களில் கடுமையான நோய் காரணமாக இறந்து விடுகிறார்கள். சில சமயங்களில் இருதய நோய் காரணமாக இறந்துவிடுகிறார்கள். சில சமயங்களில் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிடுகிறார்கள். சில சமயங்களில் வன்முறை காரணமாக தாக்கப்பட்டு, அந்தத் தாக்குதலைத் தாங்கமுடியாமல் இத்தகைய நிகழ்ச்சிகள் நடை பெற்றுவிடுகின்றன. அதையொட்டி நாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இப்போது சேலத்திலே நடைபெற்று இருக்கிற நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், எவர்சில்வர் பாத்திரம் திருட்டு சம்பந்த மாகச் சேலம் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு பற்றி சேலம் ஒட்டன் என்கிற மாரி யப்பனின் மகள் குள்ளுண்டு என்கிற தெய்வமணி என்பவரை 15-3-83 அன்று பகல் 1.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், காவல் நிலையத்தில் ஒரு அறையில் அவர் வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது. அவர் ஒரு பழைய குற்றவாளி என்றும், எற்கனவே ஒரு வழக்கில் தண்டனை பெற்றவர் என்றும் தெரிகிறது. 15-3-83 மாலை சுமார் 4-30 மணிக்கு காவலர் 2472 என்பவர் அந்தப் பெண் காவல் நிலைய அறையில் தான் உடுத்தியிருந்த சேலையின் ஒரு தலைப்பைக் கழுத்தில் சுற்றப்பட்ட நிலையிலும், மறுதலைப்பு ஜன்னலின் இரும்புக்கம்பிகளில் கட்டப்பட்டுள்ள நிலையில் தூக்கில் தொங்குவதைப் பார்த்தார். அவர் உடனே உதவி ஆய்வாளருக்குத் தகவல் தந்தார். குற்றம் சாட்டப்பட்ட தெய்வமணி தற்கொலை செய்து கொண்டார் என்று உதவி ஆய்வாளர் சேலம் கோட்டாட்சித் தலைவருக்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பி பிரேத விசாரணை செய்யக் கேட்டுக் கொண்டார்.





கோட்டாட்சித் தலைவர் பிரேத விசாரணை நடத்தினார். பஞ்சாயத்தார்கள் இறப்பு தற்கொலையால் நேர்ந்ததென ஒருமித்த கருத்தைத் தெரிவித்தனர். இதில் வன்செயல் நடந் திருக்கும் என்ற சந்தேகத்திற்கு இடமில்லை. உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பபபட்டுப் பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டது. பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவ அதிகாரி, தூக்குப் போட்டுக் கொண்டதால் ஏற்பட்ட மூச்சுத் திணறலினால் இறப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், கற்பழிப்பிற்கான தடயங்கள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பி.எஸ்.ஓ. 145-ன்படி சேலம் கோட்டாட்சித் தலைவரை இந்த நிகழ்ச்சி குறித்து விசாரணை செய்து விரிவான அறிக்கை அனுப்பும்படி உத்தரவிட்டுள்ளார். கண்காணிப்புப் பொறுப்பை ஏற்றிருந்த காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர், காவலரொருவர் ஆகிய மூன்று பேர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். விசாரணை அறிக்கை நடத்தப் பெற்றதும் அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 10-50)

இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்து தெரிவிக்கும் போது கூட இதில் வன்முறை அல்லது வேறு சம்பவங்கள் நடை பெற்றிருப்பதாகத் தெரியவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். பகலிலே 1½ மணி முதல் 4-00 மணி வரையிலான இந்த இடைப் பட்ட காலத்தில் இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது. காவல் துறையினரின் கண்காணிப்புக் குறைவினால், அவர்களுடைய அஜாக்கிரதையினால் தான் இந்த சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் கூட ஒரு பெண் கைது செய்யப்பட்டு, லாக்கப்பில் வைக்கப்பட்டிருக்கும் போது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுவது வருந்தத் தக்கது.

ஏற்கெனவே அரசு ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. எக் காரணத்தைக் கொண்டும், எந்த ஒரு பெண்ணையும் இரவிலே போலீஸ் லாக்கப்பில் வைக்கக்கூடாது என்றும், லாக்கப்பில் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால் உடனே சிறைக்கு அனுப்பிவிட வேண்டுமென்றும், அதற்கு வசதி இல்லை என்றால் விடுதலை செய்து மறுபடியும் கைது செய்ய வேண்டுமென்றும் தெளிவாகக் கூறியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையிலும் வேறு பல சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்த்தும் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 18

இந்தக் குறிப்பிட்ட பிரச்சனையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதுபோல் உண்மையான தடயங்கள் கிடைத்து, தகுந்த ஆதாரங்கள் விசாரணையில் கிடைக்குமானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கும். அதே நேரத்தில் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குற்றம் புரிந்தவர்கள் என்ற அடிப்படையில் குற்றம் புரிந்தவர்கள்மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. உள்ளபடியே குற்றம் செய்திருந்தால் எந்த ஒரு காவல் துறை அதிகாரியையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை. குற்றம் செய்தவர்கள் காவல் துறையில் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்; அவர்களை காப்பாற்ற வேண்டுமென்ற அவசியத்தில் இன்றைக்கு இந்த அரசு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்., அப்படி நடவடிக்கை எடுப்பது தான் இந்த அரசுக்கும் பெருமை, இந்த மாமன்றத்திற்கும் பெருமை தேடித் தருவதாக இருக்கும். ஆனால் காரணம் இல்லாமல் யாரையும் தண்டித்து விடக் கூடாது என்பதற்காகத் தான் விசாரணை நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுவதுபோல் விசாரணை அறிக்கையில் தெரிவித்தால், தகுந்த ஆதாரம் கிடைத்தால் அந்த காவல் நிலையத்தில் இருக்கிற யாரையும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. விசாரணை நடத்துகின்ற கோட்டாட்சித் தலைவரவர்கள் தருகின்ற அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லி, அவையை ஒத்திவைத்து மேலும் இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### இலங்கைக் கடற்படையினரால் இராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், டி. மணி, எம். செல்லமுத்து, கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், இரா. தாமரைக்கனி, டாக்டர் கே. சமரசம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



1983 மார்ச் 18]

திரு. டி. மணி: துணைத் தலைவரவர்களே, ''இராமேஸ்வரம் கடல் பகுதியில் ஏனம்நாடு மீனவர்கள் பிடித்து வைத்திருந்த இறால் மீன்களை இலங்கை கடற்படையினர் எடுத்துச் சென்று விட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

இராமேஸ்வரம் கடல் பகுதியில் மேலே குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்றதாக தகவல் இல்லை. மேலும், இப்பகுதி மீனவர்களிடம் எந்தவித பதட்ட நிலையும் இல்லையென்று துறை அலுவலர்களின் விசாரணைக்குப் பின் தெரிய வந்துள்ளது. 28—2—1983 நாளிட்ட ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' என்ற நாளேட்டில் ''இந்திய மீனவர்களிடம் கொள்ளை'' என்ற தலைப்பின் கீழ் செய்தி ஒன்று வெளியானது. இது குறித்து துறை அலுவலர்கள் விசாரணை நடத்தினார்கள். அப்பொழுது இராமேசுவரத்தைச் சார்ந்த மீனவர்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த பொழுது, இலங்கை கப்பற்படையினர் அம் மீனவர்கள் பிடித்து வைத்திருந்த இறால் மீன்களை அபகரித்துச் சென்றுவிட்டனர் என்றும், இந்நிகழ்ச்சி கடலில் எந்த இடத்தில் நடைபெற்றது என்பதை அறிய கடற்கரை காப்பாளரின் ஆய்வினால் தான் முடியும் என்றும், இலங்கை கப்பற்படையினர் அபகரித்துச் சென்ற இறால் மீன்களின் மதிப்பினைக் கணிக்க இயலவில்லை என்றும் தெரிய வந்தது.

2. பெருமளவில் மீன்கள் (இறால்) கிடைக்கும் இடமான கச்சத்தீவு ஏற்கனவே இரு நாடுகளின் ஒப்பந்தப்படி, இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டபடியால், இந்த இரு நாடு களின் கடல் எல்லையை குறிக்கும் அடையாளம் மீனவர்களால் சரிவரத் தென்படாதக் காரணத்தினாலும், மீனவர்கள் மோச மான பருவ நிலை காரணமாகவும் இலங்கை கடல் எல்லையில் தள்ளப்படுவதுண்டு. எடுத்துக் காட்டாக, 5—3—1980 இல் 60 மீன் பிடிப்படகுகள் கச்சத்தீவு கடற்பகுதி அருகில் மீன்பிடித்துக் கொண்டிருப்பதை இலங்கை கப்பற்படையினர் அறிந்து, அந்த 60 படகுகளையும், மீனவர்களையும், கைது செய்து இலங்கைக்கு கொண்டுச் சென்றனர். இந்தத் தகவல் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவுடன், இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக இரண்டாம் செயலாளருடன் தொடர்பு கொள்ளப்பட்டது. 60 மீன்பிடிப் படகுகளையும், மீனவர்களையும், அவர்களது உடமைகளுடன் திரும்ப தாயகத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களும் தங்கள் உடமைகளுடன் தாயகத்திற்குத் திரும்பினார்கள். இந்த இரு நாடுகளின்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 18

மீனவர்களின் பிரச்சினைகளைக் குறித்தும், இலங்கை கப்பற்
படையினரால் இந்திய மீனவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக்
குறித்தும், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் இலங்கை
யிலும், 1981 ஆம் ஆண்டு மே திங்களில் புதுடெல்லியிலும்,
1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் சென்னையிலும், 1982
ஆம் ஆண்டு மே திங்களில் புதுடெல்லியிலும் நடைபெற்ற இந்திய
இலங்கை பிரதிநிதிகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.
1982 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் இலங்கையில் நடைபெற்ற
இரு நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில், இரு நாடுகளின்
மீனவர்களின் பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்த்துக்
கொள்வது குறித்து விவாதிக்கப்பட்டது. கீழ்க்கண்ட கருத்துக்கள்
அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன:—

(அ) கடல் எல்லை பராமரிப்பில், இந்திய மீனவர்கள்
இலங்கை கடற்கரையிலும், இலங்கை மீனவர்கள் இந்தியக்
கடற்கரையிலும் பிடிபட்டால், அந்தத் தகவலை உடனுக்குடன்
இரு நாடுகளின் காவல்துறை கடல் தொடர்பு மார்க்கமாகத்
தெரிவிக்க வேண்டும்;

(ஆ) தேவைப்படின், தமிழ்நாடு மீன்துறை அலுவலர்
இலங்கை சென்று, இலங்கை கப்பற்படையினரால் கைது செய்யப்
பட்ட இந்திய மீனவர்களையும், அவர்களது உடைமைகளையும்,
திரும்பப் பெற்று, தாயகத்திற்கு திருப்பி அனுப்பி வைத்திடும்
முகத்தான், மீன்துறை அலுவலருக்கு உரிய 'விசா' வழங்குதல்.

எனினும், இலங்கை கப்பற் படையினரால் அபகரித்துச் செல்லப்
படும் இந்திய மீனவர்களின் உடமைகளை இலங்கையில் உள்ள
இந்திய தூதரக இரண்டாம் செயலாளருடன் கடிதத் தொடர்பு
கொண்டு அபகரித்துச் சென்ற பொருட்களை மீட்டு உரிய
மீனவர்களிடம் ஒப்படைக்கும் பணியினை அவ்வப்போது தமிழ்
நாடு மீனளத்துறை செய்து வருகிறது.

**திரு. டி. மணி :** துணைத் தலைவரவர்களே, இராமேஸ்வரம்
கடல் பகுதியில் ஏனம்நாடு மீனவர்கள் பிடித்து வைத்திருந்த
மீன்களை இலங்கையைச் சேர்ந்த கடல்படையினர் எடுத்துச்
சென்று விட்டார்கள்; கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்கள்
என்ற தகவல் வந்திருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய கடற்
கரைப் பகுதிகளைப் பாதுகாக்கின்ற, நம்முடைய மீன் வளத்தைப்
பாதுகாக்கின்ற, கடல் எல்லையை பாதுகாக்கின்ற, நிலை பொது
வாக இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடை
பெற்று வருகிறது. ஆகவே, இந்த நிகழ்ச்சிகள் நடைபெறாமல்
இருக்க, நம்முடைய கடல் எல்லையை பாதுகாக்க அரசாங்கம்
என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை
அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 18]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்
பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பது
போல 28-2-1983 ஆம் நாளிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'
பத்திரிகையில் இப்படிப்பட்ட ஒரு செய்தி வந்தது. செய்தி
வந்தவுடனேயே விசாரிக்கப்பட்டபோது, இதற்கு ஆதாரமே
இல்லை என்று தெரிய வந்திருக்கிறது. இது குறித்து மீனவர்
களிடத்திலிருந்து எந்த வித மனுவும், அல்லது குறைபாடு
தெரிவித்தும் எதுவும் வரவில்லை.

1980ல் இது போன்று ஒருமுறை நடைபெற்று, அவர்களுடைய
பொருள்கள் எல்லாம் எடுத்துச் செல்லப்பட்டதற்குப் பிறகு,
இந்திய தூதரகத்தை அணுகி, அவர்களால் சமாதானம் செய்யப்
பெற்று, அந்தப் பொருள்களை எல்லாம் திரும்பவும் மீனவர்
களுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலை
ஒவ்வொரு ஆண்டும் திரும்பவும் ஏற்பட்டதன் காரணமாக,
இலங்கை அதிகாரிகளோடு, நம்முடைய அதிகாரிகளும் கூடிப்பேசி
சில பல ஒப்பந்தம் செய்வதன் பொருட்டு, 1981 ஆம் ஆண்டு
பிப்ரவரித் திங்களில் இலங்கையிலும், 1981 ஆம் ஆண்டு
டிசம்பர் திங்களில் சென்னையிலும், 1982 ஆம் ஆண்டு மே
திங்களில் புதுடெல்லியிலும் நடைபெற்ற இந்திய இலங்கை பிரதி
நிதிகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. கீழ்க்கண்ட முடிவுகளை
யும் அதில் முக்கியமாக எடுத்தனர்:—

(1) கடல் எல்லை பராமரிப்பில், இந்திய மீனவர்கள்
இலங்கை கடற்கரையிலும், இலங்கை மீனவர்கள் இந்தியக்
கடற்கரையிலும் பிடிபட்டால், அந்தத் தகவலை உடனுக்குடன்
இரு நாடுகளின் காவல் துறை கடல் தொடர்பு மார்க்கமாகத்
தெரிவிக்க வேண்டும்;

(2) தேவைப்படின், தமிழ்நாடு மீன்துறை அலுவலர்
இலங்கை சென்று இலங்கை கப்பற்படையினரால் கைது செய்யப்
பட்ட இந்திய மீனவர்களையும், அவர்களது உடைமைகளையும்
திரும்பப் பெற்று, தாயகத்திற்கு திருப்பி அனுப்பி வைத்திடும்
முகத்தான் அந்த மீன்துறை அலுவலருக்கு உரிய விசா வழங்கப்
படவேண்டும்.

கச்சத்தீவு எல்லையைச் சேர்ந்த கடல் ஓரப்பகுதிகளில்
இறால் மீன்க்ள் அதிகம்ர்கக் கிடைப்பதன் காரணமாக நமது
மீனவர்கள் அங்கே அதிகமாகப் போய் மீன் பிடிக்கிறார்கள்.
அந்த வகையில் தான் அவர்கள் இலங்கை கப்பற்படையினரால்
கைது செய்யப்பட்டு, உடைமைகள் பறிக்கப்பட்டு, அழைத்துச்
செல்லப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க
வேண்டும் என்பதற்காகத்தான், இந்திய கப்பற்படையைச் சேர்ந்த
ஒரு ரோந்துப்படை அங்கே நிரந்தரமாகப் போடப்பட வேண்டும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 18

என்ற கோரிக்கையை இந்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பியிருக்கிறது. நமது மீனவர்கள் அடிக்கடி இப்படி எல்லையைக் கடந்து செல்கிற காரணத்தால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன, நாமும் மைய அரசை அதற்காக நடவடிக்கை எடுக்கக் கோரியிருக்கிறோம். மைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நாம் எதிர் பார்க்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது கச்சத் தீவின் பகுதியிலே அதிக அளவில் மீன்கள் இருப்பதாகவும், அதனை பிடிக்கச் சென்று மீனவர்கள் கைதாகிறார்கள் என்றும், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நமது எல்லையில் மீன் பிடித்தாலும் கூட, அது அவர்களுடைய கடல் எல்லைப் பகுதிதான் என்று உண்மைக்கு மாறான குற்றம் சுமத்தி நமது மீனவர்களை ரிமாண்டு செய்கிற செயல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர்க்க அந்த எல்லைப் பகுதியில் ரோந்துப் படைகள் அமைக்கவிருப்பதாகச் சொன்னார்கள். அந்த மீனவர்களுக்குப் பாதுகாப்பாக அந்த ரோந்து படைகள் எப்போது அமைக்கப்படும், விரைவில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இரு எல்லை அதிகாரிகள் மட்டத்திலே இதுகுறித்து 4 முறைகள் விவாதிக்கப்பெற்று, சிலபல முடிவுகள் எடுக்கப் பெற்றிருக்கின்றன என்று. அவ்வப்போது நமது குறைகளை எடுத்துச் சொல்லி, இந்திய அரசுக்கும் ரோந்து படை ஒன்றை நிலையாக அமைக்க விண்ணப்பித்திருக்கிறோம். மைய அரசும் பரிசீலனை செய்வதாக கூறியிருக்கிறது.

5. வரவு–செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி
(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 74,75,93,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, பயிர் பாது காப்புத் திட்டம் எல்லாப் பகுதிகளுக்கும் அமுலாக்குவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 74,75,93,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



1983 மார்ச் 18]

திரு. கே. எம். தங்கமணி: தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் மாநில அளவிலான விதைப் பண்ணை இருப்பதாலும் போதிய இடவசதி உள்ளதாலும் வேளாண்மைக் கல்லூரி துவக்குவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 74,75 93,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, ''விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 150-ம் கரும்புக்கு, டன்னுக்கு ரூ. 250-ம் இதர விளை பொருட்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை கொடுக்க தக்க மானியம் ஒதுக்கீடு செய்வது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ், ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 74,75,93,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன்: துணைத் தலைவரவர்களே, கடலை விதை போன்ற எண்ணெய் வித்துக்கள் மானிய விலையில் கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 74,75,93,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

[முற்பகல் 11-00[

(ஆ) கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,56,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. த. வேணுகோபால்: துணைத் தலைவரவர்களே, விவசாயிகள் விளைந்த பொருட்களை சுத்தம் செய்வதற்கு கிராமங்களில் போதுமான சிமெண்ட் களங்கள் இல்லாமை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. த. வேணுகோபால்] [1983 மார்ச் 18

''மானியக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,56,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. எம். தங்கமணி: துணைத் தலைவர் அவர்களே, ஆயில் இன்ஜின்கள் வைத்துள்ள விவாசயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கி சலுகை விலையில் டீசல் வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,56,48,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பொறிக்கப்பட்டிருப்பனவற்றை எனது உரையாகக் கருதி சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலே ஏற்றிட வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்வதற்கு ஏற்புடைத்தாக சில எண்ணங்களை இங்கே முன்னுரையாக வகுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மைத் துறையினைப் பொறுத்த வரையில் உலக வங்கி நிதியுதவியோடு பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 8 மாவட்டங்களில் செயல்பட்டுக் கொண்டு இருந்த அந்தத் திட்டம் எஞ்சிய 7 மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு தமிழகம் முழுவதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய உயிரோட்டமான நோக்கமே வேளாண்மை பற்றிய சிக்கல்கள் அதைப்பற்றி ஆராய்ச்சியாளருடைய கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதுதான். ஆராய்ச்சிக் கூட்த்திலே எடுக்கப்படுகின்ற முடிவுகள் வேளாண்பெருமக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்ற வகையிலே தான் அந்த முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த நன்முயற்சியினை உலக வங்கி சார்பாக இங்கே வந்த குழுவினரும் மனம் உவந்து பாராட்டி இருக்கிறார்கள். அவர்கள், தமிழகத்தில் அந்தத் திட்டம் சிறப்பாக நடைபெறுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்கு அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 18] [டாக்டர் கா. காளிமுத்து]

வறட்சியின் கொடுங்கரங்களில் தமிழகம் சிக்கி இருக்கின்ற இந்த நேரத்தில் வேளாண் பெருமக்களுக்கு செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளுக்காக ஏறத்தாழ 219 கோடி ரூபாய் தேவைப்படும் என்று நாம் மைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். மைய அரசிலே இருந்து குழுவினரும் வந்து பார்த்து விட்டு நிலைமையைப் புரிந்துகொண்டும், உணர்ந்து கொண்டும் சென்றிருக்கிறார்கள். இருப்பினும், கிடைக்கின்ற நீர்வளத்திற்கு ஏற்ப மாற்றுப்பயிர் செய்கின்ற யோசனையை இந்தத் துறை ஆங்காங்கே வேளாண்பெருமக்களுச்கு எடுத்துச் சொல்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வருங்காலத்தில் நமக்குத் தேவையான அளவுக்கு விதைகளோ அல்லது பூச்சிக் கொல்லி மருந்துகளோ, அல்லது உரமோ இருக்கும். அவற்றிலே பற்றாக்குறை ஏற்படாது என்ற அளவுக்கு போதுமான அளவு இருப்பிலே வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு புதிய விதை சுத்திகரிப்பு மையங்கள் வருகிற ஆண்டிலே தொடங்கப்படும். அதைப்போலவே பெரியார் மாவட்டத்தில் மண் பரிசோதனை நிலையம் ஒன்று அமைக்கப்படும். மண் பரிசோதனை நிலைய ஊர்தி ஒன்று அங்கே செயல்படும். உழவர் பயிற்சி நிலையம் ஒன்று புதிதாக வருகிற காலத்தில் தொடங்கப்படும். பூச்சிமருந்து, உரம் இவற்றைப் பொறுத்த வரையில் கலப்படம் நடக்கின்ற காரணத்தால் வேளாண்பெருமக்கள் பெரிதும் அல்லலுக்கு ஆளாகிறார்கள். பல்வேறு நிலைகளில் வேளாண்மையும் பாதிக்கப்படுகின்றது. ஆகவே அதைக் களைகின்ற வகையில் இரண்டு உரப் பரிசோதனை நிலையங்களும், இரண்டு பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை நிலையங்களும் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இயற்கை உரங்களான நீலப்பச்சைப்பாசி மற்றும் அசோலா போன்றவைகளை பெரிய அளவில் விரிவுபடுத்துவதற்கு வேளாண்மை பெருமக்களிடத்தில் அதை பரப்புவதற்கு வருகின்ற நிதி ஆண்டில் திட்டம் தீட்டப்படும் என்பதை இந்த அவையில் நான் முன்னுரையாக கூற விரும்புகிறேன்.

வேளாண்மை விற்பனைத் துறையைப் பொறுத்தவரையில் 1977—78-ம் ஆண்டில் 167 விற்பனை கூடங்கள் இருந்தன. இன்றைக்கு 253 விற்பனை கூடங்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். நாம் இன்னும் அதிக அளவுக்கு அதை விரிவுபடுத்தி வளர்க்கவேண்டும் என்ற வகையில் 1½ கோடி ரூபாயில் ஒரு திட்டத்தை தீட்டி மத்திய அரசின் நிதி உதவிக்காக அனுப்பியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது 89 இடங்களில் சேமிப்பு கிடங்குகள் விற்பனைத் துறையின் மூலமாக கட்டப்

பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உலக வங்கியின் உதவியோடு 102 கோடியில் விற்பனை துறை மேம்பாடு அடைவதற்காக ஒருங்கிணைந்த விற்பனை அபிவிருத்தி திட்டம் என்கின்ற வகையில் ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அது மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விதை சான்றிதழ் துறையை பொறுத்த வரையில் அதிக மான அளவுக்கு வித்துக்கள், காய்கறி விதைகள் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சான்றிதழ் வழங்கவேண்டும் என்றும் அந்த முயற்சி இந்த ஆண்டும் தொடரவேண்டும் என்பதனையும் நாம் கோடிட்டுக் குறிப்பிட்டு காட்டியிருக்கிறோம்.

எண்ணெய் வித்துக்கள் துறையிலே அதிகமான கவனம் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. நிறைய எண்ணெய் வித்துக்கள் கொள் முதல் செய்து சேமித்து வைக்கவேண்டும் என்ற வகையில் 80 லட்சம் ரூபாயில் 20 சேமிப்பு கிடங்குகளை வருங்காலத்தில். வருகிற ஆண்டில் கட்டப்பட இருக்கின்றன என்பதை கூற விரும்புகிறேன்.

ஆதி திராவிட விவசாய பெருங்குடி மக்களுக்கு எண்ணெய் வித்துக்கள் தென்னங்கன்றுகள் வழங்குவதில் 25 விழுக்காடு மானியத்தில் தொகை வழங்கப்பட அதற்கான தொகையை இந்த ஆண்டில் அதிகப்படுத்தி பயன் அடைவோர் எண்ணிக்கையை அதிக அளவுக்கு உயர்ந்த முயற்சி மேற் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைபோலவே தென்னை விவசாயிகள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் பயனடையத்தக்க அளவுக்கு அவர்களுக்கு வட்டி தொகை மானியமாக 90 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

அதைப்போலவே தென்னை அபிவிருத்தி கழகம் என்ற கழகத்தின் மூலமாக நமக்கு 15 லட்சம் ரூபாய் வழங்கப் பட்டிருக்கிறது. தென்னை நாற்றங்கால்களை பெருக்குவது, அவைகளை வலுப்படுத்துவது இந்த வகையில் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தோட்டக்கலைத் துறையை பொறுத்த வரையில் 14 பழப் பண்ணையாக இருந்ததை 16 பழப்பண்ணையாக உயர்த்தப்படு கின்றன. திருச்சியிலும், கோயம்புத்தூரிலும் புதிதாக பழப் பண்ணைகள் தொடங்கப்படவிருக்கின்றன. அதைப்போலவே நெல்லி, இலந்தை, நாவல்பழம், விளாம்பழம் போன்ற கனி வகை களில் நாம் அதிக கவனம் இதுவரை செலுத்தவில்லை. இப்போது வறட்சி பகுதியில் அவைகளை விளைவிக்க முடியும், விவசாய பெருங்குடி மக்களுக்கு ஊதியத்தை ஈட்டித்தரமுடியும் என்ற காரணத்தினால் அந்த முயற்சியை தோட்டக்கலைத் துறை மேற்கொள்ளும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.



வைட்டமின் 'சி' சத்துள்ள வெஸ்ட் இந்தியன் செர்ரி என்கிற கனி வகையை—அதையும் அதிக அளவில் உற்பத்திச்செய்ய நகர காய்கறி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முயற்சி மேற்கொள்ளப் படும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பாக 190 சமுதாய குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய நோக்கம் வறட்சி பகுதியில் ஓரளவுக்காவது நாம் நீர் வளத்தை தரவேண்டும் என்பதும் வளர்ந்து இருக்கிற பயிர்கள் ஓரளவுக்காவது அவைகளை பாதுகாக்கும் அளவுக்கு அவைகள் தண்ணீர் பெறவேண்டும் என்பதுதான் அதன் நோக்கம். அது செவ்வனே இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை கூற விரும்புகிறேன்.

வருங்காலத்திலே தேசிய காற்று ஆலை திட்டம் என்கிற திட்டத்தின் அடிப்படையில் 30 காற்று ஆலை நீர் இறைக்கும் இயந்திரங்கள் வருகிற ஆண்டில் அமைக்கப்படயிருக்கின்றன. 6-வது ஐந்தாண்டு திட்ட முடிவு காலத்திற்குள் 100 காற்று ஆலை இயந்திரங்கள் அமைக்கப்படும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரையில் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் ஆழ் குழாய் கிணறுகளை நாம் அமைத்திருக் கிறோம். இன்னும் 6 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு 4 ஆயிரம் குழாய் கிணறுகளை அமைக்கின்ற முயற்சி போர்க்கால வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வேளாண்மை பல்கலைக்கழகம் இந்த ஆண்டில் 20 புதிய ரகம் கண்டுபிடித்து வழங்கியிருக்கிறது. 19 விவசாய கருவிகள் வழங்கியிருக்கின்றன. புஞ்சை நிலத்தில் சாகுபடி செய்வதற்கான புதிய யுக்திகளை எல்லாம் எடுத்து சொல்லியிருக்கிறது. அதைப்போலவே வேளாண்மை தொழில் கழகம் மிக சீரோடும் சிறப்போடும் இயங்கிக்கொண்டிருக்கிறது. வேளாண்மை பெருமக்களுடைய 9 வகையான பணிகளை அந்த கழகம் மேற்கொண்டிருக்கிறது. இங்கே சட்டமன்றம் முடிந்து நீங்கள் எல்லாம் செல்கின்றபோது ஆளுக்கு ஒரு கிலோ சனோலா எண்ணெய் நாங்கள் தர இருக்கிறோம். அது தருவதினுடைய நோக்கம் உடல் நலத்திற்கு அது ஏற்றது என்பது மட்டும் அல்ல. அந்த ஒரு கிலோ தீர்ந்த பிறகு மறுபடியும் நாங்களே கொடுப்போம் என்று எதிர்பார்க்காமல் நீங்கள் வாங்க வேண்டும். அந்த வகையில் அது இன்னும் அதிகமாக அறிமுகம் ஆகவேண்டும் என்ற வகையில் நாங்கள் அந்த முயற்சியை எடுத்து இருக்கிறோம். ஆகவே அந்த சூரியகாந்தி எண்ணெய்யை நாம் அதிகமாக வாங்கவேண்டும் அதன் மூலமாக நம்முடைய உடல் நல வள பாதுகாப்பு மட்டும் அல்லாமல் அதை உற்பத்தி செய்கின்ற சூரியகாந்தி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். அக அந்த முயற்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும்

[டாக்டர் கா. காளிமுத்து] [1983 மார்ச் 18

ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டு இந்த முன்னுரையை முடித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை கூறவேண்டும் என்று சொல்லி அமைகிறேன்.

(முற்பகல் 11–10)

* திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டினுடைய வேளாண்மைத் துறை மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கூட கொடுத்து இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழ்நாட்டிலே உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது, காரணம் வறட்சியால் இந்த மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுமே பாதிக்கப்பட்டுள்ளன. காவிரியிலே தண்ணீர் வரவில்லை என்பதை மட்டும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னொன்றையும் அவர்கள் குறிப்பிட்டிருக்கவேண்டும். ஆனால் ஏனோ மறந்தார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்டது மட்டுமல்ல, காவிரியிலே தண்ணீர் வராதது மட்டுமல்ல, மின்சாரத் துறை வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் காலத்திலே நேரத்தில் தேவையான அளவு மின்சாரம் கொடுத்து உதவியிருக்குமானால் இந்த வறட்சிக் காலத்திலே கூட உணவு உற்பத்தியை ஓரளவுக்கு அதிகப்படுத்தியிருக்கமுடியும். மின்சாரம் தராத காரணத்தினாலேயும் உணவு உற்பத்தி குறைந்துவிட்டிருக்கிறது என்பதை அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்— தலைமை)

நம்முடைய மாநிலம் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு தமிழகத்திலே இந்த மாநிலம் தன்னிறைவு பெறவேண்டுமென்று-உணவுத் துறையில்—ஒரு கொள்கை வழியில் பசுமைப்புரட்சித் திட்டத்தை அறிமுகப் படுத்தி தீவிரமாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். அவர்களைத் தொட்டு முதல்வர் பொறுப்பை ஏற்ற டாக்டர் கலைஞர் அவர்களும் இந்த மாநிலத்திலே பல்வேறு புதிய விதைகள், அதிகமாக விவசாயிகளுக்குக் கடன்கள், புதிய கிணறுகள் தோண்டுவதற்குக் கடன்கள், தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றல், அதிகமான பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு, இப்படிப்பட்ட பல்வேறு பணிகளை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அவர்கள் எடுத்துக் கொண்டதன் காரணமாக இந்த மாநிலம் உணவுத் துறையில் [illegible]



1983 மார்ச் 18] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அன்றைய தினம் வட மாநிலங்களிலே இருந்த முதலமைச்சர்கள் இந்த மாநில முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர் களைப் பார்த்து எங்களுக்கு அரிசி தாருங்கள் என்று கேட்டார்கள். அவர்களும் அரிசி தந்து உதவினார்கள. அன்றைய தினம் அதைப் பார்த்த மத்திய அரசுகூட மாநிலத்திற்கு மாநிலம் அவர்களே அரிசியைக் கேட்டுப்பெறக்கூடாது என்ற சட்டத்தை இயற்றிய தாகக்கூட எனக்கு நினைவு இருக்கிறது. அப்படி இருந்த மாநிலம் இந்த மாநிலம், நம்முடைய முதல்வர் அவர்களே மத்திய அரசைப் பார்த்து எங்களுக்கு அரிசி கொடுங்கள் என்று உண்ணாவிரதம் இருக்கக்கூடிய துர்பாக்கியமான நிலை நம் மாநிலத்திற்கு ஏற்பட்டுவிட்டது. இப்படி ஏற்பட்டுவிட்டதற்கு வறட்சி மட்டும் காரணம் என்று சொன்னால் என்னால் ஒத்துக் கொள்ள இயலாது. வறட்சி ஒரு காரணமாக இருக்கலாம். சென்ற ஆண்டேகூட நான் சொல்லியிருக்கிறேன். வேளாண்மைத் துறை பலவேறு பணிகளைச் செம்மையாகச் செய்யத் தவறி யிருக்கிறது. விவசாயிகளிடம் இந்த அரசின் அணுகுமுறை சரியல்ல, விவசாயிகளுக்கு கட்டுபடியாகாத நிலை, இப்படிப்பட்ட சூழ்நிலையில் — நாம் சென்ற ஆண்டும் முந்திய ஆண்டும் எடுத்துச் சொன்னோம் — எதிர்காலத்திலே இந்த மாநிலம் உணவு உற்பத்தியிலே ஒரு பற்றாக்குறை மாநிலமாக நிலவக் கூடிய அபாயக்குறி எழும் என்று கூறினோம். இன்றையதினம் அதைத் தான் தமிழக மக்களும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் பார்த்துக் கொண்டிருக்கிறோம், என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் உலக வங்கித் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அரிய திட்டம் என்று சொன்னார்கள். என்னால் அதை புரிந்துகொள்ள முடியவில்லை. காரணம் அவர் அளவிற்கு அதை புரிந்து கொள்ள முடியவில்லையோ என்ற ஐயப்பாடு கூட எனக்கு வருகிறது. முன்பெல்லாம் கிராமங்களுக்குச் செல்வோமானால் பொன்னியை பயிரிடுங்கள், அதிக மகசூலைப் பெறுங்கள்; பத்மா நெல்லைப் பயிரிடுங்கள், அதிக மகசூலைப் பெறுங்கள்; கருணாவைப் பயிரிடுங்கள், அதிக மகசூலைப் பெறுங்கள் என்று சுவர்களில் வேளாண்மைத் துறை பல இடங்களில் விளம்பரங் களை எழுதி வைத்திருப்பதை கண்டதுண்டு. ஆனால் இன்றைய தினம் எல்லா இடங்களிலும் உலக வங்கி பயிற்சித் திட்டத்தின் மூலமாக பலன் பெறுங்கள் என்று ஒரு போர்டை எழுதி வைத்திருக்கிறார்கள். என்னுடைய நினைவு சரியாக இருக்கு மென்று நம்புகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் ஜூலை மாதத்திலிருந்து உலக வங்கிப் பயிற்சித் திட்டம், அதாவது ட்ரெயினிங் அண்ட் விசிட் என்ற திட்டம் வந்தது என்று நினைக்கிறேன். இந்தத் திட்டத்தைப் பற்றி எங்களுடைய மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் சுவர்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் அதையாவது சரியாக இந்த அரசு செயல்படுத்தினார்களா என்றால் இல்லை. 800 அல்லது 1.000 குடும்பங்களுக்கு ஒருவர் வருவார், விவசாயிகள் என்னென்ன

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 மார்ச் 18

ஆலோசனை வழங்குவார் என்றெல்லாம் விளம்பரங்களில்
இருக்கின்றன. நாங்கள் கூட இதுபற்றி வளர்ச்சிமன்றக்
கூட்டங்களில் கேட்டோம். எங்களுக்கு வேளாண்மைத் துறை
அதிகாரிகளால் அளிக்கப்பட்ட பதில். எங்களுக்கு தேவையான
அலுவலர்களும், அதிகாரிகளும் கிடைப்பதில்லை. 60 பங்கு
அளவில்தான் இந்த மாவட்டத்தில் அலுவலர்களையும்,
அதிகாரிகளையும் போட்டிருக்கிறோம். 40 பங்கு அளவிற்கு
அவர்களை போடவேண்டும் என்ற பதிலைத் தான் அவர்கள்
கொடுத்தார்கள். அப்படியானால் இப்போது ஓராண்டு காலம்
முடியப் போகிறது. இந்தத் திட்டமே மூன்று ஆண்டுகளுக்குத்
தான் உலக வங்கி கடன் வழங்குகிறது என்று அமைச்சர்
அவர்கள் ஒரு நேரத்தில் சொல்லியிருக்கிறார்கள். எப்போது
மீதியிருக்கிற 40 பங்கு அதிகாரிகளையும், அலுவலர்களையும்
நியமிக்கப் போகிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் கேட்க
விரும்புகிறேன். எங்களைக் கூட பொது மக்கள் கேட்கிறார்கள்.
டி. வி. திட்டம் என்றால் என்ன என்று கேட்கிறார்கள்.
நாங்களும் கூட பல நேரங்களில் பதில் சொல்லியிருக்கிறோம்.
ஒன்றை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன். பொதுமக்களுக்குத் தான் புரியவில்லை என்று
நம்பியிருந்தேன். இப்போது இலாக்காவிற்கு ஒரு வெட்டுத்
தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். 20—வேளாண்மை என்று
சொல்லி, தமிழ்நாட்டில் அமல்படுத்தியுள்ள டி. வி. திட்டத்
தினால் விவசாயிகளுக்கு எந்தவித உதவியும் கிடைக்காத
நிலையில் அந்தத் திட்டத்தை விவசாயிகளுக்கு பலன் கிடைக்கும்
வகையில் மாற்ற புதிய நிதி ஒதுக்கம் கோரி விவாதிக்க என்று
வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். ஆனால்
துறையில் இந்த மானியக் கோரிக்கையின் கீழ் வராது என்று
சொல்லி எனக்கு திருப்பியனுப்பி விட்டார்கள். அது தள்ளுபடி
செய்யப்பட்டதாக ஒரு அறிக்கையை எனக்கு அனுப்பியிருக்
கிறார்கள். ஒருவேளை மக்கள் நினைப்பதைப்போல டி. வி.
என்பதற்கு டெலிவிஷன் என்று இலாக்காவும் நினைத்து
விட்டதோ என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது.

அதைப்போலவே தமிழகத்தில் விவசாயிகள் உற்பத்தி
செய்கிற விளை பொருள்களை மனித சமுதாயம் உயிரோடு,
உடல் நலத்தோடு வாழத் தேவையான நெல்லானாலும் சரி,
கம்பானாலும் சரி, கேழ்வரகு ஆனாலும் சரி, மிளகாய்
ஆனாலும் சரி, மஞ்சளானாலும் சரி, எந்த வகை உற்பத்திப்
பொருளானாலும் சரி, மனித சமுதாயம் உயிரோடு, உடல்
நலத்தோடு வாழ தேவைப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த
வரையில் நெல்லை தான் மக்கள் உணவாக உட்கொள்கிற
காரணத்தால் நெல் பயிரை அதிகமாக உற்பத்தி செய்ய
வேண்டிய ஒரு கட்டாயத்தில் நம்முடைய வேளாண்மைத் துறை
இருந்து வருகிறது. நேற்றையதினம் கூட ஒரு கேள்விக்கு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள்.



1983 மார்ச் 18] (திரு. பெ. சு. திருவேங்கடம்)

குறுகிய காலப் பயிர்கள் எத்தனையோ வருகின்றன. ஐ. ஆர்
50; கூட இன்றையதினம் வந்திருக்கிறது. ஐ. ஈ. டி, 17:22
அல்லது டி. கே. எம். 9 இப்படி பற்பல நெல்களை நம்முடைய
இலாக்கா வெளியிட்டிருக்கிறது. ஆனால் இந்த பயிர்களை
விவசாயிகள் இடுகிறபோது எத்தனை சிரமப்படுகிறார்கள்
என்பதைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய
தினம் பயிர்களை இடுகிறபோது அடி உரம் இடப்படவேண்டும்;
இரண்டு முறை களையெடுக்கவேண்டும்; அல்லது இரண்டு
முறை மேல் உரம் இடவேண்டும்.

(முற்பகல் 11–20)

இரண்டு முறை பூச்சி மருந்துகள் அடிக்கப்பட வேண்டும்.
இவைகள் எல்லாம் அடித்தாலும் அல்லது பூச்சிகளை
எடுத்தாலுங்கூட கடைசி நேரத்திலே கதிர் வருகின்ற
நேரத்திலேகூட குருத்துப் பூச்சிகள் தாக்குகின்றன. அதற்குட்
பூச்சி மருந்தோ அல்லது பவுடர்களையோ வாங்கித் தூவ
வேண்டும். அதற்கு இடையிலே எலி வெட்டி, ஏராளமான
சேதாரத்தினை—நஷ்டத்தை விவசாயிகளுக்கு உண்டாக்கி
விடுகிறது. இத்தகைய நிலைமையில், பயிரிட்டு விவசாயிக்கு
மகசூல் கிடைக்குமேயானால், விலை கட்டுப்படியாகிறதா
என்றால் நிச்சயமாக இல்லை. அப்படி கட்டுப்படியாகாத ஒரு
சூழ்நிலையில் விவசாயி எப்படிப் பயிரிட முடியும்? அந்த
விவசாயிக்கு ஏதாவது நிவாரணம் உண்டா?

இன்றையதினம் யூரியாவினுடைய விலை என்ன? அடி உரம்
போடுகின்ற உரத்தினுடைய விலை என்ன? பூச்சி மருந்தி
னுடைய விலை என்ன? இன்றையதினம் நம்முடைய
வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கூடச் சொல்லக்
கூடும். இவைகளின் விலையையெல்லாம் மத்திய அரசாங்கம்
அல்லவா உயர்த்திவிட்டது என்றுகூட அவர்கள் சொல்லலாம்.
மத்திய அரசாங்கமானாலும், மாநில அரசாங்கமானாலும் ஒரு
பொருளின் விலையை உயர்த்துகின்றபொழுது, மனித சமுதாயத்
திற்குத் தேவையான உணவை உற்பத்தி செய்கின்ற விவசாயி
களை அது பாதிக்குமே என்கின்ற எண்ணம் இல்லையென்றால்,
அது மாநில அரசாங்கமானாலும் சரி, மத்திய அரசாங்க
மானாலும், நிச்சயமாக அவைகளை உயர்த்துவதற்கு நான்
கண்டிக்க விரும்புகிறேன். காரணம், விவசாயிக்குக் கட்டுபடி
யாகவில்லை. அதனால் விவசாயிகள் என்ன செய்கிறார்கள்?

இன்றையதினம் நம்முடைய கொள்கைக் குறிப்பிலேகூட
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள். நாங்கள் இத்தனை ஆயிரம் டன் எதிர்பார்த்தோம்.
ஆனால், வறட்சியின் காரணமாக, உற்பத்தி குறைந்துவிட்டது
என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொன்று கூட நான் இந்த
நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் கூட

இந்தக் கிணற்றிலேயிருக்கிற தண்ணீரைக் கொண்டு 4 ஏக்கர் பயிரிடுகின்ற ஒரு விவசாயி, 2 ஏக்கராவது நெல் பயிரிட முடியும். அவர்களுக்கே ஒரு பயம் வந்துவிட்டது, மின்சாரம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்கிற பயம் வந்துவிட்டது. அதனால் பணப் பயிர், புஞ்சைப் பயிர் வைத்து விடுவோமே என்கின்ற எண்ணத்தில், வட ஆற்காடு, தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில், கிணற்றுப் பாசனத்தைக் கொண்டு பயிரிடுகின்ற விவசாயிகள், இன்றையதினம் மணிலா பயிரிட்டு விட்டார்கள். அதனால் யாருக்கு நஷ்டம்? நம்முடைய நாட்டுக்கு நஷ்டம். நம்முடைய நாட்டுக்கு உணவு தேவை. நம்மை அறியாமலேயே இன்றையதினம் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வறட்சியிலேகூட, எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே, திருவண்ணாமலை, போளூர் போன்ற பகுதிகளிலே மின்சாரம் இரண்டு நாட்களாக இல்லையென்கிற தகவல்கள் வருகின்றன. அப்படிப்பட்ட நிலையிலே தான், ஒரு நிரந்தரமான முடிவை அரசாங்கம் எடுக்காத காரணத்தினால்தான், அவர்கள் நமக்கு எல்லாம் மின்சாரம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற நிலையில். நெல் பயிரிடுகின்ற விவசாயிகள் கூட, நெல் பயிரிடுவதைக் குறைத்துக் கொண்டு வருகின்ற ஒரு சூழ்நிலை இன்றையதினம் ஏற்பட்டு விட்டது. அதே போல, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே பட்ஜெட்டிலே அறிவித்தார்கள், டீசலுக்குக் கூட நுழைவு வரி என்று. விவசாயிகள் இன்றையதினம் ஆயில் இன்ஜினைப் பயன்படுத்தி பயிரிடுகிறார்கள். மின்சாரம் இல்லாவிட்டால், ஆயில் இன்ஜினைக் கடனாக வாங்கி, டீசலைப் போட்டு, அதை உபயோகப்படுத்த வேண்டும், கிணற்றுப் பாசனத்திலே பயிரிட வேண்டும். அதேபோன்று மின்சார சாமான்கள் எல்லாம் விவசாயிகள் வாங்க வேண்டுமென்றால், இந்த நுழைவு வரியினால் அவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படித் தேவையானவற்றின் விலைகளை ஒரு பக்கத்திலே மாநில அரசும், இன்னொரு பக்கத்திலே மத்திய அரசும் உயர்த்திக் கொண்டே செல்கின்ற காரணத்தினால், கட்டுப்படியாகாத ஒரு பயங்கரமான சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, இன்றைய தினம் நெல் உற்பத்தி இந்த மாநிலத்திலே குறைந்து கொண்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் இப்படியே விடுவீர்களானால், நீங்கள் எத்தனை திட்டம் போட்டாலும், இந்த மாநிலத்தில் நிச்சயம் ஆண்டுக்காண்டு நெல் உற்பத்தி குறையுமே தவிர, வளராது. காரணம், இந்த நெல் உற்பத்தியினாலே விவசாயிகளுக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படவேண்டும். ஆகவே, இந்தப் பாதகத்தைப் போக்க நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னொன்றையும் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே அறிவித்தார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக, அரிசியை வாங்கி, ஏழை, எளிய மக்களுக்குக்



குறைந்த விலையிலே நாம் கொடுக்கிறோம் என்றார்கள். கொடுக்க வேண்டியதுதான். அப்படிக் கொடுப்பதற்கு ஆண்டு ஒன்றுக்கு நம்முடைய அரசு ரூ. 50 கோடி செலவழிக்கும் என்று சொன்னார்கள். அதேபோன்று, உணவு உற்பத்திக்காக, துறையே குறைந்த விலையிலே, மானிய விலையிலே, உரங்கள், விதைகள், போன்றவைகளைக் கொடுத்து, நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளை ஊக்கப்படுத்தி, அவர்களுக்கு கட்டுப்படியாகின்ற விலையைக் கொடுத்தால்தான் நிச்சயமாக எதிர்காலத்திலே இந்த மாநிலம் தன்னிறைவு பெறும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தினாலன்றி இந்த மாநிலம் நிச்சயமாக உணவுத் துறையிலே மோசமான நிலைமையை எய்தக் கூடிய நிலைமையிருக்கிறது.

கிணறுகளுக்குத் துளை போடும் கருவிகள் அல்லது ஆழப் படுத்தும் கருவிகள், புல்டோசர்கள் பற்றிக் குறிப்பிட்டிருப் பதைக் கொள்கைக் குறிப்பிலே படித்துப் பார்த்தேன். ஆனால் யானைப் பசிக்குச் சோளப் பொறி என்கின்ற வகையில் இவை களெல்லாம் போதுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர வேண்டும்.

கிணறுகளை ஆழப்படுத்துவதற்குப் பயன்படக்கூடிய தோட்டாக்களைப் பொறுத்தவரையில் இந்த வறட்சிக் காலத்திலேயும்கூட ஒரு தோட்டா 4½ ரூபாய், 5 ரூபாய் என்ற அளவிற்குத் தனியாரால் விற்கப்படுகிறது. இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது? நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அவர்களது கிணறுகளுக்குத் துளை போடு வதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் வேட்டு வைப்பதற் கான தோட்டா போன்றவைகளை நியாயமான விலையில் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வர வேண்டும்.

ஆனால் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களுக்கிடையிலே விவசாயிகள் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தால் அங்கே மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் உடனே வந்து விடுகிறார்கள். இந்த மாவட்டத்தில் தனியார் நெல் வாங்கக் கூடாது; நெல்லுக்கு விலை உயரக் கூடாது; லெவி மூலம்தான் வாங்க வேண்டும், காரணம் மதிய உணவு என்று குழந்தைகளுக்குப் போட வேண்டும் என்று இப்படிப்பட்ட நிலைமைகளை அவர்கள் சொல்கிறார்கள். எங்கள் பக்கத்தில் ஒரு கதை சொல்லு வார்கள். வழியிலே இருக்கின்ற பிள்ளையாருக்குக் கடையிலே இருக்கின்ற தேங்காயை எடுத்து உடைத்து ஒரு பக்தன் பிள்ளையாரை வேண்டிக் கொள்வானாம், காசு கொடுத்துத் தேங்காய் வாங்காமலேயே. அப்படி விவசாயிகளுக்குத் தேவை யான காலங்களிலே எந்தவிதமான உதவிகளையும் செய்யாமல், அவர்கள் உற்பத்தி செய்த பிறகு அதற்குக் கட்டுப்படியான விலை கொடுக்காமல் செய்வது நியாயமா முறையில் நியாயமாக என்று கேட்க விரும்புகிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 மார்ச் 18

ஒரு விஷயத்தை அன்றைக்கு நான் கேள்வியின்போதுகூடச் சொன்னேன். வாழை போட்டால் அவர்களுக்குப் போதுமான மார்க்கெட் இருப்பதில்லை. எங்களுடைய பகுதியைச் சேர்ந்தவர்கள் மல்லிகைப் பூ போடுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நல்ல விலை கிடைப்பதற்குண்டான நியாயமான முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் அதிகமான கடன்களைப் பெற்றிருக்கிறார்கள். எனவே, அதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே முதலமைச்சரவர்கள் அறிவித்து ஓரளவுக்குத் தள்ளியிருக்கிறார்கள். ஆனால், புதுவை மாநிலத்திலே சிறு விவசாயிகளுக்கு அனைத்து வட்டிகளையும் தள்ளி விட்டிருக்கிறார்கள்; பெரிய விவசாயிகளுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். சிறிய மாநிலமான புதுவையிலேயே இவ்வாறு அறிவித்திருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே உயர் மட்டக் குழுவும் அமைத்திருக்கிறீர்கள். அந்தக் குழுவின் கோரிக்கை உங்களுக்கு வந்திருக்கலாம். எனவே, அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும்; பெரிய விவசாயிகளுக்கு அனைத்து வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும். ஏனென்றால் அசலுக்குத் தகுந்த அளவிற்கு வட்டிவந்துவிட்டிருக்கிறது. அதைத் தள்ளுபடி செய்து விவசாயிகளை ஊக்குவிக்கின்ற நிலைமைகளை ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் நிச்சயமாக ஒவ்வொரு விவசாயியும் பணப் பயிர்களை நாடிச் சென்று விடுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னிடத்திலேகூட ஒருவர் சொன்னார். இப்பொழுது நம்முடைய அரசாங்கமே சொல்கிறது, சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் என்று. காடுகளை வளர்ப்பதால் மழை பெய்யும் என்பதற்கான திட்டம் இருக்கலாம். ஆனால் நிலைமை என்னவென்றால், பஸ்ஸில் வரும்போது ஒருவர் பேசிக்கொண்டு வந்தார். எந்தப் பகுதி என்று இங்கே சொல்வது நியாயம் இல்லை. அந்தப் பகுதியில் உள்ள நிலங்களுக்கு, தண்ணீர்ப் பாசன வசதியுள்ள இடத்தில் உள்ள ஏராளமான விவசாயிகள் மரம் நடுகிறார்கள். அப்படி மரத்தை நட்டால் ஐந்தாண்டுக் காலங்களுக்குப் பிறகு மரங்களை வெட்டும்பொழுது ஏறத்தாழ இன்றைக்கிருக்கின்ற விலைவாசியின்படி ஒரு ஏக்கருக்கு 30,000 ரூபாய் கிடைக்கும் என்று சொல்கிறார். சிறு சிறு செலவுகளெல்லாம் போக, ஒரு வருஷத்திற்கு ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று சொல்கிறார். அப்படியென்றால் விவசாயிகள் என்ன நினைப்பார்கள்? நாம் ஏன் இந்த விவசாயத்தை நம்பிக்கொண்டு அவதிப்படுவானேன், நம் குடும்பம் கெட்டுப் போவானேன், வசதியோடு இருக்க வேண்டாமா என்ற எண்ணம் அவர்களுக்கு வராதா அப்படி



1983 மார்ச் 18] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

போது அவர்கள் மரங்களைத்தான் நடுவார்கள். இதனால் ஒரு வேளை சம்பந்தப்பட்ட அவர்கள் வேண்டுமானால் இலாபம் பெறலாமே தவிர, நாட்டிலுள்ள ஏழை மக்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லுக்கு நியாயவிலை கிடைக்க திட்டம்
கொண்டு வரவேண்டும்.

எங்கள் மாவட்டம் மிகவும் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கிருக்கின்ற வறட்சி நிலைமையைப் பற்றி இப்பொழுது பேசும்பொழுதுகூட மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற நிலைமைகளைக் கவனித்து, எங்கள் மாவட்டத்தை வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கக்கூட மறுக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம்? இந்த நேரத்தில்கூட விவசாயிகளிடத்திலேயிருந்து நில வரியைக் கேட்கின்றீர்கள். கடன்களைக் கேட்கின்றீர்கள். ஜப்தி செய்வதில்லை என்று சொன்னாலும்கூட, கொடுத்தால் வாங்கிக் கொள்கிறோம் என்று சொல்கிறீர்கள். இதனால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது. எனவே, எங்கள் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகள், நிலத்திலே வேலை செய்து பிழைத்து வந்த விவசாயிக் கூலிகள் ஆகியவர்களை இந்த வறட்சி பாதித்துள்ளது. எங்கள் மாவட்டத்தை விட்டு அண்டை மாநிலங்களுக்கு மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கெல்லாம் உடனடியாக கிணறு வெட்டுவதற்கான கடன், கிணற்றை ஆழப்படுத்துவதற்கான கடன், நியாய விலையில் தோட்டாக்கள், துளைக் கருவிகள் ஆகியவைகளைக் கொடுத்து உதவி செய்து நியாயமான வழியில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குண்டான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11.30)

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் வேளாண்மை பற்றிய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு, சென்ற ஆண்டு கொடுத்ததைப் போல் இந்த ஆண்டும், இம்மியும் குறையாத விலைக்குக் கொடுத்ததைக் கரும்பு விவசாயிகள் அனைவரும் மனதாரப் பாராட்டுகிற காட்சியைப் பார்க்கிறோம். நாட்டிலே வறட்சி சூழ்ந்த காலத்தில், கரும்பு விவசாயிகளுக்குப் புரட்சித் தலைவர் மனமுவந்து செய்த நன்றியைத், எங்களுடைய உள்ளம் மனமாரப்பாராட்டுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, அந்த விவசாயத்தைப் பெருக்குவதற்காக—அதன்

மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயல்பட்டுக் கொண்டுவருகிறது. இந்த நாடு விவசாயத்தை நம்பி வருகிற நாடாகும். புரட்சித் தலைவருடைய அரசே பல்வேறு நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த வகையில் இப்படிப் பட்ட சூழ்நிலை ஏற்பட்டபோதும் கூட, பல திட்டங்களைப் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். 1983-84 ஆம் ஆண்டில் விதை சுத்திகரிப்பு மையங்கள், உற்பத்தியைப் பெருக்குவதற்கு பூச்சிகொல்லி பரிசோதனை நிலையங்கள், நுண்ணுயிர் கலவை பொட்டலங்களின் உற்பத்தியை அதிகரித்தல், விவசாய வானிலை முன்னறிவிப்புப் பணி, உர ஆய்வுக் கூடங்கள் ஆகிய புதிய திட்டங்களுக்காக என்னுடைய உளப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் வேளாண்மைப் பொறியியல் துறையும், உழவர்களுடைய நன்மைக்காக அவர்களுடைய எதிர்காலம் பயன்பெறவேண்டும் என்பதற்காக, நில வள மேம்பாட்டுத் திட்டம், சிறுபாசனத் திட்டம், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள், பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள், மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற திட்டங்களைத் தீட்டி, இந்த அரசு செயல்பட்டு வருவது குறித்து, இந்த அரசு விவசாயிகள் மீது, எந்த அளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது. இந்த நேரத்தில் விவசாயிகளுக்காக பல்வேறு வகைப்பட்ட உதவிகளைப் புரிகின்ற மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசிற்கும் நான் ஒரு வேண்டுகோளாக வைப்பதெல்லாம், விவசாயக் கல்லூரி அமைக்க இருக்கிற இந்தச் சூழ்நிலையில், அதை தஞ்சை மாவட்டத்தில் அமைக்கவேண்டுமென்று நான் மிகப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன், பருவ மழை பொய்த்ததன் விளைவாகவும், வேளாண்மை நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையிலும், இதன் விளைவாக உணவு உற்பத்தி மிகவும் பாதித்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசு தன்னால் இயன்ற உதவிகளை இந்த வேளாண்மைத் துறைக்கு செய்திருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அருகாமையில் இருக்கிற கர்நாடக மாநிலம் போதிய அளவு தண்ணீர் கொடுக்காத சூழ்நிலையிலும் அதன் விளைவாக தஞ்சைமாவட்டம் கடுமையான வறட்சிக்கு ஆளாக்கப்பட்டிருச்கிறது. இதுவரை தஞ்சை மாவட்டத்தில் ஏற்படாத அளவிற்கு இந்த வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நம்முடைய அமைச்சரவர்களும், அரசும் கர்நாடக மாநில அரசோடு பல்வேறு கட்டநிலையில் பேச்சு வார்த்தை நடத்தியும் இதன் தொடர்பாக மத்தியஅரசுடன் பேச்சு வார்த்தை நடத்தியும் நமக்கு எந்த பலனும் கிட்டவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும்கூட, தஞ்சை மாவட்டத்தில் பயிர்களைப் பாதுகாப்பதற்கும், அந்த விவ்சாயிகளுடைய உள்ளம் வாடி விடக்கூடாது என்பதற்காகவும், 1000 வடிமுனை குழாய் கிணறுகளை அமைக்க அரசு போர் நடவடிக்கை எடுத்ததற்காக என்னுடைய உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்தக் கருத்தை நான் பாராட்டுகின்ற நேரத்தில், இந்த இடத்தில் கடற்கரையையொட்டி, 15 கிலோ மீட்டர் தூரத்தில் வடிமுனை குழாய் அமைக்க இயலாது என்ற சட்டம், இந்த நேரத்தில் தளர்த்தப்படவேண்டும் என்பதை நான் பணிவன்போடு, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியை பொறுத்த அளவிற்கு ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் கடற்கரை ஓரப் பகுதியிலே இருக்கின்றன. அங்கே தனியார், வசதி படைத்தவர்கள் எல்லாம் அந்த வடிமுனை குழாய்களை அமைத்து விவசாயத்தை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் வசதி யற்ற ஏழைகள் அரசு தருகிற உதவியைப் பெறமுடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதற்குக் காரணம், இப்போது கடற்கரையையொட்டிய 15 கிலோமீட்டர் தூரத்தில் வடிமுனை குழாய்களை அமைக்க இயலாது என்ற சட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டம். அப்படியே இருக்கின்ற சூழ்நிலையில் அங்கே இருக்கின்ற ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் பயன்பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதைத் தளர்த்தி, நடுத்தர ஏழை விவசாயப் பெருமக்கள் பயன் பெறக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போன்று தஞ்சை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்படவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வதுடன், என்னுடைய தொகுதியான தரங்கை வட்டம் கடைமடைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் குறைந்த அளவிற்குத் தண்ணீர் வருகின்ற சூழ்நிலையில், அந்தத் தண்ணீர் மயிலாடுதுறைப் பகுதியோடு நின்றுவிடுவதால், அந்த கடைமடைப் பகுதியில் குறுவை சாகுபடியும், தாளடி சாகுபடியும், சம்பா சாகுபடியும் மிகவும் விளைச்சல் குறைவானதாக இருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

பல்வேறுபட்ட சூழ்நிலையில் இடையிலே இருப்பவர்கள் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி, அந்தக் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் வந்து சேராத அளவிற்கு இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த வட்டத்தை வறட்சி வட்டமாக அறிவிப்பதுடன் வறட்சி நிவாரணப் பணிகளை அரசு உடனடியாகத் துவக்கவேண்டும் என்றும், விவசாயிகளின் அனைத்து வரிகளையும் ரத்து செய்யவேண்டும் என்றும் நான் வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று விளைபொருள்கள் சரியாக விளையாதது மட்டுமல்ல, நெல் விளைச்சல் சரியாக இல்லாததால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், அங்கே விவசாயிகள் அல்லல்படுகின்ற சூழ்நிலையில், கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ய முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். விஜயபாலன்] [1983 மார்ச் 18

நம்முடைய அரசு விவசாயிகள் நல்ல முறையில் வளர்ச்சிபெற வேண்டும் என்று—நம்முடைய நாடு விவசாய நாடு, விவசாயத்தை நம்பி இருக்கின்ற நாடு என்ற அடிப்படையில்— பல்வேறு நடவடிக்கைகளை, திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வருகிறது. அதிலே மேலும் சிலவற்றை நல்லமுறையில் செய்வதற்கு சிலபல பணிகளைச் செப்பனிட வேண்டும் என்ற வகையில் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

எனது தொகுதியில் ஆளிவேலு, சேமங்கலம், திருநம்பியூர் போன்ற ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாய்ச்சல் வசதியின்றி, வடிகால் வசதியின்றி விவசாய உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. காருகுடி, நல்லாடை போன்ற கிராமங்களில் வடிகால் வசதி, பாய்ச்சல் வசதி இல்லாததால் இன்னும் பல நூற்றுக்கணக்கான விவசாய நிலங்கள் தண்ணீர் இன்றி வாடிக்கிடக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று, நல்லாடை என்ற இடத்தில் ஆர்டிசன் ஊற்று இயற்கையாகவே இருக்கிறது. அந்த ஊற்றை அரசின் சார்பிலே பயன்படுத்தினால் அந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான நிலம் பாசன வசதி பெறும். அந்தப் பகுதியில் தண்ணீர் பஞ்சம் இல்லாமல் இருக்கும் வாய்ப்பு இருக்கிறது. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துத் தெரிவித்தும், இது வரையில் எந்தவிதமான முயற்சியும் அதற்காக எடுக்கப்பட வில்லை என்பதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இந்த ஆர்டிசன் ஊற்று சீரான முறையில் அரசால் செப்பனிடப்பட்டு கொடுக்கப்படுமானால் அந்தப் பகுதியில் தண்ணீர் பஞ்சம் இல்லை என்ற சூழ்நிலை உருவாகும். அதைப்போன்று அங்கே பாலூர் என்ற கிராமம் நந்தலாறு பாசனத்தை நம்பி இருக்கிறது. தற்போது வறட்சி நிலை இருப்பதால், வெள்ளம் என்ற பிரச்னை இல்லை. ஆனால் வெள்ளம் வருகின்ற நேரங்களில் சீரான வடிகால் வசதி இல்லாத காரணத்தால், அந்த பாலூர் கிராமமே வெள்ளத்தில் மூழ்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அங்கே வடிகால் வசதி ஏற்படுத்தி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்றன. இதுபோன்ற சிறுசிறு வேலைகளில் அரசாங்கம் கவனம் செலுத்தி, செய்து கொடுக்கு மானால் இன்னும் விவசாய வளர்ச்சி மேம்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், ஊரகத்திற்கு உட்பட்ட பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த மானாவாரி அபிவிருத்தித் திட்டம், போன்ற பல்வேறு திட்டங்களின் மூலமாக விவசாயம் மேலும் மேலும் அபிவிருத்தியடைய முயற்சிகளை எடுத்ததற்காக இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 மார்ச் 18] [திரு. என். விஜயபாலன்]

விவசாயிகளுக்கு கருவிகள் வழங்குகிறபோது, அவர்களுக்குத் தரப்படுகின்ற கருவிகளை மானியமாகவோ, குறைந்த விலையிலோ கொடுக்கும் நேரத்தில் ஊராட்சி ஒன்றிய மூலமாகக் கொடுக்கப் படுகின்ற சூழ்நிலை வருகிறபோது சிறு விவசாயிகளுக்கு அவை போய் சேராமல் சில தவறுகள் நடைபெறுகிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த விவசாயிகள் பயன் அடையவேண்டும் என்பதற்காக இந்த அரசு சிறு விவசாயி களுக்கு என தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இருக்கும் சூழ்நிலையில் அங்கே பணியாற்றுகின்றவர்கள் செய்கின்ற தவறுகள் காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

விவசாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பூச்சி, புகையான் போன்ற பல்வேறு நோய்களின் மூலம் விவசாயம் பாதிக்கப்படாத அளவிற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வரும் இந்த அரசுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதைப்போன்று பயிர் சாகுபடியில் உள்ள புதிய தொழில் நுட்பங்களை வேளாண்மை குடிமக்கள் தெரிந்து கொள்வதற்காக வேளாண்மை பயிற்சி நிலையங்கள் மூலம் பல பயிற்சிகள் அளிக்கப் பட்டு, விவசாய மேம்பாட்டுக்கு அரசு செய்கின்ற முயற்சிகளை உளமாரப் பாராட்டி, மேலும் விவசாயம் செழிக்க தேவையான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதுவரையில் மேற்கொண்டிருக்கிற திட்டங்களுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்களையும் பாராட்டி, நன்றி கூறிமுடிக்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ந. சிவஞானம் ; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1982-84 ஆம் ஆண்டு வேளாண்மை மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பருவமழை தவறியதன் காரணமாக, இந்த நாட்டில் காவேரி நதி நீர் வரத்து குறைந்து விட்டதன் காரணமாக இன்றைக்கு வறட்சி ஏற்பட்டு, தமிழ் நாட்டில் ஒட்டுமொத்தமாக மிகப்பெரிய வறட்சி ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் தான் எல்லா நீர் வளங்களையும் பயன்படுத்தி, அணைகள் எல்லாம் கட்டப்பட்டு, ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெற்றன என்பதை நான் முதலிலே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆண்டுதோறும் எதாவது ஒரு பருவமழை பொய்த்து விடுகிறது. அதைக் கருத்திற்கொண்டு அரசு ஒரு நல்ல திட்டத்தைத் தீட்ட வேண்டும். குறிப்பாக

எல்லா நீர் நிலைகளையும் அரசாங்கம் பயன்படுத்திவிட்டது. கடைசியாக இருக்கக்கூடியது நிலத்தடி நீர் ஒன்றுதான். அந்த நிலத்தடி நீரை வெளியே கொண்டுவந்து ஆக்கப்பூர்வமாகப் பணியாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் பல்வேறு பகுதிகளில் 200 அடி, 300 அடி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கிறது. சில வட்டங்களில் கிடைக்கவில்லை. ஆனல் ஒட்டு மொத்தமாக தமிழ்நாடு முழுவதும் நிலத்தடி நீரை வெளியேக் கொண்டுவந்து பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக இப்போது தஞ்சை மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் போடப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பணி மயிலாடுதுறையில் விரிவாக நடைபெறுகிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தஞ்சை மாவட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். டெல்டா பகுதி, சி.ஏ.டி. பகுதி, நான்—சி ஏ.டி. பகுதி என்று மூன்று பிரிவுகள் இருக்கின்றன. மயிலாடுதுறை பகுதியில் நீர்வளம் அதிகமாக இருக்கிறது. ஆகவே அங்கேஇந்த வடிமுனைக் குழாய்க் கிணறுகளைப்போட்டு தண்ணீர் பெறலாம். சி.ஏ.டி. பகுதியில் 400 அடி ஆழத்தில்தான் தண்ணீர் கிடைக்கும். அதைப்போன்று நான்—சி.ஏ.டி. பகுதியில் 800 அடி ஆழத்தில்தான் தண்ணீர் கிடைக்கும். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் நமக்கு காவேரி தண்ணீர் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, தஞ்சை மாவட்டம் முழுவதும் இந்த வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்து, நிலத்தடி நீரை எல்லாப் பகுதி மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏறத்தாழ 10 இலட்சம் ஏக்கர் நிலத்தில் இந்த வடிமுனைக் குழாய்க் கிணறுகளையும் ஆழ்குழாய் கிணறுகளையும் பயன்படுத்தி அந்த தண்ணீர் மூலம் பயிர் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அந்த ஒரு போர்க்கால அடிப்படையில் உடனடியாக விரிவாக நிறைவேற்ற, முதற்கட்டமாக தமிழகத்தில் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்க்கிறோம். ஆனால் இந்த ஆண்டு தான் தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தி குறைந்துவிட்டது. அதற்கு முக்கியமான காரணம் வறட்சி ஒன்று, மற்றொன்று காவேரி நதியில் தண்ணீர் வரவில்லை. அதனால் தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தி பெருமளவுக்கு குறைந்துவிட்டது



அப்படி இருந்தும் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் 1151 கிராமங்கள்தான் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. எல்லாக் கிராமங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிக்க வேண்டும்.

வறட்சியின் காரணமாக விவசாய உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. அதை ஈடுகட்ட அரசங்கம் நெல் விலையில் குவின்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் கூடுதலாக கொடுக்கிறது. தற்போது ஆற்றிலே நீர் இல்லாத காரணத்தால் முற்றிலும் விசையேற்றத்தின் மூலமாகத்தான் பயிர் செய்யப்படுகிறது. எனவே உற்பத்திச் செலவு மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் குவின்டால் ஒன்றுக்கு 15 ரூபாய் என்று கொடுப்பதை 40 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் 60 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு 140 ரூபாய் கொடுக்கப்படுகிறது. புதுக்கோட்டையில் 60 கிலோ மூட்டைக்கு 150 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் 60 கிலோ மூட்டைக்கு 75 ரூபாய்தான் கொடுக்கபடுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வைப் போக்கி எல்லா இடங்களிலும் ஒரே விலையை நிர்ணயித்து, எல்லா மக்களுக்கும் நியாயமான முறையில் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக வறட்சி என்ற நிலை ஏற்பட்டால் வரி வசூல் செய்வது தள்ளுபடி செய்யப்படும். ஆனால் இங்கே அப்படிச் செய்யப்படவில்லை. வரி வசூல் செய்யப்படுகிறது. ஆனால் விவசாயக் கடன் வாங்கியிருந்தால், அதிலே தவணையை ஒத்தி வைக்கிறார்கள். இதுதான் செய்யப்படுகிறது. ஆனால் அப்படிச் செய்யக்கூடாது என்று நான் சொல்கிறேன். ஏனெனில் விவசாயி ஒரு ஆயிரம் ரூபாயைக் கடனாக வாங்கியிருந்தால் கூட வட்டித் தொகையும் சேர்ந்து 8,000 10,000க்கு மேல் போய், அவர்கள் கடனாளியாகிறார்கள். ஆகவே, வறட்சி பகுதி என்று அறிவிக்கப் பட்ட பகுதிகளுக்கு வரி வசூலையும் தள்ளுபடி செய்யவேண்டும் கடனையும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று இந்த அரசை நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கரும்பு. கரும்பைப்பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதன் விலையை ஏற்றி சமீபத்தில் 175 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். இதனால் 8 கோடி ரூபாய் அளவில் இழப்பு என்றும் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக இந்தக் கரும்பு விலையை டன் ஒன்றுக்கு 200 ரூபாய் என்று வைத்தால்தான் 11 கோடி ரூபாய் இழப்பு என்று வரும். இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிற அந்த விலைஏற்றமும் போதாது குறைவுதான் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏன்

என்று சொன்னால், சமீப கால கட்டத்தில் எந்த ஒரு முக்கியப் பிரச்னையை எடுத்தாலும் நமது அரசு அண்டை மாநிலங்களை உதாரணமாக காட்டும் பழக்கத்தை கையாண்டு வருகிறது. அதேபோல, இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கரும்பு விலையை உயர்த்திக் கொடுப்பதிலும் சற்று அண்டை மாநிலங்களை கவனிக்க வேண்டும். பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்திலே கிட்டத்தட்ட 195 ரூபாய் அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோல ஆந்திராவிலே 200 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். எதற்கும் அண்டை மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிற நமது அரசு, இதற்கும் அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, இந்த விலையை 200ஆக உயர்த்தவேண்டும். நமது அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற நேரத்தில் இதற்கான அறிவிப்பை செய்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

ஏனென்று சொன்னால், கருவேல மரத்தின் விறகு விலை 300 ரூபாய்க்குப் போகிறது. விலைவாசி ஏறிவரும் இந்தக் கால கட்டத்தில் தன்னுடைய நெற்றி நீர் வியர்வையை நிலத்தில் சிந்தி பாடுபடும் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு, கரும்புக்கு ஒரு டன்னுக்கு 175ரூபாய் என்று வைத்தால் அது போதாது. அது நியாயமாகாது. ஏனென்றால் விவசாயிகள் கரும்பை சாதாரண விறகாக விற்றுவிடலாமா என்று நினைக்கும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். அப்படி விறகாக விற்றால் கூட அவர்களுக்கு 250 ரூபாய்க்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூட தெரியும். கரும்பு விவசாயிகள் அதன் விலையை உயர்த்தக்கோரி உண்ணாவிரதம் இருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. ஆகவே, ஏறிவரும் விலைவாசிக்கொப்ப, இதனை மாற்றி அமைக்க வேண்டும். நமது அமைச்சர் அவர்கள், அதனை செய்வார் என்று........(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: கரும்புக்கு நேற்று அறிவிக்கப்பட்ட விலையை, கரும்பு விவசாயிகளின் சங்கத்தின் சார்பாக வரவேற்றிருக்கிறார்கள். ஏனென்றால் கடந்த ஆண்டு கொடுத்த அதே விலையில் ஒரு சல்லி காசு கூட குறையாமல், இவ்வளவு நிதிநிலை நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமையில் கூட கொடுத்திருக்கிறோம் என்கிற வகையில் பாராட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டு கரும்புக்கு கொடுத்த விலையில் நியாயம் இருப்பதாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அதிலே கொஞ்சமும் குறைக்க வில்லை. எனவே விவசாயிகளின் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி. சென்ற ஆண்டு இருந்த விலைவாசியை விட இந்த ஆண்டு விலைவாசி ஏறியிருக்கிறது. இடுபொருள்களின் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது



என்பதோடு மட்டுமல்லாமல், வறட்சியும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் 1983 84 ஆம் ஆண்டில் 1.78 லட்சம் ஏக்டேர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்று நீங்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்களே, அடுத்த ஆண்டு, இதே நிலை தொடர்ந்திருந்தால், நிச்சயமாக 50 ஆயிரம் எக்டேர் கூட விவசாயிகள் கரும்பை உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படும் என்கிற நிலையை வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அண்டை மாநிலங்களில் இருக்கக்கூடிய விலையை அனுசரித்து, ஒரு விலையை நிச்சயமாக கொண்டு வந்து செயல்படுத்தவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பயிற்சி வழி தொடர்புத் திட்டம். இது பற்றி உறுப்பினர்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல கருத்துக்களை எடுத்தச் சொல்லியிருக்கிறார்கள் இங்கே பல்வேறு. என்னைப் பொறுத்தவரையில் இந்த திட்டம் சரியான திட்டம் அல்ல. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே இத்திட்டம் தோல்வியுற்றது என்பதைத்தான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேளாண்மைத் துறையைச் சேர்ந்த பல்வேறு உயர் அதிகாரிகளும், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் இப்போது இங்கே இருந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். தஞ்சை மாவட்டத்தில் முன்பு நடந்த சிறப்பான திட்டங்கள் என்னென்ன என்று.

அந்த ஏழை விவசாய மக்களுக்காக, கிராமங்கள் தோறும், பஞ்சாயத்துக்கள் தோறும், ஊராட்சிகள் தோறும் அவர்களுக்கு நல்ல தரமான பொறுக்கு விதைகள் அளிக்கப்பட்டது. நல்ல ரசாயன உரம் அளிக்கப்பட்டது. பயிர் பாதுகாப்பிற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவைகளை எப்படி செயல்படுத்த வேண்டும் என்று விவசாயிகளுக்கு போதிக்கப்பட்டது. புகையான் என்றால் என்ன அதிலிருந்து எப்படி பயிரை பாதுகாக்கவேண்டும் என்றெல்லாம் பல நல்ல முயற்சிகள் அதிலே எடுக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) காங்கிரஸ் சார்பில் நான் மட்டும்தான் பேசுகிறேன். இன்னும் சிறிது நேரமளிக்க வேண்டும்.

ஆடிப்பட்டம் தேடி விதை என்று சொல்வார்கள்—அந்த வகையில் எல்லாம் நல்ல சிறப்பான வகையில் முனைப்புத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள். நான் ஒரு விவசாயிதான். ஆனால் எனக்கு இந்த பயிற்சி வகுப்புத் திட்டம் புரியயில்லை. அந்த அதிகாரிகள் தீவிர சாகுபடித் திட்டம் என்று ஒன்றைச் சொல்கிறார்கள். எங்களுடைய முறைக்கும் அந்த அதிகாரிகள் சொல்வதற்கும் சம்பந்தமே இல்லை. ஏன் இந்த நிலைமை என்றால், அந்த அதிகாரிகள் அலுவலகத்திலேயே உட்கார்ந்து கொண்டு, ஏதேதோ விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறாகள். அது எங்களுக்குப் புரிவதில்லை. இதனால் விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டு விட்டது.

[திரு. ந. சிவஞானம்] [1983 மார்ச் 18

(முற்பகல் 11-50)

ஆகவே கூட்டுறவுச் சங்கத்திலேயும், ஊராட்சி ஒன்றியங்களிலேயும் அவற்றை இணைக்கவேண்டும். அப்படி இணைத்தால் தான் பொதுமக்களின் பார்வைக்கு வரக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் துறையிலே மிகத் தீவிரமாக அக்கறை கொண்டு மக்களுக்கு நன்மை ஏற்படுகின்ற வகையில் செயல்படவேண்டும்.

அடுத்தது கரும்பு, அதற்கு அடுத்தது தென்னாட்டைப் பொறுத்தவரையில் கடலை. இங்கே கடலை மிக அதிகமாக பயிரிடப்படுகின்றது. ஆனால் நெல்லைப் பொறுத்தவரையில், கரும்பைப் பொறுத்தவரையில் பலவிதமான ரகங்கள் இருக்கின்றன அதேபோன்று கடலையைப் பொறுத்தவரையிலும் பலவிதமான வீரியமுள்ள ரகங்களை நாம் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்பதை ஒரு குற்றமாகவே சொல்ல விரும்புகிறேன். எனவே அந்த வகையிலே விரைவிலே ஆராய்ச்சி செய்து புதிய ரகங்களைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது மரம் வளர்ப்புத் திட்டம். மரம் இல்லாததால் தான் மழை குறைகின்றது என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆனால் மரம் வளர்ப்புத் திட்டத்திற்காக இவ்வாண்டு 5 இலட்சம் ரூபாய் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மிகவும் குறைவு. அந்தத் தொகையினை அதிகப்படுத்தவேண்டும். சென்னை நகரிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் மரங்களை வளர்ப்பது குறித்து நான் பாராட்டு கிறேன். டெல்லியிலே மரங்கள் வளர்ப்பதைப் பார்த்து அது போன்று சென்னை நகரிலும் மரங்களை வளர்ப்பதற்குரிய வகையில் புதிய திட்டத்தைக் கொண்டுவந்ததற்காகப் பாராட்டு கிறேன். ஆனால் இந்த பருவக் காலத்திலே அதிகமான மரங்களை வைக்கின்ற வகையிலே அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களிலே ஒரு கஷ்டம் இருக்கின்றது. கிராமப்புறங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வைப்ப தற்கு இடம் இல்லாத நிலைமை இருப்பதால் போதிய அளவில் கிடங்குகளைக் கட்டவேண்டும். வட்டத்திற்கு 5 அல்லது 6 என்ற வகையிலேயாவது, மத்திய அரசின் உதவியினைப் பெற்று கிடங்குகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கொள்கை அளவில் வேளாண்மைக் கல்லூரி எற்படுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே வேளாண்மைக் கல்லூரியை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு அருகிலே வேளாண்மை துறைக்குச் சொந்தமான காட்டுத்தோட்டம் என்ற பகுதியில் நிறைய இடம் இருக்கின்றது. அங்கே பல்வேறு கட்டட



1983 மார்ச் 18] [திரு. ந. சிவஞானம்]

வசதிகளும் இருக்கின்றன. எளவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வேளாண்மைக் கல்லூரியினை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சொட்டு நீர்ப்பாசனம் என்ற ஒரு புதிய திட்டத்தினை கொண்டு வந்திருக்கிறார்கள. மகாபலிபுரம் போன்ற மணற் பாங்கான இடத்திலே தென்னை, பருத்தி மற்றும் பழ மரங்கள் ஆகியவற்றினை சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி வளர்ப்பதற் குரிய திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதனால் 10 மடங்கு தண்ணீர் மிச்சமாகும் என்று சொல்லப்படுகின்றது. எனவே அரசாங்கம் இதை நிச்சயமாக நன்கு சிந்தித்து பற்றாக்குறை இருக்கின்ற இந்தக் காலத்திலே இந்தத் திட்டத்தினை பொது மக்கள் மத்தியிலே பரப்பவேண்டும் என்றும் மானிய முறையிலே இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அண்ணா நகரிலே உள்ள கூட்டுறவுக கடையிலே சூரிய ஒளியின் மூலம் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருளை சமீபத்திலே வழங்கி னார்கள். அதே வகையிலே சூரிய ஒளியினைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து பயன்படுத்துகின்ற வகையிலே ஏற்பாடு செய்து அது நமது விவசாயத்திற்கும் பயன்பட ஏற்பாடு செய்ய வேண்டும். அதன்மூலம் விசையேற்றங்களை இயக்குவதற்குரிய வகையிலே ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கின்ற வகையிலே அரசு முனைப்புடன் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தற்போது பருவமழை பொய்த்து விட்டாலும் பல்வேறு இடங்களில் விதைகள் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கின்றது. எனவே வருகின்ற பருவ காலங்களிலே பல்வேறு விதமான நல்ல வீரிய விதைகள் மானிய விதையிலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக தஞ்சை மாவட் டத்திலே உரிய நேரத்திலே கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து ரசாயன உரங்களைப் பல்வேறு இடங்களில் கொடுத்திருப்பது போன்று தஞ்சைப் பகுதியிலேயும் கிடைக்கச் செய்யவேண்டும். பயிர் பாதுகாப்புக்காக நல்ல திட்டங்களைச் செய்யவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வேளாண்மை பொறியியல் துறையை இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் தனியாக எடுத்து அதை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள் அதற்காக என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் எல்லா போர் செட்டுகளுக்கும் போதுமான விசை கருவிகள் அங்கே கிடையாது.

[திரு. ந. சிவஞானம்] [1983 மார்ச் 18

கடலை பிழியும் பெரிய தொழிற்சாலையை என்னுடைய ஒரத்தநாட்டுக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, ஆலங்குடி ஆகிய பகுதிகளில் கடலை அதிகமாக விளைகிற பகுதி இருக்கிறது. எப்படி சூரியகாந்தி எண்ணெயை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரு கிலோ நன்கொடையாக கொடுக்கிறேன் என்று சொன்னார்களோ அதேபோல் இன்னொரு பெரிய திட்டத்தை அந்த பகுதி மக்களுக்கு அதாவது கடலையிலிருந்து எண்ணெய் பிழியும் திட்டத்தை என்னுடைய ஒரத்த நாடு பகுதிக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

திரு. ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983–84-ம் ஆண்டின் மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இன்று இந்த விவசாயத் துறை மானியத்தை, கண்டித்தும் இது ஒரு காகிதப்பூ என்றும், வெடிக்காத வெத்து வேட்டு மத்தாப்பு என்றும் வண்ண ஜாலங்களை மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த மன்றத்தில் தெரிவிக்கலாம். எனக்கு ஞாபகம் இருக்கிறது போன வருடம் இதே விவசாயத்துறை மானியத்தின் மீது பேசும்போது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் நெற்பயிரை விழுங்கக்கூடிய பூச்சி இலை பூச்சியை விரட்ட முடியாதவர் முப்படையும் சந்திக்கத் தயார் என்று சவால் விடலாமா என்றும் விவசாயத் துறை அமைச்சர் பொறுப்பைக் கவனிக்காமல் மேடை பேச்சில் தான் முழு கவனம் செலுத்துகிறார் என்று இந்த மன்றத்தில் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். ஆனால் அதேநேரத்தில் தான் வகித்திருக்கும் பொறுப்பையும் நல்ல முறையில் கவனித்து தனது கட்சியையும் கட்டிக் காத்து வந்ததின் காரணமாகத்தான் கடந்த காலத்தில் தமிழகத்தில் உணவு தானியம் தன்னிறைவு பெற்று இருந்தது. ஆனால் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததன் காரணத்தினால் இயற்கை வறட்சி ஏற்பட்டு தமிழகத்திற்கு ஏற்படும் வறட்சியைப் போக்கிட இந்த அரசு நல்ல பல திட்டங்களை போர்க்கால நடவடிக்கை போல் எடுத்து வருகிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம்.

(நண்பகல் 12-00)

மத்திய அரசிடம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நமது தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற உணவு பற்றாக் குறையைப் போக்குவதற்கு மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் அரிசியையும் 40 ஆயிரம் டன் கோதுமையையும் கேட்டால் ஐந்து



ஆயிரம் டன் அரிசியும் 4 ஆயிரம் டன் கோதுமையும் அனுப்புகிறேன் என்றால் இது ஒரவஞ்சனையில்லையா? யானை பசிக்கு சோளப்பொறி போடுவதுபோல் இவர்களுடைய கூற்று இருக்கிறது என்பதை நான் மாமன்றத்தின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாட்டு மக்களுக்கு புரட்சித் தலைவர் அவர்களும் விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் மக்கள் மன்றத்திலே இதுபோன்ற கருத்துக்களை எடுத்து வைப்பார்கள். அப்படிச் செய்கிறபோது இங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரஸ்காரர்கள், மத்திய அரசை எதிர்க்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். ஆத்திரப்படுகிறார்கள், ஆவேசப்படுகிறார்கள். மேலும் நாட்டிலே ஏற்பட்ட வறட்சியைப் போக்கிடவும் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற உணவுப் பஞ்சத்தைப் போக்கவும் இந்திரா காங்கிரஸ்காரர்கள் மத்திய அரசுக்கு யோசனை கூறவேண்டாமா? அதைவிட்டுவிட்டு புரட்சித் தலைவர் அவர்களின் புகழை மங்க வைக்க வேண்டுமென்ற எண்ணத்திலே செயல்படுகிறார்கள், தமிழகத்திலே மாற்றுக் கருத்திலே வறட்சியைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை விட்டு இறக்குவோம் என்று கூறியவர்கள் இன்றைக்கு சுதி இறங்கி புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியை விட்டு இறங்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கதிரவனிலிருந்து ஒளியைப் பிரிக்கலாம், மலரிலிருந்து மணத்தைப் பிரிக்கலாம் ஆனால் மக்கள் என்னும் காந்த சக்தியிலிருந்து புரட்சித் தலைவர் முதல்வர் அவர்கள்மீது வைத்திருக்கும் காந்த சக்தியைப் பிரிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு, தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி விவசாயிகளின் கடனை ரத்து செய்து மற்ற மாநிலங்களில் செய்யாத திட்டத்தைச் செய்தால் கருப்பு பட்ஜெட்டில் தமிழகத்தை ஒதுக்கிடுவோம் என்று மத்திய அரசு பயமுறுத்துகிறது. இதுதான் தமிழக விவசாயிகளுக்கு மத்திய அரசு செய்யும் நன்மையா? இதனால் தமிழக மக்கள் காங்கிரஸ்காரர்களை வெறுக்கமாட்டார்களா? அதனால்தானே பெரியகுளத்திலே நடந்த பாராளுமன்றத் தேர்தலில் உங்களைத் தோற்கடித்தார்கள். இப்போது நடந்த திருச்செந்தூர் தேர்தலில் புரட்சித் தலைவரை எதிர்த்துநின்ற தங்களுக்கு திருநாமத்தைப் போட்டு தமிழகத்தை ஆளத் தகுதி படைத்தவர் புரட்சித் தலைவர்தான் என்பதை நிரூபித்து விட்டார்கள். ஒரு பழமொழி சொல்வார்கள், மகன் இறந்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலி அறுக்கவேண்டும் என்று கருதும் மாமியாரைப்போல் புரட்சித்தலைவர் அவர்களை எதிர்த்து பல போராட்டங்களை நடத்துகிறார்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று தலைவணங்கி ஏற்க புரட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். மக்கள் புரட்சித் தலைவர் அவர்களை ஆட்சிபீடத்தில் அமர்த்தியிருக்கிறார்கள்.

இங்கே பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால் மத்திய அரசு விவசாயிகளுக்கு என்ன செய்கிறது? நெல்லுக்கு குவிண்டாலுக்கு 150 கொடுக்கவேண்டுமென்று அவர்கள் இங்கே பேசுகிறார்கள். ஆனால் மத்திய அரசு கோதுமைக்கு குவிண்டாலுக்கு உயாத்திக் கொடுக்கிறது, அதேபோன்று நெல்லுக்கும் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசு கேட்கிறது. ஆனால் மத்திய அரசு அதைக் கொடுக்க மறுக்கிறது. தமிழகத்திலே உள்ள கரும்பு விவசாயிகளுக்கும் உயர்த்திக் கொடுக்க மத்திய அரசு மறுக்கிறது. ஆனால் தமிழக அரசு இன்றைக்கு கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அளிக்க வேண்டுமென்ற முறையிலே அதிகப் படியான விலையை போன ஆண்டு கொடுத்த 175 ரூபாயைக் கொடுத்திருக்கிறது. அதனால் இன்று தமிழக விவசாயிகள் அனைவரும் தமிழக அரசைப் போற்றிப் புகழ்ந்துக்கொண்டிருக் கிறார்கள். இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார். இன்று நாட்டிலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வறட்சி மழை பெய்யாததன் காரணமாக ஏற்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத் லே நல்லமுறையிலே விளைந்தாலும்கூட வறட்சியை ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்றைக்கு தமிழக அரசு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக நல்லபல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறது. பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுத்து விவசாயத்தைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயப் பெருமக்களுக்காக ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுத்துக்கொண்டு இருக்கின்ற தமிழக அரசை தமிழ் மக்கள் அனைவரும் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் விவசாயிகளுக்கு நல்லபல நன்மைகளை செய்யவேண்டுமென்று வேளாண்மைத் துறை அமைச்சர் அதிகமான மானியத்தைக் கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசிடம் அதை வாங்கிக்கொடுப்பதற்காக இந்திரா காங்கிரஸ்காரர்கள் உதவிபுரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே வறட்சியால் விவசாயத்துறை கொஞ்சம் பின்தங்கி இருக்கிறது. ஆனால் கடந்த காலங்களிலே விவசாயத்துறை எவ்வாறு மேம்பாடு அடைந்திருந்தது என்பதை தமிழக மக்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைக் கூறி மேலும் விவசாயப் பெருமக்களுக்காக நல்லபல திட்டங்களைத் தீட்டி யிருக்கிற தமிழக அரசைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக் கிறார்கள் என்று முடிக்கிறேன், நன்றி. வணக்கம்.

திரு. டி. மணி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீது நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



நமக்கு கொடுத்திருக்கிற குறிப்பிலே மிக முக்கியமாக சொல்லப்பட்டிருப்பது, கடுமையான வறட்சி, தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை பார்க்கமுடிகிறது. கடுமையான வறட்சியைப் போக்குவதற்கு நம்முடைய மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி எந்த அளவிற்கு இருக்கிறது என்று பார்த்தால், இங்கே போர்க்கால நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கூறினாலும் கூட, அடிமட்டத்தில் செல்கிறபோது அந்த நடவடிக்கைகள் போர்க்கால வேகத்தில் அல்ல, ஆமை வேகத்தில் செல்கிறது என்ற நிலையைத்தான் இன்றையதினம் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பார்க்கமுடிகிறது. உதாரணத்திற்கு உஞ்சரை ஒன்றியத்தில் நூற்றுக்கணக்கான குளங்கள் தூர் வார வேண்டுமென்று, நூற்றுக்கணக்கான குடிநீர் கிணறுகள் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன, தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று டி.டி.சி. கூட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னாலேயே எடுத்துச்சொன்னதற்கு நடவடிக்கை என்ன வென்றால், 100 குளங்களில் ஐந்து குளங்களைத் தான் தூர் வார்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஐந்து குளங்களுக்கு. 50 ஏக்கர்கள் உள்ள குளம் என்று சொன்னால், அதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை 5 ஆயிரம்தான், இப்படி எந்த மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் போதுமான நிதியாதாரத்தை ஏற்படுத்தி, அது குளங்களானாலும் சரி, குட்டைகளானாலும் சரி, கால்வாய்கள் ஆனாலும் சரி, ஒரு போர்க்கால நடவடிக்கை என்று வருகிறபோது, எந்த அளவிற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த அளவிற்கு இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்,

அடுத்தபடியாக நம்முடைய உணவு தானிய உற்பத்தி என்பது இந்த மந்தமான நடவடிக்கையின் காரணமாக பாதிக்கப் பட்டிருக்கிறது, குறிப்பாக உணவுப் பொருளான நெல்லை எடுத்துக்கொண்டால் இன்று நமக்கு பற்றாக்குறை. அதற்கு காரணம் மாநிலத்தினுடைய பல்வேறு மாவட்டங்களிலும் பார்க்கிறபோது நெல்லை விளைவிக்கக்கூடிய விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை இல்லாத காரணத்தால் பெருவாரியாக அவர்கள் இன்று பணப்பயிர்களை இடுகிறார்கள். அந்த சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. தஞ்சையை எடுத்துக்கொண்டாலும் சரி, வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது கோவை, குமரி எந்த மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே பணப்பயிர்களை நடுகிறார்கள். ரப்பரை நடுகிறார்கள், அல்பீசியா நடுகிறார்கள்; தென்னையை நடுகிறார்கள். இருபோகம் சாகுபடி செய்கிற, நெல்லை உற்பத்தி செய்கிற, முறையான நீர்தேக்கங்களிலிருந்து நீரைப் பெற்று சாகுபடி நடக்கக்கூடிய நிலங்களில் பணப்பயிர்களை

[திரு. டி. மணி] [1983 மார்ச் 18

பற்றாக்குறையாக இருக்கிற இந்த நேரத்தில் மிகப்பெரிய ஆபத்தை அது ஏற்படுத்தும், என்று சொல்லி வந்திருக்கிறோம். விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைப்பதில்லை. கரும்புக்கு ஒரு விலை நிர்ணயித்திருக்கிறோம். அதை வரவேற்கிறோம். தஞ்சையில் வறட்சி இருந்தாலும்கூட இன்று உற்பத்தியாகிற நெல்லை விவசாயிகளுக்கு போதுமான விலை கொடுத்து, வறட்சியின் காரணமாக குவிண்டாலுக்கு 25 ரூபாய் அதிகமாகக் கொடுத்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். நாம் மத்திய சர்க்காரை கேட்கிறோம். நமக்கு ஒரு லட்சம் டன் அரிசி வேண்டும்; பற்றாக்குறையாக இருக்கிறோம்; வறட்சியால் வாடுகிறோம் என்றெல்லாம் சொல்லி கேட்டும்கூட தராத நிலையில் நம்முடைய விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கொடுத்து நம்முடைய அரசே பெற்றுக் கொள்ள முன்வரவேண்டும் 'என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் உற்பத்தி செய்கிற இதர உணவு தானியங்கள் அனைத்திற்கும் இதேநிலை தான். உதாரணமாக வெங்காயத்தை எடுத்துக் கொள்வோம். பல்வேறு மாவட்டங்களில் இன்றைக்கு வெங்காயம் 50 ரூபாய்க்கு தான் விற்கப்படுகிறது, என்றால் அது வெளி மாநிலங்களுக்கு, வெளி நாடுகளுக்கு செல்கிறபோது அதனுடைய விலை 100 ரூபாய், 150 ரூபாய் என்று விற்பதைப் பார்க்கிறோம். உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. அதற்காக மார்க்கெட்டிங் சொசைடிகள் என்று ஏற்படுத்தியிருந்தாலும் கூட அந்த சொசைடிகள் கூட ஓரளவிற்கு இடைத்தரகர்களாக இருப்பதைத் தான் நாம் பார்க்கிறோம். உணவு தானியங்கள் என்ற முறையிலே விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கொடுக்கிற ஏற்பாட்டை கொண்டுவர வேண்டும். குறிப்பாக ஐந்து, ஆறு தினங்களுக்கு முன்பாக பத்திரிக்கையிலே ஒரு செய்தியைப் படித்தேன். தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறபோது உற்பத்தியாகிற இடத்தில் ஒரு கிலோ தக்காளி 10 காசு, 15 காசு தான். ஆனால் சென்னைக்கு அது வருகிறபோது இங்கே சந்தையில் தக்காளி விலை ஒரு கிலோ 2 ரூபாய் என்று விற்கப்படுகிறது. உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு 20 பைசாதான். ஆகவே, இந்தச் சூழ்நிலையைப் போக்க வேண்டுமென்று சொன்னால், இந்த மார்க்கெட்டிங் சொசைட்டி, அதுபோன்று விவசாயிகளுடைய கூட்டுறவு அமைப்பின்மூலமாக, இடைத்தரகர்களுக்கு இடம் கொடுக்காமல், நேரடியாக விவசாயிகளிடமிருந்து வாங்கி, உபயோகிக்கின்ற மக்களுடைய கையிலே நியாயமான விலைக்கு கிடைக்கவும்ஏதுவாகும். அதுபோல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு இலாபகரமாகவும் இருக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்வது உசிதமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

வறட்சியினுடைய இன்னொரு பகுதியாக என்ன பார்க்கிறோம்? நம்முடைய மாநிலத்தின் பல்வேறு பகுதி



1983 மார்ச் 18] [திரு. டி. மணி]

யிலிருந்து கூட அடுத்த மாவட்டங்களுக்கும் அடுத்த மாநிலங்களுக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் பஞ்சம் காரணமாக, பிழைக்கச் செல்கின்ற செய்தியை தினந்தோறும் பத்திரிக்கையிலே பார்க்கிறோம். ஆக இந்த வறட்சி நிவாரணப் பணி என்பது துரிதமாக நடக்க வேண்டும். இதுவரை கொடுத்திருக்கின்ற ரூ. 45 கோடியை மார்ச் கடைசிக்குள்ளே செலவிடுவார்கள். ஆனால், அதற்குப் பின்னாலே வருகின்ற ரூ. 100 கோடி, ரூ. 200 கோடி, ரூ. 250 கோடி, ஆக எவ்வளவு கிடைத்தாலுங்கூட, இன்றைய தமிழகத்தினுடைய நிலையை நாம் எடுத்துப் பார்க்கின்றபொழுது, நாம் கேட்டிருக்கின்ற பணம் நமக்குக் கிடைத்தாலும்கூட, எந்தக் காலக்கட்டத்திற்குள்ளே செய்து முடிப்போம்? 3 மாத காலத்திற்குப் பிறகு மழை வரலாம். மழை வந்த காரணத்தினால், அவைகள் நிறுத்தப்பட வாய்ப்பிருக்கிறது. ஏற்கனவே கடந்த ஒருமுறை, குமரியிலே ஒரு அனுபவம் இருந்தது. மழை வந்த காரணத்தினாலே, அனுமதித்த பணத்தை இல்லையென்று சொல்லிவிட்டார்கள். மழை வந்தாயிற்று, தண்ணீர் வந்தாயிற்று, இனி என்ன வறட்சி நிவாரணப் பணி என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, வறட்சி நிவாரணத்திற்காக ஒதுக்குகின்ற பணத்தை, லாப்ஸ் ஆக விடாமல், அடுத்த மார்ச் வரை செய்யக்கூடிய நிலையை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த அறிக்கையிலே இன்னொரு முக்கியமான விவரத்தைத் தந்திருக்கிறார்கள். உலக வங்கியினுடைய உதவியுடன் ஒரு பயிற்சி வழித் தொடர்பு திட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய அனுபவத்தில் விவசாயிகள் நேரடியாக என்ன பார்க்கிறார்கள்? அந்த அலுவலர்கள் 10 விவசாயிகளை அழைத்து வைத்து, அவர்களுக்கு ஒருசில அறிவுரைகளைச் சொல்கிறார்கள். அது மட்டும் போதுமானது அல்ல. சமீபத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கேள்வி மூலமாக ஒரு தகவலைக் கேட்டேன். ஒரு பாக்கு மரத்திலே கடுமையான நோய் பரவியிருக்கிறது. 1,000, 2,000 பார்க்குகள் கொண்ட குலையோடு அந்தக் கொண்டைபழுத்து ஒடிந்து போய்விடுகின்றது. இதுசம்பந்தமாக, ஒரு பெரிய அதிகாரிக்குத் தகவல் கொடுத்து, மருதம்பாரை என்ற ஊருக்கு அழைத்துச் சென்று அந்தக் கொண்டையை வெட்டி அவருடைய கையிலே கொடுத்து, கோயம்புத்தூரிலே இருக்கிற ஆய்வுக் கூடத்திற்கு அனுப்பி அதைப் பரிசோதனை செய்து, அவசரமாக இதற்கு ஒரு மருந்தை கண்டு பிடிக்கவேண்டும், அல்லது மருந்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். ஆனால். அந்தப் பெரிய அதிகாரி என்ன சொன்னார் என்று கேட்டால், நாங்கள் இதை எப்படிப் பயன்படுத்தவேண்டுமென்று சொல்லலாமே தவிர, அதற்கு மேலே மருந்தைத் தர வழியில்லை என்றார், விவசாயிகள் என்ன கேட்கிறார்கள் என்றால், சில உபதேசங்களைத் தானே, சில அறிவுரைகளைத் தானே செய்கிறார்கள், மருந்து தரவில்லையே என்று கேட்கிறார்கள். ஆனால், பயங்கரமான

வழித் தொடர்புத் திட்டம், விளம்பரப் பலகையிலே பார்த்தால், பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் என்று எங்கு பார்த்தாலும் இந்த அறிவிப்புதான். ஆனால், விவசாயிகளுடைய நேரடியான அனுபவம் என்னவென்றால், அவர்களுக்கு வெறும் அறிவுரைகள் தான் கிடைக்கின்றன. அந்த அறிவுரைகளைக் கூறுகின்ற காலத்தில், அந்தப் பயிர்களுக்கு அல்லது இதுபோன்ற பணப் பயிர்களுக்கு இன்னும் கேடுபாடுகள் இருக்கின்ற காலத்தில், அதைப் போக்குகின்ற மருந்துகளையாவது இலவசமாக வழங்குகின்ற, ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தண்ணீர் பிரச்னை இதிலே சேர்ந்து வருகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விவரக் குறிப்பிலே பல்வேறு பகுதிகளிலே தண்ணீர் பிரச்னையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மழைக்காலத்திலே கிடைக்கின்ற தண்ணீரைத் தேக்கி வைப்பதிலே நமக்கு ஒரு நீண்டகாலப் பார்வையில்லையென்பது என்னுடைய குற்றச்சாட்டு. 2 ஆண்டுக்காலம், 3 ஆண்டுக்காலம் தொடர்ச்சியாக, 5, 6 ஆண்டுக்காலம் பார்த்தால், ஏதாவது ஒரு பருவமழை தவறிவிடுகிறது. அதனால் விவசாயிகள் பெருவாரியாகப் பாதிக்கப்படுகிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், 1979–80 வாக்கிலே, என்னுடைய பகுதியிலே பள்ளக்கூட்டம் அணைக்கட்டு வேண்டுமென்று சொன்னோம். எத்தனை ஆண்டுக் காலம் ஆயிற்று? இந்த 4 ஆண்டுக்காலமும் ஆய்வு வேலை முடியவில்லை. வருகின்ற தண்ணீர், கால்வாய் வழியாக வறட்சியாக உள்ள இந்த நேரத்திலும் 1/2 அடி தண்ணீர் ஆற்றுக்கு வந்து, அது கடலிலே வீணாகப் போகிறது. மழைக் காலத்திலே வருகின்ற அந்தத் தண்ணீர் முழுமையாக விவசாயத்திற்குப் பயன்படுகிற நிலைமையில்லை. அதைத் தேக்கினாலும் கூட, 2 ஆண்டுக்காலம் பருவமழை தவறினாலும், தேக்கியுள்ள தண்ணீரைக்கொண்டு, விவசாயிகள் சாகுபடி செய்து, உற்பத்தி செய்வதற்கான நிலைமையைப் பெறமுடியும். ஆகவே, அந்தப் பணியினைச் சரியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு தானியங்கள் என்ற தலைப்பின் கீழ், கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச்சோளம் இவைகள் உற்பத்தி செய்யப்படுகிறது என்றிருக்கிறது. ஏற்கனவே வறட்சி என்ற காரணத்தினாலே, கடந்த ஆண்டு ஒரு இலக்கைச் சொல்லியிருக்கிறோம். அந்த இலக்கிற்கு நாம் போய்ச் சேரவில்லை. மீண்டும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய பயிர் வகைகள் தேவை கிட்டத்தட்ட 9 இலட்சம் டன்கள் என்றுசொல்கிறோம். கடந்த ஆண்டு 3 இலட்சம் டன் அல்லது 4 இலட்சம் டன்தான். இந்த ஆண்டும்கூட 3 இலட்சம் டன் அல்லது 4 இலட்சம் டன்தான். அடுத்த மாநிலங்களைத்தான் நாம் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே, இவைகளை உற்பத்தி செய்வதற்கு





இந்த அதி அதி தீவிரமான சாகுபடித் திட்டங்கள் தேவை. தீவிரமான திட்டத்தைக் கொண்டு வந்து நம்முடைய மாநிலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உளுந்து, பருப்பு போன்ற பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பருத்தியைப் பொறுத்தவரையில் 14 இலட்சம் பேல்கள் தேவையாக இருக்கிறது. ஆனால் கையிலே இருப்பதோ நான்கைந்து இலட்சம் பேல்கள்தான். பருத்திக்காக கார்ப்பரேஷன் மாதிரியான ஒரு அமைப்பு இருக்கிறது. பருத்தியை உற்பத்தி செய்கின்ற சிறு விவசாயிகளுக்குத் தேவையான விலை கிடைக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைமை உருவாகின்றபொழுது அந்தச் சிறு விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையிலேயும், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலேயும் அவர்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உரத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இராசாயன உரங்களும் இருக்கின்றன, இயற்கை உரங்களான எரு, தழைச் சத்துக்களும் இருக்கின்றன. உரங்களை விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு நல்லமுறையில் கொடுக்கிறோமோ அப்பொழுதுதான் அந்த விவசாயிகள் நெல்லையோ அல்லது காய்கறிகளையோ அல்லது வேறு எந்த பொருட்களையோ உற்பத்தி செய்து அதன் பயனை அடைய முடியும். ஆனால் இரசாயன உரங்களைப் பற்றிய ஒரு விஷயத்தைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இரசாயன உரங்களில் அதிகப் படியான கலப்படத்தைப் பார்க்க முடிகிறது. ஒரு கிலோ இரசாயன உரத்தை எடுத்துக்கொண்டு தண்ணீரிலே அரித்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 250 கிராம் மணல் அதிலே இருக்கிறது. ஆகவே, தரமான உரங்களை மலிவு விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சிக் கொல்லி மருந்தைப்பற்றி அமைச்சரவர்கள் ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். அவைகளிலேயும் பல்வேறு விதமான கலப்படங்கள் இருக்கின்றன. பூச்சிக் கொல்லி மருந்துகளை ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக விநியோகம் செய்கின்ற நேரத்தில் அந்த மருந்து நல்ல மருந்துதானா, தரமான மருந்து தானா, மற்றப் பொருட்கள் ஏதேனும் அந்த மருந்தில் இருக்கின்றனவா என்பதையெல்லாம் கண்டறிந்து, காலாகாலங்களில் அந்த மருந்துகளை விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. டி. மணி] [1983 மார்ச் 18

தோட்டக் கலையைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமானால் நம்முடைய பழத்தோட்டங்கள் போதுமானவை அல்ல. பழத் தோட்டங்களை அதிகப்படுத்தும் வகையில் மலையோரப் பகுதிகளில், மலைப்பாங்கான பகுதிகளில் இவைகளை எங்கெங்கு உற்பத்தி செய்ய முடியுமோ அங்கெல்லாம் இதற்கான விஸ்தரிப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அயல்நாட்டுச் செலவாணியைப் பெற்றுத் தருகின்ற கிராம்பு, ஜாதிக்காய், ஏலம், கோக்கோ போன்ற பழங்களை மலைப்பாங்கான பகுதிகளில் எந்த அளவிற்கு அதிகப்படுத்த முடியுமோ, எந்த அளவிற்கு விஸ்தரிக்க முடியுமோ அந்த அளவிற்கு உற்பத்தியினை பெருக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1983—84 ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறையினுடைய மானியத்தை நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்றுப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். இம்மாநிலத்தின் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறைக்கு மிக முக்கியமான பங்கு உண்டு என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. 1983—84 ஆம் ஆண்டுக்காக வேளாண்மைத் துறைக்கு 88.87 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். வேளாண்மை விரிவாக்கப் பணி வசதிகள், நல்ல விற்பனை வசதி, சேமிப்பு கிடங்கு வசதி, மேம்படுத்தப்பட்ட தரமான விதைகளை வழங்குதல் போன்ற வசதிகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் செய்து கொடுக்கின்ற இந்த அரசையும், இந்தத் துறையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(பிற்பகல் 12-20)

அதேபோல் 1000 மெட்ரிக் டன் திறனுள்ள கிராமப்புறக் கிடங்குகள் 89ஐ கட்டுவதற்கு இந்திய அரசு தரும் நிதியுதவியை அரசு பெரிதும் பயன்படுத்தியுள்ளதைப் பாராட்டுகிறேன். கிராமப்புற விவசாயிகள் தங்களுடைய பொருட்களை நல்ல விலையில் விற்பதற்காக வழிவகைகளைச் செய்திருக்கின்ற இந்தத் திட்டத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே போல உழவர்களும் தரமான விதைகளை உற்பத்தி செய்து கொடுக்கின்ற வகையில், அடுத்த நிதியாண்டில் விதைகளைப் பதப்படுத்தும் பிரிவுகள் 2, ரூ 24 லட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்படுவதை நான் வரவேற்கிறேன். அதில் ஒரு பிரிவை கோவை மாவட்டத்தில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் அதை அமைக்க ஆணையிட வேண்டுகிறேன்.

அதேபோல் இந்த அரசானது எண்ணெய் வித்துப் பெருக்கத்திற்காக, ஒரு தனித் துறையை 1-12-80 முதல் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முறையாக நிறுவியுள்ளதை நான்



1983 மார்ச் 18] [திரு. எம். வி. இரத்தினம்]

பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1979-80 வரை சென்னை
அபிவிருத்திக்சாக, நமது மாநிலத்தில் தென்னை பயிரிட பல
சிறிய நாற்றுப் பண்ணைகள் மட்டும் இயங்கிவந்தன. நமது
மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அறிவுரைப்படி,
தென்னை அபிவிருத்திக்கு ஒரு அறிவுரைத் திட்டம் 1980-81-ல்
துவக்கப்பட்டதை நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். எண்ணெய்வித்து பயிர்களுக்காக, கடந்த 5 ஆண்டு
களுக்கு முன்னால் நம் மாநில அரசால் செலவிடப்பட்ட
தொகையைக் காட்டிலும், இன்று அதிக அளவில் இவ்வரசு
செலவிட்டு, நம் மாநிலத்து எண்ணெய்வித்து வேளாண் பெருங்குடி
மக்களுக்கு அளிப்பதை நான் பாராட்டுகிறேன. முன்பு 1977-78ஆம்
ஆண்டு ரூ. 221.90 இலட்சம் செலவிடப்பட்டது. இந்த ஆண்டு
ஒதுக்கப்பட்ட தொகையை ஏறக்குறைய 726.43 இலட்சத்தை
செலவிட திட்டம் இட்டு இருப்பது எண்ணெய்வித்து உற்பத்தியில்,
இந்த அரசு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இவ்வாறு உதவிக்
கொண்டிருக்கிறது என்பதை எண்ணெய் வித்து பெருக்கத்திற்காக
இந்த அரசு கொடுக்கிற ஆர்வத்தையும் எடுத்துககாட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் பொள்ளாச்சிப்
பகுதியில் தென் மேற்குப் பருவ மழை பொய்த்துவிட்ட
காரணத்தாலே, எண்ணெய் வித்து நிலக்கடலையை துரு நோய்
தாக்குவதாலே, பொள்ளாச்சி வட்ட விவசாயிகள் மாற்றுப்பயிர்ச்
சாகுபடிக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான்
எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நிலக்கடலை
சாகுபடியிலிருந்து இன்றையதினம், தென்னைசாகுபடிக்கு அந்தப்
பகுதியிலுள்ள விவசாயிகள் மாறியிருக்கிறார்கள் என்பதை
கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். சென்ற 5 ஆண்டுகளுக்கு
முன்பாக, 1976-77-ல் 18,500 ஏக்கர் நிலத்தில்தான் தென்னை
சாகுபடி செய்யப்பட்டிருந்தது. ஆனால் தற்போது 1981-82ஆம்
ஆண்டு முடிய 44,000 ஏக்கர் நிலங்களுக்கு மேலாக தென்னை
சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல பொள்ளாச்சி வட்டத்தில் சாகுபடி நிலப்பரப்பு
2,22,000 ஏக்கர் ஆகும். அதில் 1 04,000 ஏக்கர் நீர்ப்பாசனம்
பெறுகிறது. ஆனால் 1,18,000 ஏக்கர் நிலம் மானாவாரி
பூமியாகும். நீர்ப்பாசன வசதியுள்ள பூமிகளில் 61,000 ஏக்கர்
நிலங்கள் கிணற்றுப்பாசனமாகவும், மீது 40,000 ஏக்கர் பரம்பிக்
குளம், ஆளியாறு திட்டத்தின் மூலமாகப் பாசனம் பெறுகின்றது.
இந்த வகையில் ஏறக்குறைய பாசனம் பெறுகின்ற நிலத்தில் 50
சதவீதம் தென்னை சாகுபடி பொள்ளாச்சியில் நடைபெற்று
வருகின்றது என்பதை நான் கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். அதேபோல பொள்ளாச்சி வட்டத்தில், பருவமழை ஏறக்
குறைய 925 மில்லிமீட்டர் கிடைக்கின்ற காரணத்தால், அந்தப்
பகுதியில் இருக்கிறவர்கள், மாநில தட்பவெப்ப சீதோஷ்ண நிலைக்
கேற்ற வகையில் தென்னை சாகுபடி செய்கிறார்கள் என்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன். பொள்ளாச்சிப் பகுதியிலே ஒரு

மரம் ஆண்டிற்கு 80 காய்களைக் கொடுக்கிறது. நம் மாநிலத்தில் ஒருமரம் சராசரி 60 காய்களைக் கொடுக்கிறது. பிற மாநில சராசரி அளவு 30 காய்களாகும். அதைவிட நமது மாநில அடிப்படையில் எடுத்துக்கொண்டால் ஒரு மரமானது ஏறக்குறைய 60. தேங்காய்களைக் கொடுக்கிறது. ஆனால் பொள்ளாச்சிப் பகுதியில் மட்டும் ஒரு தென்னை மரமானது குறைந்தது 80 காய்களைக் கொடுப்பதாக விவசாயத் துறையிலே உள்ளவர்கள் கணக்கிட்டு இருக்கிறார்கள். ஆனால் இன்றைய நிலையிலே பொள்ளாச்சிப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாய மக்கள் ஏறக்குறைய தென்னை சாகுபடியில் அதிக நாட்டம் கொண்டு, அதிக அக்கரை கொண்டு செய்கின்ற காரணத்தால் ஏறக்குறைய 80 காய்களையும் தாண்டி, இன்றைக்கு அதை 100 காய்களுக்கு மேல் உயர்த்துகின்ற ஒரு முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்கின்றபோது நான் பெருமைப்படுகிறேன்.

அதேபோல் இந்தியத் துணைக் கண்டத்திலேயே வட்ட அடிப்படையில் நாம் எடுத்துப் பார்ப்போமானால் பொள்ளாச்சி வட்டத்திலேதான் தென்னை சாகுபடியில் விவசாயிகள் முனைப்பாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகை யாகாது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் தென்னை சாகுபடியை அதிகப்படுத்தி, தற்போது விவசாயிகள் ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால், இந்த தென்னை மரங்களில் உள்ள பலநோய்களும், பூச்சிகளும் தாக்குகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக முன்னோடி விவசாயிகள் கேரள மாநிலத்தினுடைய எல்லைப் பகுதிகளிலே இருக்கின்ற காரணததால் கேரளத்திலிருந்து தென்னங்கன்றுகளை வாங்கி வந்து நடவு செய்கின்ற சூழ்நிலையிருக்கிறது கேரள மாநிலத்திலே உள்ள காசற்கோடு போன்ற இடங்களிலே ஆராய்ச்சிப் பணிகள் இருந்தாலும், அந்த கேரள பார்டர் நோய்க்கு அவர்கள் ஆளாக நேரிடுகிறது. பல ஆண்டுக்காலம் ஆராய்ச்சி செய்தும் இன்னும் சரியான மருந்துகளை கண்டுபிடிக்க முடியாத நிலையில் அந்த ஆராய்ச்சிப் பண்ணைகள் இருக்கின்றன. இந்த அபாயகரமான சூழ்நிலை பொள்ளாச்சிப் பகுதிக்கு எட்டிவிடக் கூடாது, வந்து விடக் கூடாது. அந்த விவசாயிகளுக்கு பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்துவிடக் கூடாது. எண்ணெய்வித்துத் துறையில் அக்கரை கொண்டிருக்கிற இந்தத் துறையும், இந்த அரசும் அதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்த நாட்டுக்கு அதிகமாக எண்ணெய் வித்துக்கு அதிகமான அளவில் தேங்காயைக் கொடுக்கக் கூடிய இந்தப் பொள்ளாச்சிப் பகுதிக்கு ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அவசியமாக அமைக்கக் கொடுக்க [illegible]
வேண்டு[illegible]



அதேபோல் தஞ்சாவூர் வாடல் நோய் குருத்தழுகல் சாகுவடிதல் நோய்கள் போன்ற நோய்கள் அந்தப் பகுதியில் தென்படுகிறது. மேலும் பூச்சிகளால் தாக்கக்கூடிய காண்டாமிருக வண்டு, சிகப்புக்கூன் வண்டு, கருந்தலைப் புழு, கரையான் சாவு போன்ற பூச்சிகள் தாக்குகின்ற சூழ்நிலையிருக்கிறது. ஆகவே பொள்ளாச்சி வட்டத்திலே இன்னும் சில இடங்களிலே நீர்க்கசிவும் போதிய வடிகால் வசதிகளும் இல்லாததால் வாடல் நோய் சார் வடிதல் நோய் போன்ற நோய்கள் தாக்குகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலையிருக்கிறது. அவற்றின் அறிகுறியை விரிவாகப் பணி யாளர்களும், பல்கலைக் கழகத்தினுடைய நிபுணர்களும் கூட கண்டுபிடித்து அதற்கு தீர்வு காண இயலாத சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்னை சாகுபடி அதிகமாக உள்ள கேரள மாநிலத்தில் ஆராய்ச்சி நிலையங்கள் பல இருக்கின்றன. இத்தகைய பிரச்சனைகளைக் கண்டறியவும். ஆராய்ச்சி செய்வதற்கும் ஆராய்ச்சி நிலையங்கள் நமது தமிழ்நாட்டில் இல்லை என்ற போது, அதை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகிறது.

அதேபோல், சிவப்புக்கூன் வண்டு, மற்றும் காண்டாமிருக வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு தற்சமயம் விவசாயிகள் இரசாயன பூச்சிக்கொள்ளி மருந்துகளை நம்பியிருக்க வேண்டி யிருக்கிறது, இந்த இரசாயன மருந்துகளை வயதான பெரிய மரங்களில் தெளிப்பது மிகவும் கடினமான காரியம். ஆகவே இத்தகைய பூச்சிகளை, மலட்டுத்தன்மை [illegible]க்குதல், ஒட்டுண்ணிகளை விடுதல் இணைப்புப் பொறிகளை வைத்துக் கொள்ளுதல் போன்றவைகளை நம்முடைய மாநிலத்திலே செய்வதற்கு வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கருந்தலைப் புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்த பொள்ளாச்சி வட்டத்திலே ஒரு இடத்திலே மட்டும்தான் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையம் இருக்கிறது. அதன்மூலம் ஒரு வருடத்திற்கு ஆயிரம் ஏக்கர் மட்டும் ஒட்டுண்ணிகளை விட முடியும். மீதம் இருக்கக்கூடிய 39 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு ஒட்டுண்ணி விடுவதற்கு நான் ஒட்டுண்ணி வளர்ப்பு நிலயத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

மேலும் பூச்சி நோய்களைக் கண்டறியவும், கட்டுப்படுத்தவும், அதற்கான முறைகளை ஆராயவும், உளவியல் முறையில் புதிய நுணுக்கங்களை [illegible]ளையவும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள கேரள மாநிலத்தில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையம் போன்று நம் தமிழகத்திலேயும் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. இத்தகைய ஆராய்ச்சி நிலையம் நம்முடைய

[திரு எம். வி. இரத்தினம்] [1983 மார்ச் 18

தமிழகத்திலே தென்னை அதிகமாக சாகுபடி செய்யக்கூடிய பகுதியான பொள்ளாச்சி வட்டத்தில் நிறுவுவது அவசியம் ஆகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இத்தகைய ஆராய்ச்சி நிலையத்தை விவசாயத் துறை மூலம் பொள்ளாச்சி வட்டத்தில் அமைத்துச் செயல்படுத்தினால் அங்கேயிருக்கும் விவசாயப் பெருமக்களுக்கு மேலும் நல்ல முறையில் தென்னை சாகுபடி செய்ய முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் மத்திய தென்னை அபிவிருத்தி வாரியத்தின் மூலமாக கேரளாவில் காசக்கோடு என்ற பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும் ஆராய்ச்சி நிலையம் போல் பொள்ளாச்சிப் பகுதியிலும் வேறு பல பகுதிகளிலும் ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையில் குறிப்பிட்டார்கள். விவசாயிகள் வாங்குகிற பூச்சி கொல்லி மருந்துகள் ரசாயன உரங்கள் ஆகியவற்றில் கலப்படம் செய்வதைத் தடுக்கும் வகையில் இரண்டு பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை அறிவித்தார்கள். அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது எல்லாம் விவசாயிகளுக்கு வாங்குகிற பொருள்களில் கலப்படத்தைத் தடுக்கும் வகையில் விசேஷ போலீஸ்படை அமைத்து சீரான முறையில் அந்தக் கலப்படக்காரர்களைக் கண்டுபிடித்து தண்டிக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும், விசேஷபடை அமைக்க வேண்டும் என்றும் ஒரு கோரிக்கையை வைத்து, இந்தத் தென்னை ஆராய்ச்சி நிலையத்தை பொள்ளாச்சிப் பகுதியில்—அது தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவிற்கே தேங்காய் எண்ணெய் வித்துக்களை அதிகமான அளவிற்குத் தருகிறது—அமைக்க வேண்டும் என்று பொள்ளாச்சி மக்கள் சார்பாகக் கேட்டு, பேச வாய்ப்பளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கை மீது இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். வேளாண்மைத் துறைக்கு 83–84 ஆம் ஆண்டின் அடுத்த ஆண்டு (1984) மார்ச் முடிய 80 கோடியே 32 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே 5 கோடி மக்களுக்கு அடிப்படை உத்தரவாதம் அளிக்கக்கூடிய ஒரு பெரிய துறை வேளாண்மைத்துறை. சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன; பஞ்சாலைகள் இருக்கின்றன; மற்ற தொழில்கள் இருக்கின்றன; அவற்றில் உற்பத்தியாகும் பொருள்கள் அழியாதது. துணி உற்பத்தியானால் எவ்வளவு நாட்கள் வேண்டுமானால் இருக்கலாம். இப்படி மற்ற மற்ற பொருள்களுக்கு இருக்கலாம். ஆனால் வேளாண்மைத் துறையில் உற்பத்தியாகும் பொருள்கள்—



1983 மார்ச் 18] [திரு. பொ. உத்திராபதி]

நெல் தவிர—நெல் கூட குறுவை அதிக நாட்கள் இருக்காது—அழுகிப்போய்விடும் தன்மையுடையவையாகும். ஆனால் அந்தப் பொருள்கள் மிகவும் மக்களுக்கு இன்றியமையாதவை. அப்படிப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்து கொடுக்கும் துறைக்கு ஒதுக்கியிருக்கும் பணம் இவ்வளவுதானா என்பதைப் பார்க்கிறபோது இந்த அரசிற்கு விவசாயக் கொள்கையில் சரியான கண்ணோட்டம் இல்லை என்பதைத்தான் தெரிவிக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காரணம், இதற்கு மேலும் 50 கோடி கொடுத்தால் விவசாயிகள் அனுபவிக்கும் மேற்சொன்ன கஷ்டங்களைத் தவிர்க்கவும், உற்பத்தியாகும் பொருள்களுக்குக் கட்டுப்படியான விலை அளிக்கவும், மற்றும் பயிர்கள் சேதாரம் ஆகின்றபோது நிவாரணம் அளிக்கவும் முடியும். ஆகவே அப்படிச் செய்தால், மேலும் மேலும் தமிழகம் பற்றாக்குறை மாநிலமாக தள்ளப்பட்டு வருகின்ற அபாயத்தைத் தவிர்க்க முடியும் என்பதை நம்முடைய அரசும், அமைச்சரவையும் எதிர்காலத்தில் உணரவேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நமது அமைச்சர் அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். நாம் இப்போது எதிர்பார்ப்பது நெல் 28 லட்சம் மெட்ரிக் டன், சிறு தானியங்கள் 12 இலட்சம் டன், பயிறு வகைகள் 2.60 இலட்சம் டன், கரும்பு (வெல்லம்) 17 இலட்சம் டன், பருத்தி 2.60 இலட்சம் பொதிகள், எதிர்காலத்தில் நாம் எதிர்பார்ப்பது, அரிசி 60 இலட்சம் டன், சிறு தானியங்கள் 24 இலட்சம் டன், பயிறு வகைகள் 5 இலட்சம் டன், கரும்பு (வெல்லம்) 24.13 இலட்சம் டன், பருத்தி 5 இலட்சம் பொதிகள். இதைப்போன்று இன்னும் பல்வேறு இனங்கள் இருக்கின்றன. நாம் எதிர்பார்ப்பது நியாயம். ஆனால் அது கிடைத்தால்தான் தமிழக மக்களுக்கு ஓரளவுக்கு உணவுப்பஞ்சம் இல்லாமல் இருக்கும்; சத்துணவு கூட நின்றுவிடுமோ என்ற அபாயம் இருக்கிறது; அந்த அபாயத்திலிருந்து பாதுகாக்க முடியும்.

இன்றைக்கு வறட்சி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் பருவமழை பொய்த்தது மட்டும் அல்ல. மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீர் வசதி குறைந்ததும் ஒரு காரணம். பருவமழை பொய்த்ததால் ஓரளவுக்கு வறட்சி ஏற்பட்டாலும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் பெரும்பகுதி வறட்சியடைந்தது மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் வராததுதான். மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரும் காவேரி நீர்ப்பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை. அந்த நதி நீர் பற்றி இந்த மாதம் பேசுவதாக மத்திய அரசு அறிவித்தது. ஆனால் கர்நாடக முதலமைச்சர் கலந்து கொள்ளாத நிலைமை ஏற்பட்டதால் அடுத்தமாதம் 5-ம்தேதிக்கு அந்த பேச்சுவார்த்தையை ஒத்திவைத்திருக்கிறார்கள். அடுத்த மாதம் 5-ம்தேதி அந்த பேச்சுவார்த்தை கூட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நீர்ப்பாசன அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டு, தமிழகத்தை பாதுகாக்கின்ற விதத்திலே எதிர்காலத்தில் நமக்கு கிடைக்க

[திரு. பொ. உத்திராபதி] [1983 மார்ச் 18

வேண்டிய நீரின் அளவு குறைந்துவிடாத அளவுக்கு பார்த்துக் கொள்ள வேண்டும்; உணவு தானியத்தைப் பெருக்கிக்கொள்கின்ற வகையிலே மத்திய சர்க்காரை வலியுறுத்தி, அண்டை மாநிலங்களுக்கும் எடுத்துச் சொல்லி, நமது உரிமையை பாதுகாக்க வேண்டும்; அந்தக் கூட்டத்திலே பேச்சுவார்த்தையை முடித்து விட வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் உணவு உற்பத்தி பெருக வேண்டும். அதில் ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாய ஆராய்ச்சியாளர்கள், அதிலே ஈடுபட்டிருக்கும் அதிகாரிகள் சிறந்த முறையிலே பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் மிகச்சிறந்த பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

அதற்கு காரணம் உண்டு. ஏக்கருக்கு 10 டன், ஏக்கருக்கு 5 டன், அல்லது ஏக்கருக்கு 20 மூட்டை விளையக்கூடிய நிலத்தில் இன்றைக்கு அதைப்போல இரண்டு மடங்கு விளைந்திருக்கிறது. அந்த அளவுக்கு உற்பத்தி பெருகி இருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய விவசாயத்துறை ஆராய்ச்சியாளர்களும், அதிகாரிகளும்தான். அவர்களுடைய சிறந்த சேவையின் காரணமாகத்தான் இந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். ஆனால் அங்கே பணியாற்றுகின்ற ஆராய்ச்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நம்முடைய அரசாங்கம் உதவி செய்கிறதா என்று பார்க்க வேண்டும். அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இப்போது கூட உண்ணாவிரதம் இருந்தார்கள். அதுபற்றி வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசும்போது அமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது நிறைவேற்றி வைக்கப் படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் உணவு உற்பத்தி பெருக்கத்திலே ஈடுபடுகின்ற ஆராய்ச்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஊக்கமளிக்க வேண்டும். அவர்கள் மன நிறைவோடு பணியாற்ற வேண்டும். ஆகவே அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று உணவுப் பொருள் உற்பத்தியாகிறது. அந்த விவசாயப் பெருங்குடி மக்களை எந்த அளவுக்கு நாம் பாதுகாக்கிறோம்? இன்றைக்கு பெரிய பெரிய தொழில்களை நடத்துகின்ற ஏகபோக முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. அவர்கள் மின்சாரக் கட்டணம் கட்டவில்லை என்றால் உற்பத்தி பாதிக்கும் என்று சொல்லி சலுகை அளிக்கப் படுகிறது. அவர்கள் உலகின் பல பாகங்களிலிருந்து கடன் வாங்குகிறார்கள்; இந்திய அரசும் கடன் கொடுக்கிறது. அவர்கள் இரண்டு ஆண்டுகள் மின்சாரக் கட்டணம் கட்டவில்லை என்றாலும் கூட சலுகை அளிக்கப்படுகிறது. காரணம் உற்பத்தி பாதிக்கும் என்று சொல்லப்படுகிறது. அந்த வகையிலே பல கோடி



1983 மார்ச் 18] [திரு. பொ. உத்திராபதி]

ரூபாய்க்கு ஏகபோக முதலாளிகளுக்கு மத்திய சர்க்கார் சலுகை அளித்திருக்கிறது, மாநில அரசும் அளித்திருக்கிறது. ஆனால் இந்த நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கிற விவசாயிகளுக்கு அந்த சலுகை அளிக்கப்படுகிறதா என்றால் இல்லை.

அதைப்போன்று விவசாயிகள் உற்பத்திச் செய்கின்ற நெல், கரும்பு, மிளகாய், பருப்புவகைகள் எதுவாக இருந்தாலும் அதற்கு நியாயமான விலை இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. நடுத்தர நெல்லுக்கு குவிண்டாலுக்கு 137 ரூபாய் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதுவும் தஞ்சை மாவட்டத்திற்கும், திருச்சி மாவட்டத்தில் 4 தாலுகாக்களுக்கும் மட்டும் கட்டுப்பாடு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 78 ரூபாய் 30 காசுக்கு மேல் நெல் விற்க முடியாது. திருச்சி மாவட்டத்தில் இந்த 4 தாலுகாக்களையும் தாண்டிவிட்டால் மூட்டைக்கு 130 ரூபாய் என்று விற்கலாம். புதுக்கோட்டையில் பேராவூரணி வாய்க்காலை கடந்துவிட்டால், அதாவது அந்த வாய்க்காலின் இந்தக் கரையிலிருந்து அந்தக் கரைக்குச் சென்றுவிட்டால்—அந்தக் கரைக்குக் கொண்டு செல்ல மூட்டைக்கு 7 ரூபாய் கூலி கொடுக்கப் படுகிறது—130 ரூபாய்க்கு விற்கமுடியும். அரசாங்க கொள்முதல் விலை இப்படி இருக்கிறது. எல்லாவற்றிலும் இரட்டை விலை. உற்பத்தியாகும் பொருளுக்கும் இரட்டை விலை. இது நியாயமல்ல. எந்தப் பொருளாக இருந்தாலும் நியாயமான விலை கிடைக்கவேண்டும். மாநில சர்க்கார் ஒதுக்கக்கூடிய இந்தத் தொகையை இன்னும் அதிகமாக ஒதுக்கினால்தான் இந்த விவசாயிகளுக்கு நாம் சலுகை அளிக்கமுடியும்

[பிற்பகல் 12-40]

அந்தக் கட்டுப்படியாகக்கூடிய விலைக்கு அரசாங்கம் கொள்முதல் பண்ண வேண்டும். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். நேற்று தஞ்சாவூரில் உண்ணாவிரதம் இருந்தோம். 500 பேர்கள் கலந்து கொண்டார்கள். அதில் 30 40 பேர்கள் பெண்கள். அவர்கள் எல்லாம் விவசாயத் தொழிலாளர்கள். வந்து எங்களிடம் என்ன சொன்னார்கள் என்றால், நாங்கள் வேலை செய்துவிட்டு, அதற்கான கூலியாக ஆளுக்கு 5 கிலோ முதல் 10 கிலோ அரிசி வரை கொண்டு வந்தோம். ஆனால் அவைகளை அதிகாரிகள் பறிமுதல் செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். சாதாரண விவசாயிகள் கொண்டு வரக்கூடிய விவசாயக் கூலியை, சட்டத்தின் மூலமாக தட்டிப் பறிக்கிறார்கள். இது நியாயமா? இதன் விளைவு என்ன? ஒரு கிராமத்தில் நெல் மூட்டை 130 ரூபாய் விற்கும் பக்கத்திலேயே இருக்கும் இன்னொரு கிராமத்திலே 78 ரூபாய்க்கு விற்கிறது. இரண்டு விவசாயிகளும் உரங்களையும், பூச்சி மருந்து களையும், மற்ற இடுபொருள்களையும் ஒரே விலைக்குத் தானே வாங்குகிறார்கள். அல்லது இந்தகிராமத்தைவிட மற்ற கிராமத்தில் விலை குறைவாக விற்கிறதா? இல்லையே? ஆகவேதான் விவசாயி களுக்கு அவர்களுடைய விலை பொருள்களுக்கு ஒரே மாதிரியான கட்டுப்படியாகக்கூடிய நியாயமான விலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1983 மார்ச் 18

அதேபோல கரும்புக்கு விலையை தற்போது 175 ரூபாய் என்று உயர்த்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு 20 ரூபாயைக் கூட்டி அறிவித்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்த விலை போதுமா என்று இப்போது கேட்டுக்கொண்டு உண்ணாவிரதம் இருக்கிறார்கள். எனவே அதை 250 ரூபாயாக உயர்த்திக்கொடுக்கவேண்டும் ஏனென்றால் விவசாயிகள் இப்போது நம்பிக்கை இழந்துக் கொண்டிருக்கிறார்கள். நெல் போட்டவர்கள் கரும்பு உற்பத்தி செய்யலாம் என்று போனார்கள். கரும்பு போட்டவர்கள், தென்னங்கன்று போடலாம் என்று போனார்கள். தென்னங்கன்று போட்டவர்கள், இப்போது அதற்கும் விலை கிடைப்பது அரிது என்று நினைத்து, காட்டுக் கருவேலம் போடலாமா என்று யோசித்து வருகிறார்கள். காட்டுக் கருவேலம் போட்டாலாவது டன்னுக்கு 300 ரூபாய் என்ற அளவில் விலை கிடைக்குமே, நெல் உற்பத்தியும், கரும்பு உற்பத்தியும் செய்தால் இந்த அளவு விலை கிடைக்காதே என்று விவசாயப் பெருமக்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள், இப்படி அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை மாற்றி மாற்றி போட்டும், அவர்களுக்கு நல்லவிலை கிடைக்கவில்லை என்றால், எதிர்காலத்தில் மக்களுக்கு கிடைக்கவேண்டிய உணவுப் பொருள்கள் குறைந்துக் கொண்டே வரும் அபாயம் இருக்கிறது.

ஆகவே, இதையெல்லாம் கவனத்திலே ஏற்றுக் கொண்டு, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களுக்கு தேவையான கட்டுப்படியாகக்கூடிய நியாயவிலை கிடைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஏனென்றால், மத்திய அரசுக்கு இது பற்றியெல்லாம் கவலைக் கிடையாது. விவசாயிகள் எக்கேடு கெட்டுப்போனால் அவர்களுக்கு என்ன! விலைவாசி விஷம் போல் ஏறினால் அவர்களுக்கு என்ன? பொருளாதார நிலையில் எந்த மாநிலங்கள் எப்படி கெட்டால் அவர்களுக்கு என்ன? அவர்கள் இதிலெல்லாம் கவலைபட மாட்டார்கள். ஆனால் மக்களுக்காக வந்த ஆட்சி நீங்கள், நீங்களாவது அந்த விவசாயிகளுக்கு போதுமான தொகையை ஒதுக்கி, தேவையான சலுகையை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்தது உரம், இந்த உரத்தின் தன்மை இருக்கிறது பாருங்கள் சொல்லவே கஷ்டமாக இருக்கிறது. இந்த வருடம் குறுவை நெல்லை அறுவடை செய்திருக்கிறார்கள். எந்த வருடமும் குறுவை நெல் கசந்ததாக சொன்னது இல்லை. ஆனால் இந்த வருஷம் அதை சாப்பிட்டவர்கள் அந்த நெல் கசக்கிறது என்று சொல்கிறார்கள். இதற்கு காரணம் என்ன? உரத்திலே கலப்படம். எங்கள் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பூச்சி மருந்தை வாங்கி அதை தண்ணீரில் கலந்தால், அது கீழே அப்படியே உறைந்து விடுகிறது. ஏன், பூச்சி மருந்து பூராவும் கலப்படம். அந்த மருந்தையும், உரத்தையும், உற்பத்தி செய்யும் முதலாளிகள் அதிலே கலப்படம் செய்கிறார்கள்.



1983 மார்ச் 18] [திரு. பொ. உத்திராபதி]

ஆகவேதான் உரமும், பூச்சி மருந்துகளும் தரம் குறைந்திருக்கின்றன. நாம் எவ்வளவு அதிகாரிகளை வைத்திருக்கிறோம். அவர்களைக் கொண்டு இதைத் தடுக்க ஏற்பாடு செய்திருக்கக் கூடாதா? இனிமேலாவது செய்யலாமா. இதில் இன்னொரு விஷயம் என்னவென்றால், இந்த பூச்சி மருந்துகளின் விலை கூட, தனியார் கடைகளில் குறைவாக இருக்கிறது. சர்க்கார் வைத்திருக்கக்கூடிய கேடவுனில் விலை உயர்ந்திருக்கிறது. அது மட்டும் அல்ல, சர்க்கார் வைத்திருக்கக்கூடிய அந்த சொசைட்டிகள் ஊரிலிருந்து 10 மைல், 8 மைல் தள்ளியிருக்கின்றன. தனியாரின் கடைகள் அருகாமையில் இருக்கின்றன. எதிர்காலத்தில் விவசாயிகள் அரசாங்கக் கடைகளை முழுமையாக புறக்கணிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, அவற்றின் விலைகளை குறைப்பதோடு, கடைகளையும் ஊரினுள், அருகாமையில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, தென்னங்கன்றுகள், வாழைக்கன்றுகள் போன்றவைகள் $7\frac{1}{2}$ ரூபாய், 9 ரூபாய் அளவில் விற்கின்றன. எப்படி சாதாரண விவசாயிகள் அவைகளை வாங்கி பயிரிட முடியும். ஆகவே எதிர்காலத்தில் இத்தகைய பொருள்கள் உற்பத்தி ஆகவேண்டுமானால் இந்த கன்றுகள் எல்லாம் மிகக் குறைந்த விலையில் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்யவேண்டும். அது குறித்து அதிக அளவில் விளம்பரமும் செய்யப்படவேண்டும்.

அதேபோல விதை சுத்திகரிப்பு நிலையங்கள். 7 சுத்திகரிப்பு நிலையங்கள் வரப்போகின்றன என்று சொல்கிறார்கள். அவைகள் என்ன வேலைகளைச் செய்கிறது என்று தெரியவில்லை. விதைகள் தரமானவையாகவே இல்லை. காலத்தோடு வழங்கப்படுவதும் இல்லை. அதை எப்படி ஏற்றுக்கொள்வார்கள் விவசாயிகள். இந்த ஆண்டு வறட்சியினால், மழையினால் தஞ்சை மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், காலத்தோடு அந்த வேளாண்மை செய்கிற விவசாயிகளுக்கு விதைகளை வழங்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும், அதற்கு அந்த விதை சுத்திகரிப்பு நிலையங்களை எல்லாம் பயன்படுத்தி செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மண் ஆய்வுப் பிரச்னை. என் நிலத்திலிருந்தே மண் எடுத்துச் சென்றார்கள். என்ன நிலைமை என்று தெரியவில்லை. வருஷம் 3 ஆகிவிட்டது. கேட்டால், நாங்கள் அங்கேயே விவசாயிகளைக் கூட்டிவைத்து, அவர்களுக்கு தேவையானதைச் சொல்கிறோம் என்று சொல்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த அளவில் அந்தமாதிரி விவசாயிகளை எல்லாம் அழைத்து இன்னின்ன விதைகளை பயிரிட வேண்டும் என்றெல்லாம் சொன்னதாகத் தெரியவில்லை. எனக்கு இரண்டரை ஏக்கர் நிலம் இருக்கின்றது. நானும் ஒரு விவசாயி தான். எனவே விவசாயிகளை வேளாண்மைத்துறை அதிகாரிகள்

அழைத்து அவர்களிடத்திலே இன்னின்ன மாதிரி விவசாயம் செய்யுங்கள் என்று சொல்லவேண்டும். ஆனால் இப்போது என்ன நடக்கின்றது என்றால் ரேடியோ மூலம் பயிற்சிவழித் தொடர்புத் திட்டம் என்று விளம்பரம் செய்யப்படுகின்றது. அது என்ன திட்டம் என்பதே எங்களுக்குத் தெரியவில்லை. குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்து விவசாயிகளுக்குப் பூரணமாகத் தெரியவில்லை. மஞ்சள் கலரிலே ஒரு பெயின்ட் அடித்து விளம்பரம் செய்திருக்கிறார்கள். அதனை அரசாங்கத்தின் அதிகாரிகள் மூலமாக செய்தார்களா அல்லது காண்ட்ராக்ட் விட்டார்களா என்பது தெரியவில்லை. (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து நெல்லைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு தஞ்சை மாவட்டத்திலே போதிய கிடங்குகள் இல்லை. எனவே தஞ்சை மாவட்டத்திலே கிடங்குகளைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆழ்குழாய் கிணறுகளை மயிலாடுதுறையிலே போடுகிறார்கள். திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், மன்னார்குடி போன்ற தாலுக்காக்களிலும் முத்துப்பேட்டை என்ற இடத்திலும் ஆழ்குழாய் கிணறுகளை அமைக்கவேண்டும்.

அடுத்து சின்னங்கனூர் என்ற இடத்திலே 200 ஏச்கர் நிலம் இருந்தும் அதிலே 20 ஏக்கர்தான் விவசாயம் செய்கிறார்கள். அந்த இடத்தை முழுவதுமாக பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே. ஆர். கணபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84-ஆம் ஆண்டுக்கான விவசாய மானியக் கோரிக்கையினை நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்றுப் பேசுகிறேன்.

கரும்பு விவசாயிகளுக்கு அதிக விலையினை மாண்புமிகு புரட்சித் தலைவரின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்ததன் காரணத்தால் நான் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பொதுவாக ஒரு நாட்டில் நிலையான ஆட்சி இருக்க அதுவும் மடமடவென்று வெள்ளம் போல் மக்கள்தொகை பெருகி வரும் இந்நாளில் அரிசி தேவை. அரிசியின் அவசியத்தை உணர்ந்த புரட்சித் தலைவரின் அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, ஆரம்பத்தில் இருந்தே அரிசியின் விலை அளவுக்கு மீறி ஏறாமல் பார்த்துக்கொண்டு வருகின்றது. மேலும் கடந்த 85,100 ஆண்டுகளில் ஏற்படாத கடும் வறட்சி இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையிலும் கெடுபிடி இல்லாமல் நெல் கொள்முதல் செய்து எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்கின்ற வகையில் கூடுமான வரையில் உணவு தானிய உற்பத்தியினைப் பெருக்கியதற்காக மாண்பமிகு



கடும் வறட்சி மாத்திரம் அல்லாமல் காவேரியில் வர வேண்டிய தண்ணீர் வரவில்லை. கர்நாடக அரசு தண்ணீர் விடவில்லை. நான் விவசாய குடும்பத்தைச் சார்ந்தவன். நான் சார்ந்திருக்கின்ற சிதம்பரம் தாலூகா காட்டுமன்னார் கோயில் தாலூகா ஆகியவற்றிலுள்ள நிலங்கள் 100 சதவீதம் காவேரி ஆற்றுப் பாசன நிலங்கள்தான். ஆனால் அது வரையில் தெளிவாக வேளாண்மைத்துறை அல்லது நீர்ப்பாசனத் துறை பொறியாளர்களால் அரசுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லப்படவில்லை. காவிரி நீர் இல்லை என்றால் வடவாறு, வடக்குராசன் வாய்க்கால் வழியாக வீராணத்திற்குத் தண்ணீர் வராது. நீர்ப்பாசனத்திற்கு மாத்திரமல்ல. குடிப்பதற்கும் தண்ணீர் கிடைக்காமல் போய்விடும். கீழ்கொள்ளிட நீர்ப்பாசனம் என்பதால் காவிரி பாசனப்பகுதி மேம்பாடு திட்டத்தில் சிதம்பரம் தாலூக்கா, காட்டுமன்னார்கோயில் தாலூகா விட்டுவிடப் படுகின்றன. உணவு உற்பத்தியில் தஞ்சைக்கு இணையாக சிதம்பரம் காட்டுமன்னார்கோயில் தாலூகாக்கள் விளங்குவது நாடு அறிந்த உண்மை. இந்த மாமன்ற உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள். அதனால்தான் சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் தாலூகாக்களைச் சுற்றி நெல்லை யாரும் எடுத்துப் போகாமல் சவுக்கிகள் போடப்பட்டிருக்கின்றன. அதனால் தென்னாற்காடு மற்றும் மற்ற பகுதிகளில் விற்கப்படுகின்ற விலைக்கு நெல்லை உற்பத்தியாளர்கள் வாங்க முடியாமல் என் பகுதியில் கஷ்டப் படுகிறார்கள். எதிர்பாராதபடி எப்பொழுதோ ஒரு தடவை இயற்கை இடர்பாடு ஏற்பட்டதன் காரணத்தால் ஏற்படுத்தப் பட்ட கட்டுப்பாட்டுக்கு நாம் கட்டுப்படுகிறோம். ஆனால் ஆறு அரிப்பு, கடல்நீர் அரிப்பு, வெள்ளப்படையெடுப்பு என்று பல்லாண்டுகளாகப் பாதிக்கப்பட்ட சிதம்பரம் தாலூகா மற்றும் காட்டுமன்னார்கோயில் தாலூகா உழவர்களுக்கு உதவுகின்ற வகையில் தஞ்சையில் உள்ள காவிரிப் பாசன மேம்பாடு திட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதேபோல் ஆறுகளுக்கு தடுப்பு சுவர் கட்டுவதையும், நீர் பாசன வாய்க்கால்களை ஆழப்படுத்துவதையும், அகலப்படுத்துவதையும் சிதம்பரம் தொகுதியில் புவனகிரி தொகுதியில் கிள்ளை பிச்சாவரம் தாண்டவராய சோழன்பேட்டை, கவரப்பட்டு போன்ற கடலோரப் பகுதியில் கடல்நீர் புகுந்து நல்ல நீர் விளையும் நிலங்களையும் கெடுக்காமல் இருக்க தடுப்பு சுவர் கட்டுவது போன்ற திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குஜராத்துக்கு அடுத்தபடி எண்ணெய் வித்து உற்பத்தியில் இரண்டாவது இடத்தை வகிக்கும் அளவுக்கு தமிழகத்தை உயர்த்திய அமைச்சரைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். சிதம்பரம் தாலூகாவில் சின்னமுட்லூரில் எண்ணெய் வித்து

[திரு. கே. ஆர். கணபதி] [1983 மார்ச் 18

உற்பத்தி என்ற பெயரால் நவீன தென்னைக் கன்று நாற்றங் கால்கள் ஏற்படுத்த அரசு புரம்போக்கு நிலம் 50 ஏக்கர் இருந்தும் அதை இதுவரை பயன்படுத்தாமல் இருக்கும் நிலையை மாற்றி இந்த ஆண்டாவது அங்கு அதை துவக்க மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் உத்திரவிட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். தென்னங்கன்றுகளை கிள்ளை முதல் சாமியார் பேட்டை வரை, பிச்சாவரம் தாண்டவராய சோழன்பேட்டை கடலோரப்பகுதிகளில் 16 கிலோ மீட்டர் தூரம் வரை தீவிர மாகப் பயிரிட எண்ணெய் வித்து இயக்குனரகத்துக்கு விசேஷ சிபாரிசு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்களால் ஆரம்பித்த குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்கு அதிக காய் கறிகள் கீரை வகைகள் உபயோகமாவதால் காய்கறி, கீரை வகைகளை, சிதம்பரம் காட்டுமன்னார் கோயில் தாலூகாக்களில் ஆறுப்படுகைகள் புறம்போக்குகள் அதிகமாக உள்ள இடங்களில் தோட்டக்கலையின் மூலமாக காயகறி, நவீன பழவகை மரங் களை உற்பத்தி செய்ய தீவிர திட்டம் தீட்ட வேண்டு என்று மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

உலக வங்கி உதவியுடன் பயிற்சி தொடர் வழித் திட்டத் த எங்கள் மாவட்டத்தில் அறிமுகம் செய்ததற்கு நான் பாராட்டு கிறேன். 1983-84 முதல் தமிழகம் பூராவும் அமுல்படுத்தும் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை எதிர்வரிசையில் உள்ளவர் களும் பாராட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்க புத்தகத்தில் பக்கம் 2'ல் குடிநீர் கிணறு களை ஆழப்படுத்தும் பணி வேளாண்மை பொறியியல் துறை யிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் எங்கள் மாவட்ட தலைநகரான கடலூரில் உள்ள பொறியாளரைக் கேட்டால் அவர் அது பற்றி பேசாமல் இருக் கிறார். அதேபோல் சிதம்பரத்திற்கு ஒரு ஒழுங்குமுறை விற்பனை கூடம் கட்டவேண்டும் என்றாலும், புவனகிரியில் ஒரு ஒழுங்கு முறை விற்பனை கூடம் துவக்க வேண்டும் என்று சொன்னாலும் கடலூர் தலைமை அலுவலகத்தில் உள்ள ஒரு அதிகாரி அதே ஊரை சேர்ந்தவர் அவர் அதைப்பற்றி மௌனம் சாதிக்கிறார். அதை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை சிதம்பரத்தில் ஒரு ஹோட்டல் அறையில் வைத்துக்கொண்டு 'யார்டு' இல்லாமல் ஒரு பழமொழி உண்டு 'தில்லை பெண்ணு எல்லை தாண்டாது' என்பது போல் அது விரிவாகாமல் இருக்கிறது. அதை விரிவு படுத்தித் தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1983 மார்ச் 18]

அரசு போடுகிற அருமையான திட்டங்களை மக்கள் விரும்பு கிறபடி பலன், பயனடைகிறபடி அமுல்படுத்துவது அதிகாரிகளின் கடமை இதை வேளாண்மைத் துறை செயலாளர் அவர்கள் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நவீன முறையில் புது ரக நெல், கம்பு, சோளம்' உளுந்து போன்றவைகளை கண்டுபிடித்து தந்த வேளாண்மை பல்கலைக்கழகத்தை பாராட்டுகிறேன். அதே நேரத்தில் நவீன புதுரக நெல், சிறு தான்ய விதைகள், பழம் காய்கறிகளை அதிகமாக உழவர்களுக்கு தஞ்சைக்கு அடுத்தப்படி வேளாண் மையில் முதலிடம் வகிக்கும் சிதம்பரம் தாலூகா, காட்டு மன்னார்கோயில் தாலூகா உழவர்களுக்கு அதிக அளவில் கொடுத்து உணவு மொத்த உற்பத்தியை பெருக்க ஊக்கம் தரும்படி இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

முந்திரி அபிவிருத்தி திட்டத்தை சிதம்பரம் தொகுதி புவனகிரி தொகுதிகளில் முந்திரி பயிரிடப்படும் இடங்களில் விஸ்தரிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் சிதம்பரம் தொகுதி உள்ளடக்கிய தொழுமுட்டம் பளையங்கோட்டை போன்ற பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான நிலங்கள் வாய்க்கால் பாசனம் இல்லாத காரணத்தினால் முள்ளம் பாடி அணையிலிருந்து வாய்க்கால் வெட்டி தொழுதூர் அணை கட்டுக்கு கொண்டு சென்று வெலிங்டன் ஏரியில் விட்டால் நிச்சய மாக பல ஆயிரக்கணக்கான நிலங்கள் நெல் விளைவதற்கு, எண்ணெய் வித்துக்கள் வழங்குவதற்கு வசதியாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறவிரும்புகிறேன்.

மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் இந்த இக் கட்டான வறட்சியான நேரத்திலும் பல நல்ல அம்சங்கள் கொண்ட திட்டங்களை தீட்டியிருக்கிறார்கள். அதற்காக மீண்டும் அமைச்சர் அவர்களை பாராட்டி விடைபெறுகிறேன்.

திரு. நன்னிலம் அ. கலையரசன் : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த விவசாய மானியக் கோரிக்கையின் மீது அதை வரவேற்று சில கருத்துக்களை முன்வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை மாவட்டம் என்று சொல்லக்கூடிய தஞ்சை மாவட்டம் இன்றைக்கு பாலைவனமாகக் காட்சியளிக்கக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது. சோழநாடு சோறுடைத்து என்ற பழமொழிக்கு ஒருசோதனை வரக்கூடிய நிலையில் இந்த மானியக் கோரிக்கையிலே பேசக்கூடியவாய்ப்பு உருவாகி இருக்கிறது.

1982-83 ஆம் ஆண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவக்காற்றுகள் மூலமாகப் பெய்யவேண்டிய மழை பொய்த்து விட்டதன் காரணமாக 37 சதவீதம் மொத்த அளவிலே மாநிலத்திலே மழை குறைந்திருக்கிறது என்ற குறிப்பை நாம்

பார்க்கிறோம். தஞ்சை, தென் ஆற்காடு, வடஆற்காடு மாவட்டங்களிலே அதிகப்படியாகவே மழை குறைந்ததன் காரணமாக விவசாயம் பாதிக்கப் பட்டிருக்கிறது. 15 மாவட்டங்களில் 12 மாவட்டங்களில் மழை குறைவு; 15 மாவட்டங்களிலே 6 மாவட்டங்களில் எதிர்பாராத நிலையில் மிகவும் மோசமாக மழை பெய்யவில்லை என்ற குறிப்பையும் நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் குறைந்து வற்றியிருக்கின்றன. மாநிலத்திலேயே மிகப் பெரிய நீர்த்தேக்கமாக இருக்கின்ற மேட்டூர் அணை, எந்த ஆண்டும் வற்றாத அந்த அணைக்கட்டு, இந்த ஆண்டு வற்றிப்போனது மட்டுமல்ல. தண்ணீரிலே வாழ்ந்து வந்த மீன்களையெல்லாம் பருந்துகளும் காக்கைகளும் எடுத்துச் செல்லக்கூடிய நிலையும், வருவோரும் போவோரும் வாரிக்கொண்டு போகக்கூடிய நிலையும் ஏற்பட்டு அதன் காரணத்தினால் மீனவப்பெருங்குடி மக்கள் கன்னத்திலே கைவைத்து அதைப்பார்த்து அங்கலாய்க்கிற நிலைமையை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த அளவுக்கு தண்ணீர் தட்டுப்பாடு கர்நாடக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது. ஏரியிலே குறைந்த அளவு நீர்தான் உள்ளது என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பல ஏரிகளிலே தண்ணீரே இல்லை, கிணறுகளிலே நீர் மட்ட அளவு குறைந்திருக்கிறது. இந்த நிலையில் 28 லட்சம் மெட்ரிக் டன் அரிசி வருகிற நிலைமை தமிழ்நாட்டில் இருக்கிறது. ஆனாலும் வருகிற ஆண்டில் 6 லட்சம் டன்னை உற்பத்தி செய்யமுடியும் என்ற ஒரு குறிக்கோளோடு இன்றைக்கு நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் அதேபோல சிறுதானியத்தை எடுத்துக்கொண்டால் இந்த ஆண்டு 12 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யமுடியும் என்ற அளவிலே இருந்தாலும் வருகிற ஆண்டிலே 24 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யமுடியும் என்ற அளவுக்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அதே போல் பயறு வகையை எடுத்துக்கொண்டால் 2.5 டன் உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் நாம் இன்றைக்கு இருந்தாலும் வருகிற ஆண்டிலே 5 லட்சம் டன்னாவது உற்பத்தி செய்யவேண்டுமென்ற அளவிலே திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம். கரும்பை எடுத்துக்கொண்டாலும் 17 லட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்கிற நிலை இன்று இருந்தாலும் வருகிற ஆண்டில் 24.13 லட்சம் டன்னை உற்பத்தி செய்யவேண்டுமென்ற நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். பருத்தியைப் பொறுத்த அளவிலே 2.60 டன் நாம் உற்பத்தி செய்கிற நிலையில் இருக்கிறோம் என்றாலும் வருகிற ஆண்டிலே 5 லட்சம் டன்னாவது உற்பத்தி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறபோது மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற நேரத்திலே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் செய்யவேண்டிய காரியங்களை முறையாக செய்ய



136663



வில்லை, அதனால் உற்பத்தி பெருக்கமில்லை என்று சுட்டிக் காட்டினார்கள். நான் அவர்களுக்கு நினைவுபடுத்துவது எல்லாம் விவசாயம் வளமாகக் கொழித்துக் கொண்டிருந்த போதெல்லாம் அரிசிக்கு ஆலாய்ப் பறக்கவிட்டவர்கள் தி.மு.க.வினர் என்பதை மறந்து விடக்கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் கால்கடுக்க கியூவில் நின்று அரிசி வாங்கிய வரலாற்றை தமிழ்நாட்டு மக்கள் மறந்து விடவில்லை பத்மாவைக் கண்டுபிடித்தோம் என்று சொன் னார்கள், ஜெயாவை உண்டாக்கினோம் என்று சொன்னார்கள், கருணாவைக் கண்டுபிடித்தோம் என்று சொன்னார்கள். அப்படி யெல்லாம் கண்டுபிடித்து விவசாய உற்பத்தி பெருகி பசுமைப் புரட்சியை உண்டாக்கி லட்சக்கணக்கான டன்கள் உற்பத்தியான நேரத்திலே ஒரு நாள் இரவிலே மாவட்டத்தின் எல்லைப்புறத்திலே உள்ள அந்த அத்தனை நிலையங்களும் திறந்துவிடப் பட்டதன் காரணமாக தஞ்சை மாவட்டத்திலே உள்ள நெல் அத்தனையும் வெளிமாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதன் காரணமாக உணவுப் பஞ்சம் ஏற்பட்டது.

(பிற்பகல் 1-00)

அப்படிப்பட்ட பிரச்னைகளை உண்டாக்கியவர்கள் இன்றைக்கு பொது மக்கள் மத்தியிலே இப்படிப்பட்ட நிலைமைக்கு காரணம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று சொல்கிற காரணத்தால் மக்கள் அதை நம்ப மாட்டார்கள் என்ற ஒரு உண்மையை சொல்ல விரும்புகிறேன். நேற்றைக்கு கூட பாராளு மன்றத்திலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகிறபோது குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கொடுத்த பணத்தை மக்களுக்கு குடிதண்ணீர் வழங்காமல் தமிழ்நாடு சர்க்கார் சரியாக பணிகளை செய்யவில்லை என்று பேசியிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவரின் அரசு நடவடிக்கைகளை போர்க்கால நடவடிக்கைகளைப் போல எடுத்திருக்கிறது. காசு, பணத்தைப் பார்க்காமல் மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவேண்டும் என்பதில் பாதிக்கப்பட்ட நகரம் தஞ்சையாக இருந்தாலும், கோவையாக இருந்தாலும், சென்னையாக இருந்தாலும் மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவேண்டும் என்று புரட்சிக் கொள்கையை திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள் இப்படியெல்லாம் பேசுகிறார்களே என்று வருத்தம் நமக்கில்லாமல் இருந்தாலும் பழைய காலத்தை பார்க்கிறபோது நாம் பாரத பிரதமர் இந்திரா அவர்களை ஆதரித்தபோது அவர்கள் ஜனதாக் கட்சியை ஆதரித்தார்கள். ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தபோது மரியாதைக்குரிய ஜார்ஜ் பெர்ணான்டசை வைத்துக்கொண்டு இந்த ஆட்சியை கலைக் கலாமா என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்கள் என்ற ஞாபகம் தான் வருகிறது. அதேநேரத்தில் ஜனதாக்கட்சியை சேர்ந்த மரியாதைக்குரிய பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் பிரதம ராக போட்டியிட்ட நேரத்தில் நம்முடைய தானைத்தலைவர்,

புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் பிரதமராக வரவேண்டுமென்று அவர்களை ஆதரித்த காலத்தில் அன்றையதினம் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து, ஆட்சிப் பொறுப் பிறகு இந்திராகாந்தி அவர்கள் வந்ததற்கு பின்னாலே ஆட்சியை கலைக்கவேண்டுமென்று கங்கணத்தைக் கட்டினார்கள். மாநில சுயாட்சி என்று சொன்னாலும், தன்னாட்சி என்று வர்ணித்தாலும் இன்றைக்கு திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் உதட்டிலே தான் அன்பு வார்த்தைகளை பேசுகிறார்கள். எந்த நேரத்தில் ஆட்சியை கலைக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்: பொது மக்களிடத்திலே எந்த கருத்தைச் சொல்லி ஒரு பொய்யை கிளப்பலாம் என்று இருக்கிறார்கள்.

இன்றைக்கு தஞ்சையிலே இருக்கக்கூடிய விவசாயிகள் குறுவை சாகுபடியை நல்லமுறையில் செய்திருந்தாலும், தாளடிக்கு தண்ணீர் வராது என்று தெரிந்தாலும், மேட்டூரில் தண்ணீர் இல்லை என்று தெரிந்தாலும், அரசாங்கமே தாளடியை நட வேண்டாம் என்று சொன்னாலும் விவசாயிகள் கையில் சிறிதளவு உரத்தை வைத்துக்கொண்டு, வானம் பொழியாதா என்ற நம்பிக்கையிலே இருக்கிறார்கள். எப்போதும் சோம்பி இருக்க மாட்டார்கள் அவர்கள் என்ற இயற்கையான குணாதிசயத்தோடு அவர்கள் இருப்பதால் அந்த பயிர்கள் இப்போது பாதிக்கப் பட்டிருக்கின்றன வருகிற ஆண்டில் குறுவை சாகுபடி செய்வதற்கு கையில் கூலி கூட இல்லாமல் விவசாயிகள் இருப்பதை சர்க்கார் எண்ணிப்பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாதுகாப்பான முறையிலும் தேவையான அளவிலும் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். விதைகளைப் பொறுத்த வரையில், பூச்சி மருந்துகளைப் பொறுத்தவரையில், சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பார்க்காமல் பாதிக்கப் பட்டவர்களுக்கு மானிய விலையில் பூச்சி மருந்துகளை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு பண்ணைக் கழகத்தை இன்றையதினம் அரசினுடைய நேரடிப் பொறுப்பில் கொண்டு வந்திருக்கிறோம். அந்த பண்ணைக் கழகத்தில் வேலை பார்த்த ஸ்ரீலங்காவை சேர்ந்த உடன்பிறப்புகளுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் 5 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக நான் அவரை மனமார பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கொரடாச்சேரி ஒன்றியத்தில் நீலக்குடி, சக்கரமங்கலம், என்ற இடங்களில் நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் இந்த பண்ணைக் கழகத்தில் இருந்திருக்கின்றன. அவைகளை அரசு மூலமாக எடுத்து வருகிற ஆண்டிலே நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் காள்கிறேன். இறுதியாக இந்த ஆண்டிலே விவசாயக் கல்லூரி அமைப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டிலே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஆடுதுறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு வளர்ச்சிப் பணிகளாக வடிமுனை குழாய் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. தொடக்க கட்டத்தில்



நன்னிலம் தாலூகாவில் செயல்படுத்துவதற்கான உத்தரவுகளை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்கி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளை வைத்து, அடுத்தாண்டு நிறைவேற்றுவதற்காக திட்டமிடப் பட்டிருக்கிற நல்லபல திட்டங்களை இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கிற திட்டத்திற்காகவும் இந்தத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற வேண்டுமென்பதில் அவர்கள் காட்டுகிற அக்கறைக்காகவும் நான் அவர்களைப் பெரிது பாராட்டுகிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்த அளவில் விவசாயத் துறையில் நாம் ஆசைப்படுகின்ற அளவுக்கு இலக்கினை எட்டிப் பிடிக்கவில்லையென்ற குறை இருக்கத்தான் செய்கிறது. எல்லா துறைகளிலேயும். உணவுத் துறையில் சென்ற சில ஆண்டுகளில், ஏறத்தாழ தன்னிறைவு பெற்றிருக்கிற மாநிலம் என்று பெருமை பட்டுக்கொண்டிருந்த நிலை மாறி, 60,000 டன்கள் உற்பத்தி என்ற நிலை மாறி இன்றைய தினம் வெறும் 28 இலட்சம் டன்கள் உணவு உற்பத்தியைத்தான் எட்ட முடியும் என்ற நிலைக்குத்தான் வந்திருக்கிறோம். அதைப் போல ஏனைய அத்தியாவசிய தானியப் பொருட்களைப் பொறுத்த அளவிலே நம்முடைய சுய தேவையை எட்டிப் பிடிப்பதற்கு இன்னும் பல காலம் செல்ல வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தந்திருக்கிற விளக்கக் குறிப்பிலே இருந்து தெரிகிறது.

குறிப்பாக, பயிறு வகைகளைப் பொறுத்த அளவில், நம்முடைய தேவை 9 இலட்சம் டன்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், நாம் விளைவித்து செய்ய முடிந்த அளவு வெறும் 3 இலட்சம் டன்கள்தான். அதை 5 இலட்சம் டன்களாக உயர்த்த வேண்டுமென்ற நல்ல மதிப்பீட்டை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதேபோல பஞ்சு உற்பத்தி இந்த மாநிலத்திற்குத் தேவை 14 இலட்சம் பேல்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், உற்பத்தியாகிற அளவு வெறு 4 அல்லது 5 இலட்சம் பேல்கள்தான் அதை நிரந்தரமாக 5 இலட்சம் பேல்களாக உயர்த்த வேண்டுமென்ற நல்லெண்ணம் விளக்க உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கரும்பு உற்பத்தியைப் பொறுத்த அளவில் 1.75 இலட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் பயிர் செய்ய வேண்டுமென்ற திட்டம் சென்ற ஆண்டு இருந்தாலும், ஏதோ பல காரணங்களால் அது 1.31 இலட்சம் ஹெக்டர்களாகக் குறைந்திருக்கிறது. உற்பத்தியோ வெறும் 23.52 இலட்சம் டன்களைத்தான் எட்டிப் பிடித்திருக்கிறது. அடுத்த ஆண்டுக்கு 1.78 இலட்சம் ஹெக்டர் நிலப்பரப்பில் கரும்புப் பயிரிடுவது என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

[illegible]

கோளை வைத்துக் கொண்டிருக்கிறோம். குறிக்கோள் எத்தனைத் தான் வைத்திருந்தாலும் அந்தக் குறிக்கோளை எட்டிப் பிடிப்பதற்கு முழுமையாக அரசின் முயற்சி மட்டும் போதாது. விவசாயிகளின் முழுமையான ஒத்துழைப்பும் உழைப்பும் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். விவசாயிகள் என்ற பல ஆண்டுகாலமாகத் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை யென்ற குறைபாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அரசைப் பொறுத்த அளவில் ஏதோ சில ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயித்த அதே விலையைத்தான் இன்றும் கடைபிடிக்கிறது. அதே நேரத்தில் இடுபொருள்களின் விலை எக்கச்சக்கமாக ஏறியிருக்கிறது. உரத்தின் விலை 100% ஆக ஏறியிருக்கிறது. ஆனால் அரசாங்கம் விவசாயிகளுக்கு விற்கின்ற விலையை வெறும் 4 விகிதம் தான் உயர்த்தியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கரும்பிற்கு ஏற்கனவே இந்த விலையை ஏன் குறைக்க ஏன் முயன்றிருக்கிறோம் என்றுதான் எனக்குப் புரியவில்லை. சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு ரூ 175 என நிர்ணயித்த விலையை, சென்ற ஆண்டு ரூ. 165 என்று நிர்ணயித்து இந்த ஆண்டு மீண்டும் ரூ. 10 குறைத்து, ரூ 155 என்று நிர்ணயிக்கப்பட்டது. எழுப்பப்பட்ட சில குரல்களைப் பெற்றுக்கொண்டு பின்பு அரசு பழைய நிலைக்கு, சென்ற ஆண்டுக்கு முந்தைய விலையான ரூ 175 ஆக உயர்த்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிக்கை தந்திருக்கிறார்கள். விவசாயிகள் தங்களுக்குக் குறைந்த அளவு ரூ 225 வேண்டுமென்ற கோரிக்கையைப் பல காலமாக தந்திருக்கிறார்கள் ஏனைய பல மாநிலங்களில் குறிப்பாக உத்திரப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் ரூ 225-ஐக் கரும்பு உற்பத்தியாளர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் ரூ 175-ஐத் தாண்டுவதற்கு விலை மறுத்துக் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் அளிக்கப்பட்ட சலுகையில்கூட உண்மையான சலுகை யாருக்கு என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, மில் உடமைகளுக்குச் சலுகை அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. காரணம் ஏற்கனவே நீங்கள் நிர்ணயித்த ரூ 175 தர வேண்டுமென்று மில் உடமைகளை நீங்கள் கட்டாயப்படுத்துவதாக இருந்தால் ரூ. 175 கரும்புக்கு கொடுக்கவேண்டிய நிர்பந்த நிலைமைக்கு மில் உடமைகள் தள்ளப்பட்டிருக்கும்.

(பிற்பகல் 1-10)

நீங்கள் இப்பொழுது தந்துள்ள சலுகை, விவசாயிகளுக்குத் தருவதாகக் கோடிட்டுக் காட்டினாலும், உண்மையிலேயே மில் உடைமைகளுக்கு 17 ரூபாய் தருவதற்குப் பதிலாக 155 ரூபாய் தந்தால் போதும். ஏற்படுகின்ற குறையை அரசு தன்னுடைய நிதியிலிருந்து தருகிறது என்று சொல்லும்பொழுது மறைமுகமாக அந்த உதவிகள் ஆலை உடைமைகளுக்குப் போய்ச் சேருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.





இந்த மாநிலத்தில் இருக்கின்ற 21 ஆலைகள் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு டன் ஒன்றுக்கு 175 ரூபாய் தர வேண்டுமென்ற நிலைமையை மாற்றி 155 ரூபாயாகக் குறைத்துவிட்டு, விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற இழப்பை அரசு சரிக்கட்டி விடும் என்ற அளவில் 20 ரூபாய் டன் ஒன்றுக்குத் தர முன் வந்திருப்பது, ஆலை உடைமைகள் தர இருக்கின்ற 175 ரூபாயிலிருந்து அவர்களுக்கு விடுதலை தந்து. அரசு குறைபட்ட 20 ரூபாயைத் தர முன் வந்திருக்கிறது. எனவே, ஆலை முதலாளிகளுக்கு 20 ரூபாய் அதிகமாக அரசு தருகிறது. அதற்காக செலவு 8 கோடி என்று நேற்று இங்கே சொல்லப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, 152 என்று நாம் நிர்ணயித்திருப்பதிலேயிருந்து, ஆலையைச் சேர்ந்தவர்கள் எடுத்துச் சொல்வது, வெல்ல விலை வீழ்ச்சி அடைந்திருக்கின்ற காரணத்தினாலே இழப்புக்கு ஆளாகிறோம் என்று சொல்கிறார்கள். 130 ரூபாய் என்று மைய அரசு குறிக்கிறது. அந்த விலையினுடைய அடிப்படையிலேகூட அவர்கள் இழப்புக்கு ஆளாகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே தனிப்பட்ட ஆலை மட்டுமல்ல: நம்முடைய அரசினுடைய கூட்டுறவு ஆலைகளும் இருக்கின்றன. அந்த இழப்பை ஈடுகட்ட வேண்டிய பொறுப்பும் நம் அரசைச் சார்ந்தது. ஆகவேதான், இந்தச் சூழ்நிலையில் கடந்த ஆண்டு விவசாயப் பெருமக்கள் எந்த விலையைப் பெற்றார்களோ அந்த விலையில் செல்லிக் காசு கூட குறையாமல் இந்த ஆண்டும் அவர்கள் பெற வேண்டும் என்கின்ற ஒரு கொள்கைத் திட்டத்தில், கடந்த ஆண்டு அவர்கள் பெற்ற விலைக்கும் இந்த ஆண்டு 155 என்ற அடிப்படையிலே அவர்கள் பெறுகின்ற விலைக்கும் இடையிலே இருக்கின்ற இந்த வேறுபாட்டை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டு நேரடியாக அந்தப் பணம் விவசாயப் பெருமக்களுக்குச் சென்று சேர்கின்ற நிலைமைகளை ஆக்கியிருக்கிறது. இதைத்தான் நான் விளக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு பெற்ற அதே விலையைப் கொடுப்பதைப்பற்றி நான் பாராட்டுகின்றேன். ஆனால் 155 ரூபாயைக் குறைக்கலாம் என்ற எண்ணம் அரசுக்கு வந்ததே அதற்காக நான் வேதனைப்படுகிறேன். இப்பொழுது அதுவும் தவறு என்று உணர்ந்து கொண்டு, அரசு திருத்திக் கொள்வதற்கு முன்வந்தமைக்காக நான் பாராட்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற அந்த 155 ரூபாய் என்கின்ற விலையில் மாறுதல் இல்லை. கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விலை விவசாயப் பெருமக்களுக்குக் கிட்டியாக வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அந்தக் குறைபாட்டை அரசாங்கம் தன்னுடைய நிதியிலிருந்து தருகிறது என்பதுதான் உண்மை. நிர்ணயிக்கப்பட்டிருப்பது 155 ரூபாய் என்பதுதான்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: தலைவரவர்களே, எனக்கு ஏற்பட்டிருக்கின்ற சந்தேகமெல்லாம், சென்ற ஆண்டு ஆலை உடைமைகள் விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு எத்தனை ரூபாய் தந்து கரும்பை வாங்கியது என்று அறிய விரும்புகிறேன். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமேயானால் ஆலை உடைமைகள் 165 ரூபாய் தந்து கரும்பை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதை இந்த ஆண்டு 155 ரூபாய் என்று குறைக்க அரசு முற்பட்டிருக்கிறது. அதற்காக நீங்கள் தருகின்ற காரணம், ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்பது இங்கேதான் எனக்கு மிக அதிகமாக சந்தேகம் வருகிறது.

காரணம், ஜனதா ஆட்சிக் காலத்தில் சர்க்கரை 2 ரூபாய் 15 காசுக்கு விற்றபொழுது மத்திய அரசு கரும்பின் விலையை 125 ரூபாய் என்று நிர்ணயித்தது. இங்கே உள்ள நிலைமைகளையும், இங்கே உள்ள விவசாயிகளின் சுமைகளையும் அறிந்த இந்த மாநில அரசு 45 ரூபாயை அதிகமாக்கி விலை நிர்ணயித்து, 170 ஆக நிர்ணயித்தீர்கள். அதன்பிறகு இடு பொருட்களின் விலை இரட்டிப்பாக ஏறிய பிறகு மத்திய அரசு 125 ரூபாய் என்று நிர்ணயித்த விலையை 130 ரூபாய் ஆக உயர்த்தியபோது நீங்கள் அதிகப்படியாக 45 ரூபாய் தர வேண்டுமென்று 175 என்று உயர்த்தியிருக்கிறீர்கள். ஆகவே, இப்பொழுது சொல்லப்படும் காரணம், ஆலை உடைமைகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்பது, 2 ரூபாய் 15 காசு என்று சர்க்கரை விற்பனையில் இருந்தபொழுது ஆலை உடைமைகளுக்கு நஷ்டம் இல்லை, லாபம் இருந்தது. இப்பொழுது சர்க்கரை கட்டுப்படி விலை 3 ரூபாய் 75 காசு என்கிற நிலையில் உயரும் பொழுது, வெளி மார்க்கெட்டில் இன்னும் அதிக விலையில் விற்பனை செய்வதற்கான அவகாசம் அளித்திருந்தும், இப்போதும் ஆலைகள் தமக்கு நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லிக் கொண்டிருப்பது நியாயமான காரணம் என்று அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாக நான் எண்ணுகிறேன். உண்மை நிலைமை என்னவென்றால், சென்ற சில ஆண்டுகளாக ஆலைகள் அதிக இலாபத்தை ஈட்டியிருக்கின்றன; அப்படியிருக்கின்ற காலத்தில், விவசாயிகளுக்கு அதிகமான விலை தர வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு வரவில்லை. இப்பொழுது அவர்கள் இழப்பு ஏற்படுகிறது என்று சொல்வதற்கு முன்னால் விலையைக் குறைப்பதற்கு முயன்றீர்களே அங்கே உங்களுடைய ஆதரவு யார் பக்கம் இருக்கிறது,

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, நான் தெளிவாகத் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஆலைகளைப் பற்றிக் கணக்கிலே எடுத்துக் கொள்ளாமல், முழுக்க முழுக்க கரும்பு விவசாயிகளுடைய குறைபாட்டைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற முறையிலே பரிசீலித்தோம், ஆனால் அதே நேரத்திலே உண்மை நிலை என்ன என்பதனை





வகுக்கக் கூடாது. அதற்குத் தான் நான் குறிப்பிட்டேன்.
வெல்ல விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியையும். நாம் எண்ணிப்
பார்க்க வேண்டியிருக்கிறது. இதில் கரும்பு விவசாயச்
சங்கங்களைச் சார்ந்த பெருமக்களே, அதைவிட ஒரு படி
பெரியவர்கள். ஒரு மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கக்
கூடியவர்கள். அதோடு இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து
விட்டு, இப்போது நாம் அறிவித்திருக்கிற நிலையை அவர்கள்
பாராட்டியிருக்கிறார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போல் விவசாயப் பெருங்குடி மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறபோது நாங்கள் மட்டும் நிச்சயமாகக் குறுக்கே நிற்கமாட்டோம் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். விவசாயத் துறையைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய செலவுகள் அதிகரித்திருப்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டும், அவர்கள் தருகின்ற கோரிக்கைகளை நியாய உணர்வுடன் பரிசீலிக்கவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு கோரிக்கையை அமைச்சரவர்கள் முன்
வைக்கிறேன். விவசாயக் கல்லூரி ஒன்று புதிதாக ஆரம்பிக்கும்
திட்டம் ஒன்று அரசுக்கு இருப்பதாகத் தெரிகிறது.
கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த நான் அங்கே இருக்கின்ற
குறைகளைப் பற்றி இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துக்காட்ட
விரும்புகிறேன். பல கல்லூரிகள் அங்கேயிருக்கின்றன.
11 கல்லூரிகள். ஆனால் தொழிற் கல்வி என்று வருகின்றபொழுது
அங்கே ஒரு கல்லூரி கூட கிடையாது. எனவே நீங்கள்
ஆரம்பிக்க இருக்கின்ற விவசாயக் கல்லூரியை கன்னியாகுமரி
மாவட்டத்தில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற் காள்ள
வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளைத் தருகிறேன்.
குறிப்பாக, இதைச் சொல்லும்பொழுது அங்கே இருக்கிற
வசதிகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய
தொகுதியில், பத்மநாபபுரம் பகுதியில் அரசுக்குச் சொந்தமான
98 ஏக்கரா நிலங்கள் அங்கேயிருக்கின்றன. சில காலமாக பலர்
கையகப்படுத்தியிருந்த நிலங்களை, அரசு இப்பொழுது அதை
அவர்களிடமிருந்து விடுவித்து, அரசு தங்கள் கைவசப்படுத்தி
யிருக்கிறது. ஆக அந்த 98 ஏக்கரா கிடைக்கின்ற வகையில்,
அந்த நிலத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அங்கே விவசாயக்
கல்லூரியை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டு
மென்றும், நான் என்னுடைய சிறிய, ஆனால் மிக முக்கியமான
வேண்டுகோளை, உங்களுக்குத் தந்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்துப் பேச எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைக் கூறவிழைகிறேன்.

[திரு. இரா. சண்முகம்] [1983 மார்ச் 18

1983-84 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக்கு மொத்த
வருவாயில் 88·87 கோடி ரூபாயை ஒதுக்கம் செய்திருப்பதை
நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இதில் தமிழகத்தில், தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை
பொய்த்துவிட்ட காலத்திலே, இங்கு விவசாயத்திற்கு மிக அத்தியா
வசியமாகத் தேவைப்படுகின்ற தண்ணீரே இல்லாத, கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கிற இந்தக் காலங்களில் விவசாயிகள் எப்படியும் எந்த
முறையில் தாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிற விவசாயத்தை
நல்லமுறையில் பயிரிட வேண்டுமென்ற எண்ணத்தோடு,
குழாய் கிணறுகளை அதிகமாகப் போட்டு, பயிர்களுக்குத்
தண்ணீரைப் பாய்ச்சி, அதன்மூலம் நெற்பயிரை இக்கட்டான
சூழ்நிலையில் அவர்கள் பயிரிட்டு வருகிறார்கள் என்பதை
இந்த நேரத்தில் நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையானது,
விவசாயிகளுக்கு பல்வேறு துறைகளை ஏற்படுத்தி, அதன் மூலம்
விவசாயிகளுக்கு பல நன்மைகளை செய்துகொண்டிருக்கிறது
என்பதை நாம் நன்கு அறிவோம். அந்த வகையில், புரட்சித்
தலைவர் அவர்கள் தமிழகத்தில் ஒரு புதிய திட்டத்தை,
கிராமப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு, அவர்களுடைய
அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தாக வேண்டுமென்ற
எண்ணத்தோடு கொண்டுவரப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தைப்
போல், நமது வேளாண்மைத் துறையில் புதியதாக ஒரு
திட்டத்தை அமைத்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதன்
மூலமாக நேரிடையாக பயன் அடையும் வகையில், ஒரு
திட்டத்தைத் தீட்டித் தரவேண்டுமென்று, இந்த நேரத்தில்
நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வழியிலேதான் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம்
என்று சென்ற ஆண்டு துவங்கி, அதன் மூலமாக கிராமத்தில்
இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறு விவசாயி
களுக்கும் இதனுடைய நன்மைகளை எடுத்து விளக்கி, அவர்கள்
பயிற்சியின் மூலமாக ஏற்படுகின்ற சந்தேகங்களை அவ்வப்போது
அவர்களுக்கு நிவர்த்தி செய்து, அதன்மூலமாக, ஒரு புதிய
அறிவை விவசாயப் பெருங்குடி மக்கள் பெற்றிருக்கிறார்கள்
என்பதை நாம் மறுக்கமுடியாது. அந்த வகையிலே அதை
விரிவாக்குகின்ற நிலையில், அனைத்து மாவட்டங்களிலும், அந்த
பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தை விரிவாக்கி இருப்பதை
மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவையிலே எடுத்துக்
கூறினார்கள். அதற்கிணங்க 1982 ஆம் ஆண்டு 15,192
விவசாயிகள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதையும்,
1983-84 ஆம் ஆண்டில் 36,800 விவசாயப் பெருங்குடி மக்கள்
இதிலே பயிற்சி பெறுவார்கள் என்று அறிவித்திருப்பதை இது
நம்முடைய பயிர் உற்பத்திக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்
என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 18] [திரு. இரா. சண்முகம்]

(பிற்பகல் 1-20.)

இந்த பயிற்சி வழித் தொடர்பு திட்டத்தில் ஊர்நல
அலுவலர்களாக இருந்தவர்கள் அங்கே களப்பணியாளர்களாக
மாற்றப்பட்டு இந்த விவசாய வேளாண்மைத் துறையிலே
எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு
பயணப்படியிலே வித்தியாசம் இருப்பதாகச் சொல்கிற அந்தக்
குறையை நிவர்த்தி செய்து இருவருக்கும் இருக்கின்ற பயணப்
படியை இரண்டையும் ஒன்றாக ஆக்கவேண்டும் என்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இங்கே வேளாண்மைத்துறை அமைச்சர்
அவர்கள் அவையிலே ஒரு அறிவிப்பை அறிவிக்கும்போது கரும்புக்கு
இந்த அரசு சென்ற ஆண்டு கொடுத்த விலையை, பல இக்கட்டான
சூழ்நிலைக்கும் இடையிலே சென்ற ஆண்டு கொடுத்த அந்த
விலையை இப்போது கொடுக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று
கூறினார்கள். நிதிநிலை இக்கட்டான சூழ்நிலையிலே இருக்கும்
இந்த நேரத்திலே கூட நாம் ஏறக்குறைய 1 லட்சம் விவசாயிகள்
நன்மை பெறுகின்ற அளவில் 8 கோடி ரூபாயை அரசு
அவர்களுக்குக் கொடுக்க முன் வந்திருப்பதை இந்த நேரத்தில்
நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், விவசாயிகள் நெற்பயிரைப் பயிரிடுவதற்கு
செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்தவிதமான ஆற்றுப் பாய்ச்சலோ
அல்லது ஏரிப்பாய்ச்சலோ அதிகமாக இல்லாத காரணத்தால்
அத்தனை பேர்களும் குழாய்க்கிணறுகள் மூலமாக தண்ணீர்
எடுத்து விவசாயிகள் இன்றைக்குப் பயன்படுத்துகிறார்கள்.
அந்த நிலையிலே அங்கே குழாய்க்கிணறுகளை அமைத்துத்
தருவதற்கான வாய்ப்பை நாம் விவசாயத் துறையின் மூலமாக
ஏற்பாடு செய்தாலும் அங்கே குழாய்க் கிணறுகளைப் போடுகின்ற
அந்த போர் செட்டுகளுக்கு நாம் முறையாக பணம் கட்டினாலும்
கூட 4 மாதங்கள், 5 மாதங்கள் கழித்துத்தான் அந்தப் போர்
போடுகிற அந்த மெசினரிஸ் அவர்களுக்குக் கிடைக்கிறது. அந்த
வகையிலே கொடுக்கும்போது முதலிலே ஒரு விவசாயிக்கு
கொடுத்திருந்தால், 2, 3 போர்களை அந்த விவசாயிகள் போட்டு
இருப்பார்களானால், போர் போடாமல் இருக்கின்ற விவசாயி
களுக்கு முதன் முதலாகப் போடுகின்ற அளவிற்கு அந்த விவசாயி
களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே
நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் உபயோகப்
படுத்துகின்ற உரங்கள் எல்லாம்—இப்போது எனக்கு முன்னாலே
பேசும்போதுகூட சொன்னார்கள் — 100 விழுக்காடு அதிகமாக
ஆக்கப்பட்டிருக்கிறது என்று. ஆனால் உரங்கள் எல்லாம்
அதிகமாக்கப்பட்டிருந்தாலும் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற
பொருள்களுக்கு என்ன விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்பது
அந்த விவசாயிகள் இடத்திலே இல்லாமல் இடைத்தரகர்கள்தான்
அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு விலை
நிர்ணயிக்கிற நிலைமையிருக்கிறது. எனவே, இந்த அவல
நிலையைப் போக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்

காலமாக பெரும் குறையாக வைத்திருக்கிற குறை ஒரு குவிண்டாலுக்கு குறைந்தது 150 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிற அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். நெல்லுக்குப் போடுகின்ற உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் எல்லாம், அடக்க விலைக்காவது இந்த அனைத்து விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும், இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் மின்சார மோட்டார் உதிரி பாகங்களுக்கு நுழைவு வரி என்று பட்ஜெட்டிலே சொல்லும்போது சொன்னார்கள். ஆனால் விவசாயிகள் பயன்படுத்துகின்ற மின்மோட்டார், அதற்குத் தேவைப்படும் உதிரி பாகங்களுக்கு இந்த நுழைவு வரியிலேயிருந்து விலைக்கு அளிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் விவசாயிகள் மின்சாரத்தினால் பம்பு செட்டுகளை இயக்கிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு சரியானபடி மின்சாரம் கிடைக்காத சூழ்நிலையில், 2 மணி நேரம் அல்லது 3 மணி நேரம் தான் அவர்களுக்கு மின்சாரம் வருகிறது. அதுவும் குறைந்த மின் அழுத்தம் உள்ள மின்சாரத்தை வைத்துக்கொண்டு அன்றாடம் அந்த மின்சார மோட்டார்கள் எல்லாம் பழுதடைந்து அதனால் விவசாயிகள் அவதிக்கு ஆளாகிறார்கள். ஆகவே அவர்களுக்கு நிரந்தரமாக குறைந்தது 12 அல்லது 13 மணி நேரம் சீரான மின்சாரத்தை வழங்குவதற்கான ஒரு வாய்ப்பை நம் முறையின் மூலமாக அவர்களுக்கு செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்று பயிர்களுக்கு அதிகப்படியான பூச்சிகள் வருவதால் கொல்லி நோய் என்று சொல்லுகின்ற அந்த நோய்கள் வருவதால், அதற்கு என்ன மருந்து கொடுப்பது என்று தெரியாமல் விவசாயிகள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் இன்ஷூரன்ஸ் திட்டத்தை நிச்சயமாக விவசாயிகளுக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள, திருவள்ளூர் வட்டத்தில் உள்ள, திருவூர், குழம்பலூர், புட்டலூர் ஆகிய இடங்களில் ஆராய்ச்சிப் பண்ணையும், விதை உற்பத்திப் பண்ணையும் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அந்தப் பகுதியிலே ஏற்படுத்தினால் — அங்கே ஆராய்ச்சிப்பண்ணை கூட இருக்கின்ற காரணத்தால் — அதற்கு உறுதுணையாக இருக்கும். ஆகவே திருவள்ளூர் வட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டும். அங்கே படிப்பதற்கு விவசாயிகளுடைய குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



சேமிப்புக் கிடங்குகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அதிகமாகக் கட்டிக்கொண்டு இருப்பதாக இந்த அறிக்கையில் தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்கள். திருவள்ளூர் வட்டம் பேரம்பாக்கம் என்ற கிராமத்தில் ஒரு கிடங்கு கட்டுவதைப் பற்றி சென்ற நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தும், இந்நாள் வரையில் அது ஏன் கட்டப்படவில்லை என்று தெரியவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அக்ரோ சர்வீஸ் மூலமாக பல்வேறு வசதிகளை நாம் விவசாயிகளுக்குச் செய்து தர முடியும். ஆனால் இன்றைக்கு இருக்கும் எம்.டி.க்கள் சரியாக வேலை அங்கே போடப்பட்டு எம்.டிக்களே இல்லாது அக்ரோ சர்வீஸ் செய்யவில்லை. இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அப்படித் தமிழ்நாட்டில் பக்கத்திலே இருக்கும் எம்.டி.க்களை அடிஷனல் பட்டவைகளுக்கு போட்டுவிடுகிறார்கள். அவர்களுக்கு இருக்கும் வேலை சார்ஜ் அவர்களால் இரண்டையும் சரியாகப் பார்க்க நிலையில் தங்களுடைய பணியிலும் முழு கவனம் செலுத்த முடியாமல், இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு யூனிட்டுக்கும் முடியாமல் போட வேண்டும். அங்கேயிருக்கும் பழைய ஒரு எம்.டி. பழுதுபார்க்கவேண்டும். அதன் மூலம் சிறு டிராக்டர்களை பெருவிவசாயிகள் பயனடைய வேண்டும் என்ற விவசாயிகள், செய்யவேண்டும் என்று கேட்டுக் வகையிலே அதைச் கொள்கிறேன்.

பூச்சிக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் விற்கிறபோது தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். மற்றவர்கள் வருகிறபோது தீர்ந்து போய்விட்டது என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, மானிய முறையில் கொடுக்கப்படும் பூச்சி மருந்தின் விலையைக் கரும்பலகையில் எழுதிப்போட்டு, மற்றவர்களுக்கும் கிடைக்கும் வகையில் செய்யவேண்டும் என்று கேட்டு, பேச வாய்ப்பளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்

*திரு. ஆர். சக்கரபாணி: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கை மீது என்னுடைய பணிவான கருத்துக்களை ஆளும் கட்சியின் சார்பில் முன்வைக்க விழைகிறேன். இந்த நாட்டிலே அடித்தளத்திலே இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் நிலையை இன்றைக்கு பார்க்கின்ற போது, நாடு வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பதைப் பார்கிறோம். ஏழை எளியவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக உள்ள புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது குழந்தைகள் சத்துணவுத் திட்டம். இந்த இரு நிலைகளையும் பார்க்கிற போது ஒரு சில படித்த பட்டம் பெற்றவர்கள் இந்த நிலையில் இந்தத் திட்டம் வெற்றிபெறுமா என்ற சூழ்நிலைக்கு அவர்கள் [illegible] கொண்டு இருக்கிறார்கள் என்றாலும், நம்முடைய

அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் திட்டத்தைப் பார்க்கிறபோது நான் உண்மையிலேயே பெருமையோடு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த ஆண்டிலே மட்டும் 28 லட்சம் மெட்ரிக் டன் விளைந்துள்ளது. நடப்பு ஆண்டில் 60 லட்சம் மெட்ரிக் டன் விளையும் என்று எதிர்பார்த்து திட்டமிட்டு இருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்க திட்டமாகும். ஒருவருக்கு உள்ள எண்ண ஓட்டம் எப்படிச் செயல்படுகிறது என்பதைப் பார்க்கிறபோது அங்கேயுள்ள அவர்களின் வாழ்க்கை நலன் மூலம் நாட்டின் நலனையும் நம்மால் பார்க்கமுடியும். இதுபோன்று சிறு தானியங்கள் 12 லட்சம் மெட்ரிக் டன் விளைந்திருக்கிறது என்று சொன்னாலும் கூட நடப்பு ஆண்டில் 24 லட்சம் மெட்ரிக் டன்கள் விளையும் என்று திட்டமிட்டு இருப்பது வரவேற்கத் தக்கதாகும். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கிறபோது, நாட்டின் நலன். நாட்டு மக்களின் நலனில் எந்த அளவிற்கு இந்த அரசு அக்கறை கொண்டு இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

நிலங்களை மேம்படுத்தும் திட்டம், சிறுபாசனத் திட்டம், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டம், பாசனம் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்றத் திட்டங்களை எல்லாம் பார்க்கிறபோது நான் ஒன்றை கோடிட்டு காட்ட விரும்புகிறேன். கடந்த காலத்தில் ஒரு விவசாயிக்கு விளைகின்ற நிலத்திற்கு பாய்கின்ற ஆதாரமாக ஒரு அணை இருக்கிறது என்று சொன்னால் அதனுடைய முக்கியமான வாய்க்கால்களை வெட்டிக் கொடுக்கும் முறை இருந்தது. கடந்த காலத்தில் அந்த ஏழை எளிய விவசாய மக்களுக்கு உதவியாக நீர் செல்லுகின்ற கிளை வாய்க்கால்களை வெட்டிக்கொடுக்கும் நிலையும் இருந்தது. இப்போது கிளை வாய்க்கால்கள் வெட்டுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கிளை வாய்க்கால்களை சுத்தப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம். கிளை வாய்க்கால்கள் என்கிறபோது சிறு விவசாயிகளுக்கு பாசன வசதி ஏற்பட்டு அதன்மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியும். ஆகவே அத்தகைய ஒரு நல்ல திட்டத்தை நல்லமுறையை உருவாக்கும் சூழ்நிலையை அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.30.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்): அவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர். சக்கரபாணி: அதைப்போன்று கடந்த காலத்தில் இந்த விவசாயத் துறைக்கு இருந்த நிலையான சொத்து மதிப்பைப் பார்த்தால் 47·42 இலட்சம் ரூபாய்க்குத்தான் இருந்தது. அந்த அளவுக்குத்தான் நிலையான சொத்து சேர்த்து



வைத்திருந்தார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 240 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொது சொத்தை, நிலையான சொத்தை சேர்த்து வைத்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டு கிறேன்.

அதேநேரத்தில் இன்னொரு முக்கியமான பிரச்சனையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு கடுமையான வறட்சி தமிழகம் எங்கும் நிலவி வருகிறது. அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதி மக்கள் வாழ வழி தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள். என்னுடைய தொகுதியில் கரிமணல், களஞ்சி போன்ற பகுதிகள் மிகவும் வறட்சியாக உள்ளன. அவை

ஆற்றங்கரை பகுதியாக இருந்தாலும் கடலோரப் பகுதியை ஒட்டி இருக்கின்றன. அதனால் அங்கே ஒரு பகுதியிலே ஆற்று நீரும், அடுத்த பகுதியில் உப்புத் தண்ணீரும் வருகின்ற காரணத்தால் விவசாயம் செய்யும் வாய்ப்பு இல்லை. ஆகவே அங்கே இருக்கிற மக்கள் முந்திரி தோட்டத்தை தலையாய திட்டமாகக் கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அந்தப் பகுதியில் இருக்கிற நிலங்களை எல்லாம் பெரும் பணக்காரர்கள் வாங்கி, அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த முந்திரித் தோட்டங்களை அழிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் வாழ்க்கை நடத்த அந்தத் தொழிலை அவர்கள் கட்டிக் காத்துக் கொள்கின்ற வகையில் அந்த நிலங்களை மற்றவர்கள் வாங்குவதற்கு இருக்கிற விதிமுறைகளைத் தளர்த்தி, மற்றவர்கள் வாங்கக் கூடாது என்ற விதியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் கடலோரப் பகுதியாக இருந்தாலும் அந்த மக்களுக்கு மீன் பிடிக்கத் தெரியாது. அந்தத் தொழிலுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அந்த மக்களுக்கு விவசாயம் செய்யத்தான் தெரியும். குறிப்பாக இந்த முந்திரி தோட்டத் தொழில்தான் தெரியும். எனவே அந்தத் தொழிலை செய்து வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற வகையில் விதிமுறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிற திட்டங்களை எல்லாம் விவசாய மக்களுக்கு எந்த அளவுக்கு நன்மை அளிக்கின்ற முறையில் தீட்ட முடியுமோ அந்த அளவுக்கு நல்லமுறையில் தீட்டியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்களையும் பாராட்டி, விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. இரெ இராசமாணிக்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வேளாண்மை பற்றிய 20–ம் எண் மானியக் கோரிக்கை மீதும், வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 49– எண் மானியக் கோரிக்கை மீதும் நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

வேளாண்மை தொழில் என்பது ஒரு சிறப்பான தொழிலாகும். அதைத்தான் இங்கே பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். அந்த நம்பித்தான் இன்றைய தினம் தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. அதனால் தான் வள்ளுவப் பெருந்தகையார்,

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு தேசியக் கவி பாரதியார் அவர்கள்,

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
[வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்''

என்று பாடினார்கள்.

ஆனால் இன்றையதினம் தமிழ்நாட்டில் நிலைமை எப்படி இருக்கிறது என்றால்,

''உழவுக்கும் தொழிலுக்கும் நிந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை வந்தனை செய்வோம்''

என்று சொல்லக்கூடிய அளவிலேதான் இருக்கிறது. இந்த நிலை கண்டிப்பாக மாற வேண்டும். உழைத்து, உழைத்து உருக்குலைந்த விவசாயிகள் இன்றையதினம் மிகவும் கேவலமான நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அவர்கள் எல்லாம் இன்றைக்கு கடன்தாரர்களாகத் தவித்து கொண்டிருக்கிறார்கள். கையிலே இருந்த காசு முழுவதையும் செலவழித்துவிட்டு கடன்தாரர்களாக,

''கடன்பட்டார் நெஞ்சம்போல்
கலங்கினான் இலங்கை வேந்தன்''

என்று சொல்வார்களே, அதைப்போல தவித்துக்கொண்டிருக் கிறார்கள். அப்படி கடனிலே மூழ்கியிருக்கிற விவசாயிகள் நிலையை உயர்த்த வேண்டும் என்றால் இந்த ஆண்டு அவர்கள் வாங்கியிருக்கிற கூட்டுறவுக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் நிலவரி, உள்ளூர் வரி அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஆரம்பத்திலேயே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



திறமையாகச் செயல்பட்டு பாராட்டு பெறக்கூடிய நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் என்ன காரணத்தாலோ கொஞ்சம் திறமை குறைவால் பாராட்டு பெற தவறியிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை குறைந்து வருகிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். 1975–76 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி காலத்தில் அரசின் ஆண்டு வருமானம் 101 கோடியாக இருந்தபோது வேளாண்மைத் துறைக்கு 32,63,47,000 ரூபாயும், வேளாண்மை குறித்த மூலதனச் செலவுக்கு 53,92,64,000 ரூபாயும் ஆக,கூடுதலாக 86,56,11,000 ரூபாயாக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக கூடுதலாக 86 கோடியே 56 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் தமிழகத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக் கிறது. அதற்குப் பின்னாலே 1982–83 ஆம் ஆண்டில் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய ஆண்டு வருமானம் 1,569.49 கோடியாக இருந்த நேரத்தில், வேளாண்மைத் துறைக்கு 82 கோடியே 98 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வேளாண்மைத் துறை மூலதன செலவுக்கு 7 கோடியே 42 ஆயிரம் ரூபாயும், ஆக கூடுதல், 89 கோடியே 99 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் என்று சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டது.

இந்த ஆண்டு அரசினுடைய வருமானம் 1983–84 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி 1,774 கோடி ரூபாய், அதிலே வேளாண்மைத் துறைக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 74 கோடியே 75 இலட்சத்து 93 ஆயிரம், மூலதனச் செலவிற்காக 5 கோடியே 56 இலட்சத்து 48 ஆயிரம் ஆக கூடுதல், 80 கோடியே 32 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஒப்பிட்டு நோக்கும்போது 9 கோடி ரூபாய்க்குமேல் இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல இதற்கென போடக் கூடிய திட்டங்களும் ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருகிறது என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக் கிறேன்,

1982 ஆம் ஆண்டு நெல் பயிர் விளைவு செய்வதற்காக குறியீடு செய்யப்பட்ட நிலத்தினுடைய பரப்பு 26.50 இலட்சம் ஹெக்டேர். ஆனால் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தினுடைய பரப்பு 17 இலட்சம் எக்டேர் ஆகும். ஆக சாகுபடி செய்யாமல் விடப்பட்டிருக்கிற நிலம் 9½ இலட்சம் எக்டேர் ஆகும். அதுபோல அரிசி உற்பத்திக்காக 68 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்ய வேண்டும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் உற்பத்தி செய்யப்பட்டதாக கணக்கில் சொல்லப்பட்டிருப்பது 28 லட்சம் மெட்ரிக் டன்தான். அதிலும் குறிப்பிட்ட குறியீட்டை நம்மால் அடையமுடியவில்லை. அடுத்து விதை விநியோகம் செய்வதற்காக அதாவது நெல் விதை 13 ஆயிரத்து 500 டன்

விநியோகம் செய்யப்படும் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் 9,579.56 டன் மட்டும் தான் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் கூட குறியீட்டை நம்மால் அடையமுடியவில்லை.

அடுத்து பயிர் பாதுகாப்பு 1982—83 ஆம் ஆண்டின் குறியீடு 56.12இலட்சம் எக்டேரில் பூச்சிகளை கட்டுப்படுத்தும் பணியைச் செய்வது என்றும், பயிர் நோய் கட்டுப்படுத்தும் பணி 15.80 இலட்சம் எக்டேரில் செய்யப்படும் என்றும் திட்டமிடப்பட்டது. ஆனால் 37,785 இலட்சம் எக்டேரில் தான் பூச்சி தடுப்பு பணியும், 12.12 லட்சம் எக்டேரில் நோய்த் தடுப்புப் பணிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டது என்றால், இதிலேயும் கூட குறியீட்டை நம்மால் அடையமுடியவில்லை.

அடுத்து வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாக தமிழ்நாடு முழுவதும் உர விநியோகம் செய்யும் பணி. அதிலேயும் கூட நம்முடைய குறியீடு 62,000 மெட்ரிக் டன்னுக்கு உரம் வினியோகம் செய்யப்பட வேண்டும் என்பது. ஆனால் டிசம்பர் 82 வரையில் 26,782 மெட்ரிக் டன் தான் விற்பனை செய்யப் பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமையில், அதாவது நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை அடைய முடியாத நிலைமையிலேதான் வேளாண்மைத் துறை இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

தமிழகத்தில் தற்போது தண்ணீர் பற்றாக்குறை, கடுமையான வறட்சி நிலவி வருகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் உணவு உற்பத்தியை நாம் பெருக்கியாகவேண்டும். அதற்குத்தேவையான, குறுகிய காலத்தில் மகசூல் தரக்கூடிய தரமுள்ள வீரிய விதைகளை நாம் கண்டு பிடித்தாக வேண்டும். அவைகளை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் கிடைக்கச் செய்தாக வேண்டும். அந்த வகையில் வேளாண்மைத் துறையும், வேளாண்மைப் பல்கலைக் கழகமும் ஈடுபட வேண்டும். அதற்கு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் அறிஞர்களை இந்தப் பணியில் முழு மூச்சுடன் ஈடுபடுத்த வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக பூச்சி மருந்து. இந்த பூச்சி மருந்து தயாரிப்பிலே வெகு வேகமாக கலப்படம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற முறை நடைபெற்ற விவாதத்திலே, வேளாண்மைத்துறை மானியத்திலே பேசும்போது, வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு பொட்டலம் பூச்சி மருந்தைக் கொடுத்து அது தரமானதுதானா, விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடியதா என்று பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அதனுடைய முடிவை எனக்கு 6 மாதங்களுக்கு முன்னாலே, கிட்டத்தட்ட செப்டம்பர் மாதத்தில் என்று கருதுகிறேன், வேளாண்மைத் துறையிலிருந்து, ஒரு கடிதத்தின் மூலமாகத் தெரிவித்தார்கள்.



(பிற்பகல் 1-40)

அதிலே என்ன தெரிவித்தார்கள் என்றால் 'நீங்கள் கொடுத்த அந்தப் பூச்சி மருந்தை ஆய்வு செய்ததில் அது போலிச் சரக்கு என தெரியவந்தது. அதை எங்கே வாங்கினீர்கள்' என்று தெரிவித்தார்கள். 6 மாதங்களுக்குப் பிறகு அதனைப் போலிச் சரக்கு என்று கண்டுபிடித்து அதனை எங்கே வாங்கினீர்கள் என்று கேட்கிறார்கள். தமிழகத்திலே இப்படிப் பட்ட போலிச் சரக்குகள் நடமாடிக்கொண்டிருக்கின்றது என்றால் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டமன்றப் பேரவையில் நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அமைச்சரிடத்திலே சொல்லி இருக்கிறோம். உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசினுடைய கடமை அல்லவா? அதை விட்டுவிட்டு 6 மாதங்களுக்குப் பிறகு எங்கே வாங்கினீர்கள், சொல்லுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னால் அது முறைதானா என்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்க விரும்புகிறேன்.

அடுத்து பசுந்தாள் உரம் என்பது வேளாண்மைக்கு மிக முக்கியம். அதுபற்றி நான் பேசுகின்ற போதெல்லாம் வலியுறுத்து கிறேன். பசுந்தாள் உரத்தினை உற்பத்தி செய்வதற்கு குறிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மானியம் கொடுக்கவேண்டும். அந்த வகையில் பசுந்தாள் உரத்தை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உழவு செய்வதற்கு ட்ராக்டர்கள் குறைந்த வாடகையில் கொடுக்கப்பட்டால்தான் விவசாயிகள் ஊக்கத்தோடு அந்தத் தொழிலில் ஈடுபடமுடியும். அந்த அடிப்படையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் ட்ராக்டர்கள் கொடுக்க வேண்டும் என்பதற்காக வேளாண்மைப் பொறியியல் பணி மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ட்ராக்டர்கள் வாங்கி வைக்கப்பட்டன. அப்படி வாங்கி வைக்கப்பட்ட ட்ராக்டர்கள் எங்கே இருக்கின்றன என்று கண்டுபிடிக்க முடியவில்லை. குத்தாலத்தில் கூட பணி மையம் இருக்கின்றது. அதிலே ட்ராக்டர் முன்பு இருந்தது. அந்த ட்ராக்டர் இப்போது எங்கே இருக்கின்றது, அதை என்ன செய்தார்கள் என்பது யாருக்குமே தெரியவில்லை. எனவே அது குறித்து எல்லாம் முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து உரத்தின் விலை உயர்ந்து இருக்கின்றது, டீசல் விலை உயர்ந்திருக்கின்றது, மோட்டார் விலை உயர்ந்திருக்கின்றது, மின்சாரக் கட்டணம் உயர்ந்திருக்கிறது. கூலி உயர்ந்துள்ளது. இப்படி விவசாயத்திற்குத் தேவையான அத்தனை பண்டங்களின் விலையும் உயர்ந்திருக்கின்ற நேரத்தில் நெல்லின் விலை உயர்ந்திருக்கின்றதா என்றால் இல்லை. எனக்கு முன்னாலே பேசியவர்கள் கூட நெல்லின் விலை உயரவில்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு

பேசுகின்றபோது எடுத்துச்சொன்னார்கள். ஊருக்கு இளைத்தவன்
பிள்ளையார் கோவில் ஆண்டி என்று. ஆனால் நான் கேட்க
விரும்புகிறேன், ஊருக்கு இளைத்தவன் தஞ்சை மாவட்டத்து
விவசாயிதானா? மற்ற இடங்களில் எல்லாம் நெல்லின் விலை
உயர்ந்திருக்கின்றபோது தஞ்சை மாவட்டத்தில் மட்டும்
நெல்லின் விலையை உயர்த்தவில்லையே, அவன் என்ன பாவம்
செய்தான்? ஏன் அங்கே நியாயமான விலை கொடுக்கவில்லை
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப்
பொறுத்தவரையிலே 57 கிலோ கொண்ட மூட்டையின் விலை
அரசு கொடுக்கின்ற வறட்சி நிவாரணங்களை எல்லாம்
சேர்த்தால் கூட 78 ரூபாய் 9 காசுதான். ஆனால் அதே
நேரத்தில் பக்கத்திலே இருக்கின்ற வேலூர்போன்ற இடங்களுக்குச்
சென்றால் 135 ரூபாய் இந்த ஒரு மூட்டை நெல்லின் விலையாக
இருக்கின்றது. ஏன் இந்த பாரபட்சம்? எல்லோருக்கும்
உற்பத்திச் செலவு ஒன்றுதான் என்ற நிலையிலே ஏன் இந்த
விலையிலே வித்தியாசம் இருக்கின்றது என்பதை அறிய விரும்பு
கிறேன். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்
பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசின்
சார்பாக சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டபோதுகூட நெல்லுக்கு
உற்பத்திச் செலவு குவிண்டால் ஒன்றுக்கு 147 ரூபாய்
ஆகின்றது என்று மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாகச்
சொன்னார்கள். அப்பா அரசின் சார்பிலேயே நெல்லுக்கு
குவிண்டால் ஒன்றுக்கு உற்பத்திச் செலவு 47 ரூபாய் ஆகும்
என்று சொன்னதற்கு பிறகு இந்த அரசே அந்த விலையினைக்
கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டாமா? ஆகவே இந்த அரசு
150 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு என்று கொடுக்கவேண்டும்
தற்காலிகமாக. நியாயமாகப் பார்த்தால் 200 ரூபாய் கொடுக்க
வேண்டும். அப்படி 200 ரூபாய் கொடுத்தால்தான் விவசாயிகள்
வாழ முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்தில் ஆயிரம் ஆழ்குழாய்
கிணறுகள் அமைக்க இருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை நான்
வரவேற்கிறேன். ஆனால் அது போதுமானதுதானா? இப்போது
இரண்டரை ஏக்கர், மூன்று ஏக்கர் நிலம் உள்ள விவசாயி
களுக்கு கடன் கொடுத்திருக்கிறீர்கள். அதனால் 20 ஆயிரம்
ஏக்கர் நிலங்கள் பயனடையும். ஆனால் முழுவதுமாகப் பயன்
படுத்தப்படவேண்டும் என்றால், தஞ்சை மாவட்டத்திலே
சாகுபடி செய்யக்கூடிய அனைத்து விவசாயிகளும் பயனடைய
வேண்டும் என்றால் இன்னும் அதிகமான அளவில் ஆழ்குழாய்
கிணறு அமைப்பதற்குக் கடன் கொடுக்கவேண்டும் அல்லது
ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஐந்தாறு இடங்களிலாவது
சமுதாயக் கிணறுகளை அமைக்கவேண்டும். தஞ்சை
மாவட்டத்திலே 1969 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவராக
இருந்த திரு. டி. வி. அந்தோணி அவர்கள் வேளாண்மைத்துறை
செயலாளராகப் பொறுப்பேற்று இருக்கிறார்கள். இந்த
வேளாண்மைத் துறை தஞ்சை மாவட்டத்தில் வளர்ச்சி



அடைவதற்கு, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு முழு முயற்சி
செய்தவர்தான் இன்றைக்கு வேளாண்மைத் துறையின்
செயலாளராக இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும்
தஞ்சை மாவட்டத்தின் நிலைமை. தஞ்சை மாவட்டத்தில்
வேளாண்மைத் துறை வளர்ச்சி அடைவதற்கு சமுதாயக்
கிணறுகள் அவசியம் தேவை. அதை நீங்கள் செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்கள் தன் அறிக்கையில் 2,172 கிராமங்களில் 1,160
கிராமங்கள் வறட்சியால் முழுவதும் பாதிக்கப்பட்டு விட்டது
என்று அவர்கள் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அந்த
மாவட்டத்திலுள்ள 1 இலட்சத்து 20 ஆயிரம் எக்டேர் சாகுபடி
நிலத்தில் குறுவை சாகுபடி செய்யப்பட்டதில் அதிலே பெரும்பகுதி
நிலம் 3-ல் ஒரு பங்கு தரிசாக போய்விட்டது. தண்ணீர் இல்லை,
சாகுபடி செய்யமுடியவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள் தனது அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப்
பிறகு தாளடி நடவு செய்யப்பட்ட நேரத்தில் ஒரு லட்சம்
ஏக்கர் நிலம் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக காய்ந்து கருகி
அழிந்து விட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்
தனது அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதன் மூலமாக
தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மட்டும் ஏற்பட்டிருக்கிற
நஷ்டம் 120 கோடி என்று அவர்கள் கணக்கு மூலம் அறிவித்து
இருக்கிறார்கள். தயவு செய்து அமைச்சர் அவர்கள் எண்ணிப்
பாருங்கள். தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு இயற்கையின்
காரணமாக மேட்டூர் தண்ணீர் வராத காரணமாக 120 கோடி
ரூபாய் இந்த ஆண்டில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கையில்
இருந்த பணத்தை செலவழித்துவிட்டு தவித்துக்கொண்டிருக்
கிறார்கள். அவர்களுக்கு நிவாரணமாக கண்டிப்பாக எதையாவது
செய்யுங்கள் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.
மேட்டூர் நீர் 1924-ம் ஆண்டு ஒப்பந்தம் இருக்கிறது. அந்த
ஒப்பந்தத்தை கண்டிப்பாக புதுப்பிக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன். 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் 20 ஆயிரம்
க்யூசெக்ஸ் தண்ணீர் கிருஷ்ணராஜ சாகருக்கு வருகிறது என்று
சொன்னால் அந்த தண்ணீரை தேக்கி வைக்க கர்நாடக அரசுக்கு
உரிமை இல்லை என்று அதில் இருப்பதாக சொல்லப்படுகிறது.
ஆனால் இன்றையதினம் ஒரு சொட்டு தண்ணீர் வந்தால் கூட
கர்நாடக அரசு தேக்கி வைத்து விடுவதாக சொல்லப்படுகிறது.
கண்டிப்பாக நம்முடைய உரிமையை நாம் போராடி பெற்று
ஆகவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.
அதைப்போலவே காவேரி நீர்ப் பகுதியை நவீனப்படுத்துவதாக
ஒரு திட்டம் அரசின் சார்பில் 1967-ல் உருவாக்கப்பட்டது.
அதற்கு கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் உலக வங்கி
உதவியோடு செலவழிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது
என்று இரண்டு தினங்களுக்கு முன்னால் கூட நம்முடைய நீர்ப்
பாசனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில்
சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு செலவழிக்கக்கூடிய

முறையில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு கொடுக்கிறார்கள். வேலைகள் முறையாக நடைபெறவில்லை. வேலை முறையாக நடைபெறாத காரணத்தால் இன்றைய தினம் தஞ்சை மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு நீர்ப்பாசன துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள் அந்த தொகை ஒதுக்குவதிலே குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு ஒரு காரணம் ஒப்பந்தத்தை காண்ட்ராக்ட் மூலமாக கொடுப்பதா அல்லது நாமினேஷன் மூலமாக கொடுப்பதா என்பதில் அதிகாரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த ஆண்டு முழுத் தொகையும் ஒதுக்கமுடியவில்லை என்று சொல்லிவிட்டு 375 லட்சம் ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானது அல்ல. ஆகவே தயவுசெய்து இன்னும் கொஞ்சம் அதிகமாக தொகை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை இன்றையதினம் நான் முன்பு சொல்லிய அந்தக் காரணங்கள் அடிப்படையில் பரிசீலனை செய்து வறட்சி மாவட்டமாக நீங்கள் அறிவிக்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே அணாவாரி சான்றிதழ் கேட்காமல் நில வரி, உள்ளூர் வரி போன்ற அனைத்து வரிகளையும் தள்ளுபடி செய்ய வேண்டும். இந்த ஆண்டு கூட்டுறவு கடன் அனைத்தையும் ரத்து செய்யவேண்டும். பழைய கூட்டுறவு கடன்களை வட்டியை தள்ளுபடி செய்து அசலை நீண்ட காலத்தில் வசூல் செய்யக்கூடிய முறையில் ஒத்திவைக்க வேண்டும். தேவையான அளவுக்கு பூச்சி மருந்து, உரங்கள் இவைகளை, குறைந்த விலையில் மானியமாக தரவேண்டும். நெல்லுக்கு நியாயமான விலையாக குவிண்டால் ஒன்றுக்கு 200 ரூபாய் வழங்கவேண்டும். கரும்புக்கு நியாயமான விலையாக 250 ரூபாய் வழங்க வேண்டும். குடிமராமத்து மூலமாக எல்லா வாய்க்கால்களையும் வெட்டி சீர் செய்து கொடுக்கவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துக் கொடுக்கவேண்டும், வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு 60 வயதுக்கு மேல் ஓய்வூதியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கடைசியாக நிலத்தை உழுபவனுக்கே சொந்தமாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண் துறை மானியக் கோரிக்கையின் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வழங்கியிருக்கிறார்கள். இந்தத் துறையின்பால் அவர்கள் கொண்டிருக்கிற அக்கறைக்கும் ஆர்வத்திற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



முதலிலே கருத்துரையாற்றிய திரு. திருவேங்கடம் அவர்கள் கடந்த காலங்களிலே என்ன என்ன பயிர்களை வேளாண் பெருமக்கள் ஆர்வத்தோடு உற்பத்தி செய்யவேண்டுமென்று விளம்பரபடுத்தினோமோ இப்போது அந்த விளம்பரம் இல்லாமல் பயிற்சி வழித் தொடர்புத் திட்ட விளம்பரப் பலகைகள்தான் காட்சியளிக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இன்றும்கூட மனநிறைவை அளிக்கத்தக்க வகையில் இல்லை, அதற்கு போதுமான அலுவலர்கள் இல்லை என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இது ஒரு அளவுக்கு நியாயமான காரணமாகக்கூட இருக்கக்கூடும். ஆனால் நாம் இப்போது அலுவலர்களை அதிகப்படுத்துகிற வகையில் 2,824 உதவி வேளாண்மை அலுவலர் பதவிகள் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இன்னும் அதிகமான ஆர்வத்தோடு செயல்படுவதற்கான வசதிவாய்ப்புகளை அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையில்லை என்பதில் நிச்சயம் இந்த அரசுக்கு வேளாண் துறைக்கு கருத்து வேறுபாடு இல்லை. ஏனென்றால் அவனுடைய உற்பத்தியாகிற செலவையும் விவசாயப் பெருமக்கள் அடைகின்ற விலையையும் எண்ணிப் பார்க்கிற நேரத்திலே வேறுபாடு இருக்கிறது. ஆனால் அந்த வேறுபாட்டை முழுமையாக நாம் சரிபடுத்தித் தருகிற அளவுக்கு மாநில அரசினுடைய நிதி நிலை இருக்கிறதா என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். திரு. உத்திராபதி அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். மத்திய அரசுதான் அதிகப் படுத்தித்தரவில்லை, அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள், நீங்களாவது அதிகப்படுத்தித் தரக்கூடாதா என்று குறிப்பிட்டார்கள். அப்படி நாம் மத்திய அரசையே கைவிட்டுவிட்டு நாமே எல்லா சிக்கல்களையும் சந்திக்கின்ற அளவுக்கு நாட்டினுடைய நிலைமையோ அரசியல் சட்டமோ, அதிகாரமோ, நிதி நிலைமையோ இல்லை என்பதை அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆகவே அதற்குரிய வகையில் உற்பத்திச் செலவை நாம் கணக்கிட்டு இந்த அளவுக்கு விலை கிடைக்க வேண்டுமென்று தொடர்ந்து பரிந்துரைக்கிறோம், தொடர்ந்து எழுதுகிறோம், தொடர்ந்து வலியுறுத்துகிறோம். ஆனால் மைய அரசு குறிப்பிட்ட விலையைத் தருகிறது. அது போதாது என்ற வகையிலே மாநில அரசு தொகை அதிகப்படுத்தித் தருகிறது. அந்த வகையிலேதான் நாம் இப்போது முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம்.

ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கிற கொடுமையான சூழ்நிலையில் வறட்சியின் தாக்குதலுக்கு வேளாண் துறை முழுமையாக இலக்காகியிருக்கிற சூழ்நிலையில் நாம் அதிகமான உதவியை வேளாண் பெருமக்களுக்குச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் மைய அரசுக்கு சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் நெல், பயறுவகைகள், மற்றும் பருத்திப் பயிர்களுக்கு ஹெக்டேருக்கு

75 ரூபாய் பெறுமானமுள்ள விதைகள் வழங்குவது, சிறு தானியப் பயிர்களுக்கு ஹெக்டேருக்கு 25 ரூபாய் பெறுமானமுள்ள விதைகளை வழங்குவது அதற்காக 362.52 லட்சம் கேட்டு இருக்கிறோம். அதைப்போலவே சிறு விவசாயிகளுக்கு 25 சதமானம் மானிய விலையில், மிகச் சிறிய விவசாயிகளுக்கு 33⅓ சதவீதம் மானிய விலையிலே ரசாயன உரங்களை வழங்குவதற்காக 995.59 லட்சங்களைக் கேட்டு இருக்கிறோம். ஒரு ஹெக்டேருக்கு 110 ரூபாய் பெறுமானமுள்ள பூச்சி மருந்துகளை வழங்குவதற்கு 150.92 லட்சங்களைக் கேட்டிருக்கிறோம். மைய அரசினுடைய குழுவும் தன்னுடைய அறிக்கையைத் தந்து அவர்கள் அதை உடனடியாக பரிசீலித்து வழங்கியவுடன் எந்த எந்த வகையிலே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த வகையில் உதவிகள் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பயிற்சிவழித் தொடர்புத் திட்டத்தைப்பற்றி அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே அதிகமாக விளம்பரப்படுத்தப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். ஆரம்பத்திலே ஒரு திட்டம் வருகிறபோது அது அனைத்துப் பெருமக்களுக்கும் அறிமுகமாக வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் விளம்பரம் செய்யப்படுகிறது. அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையில் நாம் குறிப்பிட்டு விளம்பரம் செய்கிறோமே தவிர யாருடைய பெயரை இணைத்தும் அல்லது யாருடைய பெயரில் இருக்கிற நெல் வகை, பயறு வகை என்று இணைத்து நாம் விளம்பரம் செய்வதில்லை. அந்தத் திட்டம் முக்கியத்துவம் பெறவேண்டுமென்று கருதுகிறோம். ஓரளவிற்கு முக்கியத்துவம் பெற்றதற்கு பிறகு நாம் எந்தெந்த பயிர்களை சாகுபடி செயயலாம் என்ற பரிந்துரைகளை வேளாண் பெருமக்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக அந்தவகையில் நிச்சயமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வறட்சிக்கு இலக்காகி இருக்கிற இந்த சூழ்நிலையில் வரியை கடுமையாக வசூலிக்கிறார்கள் என்று தி வேங்கடம் அவர்கள் குறிப்பிட்டு, ஆனால் ஜப்தி அளவிற்கு போகவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வரி அத்தனை பேர்களிடத்திலும் வாங்கக் கூடாது என்று நிறுத்தி வைத்துவிட்டால் அரசாங்கத்தையே மூடுவிழா செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது. அரசாங்கத் திடம் அலாவுதீன் தீபம் எதுவுமில்லை. அரசாங்கம் நடத்துவதற்கு வரியைப் பெற்றாக வேண்டும். அதே நேரத்தில் பாதுப்பிற்கு ஆளாகிறவர்களை கசக்கி பிழிந்து வரி வசூலிக்கிற அளவிற்கு இதயமற்ற அரசாக இந்த அரசு இல்லை. பகைவருக்கு அருளுகின்ற நல்ல நெஞ்சம் கொண்ட பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தான் இது. ஆகவே அந்த வகையிலே பாதிப்பிற்கு ஆளாகியிருக்கிற பொது மக்களை இந்த அரசு துன்புறுத்தாது என்பதை திருவேங்கடம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





விவசாயக் கல்லூரி வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள், நம்முடைய முகம்மது இஸ்மாயீல் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு வேண்டுமென்று கேட்டார்கள். என்னதான் அகில இந்திய கட்சியின் தலைவராக இருந்தாலும் மாவட்டப்பற்று நிச்சயமாக போகாது என்பதற்கு எடுத்துக்காட்டாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நிலைமைகளைச் சுட்டிக்காட்டி வேளாண்மை பல்கலைக் கழகத்தினுடைய நிர்வாகக் குழு ஒரு புதிய விவசாயக் கல்லூரியை அமைக்கலாம், ஒரு புதிய கால்நடை கல்லூரியை அமைக்கலாம் என்ற எண்ணத்தை அரசிற்கு அனுப்பியிருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. ஏற்படக்கூடிய செலவுகளை எல்லாம் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே கல்லூரி அமைக்கலாம் என்ற முடிவிற்கு வந்ததற்கு பிறகு எங்கே அமைக்கலாம் என்ற முடிவிற்கு வரலாம். அதுவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சிவஞானம் அவர்கள் பேசுகிறபோது கரும்பு விலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் முதலில் முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கு குறிப்பிட்ட அந்த விளக்கத்தில் அவர்கள் நிச்சயமாக நிறைவு பெற்றிருப்பார்கள் என்று நம்புகிறேன். கடந்த ஆண்டு கொடுத்த விலையை நாம் இந்த ஆண்டும் கொடுக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, கரும்பு விலை சம்பந்தமாக ஏற்கெனவே முத்தரப்பு மாநாட்டில் பேச்சு வார்த்தை நடக்கிறபோது அறிவிப்பதாகச் சொல்லி நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கு பதிலாக தொழில்அமைச்சர் அவர்கள் 155 என்று அறிவித்தார்கள். அது கட்டுபடியாகாத விலை. நேற்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்தது 175 என்று அறிவிக்காமல், சென்ற ஆண்டு வாங்கிய விலையில் எது குறைவோ அதை அரசாங்கம் ஈடுகட்டும் என்று சொன்னதின் மூலமாக, ஒரு ஆலையிலே 186 சென்ற ஆண்டு வாங்கியிருக்கிறார்கள்; இப்போது 155 ரூபாய் என்ற விலையில் பார்க்கிறபோது 186.60 கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆகவே 60 பைசாதான் சர்க்காரிடத்திலிருந்து ஆலைக்கு கொடுப்பதாக அல்லது விவசாயிக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 175 என்று கூட இல்லாமல் ஆலைகளுக்குத் தான் உதவி செய்வதாக உங்களுடைய அறிவிப்பு இருக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு சென்ற ஆண்டினுடைய ரெக்கவரியின் அடிப்படையிலே கொடுக்கப்படும் என்று இல்லையே; அந்த கோரிக்கைக்காக இன்றும் கூட தமிழ்நாடு கரும்பு விவசாயிகளுடைய சங்கம் நியாயமாக எங்களுக்கு கிடைக்க வேண்டியதை பெற்றுத் தரவேண்டுமென்று போராட்டம் நடத்துகிறார்கள். இது சம்பந்தமாக அமைச்சர் சிறு விளக்கமளித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நியாயம் என்பது எல்லா தரப்பிலும் இருக்க வேண்டும். இருக்கிற சூழ்நிலையில் கணக்கிட்டுப் பார்த்து அந்த வகையிலேதான் நாம் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறோம். தொழி அமைச்சருக்கு என்று தனி கஜானா, வேளாண்மைத் துறை அமைச்சருக்கென்று தனி கஜானா இல்லை. அரசாங்கம் இந்த நிலைமைகளை கணக்கிட்டுப் பார்த்து கடந்த ஆண்டு வேளாண் பெருமக்கள் பெற்ற விலையில் இந்த ஆண்டு இருக்கிற சூழ்நிலையில் குறைவாகப் பெறக்கூடாது என்ற எண்ணத்தினுடைய அடிப்படையில் தான் நாம் இந்த அறிவிப்பை செய்திருக்கிறோம். அவர்களுக்கு எடுத்துச் சொன்னதைப் போல கடந்த ஆண்டு 186.60 என்று பெற்று இந்த ஆண்டு 155 என்று நிர்ணயித்து இருக்கிற விலைக்கு மேலும் கொடுத்தால் 60 காசு அரசு அவர்களுக்கு கொடுக்கிறது. அதைப்போலவே 194.40 காசு என்று கடந்த ஆண்டு பெற்ற ஆலைகள் இந்த ஆண்டு அவர்களுக்கு 171.40 தான் வருகிறது. ஆகவே ஏற்படக்கூடிய 23 ரூபாயை நாம் கொடுக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, 175 என்று சென்ற ஆண்டு நிர்ணயித்த அதே விலையை நிர்ணயித்து, சென்ற ஆண்டு ரெக்கவரி எதுவோ அந்த அடிப்படையிலே கொடுப்பது என்று சொன்னாலும் கூட 230 வரும். அது இல்லாமல் இப்போது புதியமாதிரியாக ஒரு மெத்தடிலே அறிவித்திருக்கிறீர்களே, இதுவரைக்கும் வழக்கமாக இருப்பது போல இல்லாமல் புது மாதிரியாக இருக்கிறதே அதற்கு என்ன காரணம் என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-00)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: நிதிநிலைமை ஒரு முக்கியமான காரணம். ஆகவே, இந்தச் சூழ்நிலையில், ரூ. 8 கோடி இழப்பை அரசு ஏற்றுக்கொண்டு இந்த அறிவிப்பைத் தந்திருக்கிறது. கரும்பு விவசாயப் பெருமக்களும் சாதாரணமானவர்கள் அல்ல. அவர்கள் அனைத்தும் அறிந்திருக்கிற பெருமக்கள். இருக்கிற இந்த நிலைமையை அவர்களும் கணக்கிட்டுப் பார்த்துத்தான் அவர்கள் முழுமையாக எந்த அளவுக்கு இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொன்னதற்குப் பிறகுதான் அவர்களும் நிலைமையைப் புரிந்து கொண்டு பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அண்ணன் அழகர்சாமி அவர்களுடைய கட்சியிலே இருக்கிற விவசாயப் பெருமக்கள் அதிருப்தியைத் தெரிவிக்கக் கூடும். ஆனால், தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள், அதிருப்திதான் முன்னேற்றத்திற்குத் தாய் என்று. ஆகவே, அதிருப்திப்படுவதிலே நாம் ஒன்றும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. ஆனால் இருக்கிற நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றோம் என்பதை [illegible]



திரு. ந. சிவஞானம்: துணைத் தலைவர் அவர்களே, கரும்பு விலைபற்றி மிக விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள், ஆனால், இப்பொழுது வறட்சியாக இருப்பதால், நெல்லுக்கு, குவிண்டாலுக்கு ரூ. 15 உதவித் தொகை கொடுப்பதைப்போல, வறட்சி உதவித் தொகையாக ஏதேனும் கொடுக்க அரசாங்கத் திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் ரூ. 8 கோடி அரசுக் கருவூலத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. ஆகவே, முடிந்த அளவுக்கு அந்தத் தவிப்புகளை நாம் ஆராய்ந்து பார்த்துதான் அந்த வகையிலே அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மணி அவர்கள் சொல்கின்ற நேரத்திலே கட்டுப்படியாகாத விலை அளிக்கிற காரணத்தினாலே, நெல் விளைவிக்க மறுக்கின்ற நிலைமை குமரி மாவட்டத்திலே இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். நாம் அவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லித்தான் உரிய அளவுக்கு விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று மைய அரசுக்குத் தெரிவிக்கின்றோம். அதேபோல, அவர்கள் குறிப்பிட்டார்கள், வெங்காயம், தக்காளி போன்றவைகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்று; அதை உற்பத்தி செய்யக்கூடிய இடத்திலே குறைவான விலைக்குப்போகிறது. வெளி இடங்களுக்கு வருகிற நேரத்திலே அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நமக்கு இருக்கிற இக்கட்டான நிலைமை, இந்த அழுகும் பொருள்களை ஓரளவு சேமித்து வைக்கும் அளவுக்குச் சேமிப்புக் கூடங்கள் இல்லை. ஆகவே, அதை விரிவுபடுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் எந்த எந்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமோ, அந்த அந்த முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்,

பார்கு மரத்திற்கு ஏற்பட்டிருக்கும் நோய்க்கு அறிவுரைகளைத்தான் சொல்கிறார்களே தவிர, மருந்தைத் தரவில்லை என்று குறிப்பிட்டார்கள். முறையாக அறிவுரை சொல்வதேகூட மிக முக்கியமானது. தவறான அறிவுரையைச் சொல்லாமல், அந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற அறிவுரையைச் சொல்வதேகூட மிக முக்கியமானது. விவசாயிகளுக்குத் தேவையானதையும் வாங்கி, இந்தத் துறை வழங்க வேண்டுமென்றால், அது நிச்சயமாக இயலாது என்பதை அவர்கள் நிச்சயமாக எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போலவே, பயிர் வகைப் பருத்தி போன்றவைகளின் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு நாம் முறையாகச் செயல்திட்டங்களைத் தீட்டி, அவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே [illegible]

(டாக்டர் கா. காளிமுத்து)

இரத்தினம் அவர்கள் பேசுகின்றபொழுது, அவர்கள் கோயம்புத்தூரிலே அல்லது பொள்ளாச்சியிலேதென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கவேண்டும், ஆராய்ச்சி நிலையமே இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஆராய்ச்சி நிலையம் தஞ்சை மாவட்டத்திலே வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக நடைபெற்று வருகிறது. அவர்கள் தென்னை ஆராய்ச்சி நிலையம் தான் கேட்டார்கள். ஆனால், சோவைக்கு ஒரு பழப் பண்ணையையே நாம் வழங்கியிருக்கிறோம். ஆகவே, அதிலே அவர்கள் மன நிறைவு கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போல தென்னையிலே ஏற்படக்கூடிய நோய் தடுப்பிற்குரிய வழிகளை நாம் சொல்கிறோம். அவைகளையும் மீறி நாம் வருமுன்னர் காக்கின்ற அந்த முயற்சிகளையும் மீறி நோய்க்குத்தென்னை ஆட்படுகின்ற நேரத்தில், உரிய இழப்புத் தொகையை நாம் தருகின்றோம். அந்த வகையிலே உரிய தொகைகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன என்பதனை நான் இந்த நேரத்திலே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உரம், பூச்சி மருந்துகள் போன்றவைகளை எல்லாம் மானிய விலையிலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நம்முடைய திரு. உத்திராபதி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே, மானிய விலையிலே வழங்குவதற்காகத்தான் வறட்சி நிவாரணப் பணியிலே நாம் இன்றும் திட்டங்கள் தீட்டியிருக்கிறோம் என்பதையும் அந்த வகையிலே, வழங்குவதற்குரிய வகையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே கணபதி அவர்கள் குறிப்பிடுகின்ற நேரத்தில் நீர் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாகக் குறிப்பிட்டார்கள். காவேரிப் பாசனப்பகுதியில் சுமார் 12,000 ஹெக்டர் பரப்பில் வாய்க்கால் வெட்டுவது, ஆழப்படுத்துவது மற்றும் நீர் விடுவதற்கான அமைப்பு செய்வதற்காக, 1983-84லே திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதனை நான் அவர்களுக்கு இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய இராசமாணிக்கம் அவர்கள் பேசுகின்றபொழுது ஒவ்வொரு முறையும் வேளாண்மைத்துறை ஒரு குறியீட்டை நிர்ணயிக்கிறது. ஆனால் அந்த குறியீட்டை அவர்கள் அடையவில்லையென்று குறிப்பிட்டார்கள். வழக்கமாக நாம் செய்கின்ற ஒன்றேகூட, நாம் அடைகிற அளவுக்கு, எட்டுகிற அளவுக்கு, குறியீட்டை நாம் நிர்ணயிப்பதில்லை. குறியீடு கொஞ்சம் எல்லை மீறியிருந்தால்தான் அதை நோக்கி முயற்சிகளைச் செய்வதற்கு நாம் வாய்ப்பு பெற முடியும். எப்பொழுதுமே இலட்சியம் கொஞ்சம் உயரமாக இருக்கவேண்டும். இன்னும் அதிகமான, சிரமப்பட்டு அடையத்தக்க நிலையிலே இருக்க வேண்டும். அந்த அளவிலே ஒரு குறியீடு அமைத்துக்கொள்வது தான் துறையினுடைய வளர்ச்சிக்கு உதக்கக என்கிற வகையிலே



[டாக்டர் கா. காளிமுத்து]

தான் நாம் அப்படிக் குறியீட்டை வகுத்துக்கொள்கிறோமே தவிர ஒவ்வொரு தடவையும் குறியீட்டை எட்டிப்பிடிக்க முடிய வில்லையே என்கின்ற மனக்குறையை நாம் பெறாமல் அதைப் பாராட்டத்தக்க அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் நாம் இப்பொழுது எண்ணி இருக்கிற எண்ணம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர்கள் இன்னொன்றைத் தெரிவித்தார்கள். ஒரு செலின் மருந்தை நான் சட்டமன்றத்திலேயே சொல்லி, அமைச்சருடைய கையிலே கொடுத்தேன், ஆனால், அது போலி மருந்துதான் என்று 6 மாதங்களுக்குப் பிறகு எனக்குக் கடிதம் வருகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் நடந்த உண்மை என்ன என்பதை அவைக்கு விளக்கினால் திரு. இராசமாணிக்கம் நிச்சயம் வருத்தப்பட மாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அந்த மருந்தைக் கொடுத்தபொழுது நான் அதை காஞ்சிபுரத்தில் இருக்கிற பரிசோதனைச் சாலைக்கு அனுப்பச் சொன்னேன். அனுப்பியதிலே மருந்து போலியானது என்று தெரிய வந்தது. நான் சோதரர் இராசமாணிக்கம் அவர் களையே தொடர்பு கொண்டு, எங்கே வாங்கினார்கள், எங்கே யிருந்து பெறப்பட்டது, அதைச் சொன்னால் நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் என்று கேட்டபொழுது அவர்கள் இங்கே பேசும்பொழுது திருவொற்றியூரிலே ஒரு நண்பர் வாங்கினார் என்று சொன்னார்கள். ஆனால் எங்கே என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது என்பதால் அவர்கள் சொல்லாமல் விட்டு விட்டார்கள். அதற்குப் பிறகுதான் அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் யார் மேல் நடவடிக்கை எடுப்பது என்று புரியாமல் திகைத்த நேரத்தில் நான் உரிய நிகழ்ச்சியைச் சட்டமன்ற உறுப்பினருக்கு எழுதுங்கள். அவர்கள் பதில் வழங்கினால் அந்தப் பதிலைப் பெறுங்கள் என்று குறிப்பிட்டேன். இப்பொழுதுகூடச் சொல்கிறேன், காலங் கடந்துவிட்ட காரணத்தினாலே, ஆறு மாதங்கள் ஆகிவிட்ட காரணத்தினாலே ஒரு குற்றவாளி நல்லவனாக ஆகி விட முடியாது. ஆகவே, எங்கே வாங்கப்பட்ட மருந்து என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால் உரிய நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசு, இந்தத் துறை எடுக்கும். அப்படிப் பல போலி உர வியாபாரிகள் நடவடிக்கைக்கு ஆளாகியிருக்கிறார்கள். கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறார்கள். போலி பூச்சிக் கொல்லி மருந்துகளை விற்பனை செய்ததால் பலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றார்கள், அந்தக் கம்பெனியையே மூட வேண்டிய அளவிற்கு இந்தத் துறை நிலைமைகளை உருவாக்கியிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட சமூக விரோதிகளை நிச்சயமாக அடையாளம் காட்ட வேண்டிய கடமை சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது அவர்கள் தெரிவித்தாலும்கூட அந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு துறைக்குப் பயன்படும் என்பதனை நான் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர்களிடத்தில் நான் சட்டப் பேரவையிலே அந்த மருந்தைக் கொடுக்கின்றபொழுது, திருவொற்றியூர் பகுதியில் இப்படிப்பட்ட மருந்தைத் தயாரிக்கிறார்கள், விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சென்னையைச் சேர்ந்த ஒருவர் என்னிடத்திலே கொடுத்து அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள் என்று கொடுத்தார்கள் என்று நான் சொல்லிவிட்டு, கொடுத்தவர்களுடைய பெயரைச் சொல்வது நல்லது அல்ல, பழி வாங்கப்படுவார்கள் என்பதால் நான் சொல்லாமல் விட்டு விட்டேன். இப்படிப்பட்ட மருந்துகள் ஏராளமாக தமிழகத்திலே விற்பனை ஆகிறது என்பதை அமைச்சரின் கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வருவதற்காகச் சுட்டிக்காட்டினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஒரு வட்டாரத்திலே கிடைக்கிறது என்பதை மட்டும் சொன்னால் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை மாண்புமிகு இராசமாணிக்கம் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். எந்தக் கடை என்பது நமக்குத் தெரிந்தால் நான் அதிலே எப்படிப்பட்ட மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, திருவொற்றியூர் பகுதியில் எந்தக் கடையில் வாங்கப்பட்டது என்பதைத்தான் கேட்கிறேனே தவிர, உங்களுக்குக் கொடுத்த நண்பரின் பெயரை நான் கேட்கவில்லை. எனவே, இனிமேல்கூட அதை அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதிய திட்டங்களாக நான் ஏற்கனவே முன்னுரையிலே சிலவற்றைக் குறிப்பிட்டேன். சங்கற்பட்டு மாவட்டத்திலே கொழுந்தலூர் என்ற இடத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலே திருவண்ணாமலையிலேயும் இரண்டு விதைப் பதப்படுத்தும் நிலையங்கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவேங்கடம், வேணுகோபால் போன்றவர்களெல்லாம் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நான் நம்புகிறேன்; நன்றி தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

பெரியார் மாவட்டத்தில் ஒரு மண் பரிசோதனை நிலையமும், நடமாடும் மண் பரிசோதனை நிலையம் ஒன்றும் புதிதாகத் துவக்கப்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இரு பூச்சி மருந்து ஆய்வுக் கூடங்கள் புதிதாகத் துவக்கப்படும்.

இரு இரசாயன உர ஆய்வுக் கூடங்கள் தொடங்கப்படும்.

திருநெல்வேலியில் வேளாண்மைத் துறையைச் சேர்ந்த பல்வேறு அலுவலகங்களுக்குக் கட்டிடம் கட்டப்படும்.



மூன்று புல்டோசர்கள் புதிதாக வாங்கப்படும்.

5.42 இலட்சம் செலவில் வட ஆற்காடு, முகவை, திருச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் தோட்டக் கலை வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

முந்திரி மேம்பாட்டுக்காகத் தோட்டக் கலைத் துறையும் தமிழ்நாடு வனக் கழகமும் இணைந்து 39.50 கோடி மதிப்பீட்டில் தயாரித்துள்ள திட்டத்தை உலக வங்கியினுடைய உதவியோடு செயல்படுத்தும்.

25 வணிகமுறை தரம் பிரிப்பு நிலையங்கள் துவங்கப்படும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்ஸி. விற்பனைப் படிப்பும், பி.வி.எஸ்.சி. பட்டதாரிகளுக்கான தீவிரப் பயிற்சியும் தொடங்கப்படும்.

ஆகவே, இத்தகைய புதிய திட்டங்களை, இவ்வளவு நிதி நெருக்கடியுள்ள சூழ்நிலையிலேயும் இந்தத் துறை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் குறைவு என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த காலங்களிலே இந்த மானியக் கோரிக்கையிலே வந்து, குறிப்பிடப்பட்ட சில தொகைகள் வேறு சில மானியக் கோரிக்கைகளின் மூலமாக, ஊரக வளர்ச்சித் துறை இதுபோன்ற மானியங்கள் மூலமாக அது பிரிக்கப்பட்ட காரணத்தால்தான், தொகை குறைவாகத் தெரிகிறதே தவிர, நிச்சயமாக தொகை குறையவில்லை என்பதை நான் கோடிட்டுக் காட்டி, ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டு அமர்கின்றேன்.

6: அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவிற்கிணங்க, பேரவையின் அலுவல்களில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவிப்பு.

[பேரவைத் துணைத் தலைவர்] [1983 மார்ச் 18

| | | | |
|---|---|---|---|
| 28-3–1983 (திங்கள்) | காலை | — | ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி |
| | மாலை | — | பேரவைக் கூட்டம் இல்லை |
| 6-4-1983 (புதன்) | காலை | — | 9-4–1983 அன்று எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப் பட்டிருந்த கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பெறும். 22 — கால்நடைவளர்ப்பு 30 — சமூக நலன் |
| | மாலை | — | 28 3-1983 அன்று மாலை எடுத்துக் கொள்ளப்படுவதாக ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்த கீழ்க்கண்டமானியக் கோரிக்கை. 29 — தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |

(பிற்பகல் 2–10)

9–4-83 (சனி) எண்.32 பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் மற்ற நாட்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பெறும்.

## 5. வரவு–செலவுத்திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

கோரிக்கை எண். 20—வேளாண்மை

திருவாளர்கள் த. வேணுகோபால், கே. எம். தங்கமணி கே. ஆர். சுந்தரம், தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ.74,75,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரியதொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 49— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் த. வேணுகோபால், கே. எம். தங்கமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 49 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,56,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரியதொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 19-3-1983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11-க்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

197. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1980–81ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை (தமிழ்) [தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971)49(3)பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

198. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1980-81 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்)[தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

199. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1980-81-ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

81. கோரிக்கை எண். 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்க குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

82. 1983-84ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறை பற்றியச் செயல்வினை முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

83. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் பற்றிய ஆய்வுரை, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

84. தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மற்றும் நகரியங்களின் செயல்திறன் பற்றிய குறிப்பு (1977-78–1982-83) (தமிழ், ஆங்கிலம்).

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

85. 'தமிழ்நாட்டில் தன்னிறைவுத் திட்டம் ஊரக வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

86. 'தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

87. 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

88. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை.

## இணைப்பு I

(316ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண்.461க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை

(அ) அரசு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் மொத்தம் ரூ. 12,595.09 இலட்சம் முதலீடு செய்துள்ளது.

| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | முதலீடு பங்கு | முதலீடு கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்) | | (ரூபாய் லட்சத்தில்) |
| 1 | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) | 2822.77 | 701.82 | 3524.59 |
| 2 | தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) | 355.00 | 486.26 | 841.26 |
| 3 | தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI) | 772.50 | 1188.82 | 1961.32 |
| 4 | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) | 540.00 | .. | 540.00 |
| 5 | தமிழ்நாடு கைத்திறன் பொருள் வளர்ச்சி நிறுவனம் | 99.18 | .. | 89.19 |
| 6 | தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் | 110.56 | .. | 110.56 |
| 7 | தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் | 129.79 | .. | 129.79 |
| 8 | தமிழ்நாடு கனிம வள நிறுவனம் | 47.50 | 10.00 | 57.50 |
| 9 | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 60.00 | .. | 60.00 |







| வரிசை எண். | நிறுவனத்தின் பெயர் | பங்கு | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 10 | தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (TIIC) | 752.28 | 300.00 | 1052.28 |
| 11 | தமிழ்நாடு கைத்தறி அபிவிருத்தி | 65.00 | .. | 65.00 |
| 12 | தமிழ்நாடு ஜரிகை லிமிடெட் | 9.50 | 7.50 | 17.00 |
| 13 | தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனம் | 104.50 | .. | 104.50 |
| 14 | மின்னியல் மற்றும் மின்னணுத் தொழில் (ELCOT) | 31.10 | .. | 31.10 |
| 15 | தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் | 50.00 | .. | 50.00 |
| 16 | தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை | 2770.00 | .. | 2770.00 |
| 17 | தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் | 1181.00 | .. | 1181.00 |
| | மொத்தம் | 9900.69 | 2694.40 | 12595.09 |

(ஆ) அரசு முதலீடு செய்துள்ள 17 நிறுவனங்களில் 10 நிறுவனங்கள் மட்டுமே ரூ.99.40 இலட்சம் இலாபம் பெற்றுள்ளன மற்ற 7 நிறுவனங்கள் நட்டம் அடைந்துள்ளது.

## இணைப்பு II

(536-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 20—வேளாண்மை

கொள்கை விளக்கம்

1. வேளாண்மைத் துறை.

உலக வங்கியின் உதவி பெற்ற ''பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம்'' தென்னாற்காடு, வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம், பெரியார், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்படும் என்று கடந்த ஆண்டு இம்மாமன்றத்தில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். அதன்படி மேற்கூறிய மாவட்டங்களுடன் 1982-83 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் இப்புதிய தொழில் நுட்ப விரிவாக்கத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. இத்திட்டம் விவசாயப் பெருமக்களின் கவனத்தையும், நல்லெண்ணத்தையும் பெற்றுள்ளது.

வேகமாக வளர்ந்துவரும் மக்கள் தொகை பெருக்கம் நமது பொருளாதாரத்திற்கு ஒரு முக்கிய சவாலாக ஏற்பட்டுள்ளதை இவ்வரசு உணர்ந்து ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம், ஒருங்கிணைந்த மானாவாரி நில அபிவிருத்தித் திட்டம் போன்றவை மூலமாக வேளாண்மை உற்பத்தியை அதிகப்படுத்த ஒரு பலமுனை தாக்கு

[1983 மார்ச் 18

தலை தொடங்கியிருக்கிறது. நவீன தொழில் நுட்ப கண்டு பிடிப்புகளான தகுந்த இடுபொருட்கள் உபயோகம், திறன்பட்ட நீர் பராமரிப்பு முறைகள் போன்ற முக்கிய யுக்திகள் இம்மேம் பாட்டு திட்டத்திற்கென கையாளப்படும்.

பலதரப்பட்ட வேளாண்மை உற்பத்தித் திட்டங்களின் மூல மாக இவ்வுற்பத்திப் பெருக்கத்தை ஒரு சவாலாக எடுத்து அதற் கேற்ப நமது வேளாண்மை விரிவாக்க அமைப்பை நவீனப்படுத்தி யுள்ளோம். இருப்பினும் நமது மாநிலம் பருவமழை பொய்த்தல் குறைவுபட்ட காவிரி நீர்ப்பாசனம் போன்ற இடர்பாடுகளை கடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

எனவே பருவமழையின் குறைவு மற்றும் வேளாண்மை உற் பத்தியில் அதனால் பாதிப்பு பற்றி எடுத்து இயம்ப விழை கிறேன்.

பருவ நிலைமைகள்:

தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்தது மட்டுமின்றி, காவிரியில் நீர்வரத்தும் குறைந்தது.

1982–83 ஆம் ஆண்டில் மாநிலத்தின் பெரும்பாலான மாவட் டங்களில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை இரண்டும் பொய்த்துவிட்டன. இயல்புக்கு குறைவான கோடை மழையை தொடர்ந்து தென்மேற்கு பருவமழை மாநில அளவில் 37 சதம் குறைந்தது மட்டுமின்றி, வேளாண்மையில் முக்கிய மாவட்டங் களான தஞ்சாவூர், வட ஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட் டங்களில் இவ்விழுக்காட்டுக்கும் அதிகமான அளவில் குறைவு பட்டது. மாவட்டவாரியாக நோக்குமிடத்து மொத்தமான 15 மாவட்டங்களில் 12 மாவட்டங்களில் போதுமான மழையில்லை. தொடர்ந்து வந்த வடகிழக்குப் பருவமழையும் அதற்கு சமமான ஏமாற்றத்தையே தந்தது. 15 மாவட்டங்களில் 6 மாவட்டங் களில் போதுமான மழை இல்லை. 6 மாவட்டங்களில் இயல்புக்கு குறைவாக இறங்குமுகமாக மழை அளவு இருந்தது. திரு நெல்வேலி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங் களில் இயல்பான மழை அளவு இருந்தபோதிலும் தேவைப்பட்ட விகிதத்தில் பெய்யவில்லை.

இதனால் மாநிலத்தின் அனைத்து நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் குறைந்து வற்றியது. மாநிலத்தின் பெரிய நீர்த்தேக்கங் களில், குறிப்பாக மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு கர்நாடக மாநிலத் திலிருந்து குறைந்த நீர்வரத்தினால் இடர்பாடும் மற்ற நீர்த் தேக்கங்களில் தண்ணீர் அளவு மிக குறைந்தும் உள்ளது.

ஏரிகளிலும் குறைந்த அளவு நீரே உள்ளது. பல ஏரிகளில் தண்ணீரே இல்லை. கோடை மழை இன்மையை தொடர்ந்து தென்மேற்கு பருவமழையும் பொய்த்து விட்டதால் கிணறு களிலும் நீர்மட்ட அளவு வெகுவாக குறைந்துவிட்டது.



1983 மார்ச் 18]

மேற்கூறிய நிலையின் விளைவுகளால் வேளாண்மை பயிர் களான நெல், சிறுதானியம், பயறு வகைகளின் சாகுபடி மற்றும் உற்பத்தி வெகுவாக குறைந்து போயின. சாகுபடி பரப்ப குறைந்தது மட்டுமல்லாமல், மேற்கூறிய பயிர்கள் கடுமையாபு வறட்சியால் பாதிக்கப்பட்டதால் உற்பத்தியில் மேலும் இழப்பு ஏற்பட்டது.

பயிர் நிலைமைகள்

மேலே கூறியபடி, இயல்புக்கு மாறான பருவ நிலை கோளாறு களினால் மாநிலத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிர்களான நெல், சிறுதானியம், பயறு வகைகள், பருத்தி, நிலக்கடலை, கரும்பு முதலியன வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இப்பயிர்களில் நெல் பயிர்தான் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி குறைந்த அளவு உற்பத்தியை தொட்டிருக்கிறது.

நெற்பயிர் இந்த ஆண்டு இதுநாள் வரை 17 இலட்சம் எக்டேரில் தான் பயிர் செய்யப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டு சுமார் 28 இலட்சம் மெட்ரிக் டன்தான் அரிசி உற்பத்தி யாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறுதானிய உற்பத்தியும், ஆகஸ்டு திங்களில் முக்கியமாக பெய்ய வேண்டிய மழை அளவு குறைந்ததின் காரணமாக (64 விழுக்காடு குறைவு) வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. பயறு வகைகள் பெரும்பாலும் ஊடுபயி ராக எண்ணெய்வித்துக்களுடன் பயிரிடப்படுவதால், வறட்சியால் எண்ணெய் வித்துப் பயிர்களுடன் இவையும் காரிப் பருவத்தில் காய்ந்து விட்டன. இதைப்போன்றே வணிகப் பயிர்களான பருத்தி, மற்றும் கரும்பு உற்பத்தியிலும் பெரும் இழப்பே ஏற்பட்டுள்ளது.

மேற்கூறிய பருவ நிலைக் கோளாறுகளை மனதில் கொண்டு இவ்வாண்டு இறுதிக்குள் கீழ்வரும் உத்தேசமான உற்பத்தி அளவையே எதிர்பார்க்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நெல் | .. | 28.00 லட்சம் மெட்ரிக் டன்கள். |
| சிறுதானியங்கள் | .. | 12.00 ,, ,, |
| பயறுவகைகள் | .. | 2·60 ,, ,, |
| கரும்பு(வெல்லம்) | .. | 17.00 ,, ,, |
| பருத்தி | .. | 2.60 லட்சம் பொதிகள். |

1983-84ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்கள்.

நமது மக்களுக்குப் போதுமான வேளாண் விளை பொருட் களை தொடர்ந்து கொடுக்கமுடியும் என்ற உறுதியான குறிக் கோளுடன் இவ்வாண்டின் வறட்சி நிலைமை வரும் ஆண்டிலும்

தொடரும் என எதிர்நோக்கியும் 1983—84 ஆம் ஆண்டுக்குக் கீழ்காணும் உற்பத்தி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:—

| | | இலட்சம் டன்கள். |
|---|---|---|
| அரிசி .. | .. | 60.00 |
| சிறு தானியங்கள் | .. | 24,00 |
| பயறு வகைகள் | .. | 5.00 |
| கரும்பு (வெல்லம்) | .. | 24.13 |
| பருத்தி | .. | 5.00 |
| | | இலட்சம் பொதிகள் |

மானாவாரி சாகுபடி

மொத்த சாகுபடி பரப்பில் 52 விழுக்காடு மானாவாரி சாகுபடி பரப்பாகும். எனவே, திருத்திய மானாவாரி நில மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. 1982—83 ஆம் ஆண்டில் 212 நீர் பிடிப்புப் பகுதிகள் அமைத்து தீவிர மானாவாரி நில தொழில்நுட்ப முறைகள் உருவாக்கப்பட்டன. மானாவாரி தொழில் நுட்ப முறைகளில் சில் 3.20 லட்சம் எக்டேர் பரப்பில் செய்யப்பட்டன. மானாவாரிப் பகுதிக்கென வடிவமைக்கப்பட்ட உரம் மற்றும் விதை விதைக்கும் கருவிகள் உழவர் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மராட்டியம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடக மாநிலங்களில் மானாவாரி நிலங்களில் பயன்படுத்தப்படும் உரம் மற்றும் விதை விதைக்கும் கருவிகள் நமது மாநிலத்திற்கு வரவழைக்கப்பட்டு இங்கு பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது நீங்கலாக, இப்பகுதிகளில் இடுபொருட்கள், மற்றும் வேளாண்மை கருவிகள் வழங்குவது துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. புதிய 20 அம்ச திட்டத்தில் முக்கிய அம்சமாகிய இத்திட்டத்தின் சிறப்பை இது தொடர்பான பணித் திட்டங்கள், இப்பணிகளில் எய்தியுள்ள முன்னேற்றம் ஆகியவற்றிலிருந்து தெளிவாக தெரிந்து கொள்ளலாம். இம்மானாவாரி நில மேம்பாட்டு முயற்சிகள் 1983—84 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**நெல் மற்றும் சிறு தானியங்கள்**

1983—84 ஆம் ஆண்டில் அரிசி (நெல்) 26.50 இலட்சம் எக்டேரில் பயிரிடப்புட்டு 60 இலட்சம் டன் அரிசி உற்பத்தி அடையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் இவ்வாண்டின் வறட்சியின் விளைவையும் கருத்தில் கொண்டு இவ்விலக்கு திட்டமிடப்பட்டுள்ளது. நல்ல ரகவித்துக்களாலும், தகுந்த அளவு உரம் மற்றும் நுண் ஊட்டச்சத்து இடுவதாலும் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையை மேற்கொள்வதாலும், அறுவடைக்குப்பின் கடைபிடிக்கும் தொழில் நுட்பங்களாகிய சேமிப்பு ஆகியவற்றின் மூலம் மேற்குறிப்பிட்ட உற்பத்தி இலக்கை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.



1982 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 14.84 இலட்சம் எக்டேரில் உயர்ரக விளைச்சல் ரகங்கள் பயிரிடப்பட்டன. நவரைப் பருவத்தில் மேற்கொண்டு பயிர் செய்யப்படும் பரப்பு மிகவும் குறைவானதாகவேயிருக்கும். 1983-84 ஆம் ஆண்டு 26.50 இலட்சம் எக்டேர் குறியீட்டளவு பரப்பில் ஐ. ஆர். ரகங்கள் 22.00 இலட்சம் எக்டேரிலும் மற்ற உயர் விளைச்சல் ரகங்கள் 2.00 இலட்சம் எக்டேரிலும் ஆக மொத்தம் 24.00 இலட்சம் எக்டேர்களில் பயிர் செய்யப்படும். மேலும் தற்போது நெல்லுக்கு ஒரு எக்டேருக்கு 90:40:40 என்ற அளவில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்கள் என உரமிடும் அளவை 100:50:50 என்ற அளவிற்கு உயர்த்தப்படும்.

நெல்லுக்கு பயிர் பாதுகாப்பு செய்வதில் புகையான் மற்றும் எலி ஒழிப்பு ஆகிய குறிப்பிடத்தக்க திட்டங்களில் தனி கவனம் செலுத்தப்படும்.

**சிறுதானியங்கள்:**

சிறுதானிய சாகுபடியின் பரப்பும் மகசூலும் முறையே 19.80 இலட்சம் எக்டேர் 24.00 இலட்சம் டன்களாக இருக்கும். உயர் விளைச்சல் ரக திட்டத்தின்கீழ் 2.10 இலட்சம் எக்டேரில் சோளமும், 5.50 இலட்சம் எக்டேரில் கம்பும், 2.30 இலட்சம் எக்டேரில் கேழ்வரகும் மற்றும் 0.50 இலட்சம் எக்டேரில் மக்காச்சோளமும் ஆக மொத்தம் 8.40 இலட்சம் எக்டேர்களில் பயிர் செய்யப்படும் கே. எம். 1, கே. எம். 2, கே. 4, எச்.பி. கே. 2, மற்றும் கே. 3 ஆகிய கம்பு ரகங்களையும் கே. 5, கோ.18, சி. எஸ். எச். 5, ஐ. எஸ். 3541 மற்றும் கோவில்பட்டி நெட்டை ஆகிய சோள ரகங்களையும், கோ. 7, கே. 6 மற்றும் கோ. 11 கேழ்வரகு ரகங்களையும், கே.1, கங்கா 5 மற்றும் கே.2 முதலிய வீரிய ஒட்டு மக்காச்சோள ரகங்களையும் பயிரிட திட்டமிடப்பட்டிருக்கிறது. தற்போது ஒரு எக்டேருக்கு 70;35:30 என்ற அளவில் உரச்சத்துக்களைப் பயன்படுத்தி வருவதை 80:40:40 என்ற அளவில் அதிகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பயறு:**

தமிழ்நாட்டின் மொத்த பயறு தேவை 9 இலட்சம் டன்கள். நம் மாநிலத்தின் பயறு உற்பத்தி சுமார் 3 இலட்சம் டன்களே. பயறு தேவையின் பெரும்பகுதி பிற மாநிலங்களில் இருந்து பெறப்படுகிறது. 1985—86 ஆம் ஆண்டின் இறுதியில் பயறு உற்பத்தியை இரு மடங்காக ஆக்க அதாவது 6.40 இலட்சம் டன்கள் பயறு விளைச்சல் பெற மாபெரும் பயறு பெருக்குத் திட்டம் ஒன்று 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது.

1982-83 ஆம் ஆண்டில் 13.83 இலட்சம் எக்டேரில் பயறு பயிரிட திட்டமிட்டு டிசம்பர் 1982 முடிய 6.04 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை பொய்த்த மையாலும் வடகிழக்குப் பருவமழை திறனற்றும், பரவலற்றும்

பெய்ததாலும் பயறு சாகுபடி பரப்பில் குறைவும் விதைக்கப்பட்ட பயறு வகைகள் நல்லமுறையில் வளராததாலும், பயறு உற்பத்தி குறியீடான 4.80 இலட்சம் டன்களுக்குப் பதிலாக இவ்வாண்டின் உற்பத்தி 2.60 இலட்சம் டன்களாக இருக்கும். 1983-84 ஆம் ஆண்டில் பயறு சாகுபடி 14.25 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு 5.00 இலட்சம் டன்கள் பயறு உற்பத்தியை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

பயறு அபிவிருத்தி திட்டத்தின் பணியாளர்கள் 1–7–1982 முதல் பயிற்சி வழித் தொடர்புத் திட்டத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். 1982 டிசம்பர் முடிய 15,192 விவசாயிகள் பயறு உற்பத்தி நுணுக்க முறைகளில் பயிற்சி பெற்றனர். 1983–84 ஆம் ஆண்டில் 36,800 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

டிசம்பர் 1982 முடிய, 42,372 நுண்ணுயிர்ப்பைகள் பயறு விதைகளுடன் கலந்து விதைக்க விநியோகிக்கப்பட்டன. 1983–84 ஆம் ஆண்டில், 1,74,000 நுண்ணுயிர்ப்பைகள் விநியோகிக்கப்படும்.

மூன்று சதவிகிதம் டை அமோனியம் பாஸ்பேட் கரைசலை இலையில் தெளித்தால் பயறு மகசூல் அதிகரிக்கும். 1982 டிசம்பர் முடிய 398 எக்டேரில் தெளிக்கப்பட்டது. 1983–84 ஆம் ஆண்டில் 10,000 எக்டேரில் பயறு வகை பயிர்களுக்கு டை-அமோனியம் பாஸ்பேட் கரைசலை தெளிக்கவும், தெளிக்கும் செலவிற்கு ஒரு எக்டேருக்கு ரூ. 10 வீதம் மானியமளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் பயறு பெருக்க முன்னோடித் திட்டத்தின்கீழ், பணியாற்றிய பணியாளர்களை 1–7–1982 முதல் பயிற்சிவழி தொடர்புத் திட்டத்துடன் இணைத்து, இத்திட்டத்தின் நோக்கங்களை பயிற்சிவழி தொடர்புத் திட்டத்தின் மூலம் செயலாக்கப்படுகிறது.

மைய அரசு உதவிபெறும் பயறு பெருக்கத் திட்டத்தின்கீழ், டிசம்பர் 1982 முடிய பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 சதவீதம் மானியத்தில் 55 எக்டேரும், பூச்சி மருந்து தெளிக்க ஆகும் செலவிற்கு மானியமளித்து 582 எக்டேரும், 3,095 குவிண்டாலுக்கு பயறு சான்றிதழ் விதை உற்பத்திக்கு மானியமும் அளித்து செயலாக்கப்பட்டன. 1983-84 ஆம் ஆண்டில் நிருபன வயல்கள் 130 எக்டேரில் அமைக்கவும், பயிர்பாதுகாப்பு மருந்துகள் 50 சதவிகிதம் மானியத்தில் 3,333 எக்டேருக்கு அளிக்கவும், ஒருமித்த பூச்சி மருந்து தெளித்தலுக்கு 2,000 எக்டேருக்கு மானியம் அளிக்கவும், சான்றிதழ் விதை உற்பத்தி 5,000 குவிண்டாலுக்கு மானியம் அளிக்கவும், 34,666 நுண்ணுயிர்ப்பைகள் 50 சதவிகிதம் மான்ய விலையில் அளிக்கவும், 200 கைத்தெளிப்பான்கள் 50 சதவிகிதம் மான்ய விலையில் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து 237 குவிண்டால் பயறு கரு விதைகளைப்பெற திட்டமிடப்பட்டுள்ளது.



பருத்தி:

தமிழ்நாட்டின் பருத்தி தேவை சுமார் 14 இலட்சம் பேல்
களாகும். ஆனால் உற்பத்தி 4 முதல் 5 இலட்சம் பேல்கள்
தான். இம் மாநிலத்தின் மீதி தேவைக்கு மற்ற மாநிலங்களி
லிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டு
3.60 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யத்
திட்டமிடப்பட்டதற்கெதிராக, 1982 ஆம் வருடம் டிசம்பர்
மாதம் முடிய 1.56 இலட்சம் எக்டேர் பரப்பளவில் மட்டும்தான்
பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. பருத்தி சாகுபடி
பரப்பளவு மற்றும் சாகுபடி செய்த பருத்தியின் உற்பத்திச் சரி
விற்கு 1982–83 ஆம் ஆண்டில் தென்மேற்கு பருவமழை பொய்த்
ததும் வடமேற்கு பருவமழை குறைவாகவும் பரவலாக பெய்யா
ததுமே காரணமாகும். எனவே, பருத்தி உற்பத்தியும்,
குறியீடான 5 இலட்சம் பேல்களுக்கு பதிலாக 2,60 இலட்சம்
பேல்கள் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்
படுகிறது. 1983 84-ஆம் ஆண்டில் 3 60 இலட்சம் எக்டேரில்
பருத்தி பயிர் செய்யவும் 5.00 இலட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தி
செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு உதவியில் செயல்படுத்தப்பட்டு வரும் பருத்தி
அபிவிருத்தி திட்டத்தில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்
முடிய 880 எக்டேர்களில் மானாவாரி பருத்தி செயல் விளக்கங்
கள் செய்யப்பட்டது. 1,728 குவிண்டால் சான்றிதழ் பெற்ற
பருத்தி விதை உற்பத்தி செய்யப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டில்
1.500 எக்டேர்களில் மானாவாரி பருத்தி சயல் விளக்கங்கள்
செய்யவும் 4,000 குவிண்டால் சான்றிதழ் பெற்ற பருத்தி விதை
களைக் கொள்முதல் செய்யவும், 4,000 எக்டேர்களில் ஒட்டு
மொத்த பயிர்ப் பாதுகாப்பு செய்யவும், 220 பயிர்ப் பாதுகாப்பு
கருவிகள் 25 சதவிகித மான்யத்தில் வழங்கவும், 251.60 குவிண்
டால் மூல மற்றும் ஆதார விதைகள் உற்பத்தி செய்ய தமிழ்நாடு
வேளாண் பல்கலைக் கழகத்துடன் கலந்து ஆலோசித்து திட்டம்
வகுக்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

கரும்பு:

21 சர்க்கரை ஆலைகள் மற்றும் வெல்லத் தயாரிப்பாளர்
களின் கரும்பு தேவையை தரம் மற்றும் உற்பத்தி அளவில்
பூர்த்தி செய்ய இம் மாநிலத்தில் கரும்பு பெருக்குத் திட்டம்
செயல்பட்டு வருகிறது. 1982-83 ஆம் ஆண்டில் 1.75 இலட்சம்
எக்டேர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யத்திட்டமிடப்பட்டதற்
கெதிராக, டிசம்பர் மாதம் முடிய 1.31 இலட்சம் எக்டேர்
சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1982–83 ஆம் ஆண்டில் தென்
மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததின் காரண
மாக சாகுபடி செய்யப்பட்ட கரும்பு பயிர் வறட்சி நிலைக்குள்
ளாகி, 2?.52 இலட்சம் டன்கள் வெல்ல உற்பத்திக் குறியீட்டுக்
கெதிராக 17.00 லட்சம் டன்கள் மட்டுமே உற்பத்தி இருக்கும்
என் எதிர்பார்க்கப்படுகிறது. 1983–84 ஆம் ஆண்டில் 1.78
இலட்சம் எக்டேரில் கரும்பு பயிர் செய்து 24,13 இலட்சம்
டன் வெல்லம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய 0.356 இலட்சம் எக்டேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட விதைக்கரணைகள் நடவும் 1.221 இலட்சம் எக்டேரில் தேவைக்கேற்ற உரமிடவும் 80.47 இலட்சம் எக்டேரில் பயிர்ப் பாதுகாப்பு மேற் காள்ளவும் திட்ட மிடப்பட்ட 1.75 இலட்சம் எக்டேருக்கு எதிராக சாதனை செய்யப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் 1.78 இலட்சம் எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒட்டுண்ணிகள் வெளியிடுவதன் மூலம், கரும்பு குருத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 21 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் இம்மாநிலத்தில் சயல்பட்டு வருகிறது, 1982-83 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய 2431.5 எக்டேர் பரப்பில் ஒட்டுண்ணிகள் விடப் பட்டது. 1983–84 ஆம் ஆண்டில் 10,500 எக்டேரில் ஒட்டுண்ணிகள் விட திட்டமிடப்பட்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில், டிசம்பர் 1982 முடிய 79 கூட்டு செயல் விளக்கங்கள் திட்டமிடப்பட்ட 525 கூட்டு செயல் விளக்கங்களுக்கெதிராக அமைக்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டில் 525 கூட்டு செயல் விளக்கங்கள் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

புகையிலை:

மெல்லும் புகையிலையின் தற்போதைய மகசூலையும், தரத்தையும் திருந்திய சாகுபடி முறைகள், உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு மற்றும் பொறுக்கு விதைகள் ஆகியவற்றை நாற்றங்கால் முதல் அறுவடை வரை கடைபிடிப்பதன் மூலமாக அதிகரிக்க இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1982-83 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 7,779 எக்டேர்களில் பொறுக்கு விதைகளை உபயோகித்தும், 6,692 எக்டேர்களில் உரமிட்டும், 5,287 எக்டேர்கள் பயிர்ப் பாதுகாப்பு செய்தும், 7,047 எக்டேர்கள் கட்டுகோப்பு முறைப்படி சாகுபடி செய்தும் 19,200 எக்டேர்கள் குறியீட்டிற்கெதிராக சாதனைகள் செய்யப் பட்டது. 440 கிலோ விதைகள் கொள்முதல் செய்வதற்கு பதில் 203 கிலோக்கள் கொள்முதல் செய்யப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டில் 19,200 எக்டேர்களில் பொறுக்கு விதைகள் கொண்டும், உரமிட்டும் பயிர்ப் பாதுகாப்பு செய்தும், கட்டுக் கோப்பு சாகுபடி செய்யவும் மற்றும் 440 கிலோ கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இடுபொருள் விநியோகம்:

இத்துறையின் பல்வேறு முன்னேற்றப் பணிகளில் ஒரு பகுதி யாக, இடுபொருள்களைத் தரமானதாகவும்' நியாயமான விலையிலும் விவசாயிகளுக்குக் கிடைக்க இத்துறை வழி வகுக்கிறது. இவை இத்துறை நிர்வாகத்தில் இருக்கும் வேளாண் கிடங்குகள் வழியாகவும், மற்றும் அதிகமான தனியார் வியாபார மையங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



விதைகள், உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் ஆகியவற்றின் தரங்களை விதைச் சட்டம், உரக்கட்டுப்பாடு சட்டம் 1957 மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து சட்டம் ஆகியவைகள் கொண்டு அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பரிசோதனை நிலையங்கள் வழியாகவும் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கிறது.

விதைகள்—நெல் மற்றும் சிறு தானியங்கள்:

டிசம்பர் 1982 முடிய 9,579.56 டன்கள் நெல் விதைகளும், 168.93 டன்கள் கேழ்வரகு மற்றும் உயர்ரக சோள விதை களும் 440.05 டன்கள் வீரிய ஒட்டு சிறுதானிய விதைகளும் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

1983-84 ஆம் வருடத்தில் 13,500 டன்கள் நெல்விதையும், 353 டன்கள் கேழ்வரகு மற்றும் உயர்ரக சோள விதைகளும், 742 டன்கள் வீரிய ஒட்டு சிறுதானிய விதைகளும், விவசாயி களுக்கு விநியோகிக்கப்படும். இவை அனைத்தும் சான்றிதழ் பெற்ற விதைகளாக இருக்கும்.

பயறு வகைகள்:

டிசம்பர் 1982 முடிய தரமான மற்றும் சான்றிதழ் பெற்ற பயறு விதைகளை 1,150 டன்கள் விவசாயிகளுக்கு விநி யோகிக்கப்பட்டிருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டில் 2,550 டன்கள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 237 குவிண்டால்கள் கரு விதைகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திடமிருந்து பெறப் பட்டு 241 டன்கள் ஆதார விதைகளாகப் பெருக்கம் செய்யப் படும்.

பருத்தி:

டிசம்பர் 1982 வரை தரமான, பதிவு செய்த மற்றும் சான்றிதழ் பெற்ற பருத்தி விதைகள் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 384.5 டன்கள் விநியோகிக்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு 770 டன்கள் தரமான பதிவு செய்த மற்றும் சான்றிதழ் பெற்ற பருத்தி விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக பெருக்கம் செய்யப்படும்.

கரும்பு:

டிசம்பர் 1982 முடிய 58 எக்டேர்கள் முதற்கட்ட கரும்பு நாற்றங்காலும், 195 எக்டேர்கள் இரண்டாம் கட்ட நாற்றங் காலும், மற்றும் 1,139 எக்டேர்கள் வணிக ரீதியான நாற்றங் காலும், அமைக்கப்பட்டது. 1983—84 ஆம் ஆண்டு 35 எக்டேர்களில் முதற்கட்டம் 350 எக்டேர்களில் இரண்டாம் கட்டம் மற்றும் 3,500 எக்டேர்களில் வணிக ரீதியான நாற்றங் கால்கள் அமைத்து தரமான கரும்பு விதைக்கணுக்களைப் பெருக்கம் செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது,

**இயற்கை மற்றும் இரசாயன உரங்கள்:**

1982–83 ஆம் ஆண்டில், டிசம்பர் முடிய 2.07 இலட்சம் டன்கள் தழைச்சத்தும் 0.71 இலட்சம் டன்கள் மணிச்சத்தும் 0.77 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களைப்பெருமளவில் இயற்கை உரமான மக்கு உரத்தோடு பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இரசாயன உரங்களைக் குறைந்த அளவில் உபயோகிக்கப்படும். புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம் மற்றும் தர்மபுரி ஆகிய ஆறு மாவட்டங்களில் தீவிர உர மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில் நிலவும் வறட்சியின் காரணமாக இரசாயன உர உபயோகத்திற்கான குறிப்பிட்ட இலக்குகளை முழுமையாக அடைதல் இயலாது. உரச் செலவை குறைப்பதற்கும் வயலின் வளத்தைப்பாதுகாப்பதற்கும் உயிரின உர வகையினைச் சார்ந்த நீலப் பச்சைப் பாசியை இரசாயன உரங்களுடன் நெற் பயிருக்கு பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. டிசம்பர் 1982 முடிய 815 டன்கள் நீலப் பச்சைப் பாசி பெருக்கம் செய்யப்பட்டு, 81,500 எக்டேர் நெல் பயிருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பயிறு மற்றும் பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விதைகளுடன் கலந்து விதைப்பதற்கு ஒரு இலட்சத்து பதினோராயிரம் நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. டிசம்பர் 1982 முடிய 71.90 இலட்சம் டன்கள் உள்ளூர் எரு, மற்றும் 1.86 இலட்சம் டன்கள் கழிவு எரு ஆகியவைகள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

1983-84 ஆம் ஆண்டில் 3·70 இலட்சம் டன்கள் தழைச் சத்து, 1.15 இலட்சம் டன்கள் மணிச்சத்து, 1.15 இலட்சம் டன்கள் சாம்பல் சத்து உரங்கள் உபயோகப்படுத்தப்படும். நீர்ப்பாசனமுள்ள இடங்களில் இரசாயன உரங்களை அதிக அளவில் உபயோகப்படுத்தி நிலத்தின் முழு அளவு உற்பத்தித் திறனைப்பெற முயற்சிகள்எடுக்கப்பட்டு வருகின்றன. அதுவன்றி புன்செய் நிலப் பயிர்களுக்கும் இரசாயன உர உபயோகத்தை அதிகரிக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மானாவாரி நிலங்களில் இரசாயன உரங்களின் பலனை விதை மற்றும் உரமிடும் கருவிகளை பயன்படுத்துவதன் மூலம் அதிக அளவில் பெற முடியும். விதை மற்றும் உரமிடும் கருவிகள் பயன்படுத்துதல் பற்றிய செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப் பட்டு, புன்செய் நில விவசாயிகளிடையே பரப்பப்படும். மேலும் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வரும், தீவிர உர மேம்பாட்டுத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் தொடர்ந்து மேலும் தீவிரமாகச் செயல்படுத்தப் படும். நீலப் பச்சைப் பாசி ஒரு லட்சம் எக்டேர் நெல் வயல்



களுக்கு விநியோகிக்கப்படும். மற்றொரு உயிரின உரமான அசோலா தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு விதைப் பண்ணைகளில் பெருக்கம் செய்யப்பட்டு 1983-84 ஆம் ஆண்டில் விவசாயி களுக்கு விநியோகிக்கப்படும். 3.50 இலட்சம் நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள் பசுந்தாள் உரப் பயிர்கள் மற்றும் பயறு வகை விதைகளுடன் கலந்து விதைப்பதற்காக விநியோ கிக்கப்படும். மக்கு உர உற்பத்தி திட்டமும் உரிய கவனத்தைப் பெறும்.

**பயிர்ப்பாதுகாப்பு:**

1982-83-ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 37.785 இலட்சம் எக் எக்டேரில் பூச்சி தடுப்பு முறைகளும், 12.12 இலட்சம் எக் டேரில் நோய்த்தடுப்பு முறைகளும் உணவு மற்றும் இதர பயிர் களில் செயல்படுத்தப்பட்டன.

1983-84 ஆம் ஆண்டில் 56.140 இலட்சம் எக்டேரில் பூச்சி தடுப்பு நடவடிக்கைகளும் 16.170 இலட்சம் எக்டேரில் நோய் தடுப்பு நடவடிக்கைகளும், உணவு மற்றும் இதர பயிர் வகை களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், விவசாயத்துறை விற்பனை கிடங்குகளின் மூலமாக 7,300 டன்கள் தூள் மருந்துகளும் 6 இலட்சம் லிட்டர் திரவ மருந்து களும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 1982 டிசம்பர் முடிய 3,413 டன்கள் தூள் மருந்தும் 1,12,875 லிட்டர் திரவ மருந்துகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நெல் வகை குருத்துப் பூச்சியைத் தடுக்க ஒட்டு மொத்த மருந்து தெளிக்கும் பணி 40,000 எக்டேரில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, 1982 டிசம்பர் முடிய 20,200 எக்டேர் பரப்பில் மருந்து தெளிக்கப் பட்டது. ஒட்டு மொத்த மருந்து தெளிக்கும் திட்டத்தில் எக்டேருக்கு ரூ. 125 வீதம் பூச்சி மருந்திற்கும், மற்றும் மருந்து தெளிக்கும் செலவிற்கும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் ஒரு எக்டேருக்கு ரூ. 15 மானியமாக தெளிக்கும் செலவிற்காக அனுமதிக்கப்படும். இத்திட்டத்திற்கு ஆகும் செலவை ஒட்டு மொத்த மருந்து தெளிக்கும் பணியில் பலனடையும் விவசாயிகளுக்கு மானியத் தொகை போக கடனாக அளிக்கப் பட்டு வருவாய்த்துறை வசூல் சட்டத்தின்படி நிலவரி வசூல் செய்யும் போது வசூலிக்கப்படுகிறது. 1983-84-ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நெற்பயிரில் ''புகையானை'' தடுக்க பரந்த அளவில் மருந்து தெளிக்கும் திட்டம் 20,000 எக்டேரில் செயல்படுத்த திட்டமிட்டு டிசம்பர் 1982 வரை 15,800 எக்டேரில் மருந்து தெளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் பூச்சி மருந்துகள் 50 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன் மருந்து தெளிக்கும் செலவிற்காக ஒரு எக்டேருக்கு ரூ. 15 வீதம் மானியமாக வழங்கப்படுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் 20,000 எக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1983-84 ஆம் ஆண்டில், பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை அறியவும் பூச்சி மருந்து மற்றும் மருந்தடிக்கும் சாதனங்களை உபயோகிக்கும் முறைகளைக் குறித்தும். ஒரு வட்டாரத்திற்கு 20 ஆசிரியர்கள் வீதம் மாநிலம் முழுவதும் 7,480 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்கள் பூச்சி தாக்குதலைப் பற்றியும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதைப்பற்றியும்விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்ல ஏதுவாகிறது. 1982-83 ஆம் ஆண்டு டிசம்பர் வரை 6,‘35 ஆசிரியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப் பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பூச்சி நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ‘‘செயல் விளக்கங்கள்’’ மூலமாக பயிர்களுக்கு சேதமுண்டாகும்போது தேவையான தடுப்பு முறைகளை எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1982-83 ஆம் ஆண்டு இரண்டு இடங்களில் 100 ஏக்கர் பரப்பளவில் இரு பருவங்களுக்கு செயல்பட்டு வருகின்றன. மேலும் 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர பூச்சி நோய் கணக்கெடுக்கும் திட்டம் பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் அலுவலர்களால் மாநிலம் முழுவதும் தீவிரமாக செயல்படுத்தப்படும். விவசாயிகள் நக்க நேரத்தில் தடுப்பு முறைகளை மேற்கொள்ள இத்திட்டம் உதவியாயிருக்கும்.

1982-83 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் எலி ஒழிப்புக்கான 24,000 எக்டேர் சிறப்புத் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது இச்சிறப்புத் திட்டம் 1983-84 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**உழவர் கல்வியும் பயிற்சியும்:**

பயிர் சாகுபடி முறையில் உள்ள புதிய தொழில் நுட்பங்களை வேளாண்குடி மக்கள் தெரிந்து கொள்வதற்கு உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக பல பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. உழவர் பயிற்சி நிலையம் ஒவ்வொரு மாவட்டத்தில் ஒன்று உள்ளது. வேளாண்மைத்துறையின் கீழ் 12 நிலையங்களும், தோட்டக்கலை துறையின் கீழ் ஒரு நிலையமும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் கீழ் 2 நிலையங்களும் ஆக மொத்தம் 15 நிலையங்கள் இம் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. உழவர் ஆய்வு மன்றங்கள் நிறுவப்பட்டு, அம்மன்றங்களின் அமைப்பாளர்கள் மூலமாக முற்போக்கு விவசாயிகளை தேர்ந்தெடுத்து தகுந்த பயிற்சி நடத்தப்படுகின்றன.



உழவர் பயிற்சி நிலையங்கள் தவிர, கிராம இளைஞர்களை புதிய சாகுபடி முறைகள், வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங் களில் பயிற்றுவிக்க 12 மாவட்டங்களில் வேளாண்மைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஆண்டுதோறும் 18—லிருந்து 30 வயதுக் குட்பட்ட எட்டாம் வகுப்பு தகுதியுள்ள இருபது இளைஞர்கள் இப்பணியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இப்பள்ளியில் படிப்பவர்களுக்கு ரூபாய் 70 வீதம் உதவித் தொகை வழங்கப் படுகிறது. மலைப் பிரதேசத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு ரூ. 75 வீதம் வழங்கப்படுகிறது- இப்பள்ளியில் பயிற்சி காலம் ஓர் ஆண்டு ஆகும். ஆண்டு முடிவில் தேர்வு நடத்தப்பட்டு தேறிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவை இத்துறையின் தொடர் திட்டங்கள் ஆகும்.

மண் ஆய்வுக் கூடங்கள்

தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் (பெரியார் மாவட்டம் நீங்கலாக) மண் ஆய்வுக் கூடங்கள் நிறுவப் பட்டுள்ளன. மேலும் அதே போன்று இயங்கும் மண் ஆய்வுக் கூடங்கள் எல்லா மாவட்டங்களிலும் (பெரியார் மாவட்டம் தவிர) இயங்கி வருகின்றன. இத்தகைய இயங்கும் மண் ஆய்வுக் கூடங்களில் தேவையான கருவிகளை பொருத்திய பிறகு அவ்வாய்வுக் கூடங்கள் களப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன. இந்த ஊர்திகள் கிராமங்களுக்கு செல்லும் நாட்களை வானொலி மூலமும், வேளாண்மைத்துறை அலுவலர்கள் மூலமும், முன் கூட்டியே அறிவித்து விட்டு கிராமங்களை அடைகின்றன. அங்கு சேகரிக்கப்பட்ட மண் மற்றும் பாசன நீர் மாதிரிகளை ஆய்வுசெய்து பரிந்துரைகளை விவசாயிகளுக்கு கிராமங்களிலேயே கொடுக்கப்படுகின்றன. இந்த ஆய்வுக் கூடங்கள் உரப் பரிந் துரைகளை வழங்குவதோடு களர், உவர் மில நிலையை திருத்தும் முறைகளையும் பரிந்துரைகளையும் விவசாயிகளுடன் விவாதித்து கிராமத்திலேயே வழங்குகின்றன.

காஞ்சிபுரம், ஆடுதுறை, கோவில்பட்டி ஆகிய இடங்களி லுள்ள மண் ஆய்வுக் கூடங்களில் நுண்ணூட்ட சத்துக்களான துத்தநாகம், இரும்பு, தாமிரம், மங்கனீஸ் போன்ற சத்துக் களை ஆய்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும் திருச்சிரப்பள்ளி, கோவை ஆகிய இடங்களில் உள்ள மண் ஆய்வுக் கூடங்களுக்கு தேவையான கருவிகளை இங்கிலாந்து அரசு நன்கொடையாக வழங்கி உள்ளது. கூடிய விரைவில் இக்கருவிகள் பொருத்தப்பட்டு உபயோகத்திற்கு கொண்டு வரப்படும்.

உயர் விளைச்சல் ரகங்களை அதிக அளவில் பயிரிடுவதாலும், இரசாயன உரங்கள் தொடர்ந்து உபயோகிப்பதாலும், பயிருக்கு தேவையான நுண்ணூட்ட சத்துக்களில் குறைபாடு ஏற்பட்டு அதிக மகசூல் அடைவதற்கு தடையாக உள்ளன. எனவே தான் நுண்ணூட்ட சத்தின் குறைபாடுகளை நிலத்தில் கண்டறிந்து

தேவையான நுண்ணூட்ட சத்தின் (இரசாயன உரங்களுடன்) இடுவதற்கு, நமது மாநிலத்தில் ஐந்து இடங்களில் நுண்ணூட்ட சத்தின் அளவை ஆய்வு செய்வதற்கு வசதிகள் செய்யப் படுகின்றன. எல்லா ஆய்வுக் கூடங்களும் சேர்ந்து ஒன்பது இலட்சம் மண் மாதிரிகளை ஆய்வு செய்யக் கூடிய திறன் கொண்டவை. மண் மாதிரிகள் தவிர பாசன நீர் மாதிரிகளும் மண் ஆய்வு கூடங்கள் மற்றும் இயங்கும் மண் ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டு தக்க பரிந்துரைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

உரக்கட்டுப்பாடு ஆய்வுக் கூடங்கள்

நமது மாநிலத்தில் நான்கு உரக்கட்டுப்பாடு ஆய்வுக் கூடங்கள் கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோவில்பட்டி, ஆகிய இடங்களில் உள்ளன. இவை மொத்தமாக ஆண்டிற்கு 7,000 மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் படைத்தவைகளாகும். உரக்கட்டுப்பாடு ஆணையின் உர ஆய்வாளர்களால் எடுக்கப் படும் மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்யப் பட்டு, விற்கப்படும் உரங்கள் ஆதரமானவையா, தரக்குறை வானவையா, கலப்படம் செய்யப்பட்டவையா, போலி யானவையா என்று ஆய்வறிக்கைகள் வழங்கப்படுகின்றன. இவ் வாய்வு அறிக்கைகளின்பேரில், உர விற்பனையாளர்கள் மற்றும் உர உற்பத்தியாளர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. இவ்வாறு விவசாயிகள் தரமான உரங்களை உபயோகிப்பதற்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

பூச்சிக்கொல்லி ஆய்வுக் கூடங்கள்

1968 ஆம் ஆண்டைய பூச்சிக் கொல்லி சட்டத்தின் கீழ் பூச்சி கொல்லி ஆய்வாளர்களால் பூச்சிக் கொல்லி விநியோகஸ்டங்களி லிருந்து எடுக்கப்படும் மாதிரிகளை மாநிலத்தில் உள்ள பூச்சிக் கொல்லி ஆய்வுக்கூடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன, காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, ஆடு துறை, மதுரை மற்றும் கோயில்பட்டி ஆகிய 7 இடங்களில் பூச்சிக் கொல்லி ஆய்வுக் கூடங்கள் உள்ளன. இக்கூடங்களில் மாதிரிகளை ஆய்வுசெய்து தரமானவையா, தரமில்லாதவையா என்று அறிக்கைகள் அனுப்பப்படுகின்றன. தரமற்ற பூச்சி கொல்லிகளை விநியோகிப்போர் மீது விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆண்டிற்கு 14,760 மாதிரிகளை ஆய்வு செய்வதற்கான வசதி தற்போது இவ்வாய்வுக் கூடங்களில் உள்ளது.

மண் ஆய்வு மற்றும் நில உபயோக அமைப்பு

தமிழ்நாட்டில் மண் ஆய்வு அலகுகள் வேலூர், கோவை, தஞ்சை, பாளையங்கோட்டை ஆகிய நான்கு இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இதுவரை தருமபுரி, சேலம், கோவை (பெரியார் மாவட்டம் உள்பட) திருச்சி- மதுரை. புதுக்கோட்டை, தஞ்சை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில்



மண் அளவைப் பணி முடிந்துள்ளது. செங்கல் குறைந்த மட்ட மண் தென்னாற்காடு, இராமநாதபுரம், பட்டு; வடஆற்காடு, மாவட்டங்களில் இப்பணி நடைபெற்று திருநெல்வேலி ஆகிய தஞ்சை மாவட்ட மைய அலகு விரிவான மண் வருகின்றது. அளவைப்பணியை மேற்கொண்டுள்ளது.

தரக்கட்டுப்பாடு மைய ஆய்வுக் கூடம்

இந்த ஆய்வுக்கூடம் நவம்பர் 1982-ல் புதியதாக குடுமியா மலையில் துவக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள மண்வள, உர, பூச்சிக்கொல்லி ஆய்வுக் கூடங்களில் நடைபெறும் இரசாயன ஆய்வுகளின் தரத்தினை உயர்த்துவதும், ஆய்வு பணியாளர்களுக்கு தக்க பயிற்சி அளிப்பதும், ஆய்வு முறைகளின் மேம்பாட்டிற்கான வழிகளை கண்டுபிடிப்பதும் இந்த ஆய்வுக்கூடத்தின் முக்கிய பணிகளாகும், இப்பயிற்சிக்கான பாடத்திட்டங்கள் இறுதி யாக்கப்பட்டுள்ளன.

1983-84 ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள்

மேற்கூறிய நடைமுறைத் திட்டங்களைத் தவிர கீழ்க்கண்ட திட்டங்கள், விவசாய அபிவிருத்தியின் பொருட்டு 1983-84 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட இருக்கின்றன.

விதை சுத்திகரிப்பு மையங்கள்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்ற சான்றிதழ் பெற்ற விதைகளை வழங்குவதும், அதற்கான சுத்திகரிப்பு மையங்களை உருவாக்கவும் ஏழு சுத்திகரிப்பு மையங்களை உருவாக்க திட்டமிடப்பட்டது. மேற்கூறிய ஏழு சுத்திகரிப்பு மையங்களில் ஐந்து மையங்களை ஆரம்பிக்க அரசு ஆணை வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள இரண்டு மையங்கள செங்கை மாவட்டத்தில் கொழந்தலூரிலும், வடஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும் ஆரம்பிக்கப் பட உள்ளன. இதனால் விதை சுத்திகரிப்பு கொள்ளளவு தற்போதைய 11,000 மெட்ரிக் டன்களிலிருந்து 17,250 மெட்ரிக் டன்களாக உயர்த்தப்படும்.

நுண்ணுயிர் கலவை பொட்டலங்களின் உற்பத்தியை

அதிகரித்தல்

நுண்ணுயிர் கலவையைக் கொண்டு பயறு விதைகளை விதை நேர்த்தி செய்வது வேளாண்மை மக்களிடையே, வருடத்திற்கு வருடம் அதிகமாய் பரவி வருகிறது. தற்போதைய நுண்ணுயிர் கலவை பொட்டலங்களின் உற்பத்தி அளவு, தேவைக்கு போதுமானதாக இல்லை. எனவே, கடலூரில் ஏற்கனவே இருக்கும் நுண்ணுயிர் கலவை பொட்டலங்கள் தயார் செய்யும் நிலையத்தை விரிவு படுத்துவதின் மூலம் நான்கு இலட்சம்

நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்களை கூடுதலாக தயார் செய்து, ஆண்டிற்கு மொத்தம் 7·50 இலட்சம் நுண்ணுயிர் கலவை பொட்டலங்களை லாபநஷ்டமில்லாத விலையில் வினியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் மண் பரிசோதனைக் கூடம் ஒன்றும்

நடமாடும் மண் பரிசோதனைக் கூடம் ஒன்றும் ஏற்படுத்துதல்

புதியதாக ஆரம்பிக்கப்பட்ட பெரியார் மாவட்டத்தில் மண் பரிசோதனைக் கூடமும் நடமாடும் மண் பரிசோதனைக் கூடமும் இல்லை. ஆகவே பெரியார் மாவட்டத்தில் 1983–84–ம் ஆண்டில் மண் பரிசோதனைக் கூடம் ஒன்றும் நடமாடும் மண் பரிசோதனைக் கூடம் ஒன்றும் ஆரம்பித்து மண் பரிசோதனை கொள்ளளவான ஆண்டிற்கு 9 லட்சத்திலிருந்து 9.54 லட்சம் இலக்குகளை அடைய எதிர்பார்க்கப்படுகிறது.

பூச்சி கொல்லி பரிசோதனை நிலையம் ஏற்படுத்துதல்

பூச்சி மருந்துகளின் மீதான தரக்கட்டுப்பாட்டை மேலும் சிறந்த முறையில் செயல்படுத்த, ஏற்கெனவே இருக்கும் 7 பரிசோதனை நிலையங்களின் மொத்த பரிசோதனை அளவு, தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் தேவைக்கு ஈடுகட்ட முடியாததால், கூடுதலாக இரண்டு பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு கூடுதல் பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்களை நிறுவுவதால் இம்மாநிலத்தின் பூச்சி மருந்து பரிசோதனைத் திறன் ஆண்டுக்கு 14,760 மாதிரிகளில் இருந்து 18,360 மாதிரிகளாக உயர்த்தப்படும்.

உர ஆய்வுக் கூடங்கள்

இம்மாநிலத்தில் 164 உரத் தயாரிப்பு நிறுவனங்களும் 14,298 உர விற்பனைக் கடைகளும் தனியார் மற்றும் கூட்டுறவுத்துறை மூலமாக இயங்கிவருகின்றன. இக்கடைகளின் மூலம் விற்கப்படும் உரத்தின் தரத்தை கண்காணிக்க தற்போது இயங்கி வரும் ஆய்வுக்கூடங்கள் (ஆண்டிற்கு 6,480 மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்டவை) உர ஆய்வாளர்களால் எடுக்கப்படும் மாதிரிகளை ஆய்வு செய்ய போதுமானதாக இல்லை. எனவே ஆண்டு ஒன்றுக்கு 100,80 மாதிரிகள் ஆய்வு செய்யும் திறனுடைய மேலும் இரு உர ஆய்வுக் கூடங்களை காஞ்சி மற்றும் ஈரோடு நகரங்களில் அமைக்க திட்டமிடபபட்டுள்ளது.

விவசாய வானிலை முன்னறிவிப்புப் பணி

காலநிலை, மழை அளவு மற்றும் பயிர்களின் நிலைமை பற்றிய தகவல்களை மாவட்டங்களிலிருந்தும், வானிலை ஆராய்ச்சி நிலையங்களிலிருந்தும் சேகரித்து அத்தகவல்களிலிருந்து தக்க வேளாண் வானிலை அறிவுரைகளை வானொலி மற்றும் பிற சாதனங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக கிடைக்க வழிவகை செய்யப்படும்.



அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவது

திருநெல்வேலியில் இயங்கி வரும் வேளாண் துறை அனைத்து அலுவலகங்களும் ஒரே இடத்தில் அமைத்து செயல்பட தனியாக கட்டிடம் கட்ட, அரசு முடிவு செய்துள்ளது. இதனால், விவசாயிகளுக்கு நன்மை பயப்பதுடன் இத்துறை பெருந்தொகையை வாடகையாக செலவழிப்பதும் தவிர்க்கப்படும்.

திருத்திய மற்றும் வழக்கத்திலுள்ள உழவியல் கருவிகள் விநியோகித்தல்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட உழவியல் கருவிகளை, வேளாண் கிடங்குகள் மூலமாக வாங்கி விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளின் நேரமும் வேலைப்பளுவும் குறைவதுடன் அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தவும் ஏதுவாகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறை

உழவர்களின் பெரு நன்மைக்காக, வேளாண்மைப்பொறியியல்துறை கீழ்க்கண்ட திட்டங்களை செயலாற்றி வருகிறது:—

(1) நிலவள மேம்பாட்டுத் திட்டம்.

(2) சிறுபாசனத் திட்டம்.

(3) மண் மற்றும் நீர்வளப்பாதுசாப்புத் திட்டங்கள்.

(4) பாசனப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்.

(5) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்கள்

நிலவள மேம்பாட்டுத் திட்டம்

உழவர்கட்கு உதவிடும் வகையில் இத்துறையிடம் 147 புல்டோசர்கள் 4 முன்புறம் பொருத்தப்பட்ட சமன்செய் கருவிகள் 194 டிராக்டர்களும் உள்ளன. இவை மாவட்ட மற்றும் வட்ட அளவில் உழவர்களின் தேவைக்காக வைக்கப்பட்டுள்ளன. தங்களது நிலங்களில் நிலச்சமன்பாடு, நிலச்சீரமைப்பு எந்திர சாகுபடி, முதலியவற்றை மேற்கொள்வதற்காக இந்த எந்திரங்கள் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக உழவர்களிடமிருந்து மணிக் கணக்கில் வாடகை பெறப்படுகிறது.

வேளாண்மையை இலாபகரமானதாக்கும் மேம்பாட்டுப் பணிகள்.

இவ்வாண்டில் 1982–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை 5,700 எக்டேர் பரப்பில் நிலச்சமன் செய்யப்பட்டுள்ளது: 1983-84-ஆம் ஆண்டில் 7,000 எக்டேர் பரப்பில் நிலச்சமன்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## இயந்திர சாகுபடி

இவ்வாண்டில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 22,270 எக்டேர் பரப்பில் இயந்திர சாகுபடி பணிகளான ஆழ்உழவு, சேற்றுழவு, முதலிய பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டில் 22,000 எக்டேர் பரப்பளவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்:

## சிறு பாசனம்

தமிழ்நாடு தன்னகத்தேயுள்ள அனைத்து மேல்நிலை நீர் வளத்தினையும் பயன்படுத்திவிட்டதால், வேளாண்மைக்காக, நிலத்தடி நீரையே பெரிதும் நம்பியிருக்கிறது. வேளாண்மைப் பொறியியல் துறையினுடைய சிறுபாசனத் திட்டங்கள் நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து பாசனத்திற்கு பயன்படச் செய்து உழவர்களுக்கு உதவிடும் வகையில் அமைந்துள்ளது.

கீழ்க்கண்ட சிறுபாசனத் திட்டங்கள் இத்துறையால் செய லாக்கப்பட்டு வருகின்றன:—

(1) தனியார் குழாய் கிணறுத் திட்டம்.

(2) கிணறுகளில் துளையிடும் திட்டம்.

(3) வடிமுனைகுழாய் கிணறு திட்டம்.

(4) கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்,

உழவர்கள் தம் நிலங்களில் குழாய் கிணறுகள் அமைத் திடவும், கிணறுகளில் துளையிடவும், ஆழப்படுத்தவும் உதவிடும் வகையில், இத்துறையிடம் 11 ஹேம்மர் விசைத்துளைக் கருவி களும், 64 சுழல் விசைத் துளைக் கருவிகளும் 56 பெர்குசன் துளைகருவிகளும், 14 வேகன் துளைக்கருவிகளும், 13 கற் குடைக் கருவிகளும், 57 நீள் துளைக்கருவிகளும், 103 பாறை வெடிப்புக் கருவகளும், 410 கைத்துளைக் கருவிகளும், 22 காற் றழுத்தக்கருவிகளும் உள்ளன. இவைகள் குறைந்த வாடகையில் உழவர்கட்கு வழங்கப்பட்டு வருகின்றன,

## தனியார் குழாய்க் கிணறு

இத்திட்டத்தின் கீழ் 1982-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் முடிய 3,959 குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் 15,836 எக்டேர் பரப்பளவுள்ள நிலத் திற்கு பாசன வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு 4,800 குழாய்க் கிணறுகள் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. இது 19,200 எக்டேர் பரப்பிற்கு பாசன வாய்ப்பை உண்டாக்கும்.



## கிணறுகளில் துளையிடும் திட்டம்

இவ்வாண்டு 31-12-1982 முடிய 2,491 கிணறுகளில் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் 996 எக்டேர் பரப்பளவுள்ள நிலத்திற்கு பசன வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. 1983—84 ஆம் ஆண்டில் 2,400 கிணறுகளில் இத் திட்டம் நிறைவற்றப்படும். இதன்மூலம் 960 எக்டேர் பரப்பள வுள்ள நிலத்திற்கு பாசன வாய்ப்பு உண்டாகும்.

## வடிமுனைக்குழாய் கிணறு திட்டம்

இவ்வாண்டு 31-12-1982 முடிய 2,372 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 4,744 எக்டேர் பரப்பளவுள்ள நிலம் பாசன வாய்ப்பைபெற்றுள்ளது. 1983-84-ம் ஆண்டில் 2,900 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 5,800 எக்டேர் பரப்பளவு நிலம் பாசன வாய்ப்பினை அடையும்.

## கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்

இவ்வாண்டு 31-12-1982 முடிய 2,865 கிணறுகள் ஆழப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 320 கிணறுகள் வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் ஆழப்படுத்தப்பட்ட குடிநீர் கிணறுகள் ஆகும். 2,545 பாசன கிணறுகளை ஆழப்படுத்தியதின் மூலம் 1,018 எக்டேர் நிலங்கள் பாசன வாய்ப்பை பெற்றுள்ளன. 1983 84 ஆம் ஆண்டில் 2,900 பாசனக் கிணறுகளை ஆழப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 1,160 எக்டேர் நிலம் பாசன வாய்ப்பை பெறும்.

## நிலம் பற்றிய பௌதிக ஆய்வுகள்

நிலம் பற்றிய பௌதீக ஆய்வுகள், நிலங்களில் ஆழ்மட்ட அமைப்புகளில் இருக்கக்கூடிய நீர் வளத்தினைக் கண்டறிய உதவுகின்றன. இந்தப் பணிகளுக்காக 10 ரெஸிஸ்டிவிடி மீட்டர் களும் ஒரு மின்சார லாக்கிங் கருவியும் இத்துறையிடம் உள்ளன. ரெஸிஸ்டிவிடி மீட்டர்கள் புதிய கிணறுகள் அமைக்கப்படக் கூடிய சாதகமான இடங்களை தேர்ந்தெடுக்க உதவுகின்றன. மின்சார லாக்கிங் கருவி எவ்வளவு ஆழத்தில் நீர் ஊற்றுக்கள் நிறைந்த பகுதிகள் உள்ளன என்பதையறிய உதவுகின்றன. இக் கருவிகள் உழவர்கள் தமது நிலங்களில் குழாய் கிணறுகளை அறிவியல் முறைப்படி அமைத்திடப் பெரிதும் உதவுகின்றன.

[1983 மார்ச் 18

## நிலநீர் நிலவள அமைப்பை வலுப்படுத்தும் திட்டம்

இத்திட்டம் 1978—79 ஆண்டு முதல் 1981-82 ஆம் ஆண்டு வரை 50 சதவிகிதம் மைய அரசு நிதியுதவியுடன் செயலாக்கப்பட்டு வந்தது. 1982—83 ஆம் ஆண்டு முதல், இத்திட்டம், மாநிலத் திட்டங்களின் கீழ் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

(1) நிலத்தடி நீர் அமைப்புகளில் உள்ள குறைகளை கண்டறிதல்; மேலும் தற்பொழுது இவற்றில் கையாளப்படும் முறைகளை பரிசீலித்தல்.

(2) இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யும் நிலையங்களுடன் தொடர்புகொண்டு இதில் கண்ட முன்னேற்றங்களை தெரிந்து கொள்ளுதல்.

(3) பல்வேறு நீர் நிலைகளில் கிணறுகள் மற்றும் குழாய் கிணறுகள் நிர்மாணிப்பதற்கு வழிமுறைகளையும் திட்ட அளவையும் தயாரித்தல்.

(4) நீரியலுக்கும் பொறியியலுக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளும் பொருட்டு, சில நிலத்தடி நீர் அமைப்புகளை ஆராய்தல்.

### வறட்சி நிவாரணப் பணிகள்.

### குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துதல்

சென்ற ஆண்டு பெய்த மிகக் குறைந்த மழை அளவின் காரணத்தால், திருநெல்வேலி, தென்னாற்காடு, வட ஆற்காடு, திருச்சி மற்றும் புதுக்கோட்டை முதலிய மாவட்டங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. அங்குள்ள குடிநீர் கிணறுகளில் நீர்மட்டம் மிகவும் குறைந்தது. அவ்வகையான குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தும்பணி வேளாண்மை பொறியியல் துறையிடம்ஒப்படைக்கப்பட்டது.

### தஞ்சை மாவட்டத்தில் 1000 வடிமுனைக் குழாய்கள் அமைத்தல்

தென்மேற்கு பருவக் காற்றினால் ஏற்படும் மழை பொய்த்து விட்டதாலும், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீரின் அளவு மிகவும் குறைவாக இருந்ததாலும், இவ்வாண்டு குறுவை நெல் சாகுபடிக்கு தொடக்க காலத் திலிருந்தே போதுமான பாசனநீர் கிடைக்கப் பெறவில்லை. இந்நிலையைப் போக்கி பயிரைப் பாதுகாக்க தஞ்சை மாவட்டத்தில 1,000 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைத்திடும் ஒரு விரைவுத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. வேளாண்மை பொறியியல் துறை 1,000 வடிமுனைக்குழாய்களை அமைக்கும் பணியை 1982 நவம்பர் திங்களிலிருந்து மேற்கொண்டுள்ளது.



1983 மார்ச் 18]

## மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

நீரும் நிலமும் பயிர் வளர்ச்சிக்கு இன்றியமையாத இயற்கையின் செல்வங்களாகும். மண் அரிப்பிலிருந்து வளமான மண்ணை பாதுகாத்தலும், உள்ள பாசன நீரை திறம்பட நிர்வகித்து பாசனத்துக்கு உபயோகித்தலும் இத்திட்டங்களின் அம்சமாகும். கீழ்க்கண்ட திட்டங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயலாக்கப்படுகின்றன.

### மலை மற்றும் சமவெளிப் பகுதிகளிலான மண்வளப் பாதுகாப்புப் பணிகள்.

பாதுகாப்பையும் பயனையும் சேர்த்தளிக்ககூடிய மண் வளப் பாதுகாப்புப் பணிகளை சிறிய அளவிலான நீர்வடிப் பகுதிகள் வாரியாக மேற்கொண்டு மண் அரிப்பை தடுத்து நிலத்தினை தகுந்த முறையில் உபயோகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1. தடுப்புப் பணிகள்—
   (1) சம உயர வரப்புகள் அமைத்தல்.
   (2) சிற்றோடை தடுப்புப் பணிகள்.
   (3) பிரிவு வாய்க்கால்கள் அமைத்தல்.
   (4) சிற்றோடைகளை ஒழுங்குபடுத்தி நீரோட்டத்தை சீரமைத்தல்.
   (5) படி மட்டங்கள் அமைத்தல்,
   (6) சம உயர கற்சுவர் கட்டுதல்.
2 உற்பத்தியைப் பெருக்கிடும் வழியிலான பணிகள்—
   (1) டிராக்டர் உழவு.
   (2) வண்டல் பரவுதல்.
   (3) நிலச்சமன்பாடு, பாசன நீர்க்குழாய்கள் பதித்தல்
   (4) பண்ணைக் குளங்கள் அமைத்தல்.
   (5) நீர்மேம்பாட்டுப் பணிகள்.
3 சமுதாயப் பணிகள்—
   (1) பண்ணைக் காடுகள் வளர்த்தல்.
   (2) கசிவுநீர்க்குட்டைகள் கட்டுதல்.
   (3) அவசியமான கட்டுமானப் பணிகள்.

1982-83 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 30,718 எக்டேர் நிலப்பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டு 42,800 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்புத் திட்டப் பணிகள்.

வேகமான காற்றில் மணல் சுமக்கப்பட்டுவந்து விளை நிலங்களில் வடிந்து விழுதலையும் காற்றினால் ஏற்படும் மண் அரிப்பினையும் தடுக்க இத்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. திசையின் குறுக்கே வெவ்வேறு மரங்கள் ஒரு காப்பு அரணாக வளர்க்கப்படுகின்றன. 1983—84 ஆம் ஆண்டு 1,000 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

காற்றரிப்பில் பாதிக்கப்பட்ட போடி பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள்.

1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 1,550 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1983-84 ஆம் ஆண்டு 1,600 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

ஓடை அரிப்பு சீர்திருத்தத் திட்டம்.

இத்திட்டம் தென்னாற்காடு மாவட்டத்தில் செயலாக்கப்படுகிறது. ஓடையரிப்பால் பாதிக்கப்பட்ட நிலங்கள் விரைந்து பரவுவதால் நல்ல விளை நிலங்கள் வீணாகின்றன. ஓடையரிப்பால் பாதிக்கப்பட்ட நிலங்களை சீர்திருத்துவதோடு மேலும் ஓடையரிப்பு பரவாமல் தடுக்கும் வண்ணம் சீர்திருத்தப் பணிகள் 31-12-1982 முடிய 421 எக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டு 1,000 எக்டேர் நிலப்பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சாத்தனூர் பாசனப் பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகள்.

இத்திட்டத்தின் பாசனப் பகுதியிலுள்ள நிலங்களில் காலத்தில் நீர் கிடைக்கும் வண்ணம் பாசனத்திற்கும், வடிகாலுக்கும் தனித்தனியாக வாய்க்கால்கள் அமைக்கப்படுகின்றன. சமமாக நீர்பரவுதலுக்காக நிலச்சமன்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீரைச் சிக்கனமாக உபயோகிக்கும் வண்ணம் சிறிய கட்டுமான பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகள் மூலம் நீர்மேம்பாட்டினை கடைபிடித்து இருக்கின்ற பாசன நீரை முடிந்த அளவுக்கு பாசனத்திற்கு பயன்படுத்த முடிகிறது. திருவண்ணாமலையிலுள்ள ஒரு உபகோட்டம் இப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 171 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டு 1,000 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

குந்தா கீழ்ப்பவானி நதிப்பள்ளத்தாக்குகளின் நீர்பிடிப்பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள்.

முதல் ஐந்தாண்டு திட்டக்காலம் முதலே, நீர்வளத்தினை உபயோகப்படுத்துவதற்காகவும் மின்சார உற்பத்திக்காகவும் பலநோக்குத் திட்டங்கள் செயலாக்கப்பட்டன. இத்தகைய



திட்டங்களை சேர்ந்த நீர்த்தேக்கங்களில் கணக்கிடப்பட்டதை விட ''வண்டல் படிதல்'' அதிகமாக உள்ளது. இதனால் நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு குறைந்து வருகின்றது.

இவ்வண்டல் படிவை குறைத்து, நீர்த்தேக்கங்களின் பாசன மின்சார உற்பத்தி பயன்களை முழுதும் நீண்ட நாட்கள் பெற்றுக்கொண்டிருக்கும் வண்ணம், உதகை, கோவை மாவட்டத்திலுள்ள குந்தா, கீழ்ப்பவானி நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப் பகுதியில், வேளாண்மைப் பொறியியல் துறையால் 1976-77 ஆம் ஆண்டு முதல் ஒரு திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் செவ்வனே தீட்டப்பட்டு செயலாக்கப்பட வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, வனத்துறை, கூட்டுறவுத் துறை, புள்ளியியல் துறை முதலிய துறைகளின் ஒத்துழைப்பு மிக அவசியமாகிறது. இத்துறைகளின் ஒத்துழைப்பை பெற்று ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு ஒரு தலைமைப் பொறியாளர் (வே. பொ.) (நதி நீர்ப்பள்ளத்தாக்கு திட்டம்) ஒருவரை இத்திட்டத்தின் தலைமைப் பொறியாளராக அரசு அமைத்துள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 1982-83 லிருந்து 50 சதவிகித கடன் 50 சதவிகித மானியம் நிதியுதவி அளிக்கிறது. நீர்ப் பிடிப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியுடன் மண் வளத்தினைப் பொறுத்து தேவையான பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 1,394 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983-84 ஆம் ஆண்டு 1,600 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பாசனப்பகுதி மேம்பாடு:

தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ள மேல்நிலை நீர் வளத்தினை முழுதும் உபயோகித்துவிட்டது. மேலும், மேல் நிலை நீர் வளத்தினை பெருக்குவதற்கு குறைவான வாய்ப்பே உள்ளதால் பாசன நீரின் உபயோகத் திறனைப் பெருக்குதலும் அவசியமாகும். இந்நோக்குடன் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டன. பாசனப் பகுதியையும் பாசனப் பகுதியின் உற்பத்தி திறனையும் அதன்மூலம் உற்பத்தியையும் பெருக்குவதற்கான ஒரே வழி நீர் மேலாண்மைப் பணிகளைச் செய்து உண்டாக்கப்பட்ட பாசன வாய்ப்பை முற்றிலும் உபயோகத்திற்கு கொண்டு வருவதேயாகும். வேளாண்மைப் பொறியியல் துறை கீழ்குறிப்பிட்டுள்ள மூன்று பாசன பகுதிகளில் பாசன பகுதி மேம்பாட்டுப் பணிகளை செயலாற்றி வருகிறது:—

(1) காவேரி பாசனப் பகுதி.

(2) பெரியாறு-வைகை பாசனப் பகுதி.

(3) கீழ்ப்பவானி பாசனப் பகுதி இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் செயலாக்கப்படுகின்றன:—

(1) வயல் வழிப்பாசன முறையை முற்றிலும் தடுக்கும் வண்ணம் பாசன வாய்க்கால் அமைத்தல்

(2) வடிகால்கள் அமைத்தல்.

(3) நிலச்சமன்பாடு, நிலச்சீர்த்திருத்தம்.

(4) வரப்புகளை சீர்படுத்தி நேராக அமைத்தல்.

(5) தற்போதுள்ள பாசன வாய்க்கால்களை சரியான அளவுக்கு திருத்தியமைத்தல்.

(6) பாசன வாய்க்கால்களில் நீர்க்கட்டுப்பாடு நீர் விநியோகத்திற்கான கட்டுமான பணிகள்.

(7) அவசியமான இடங்களில் கால்வாய்களை வலுப் படுத்துதல்.

(8) பாசன நீர் பங்கீட்டுக்காக "நீர் சுழற்சி" முறையைக் கையாளுதல்.

1982 டிசம்பர் திங்கள் முடிய காவிரி பாசனப் பகுதியில் 7,519 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983–84 ஆம் ஆண்டு 13,800 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. நீர் சுழற்சி முறையும் இப்பாசனப் பகுதியில் மேற்கொள்ளப்படும். பெரியாறு வைகை பாசனப் பகுதியில் 1982 டிசம்பர் முடிய 4,437 எக்டேர் நிலத்தில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1983–84 ஆம் ஆண்டு 19,500 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

கீழ் பவானி பாசனப் பகுதியில் இப்பணிகளை மேற்கொள்வதற்காக ரூ. 49·655 இலட்சம் செலவில் ஒரு திட்டம் அங்கீகரிக்கப் பட்டது. 1983–84 ஆம் ஆண்டு இத்திட்டத்தில் 7,500 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

மேற்கு மலைத் தொடர் பகுதியின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண்வளப் பாதுகாப்பு பணிகளை சிறிய நீர்வடிப்பகுதி வாரியாக மேற்கொள்ள ரூ. 46·07 இலட்சம் செலவில் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திண்டுக்கல்லைத் தலைமையிட மாகக் கொண்டு கோட்டம் ஒன்றும், மற்றும் பழனி, கோடைக் கானல், உத்தமபாளையம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று உப கோட்டங்கள் இத்திட்டத்தினை நிறைவேற்ற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு 750 எக்டேர் பரப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.





**1983-84-க்கான புதிய திட்டங்கள்:**

மூன்று புதிய புல்டோசர்கள் வாங்குதல்:

இத்துறையில் உள்ள புல்டோசர்கள் பெரும்பாலானவை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய பட்டனவாகும். அவைகள் குறிப்பிட்ட 12 ஆண்டு கால உழைக்கும் திறனை முடித்துவிட்டு ஒதுக்கப்படும் நிலையில் உள்ளன. உழவர் பெருமக்களுக்கு தொடர்ந்து பணியாற்றும் வகையில் உறுதி செய்திடவும், வாகன எண்ணிக்கையில் குறைவின்றி பராமரிக்கவும் படிப்படியாக பழையன கழித்து புதியன புகுத்திட வேண்டும். அந்நோக்குடன் 1983–84 ஆம் ஆண்டில், 3 புதிய புல்டோசர்களை வாங்க திட்ட மிடப்பட்டுள்ளது.

புல்டோசர்களை ஏற்றிச் செல்ல உயர் குதிரைத் திறன் கொண்ட உழுவை ஒன்றும 20 டன் இழுவை ஒன்றும் வாங்குதல்:

புல்டோசர்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்ல 20 டன் கொள்ளளவு கொண்ட இழுவைகள் பயன்படுத்தப்படுகின்றன. 10 புல்டோசர்களுக்கு மேலுள்ள மாவட்டங்களில் ஓர் உழுவையும், 20 டன் கொள்ளளவு கொண்ட ஓர் இழுவையும் போதாது. ஆகவே, இவ்வாண்டு உயர் குதிரைத் திறன் கொண்ட உழுவை ஒன்றும், 20 டன் திறன் கொண்ட இழுவை ஒன்றும் வாங்கி தேவையுள்ள கோட்டங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு ஏற்றிச் செல்ல 10—12 டன் கொள்ளளவு இழுவைகள் வாங்குதல்:

இயந்திரமய சாகுபடிப் பணிகளை மேற்கொள்வதற்காக உழுவை வாடகைத் திட்டத்தின் கீழ் 114 உழுவைகள் உள்ளன. இந்த உழுவைகளுடன் வேளாண்மைக் கருவிகளை ஏற்றிச்செல்ல 5 டன் கொள்ளளவு கொண்ட இழுவைகள் உள்ளன. 10—12 டன் கொள்ளளவு கொண்ட இழுவைகளுடன் கூடிய உழுவை களுக்கு கரும்பு சாறு பிழியும் பருவத்தில் மிகுந்த தேவை இருப்ப தாலும், ஏற்றிச் செல்லும் கரும்பின் எடை, தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் வாடகை தரப்படுவதாலும் அப்படிப்பட்ட இழுவைகளில் கரும்பு ஏற்றிச் செல்லுதல் ஆதாயமாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு 1983-84 ஆம் ஆண்டில் ஐந்து 10, 12 டன் கொள்ளளவுள்ள இழுவைகளை வாங்கி துறையிடம் உள்ள இழுவைகளையும் முழுமையாக பயன்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் பயிற்சி நிலையத்திற்கு ஒரு வெட்டுத் தோற்ற உழுவை மாதிரி வாங்குதல்:

திருச்சியிலுள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி நிலையத்தில், இத்துறையின் உதவி மற்றும் இளநிலைப் பொறி யாளர்களுக்கு தீவிர பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இயந்திரங்

களின் கட்டுமானம் இயங்கும் விதம் பற்றியும் அவைகளைப் பாதுகாத்து பராமரிக்கும் வகை பற்றியும் பயிற்சி கொடுக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. ஒரு இயந்திரத்தின் வெட்டுத் தோற்ற மாதிரி பயிற்சியாளர்களுக்கு இயந்திரத்தின் இயங்கு முறையினைத் தெளிவாகப் புரியவைக்கும். எனவே 1983-84 ஆம் ஆண்டில் ஒரு வெட்டுத் தோற்ற உழுவையின் மாதிரி வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மூன்று வாகன் துளைக் கருவிகள் வாங்குதல்:

பாசன வழியைப் பெருக்கும் நோக்குடன், உழவர்கள் தம் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டியிருக்கின்றது. கடினப் பாறை பகுதிகளிலுள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதில் செலவினம் அதிகம். சிறிய உழவர்கள் இச்செலவினங்களை ஏற்பது முடியாத தொன்றாகும். இன்வெல்டிரின் என்ற துளைக்கருவியின் மூலம் கிணற்றுள் துளைகளை இட்டு நிலத்தடி நீரை மேற்கொணர முடியும். தற்பொழுது இத்துறையிடம் 4 வாகன் துளைக் கருவிகள் உள்ளன. இக்கருவிகளைக் கொண்டு உழவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாததால் மேலும் 3 வாகன் துளைக்கருவிகளை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு சுழல் விசைத் துளைக் கருவி வாங்குதல்:

தமிழ்நாட்டில் 25 சதவீதம் நிலப்பகுதி மணற்பாங்கானது ஆகும். இப்பகுதியிலுள்ள நிலத்தடி நீரை வெளிக்கொணர சுழல் விசைத் துளைக் கருவிகள் உதவிக் கொண்டு குழாய்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இக்கருவிகளால் 1,000 அடி வரையில் துளையிட முடியும். இப்பகுதியிலுள்ள உழவர்கள் தங்களுக் கென்று சொந்த பாசன வசதிகளை பெற விழைவதால் இக்கருவி களின் தேவை அதிகரித்துள்ளது. எனவே, 1983-84 ஆம் ஆண்டில் ஒரு சுழல் விசைத் துளைக் கருவி வாங்க திட்டமிடப் பட்டுள்ளது.

மூன்று விசைத் துளைக் கருவிகளில் உள்நாட்டு இயக்கு பொறிகளைப் பொருத்துதல்:

இத்துறையில் தற்சமயம் வெளிநாட்டிலிருந்து வாங்கப்பட்ட 12 விசைத்துளைக் கருவிகள் நன்கு செயலாற்றும் நிலையிலுள்ளன. ஆனால் இயக்குப் பொறிகள் பழுது பார்க்கப்பட வேண்டியுள்ளது. இவை வெளிநாட்டிலிருந்து வாங்கப்பட்ட கருவிகளாதலால் இவற்றிற்கு தேவையான உதிரிப் பாகங்கள் உள் நாட்டில் உடனடியாக கிடைப்பதில்லை. அவைகளை அயல் நாட்டிலிருந்து பயன்படுத்துவோர் உரிமம் மூலம் இறக்குமதி செய்ய வேண்டும். இவ்வழிமுறைகளால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு படிப்படியாக இத்துளைக் கருவிகளை உள்நாட்டு இயக்குப் பொறிகளைப் பொருத்தி சக்தி வாய்ந்தவைகளாக ஆக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் மூன்று துளைக் கருவிகளை உள்நாட்டு பொறிகளைப் பொருத்தி சக்தி வாய்ந்தவைகளாக ஆக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.





பண்ணைப் பாசன மேம்பாட்டுப் பணிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள காவேரிப் பாசனப் பகுதியிலும், ''வாரபந்தி'' பாசன முறை பெரியார்-வைகை மற்றும் கீழ்பவானி திட்ட பாசனப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்படும்.

எண்ணெய் வித்துக்கள் துறை.

எண்ணெய் வித்துக்கள் துறை 1-12-1980 முதல் துவக்கப் பட்டு, எண்ணெய் வித்துக்கள், மற்றும் தென்னை அபிவிருத்தி திட்டங்களை கவனித்து வருகிறது.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, அதன் மூலம் மொத்த உற்பத்தியை அதிகரிப்பதும், தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதும் இதன் மூலம் நாட்டிற்குத் தேவைபடும் உணவு எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியை குறைப்பதும் இத்துறையின் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்திய துணைக் கண்டத்தில் குசராத் மாநிலத்தை அடுத்து எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் பெரும் பங்குவகிக்கிறது. நமது நாட்டின் மொத்தஎண்ணெய் வித்துக்கள் உற்பத்தியான 11 முதல் 12 மிலியன் டன்களில், தமிழகம் மட்டும் 10 சதத் திற்கும் சற்று அதிகமான உற்பத்தி செய்கிறது. தமிழகத்தின் முக்கிய எண்ணெய் வித்துக்கள் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி, தேங்காய் முதலியனவாகும்.

1982-83-ம் ஆண்டின் சாதனைகள்.

தமிழகத்தில் சாகுபடியாகும், எண்ணெய் வித்துக்களில் 70 சதத்திற்கு மேல் மானாவாரியாக உள்ளதால், அவற்றின் உற்பத்தித் திறனும், மொத்த உற்பத்தியும் நல்ல பருவ மழையை பொறுத்தே அமைகிறது. மேலும் எண்ணெய் வித்துக்களில், குறிப்பாக நிலக்கடலையில் உயர் விளைச்சல் இரகம் இல்லை. இந்த இரண்டு காரணங்கள் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி வாய்ப்பைப் பெரிதும் பாதிக்கிறது. தமிழகத்தில் 1982-83-ம் ஆண்டில் தென்மேற்குப் பருவமழை பொய்த்தமையால், எல்லா மாவட்டங்களிலும் வறட்சி ஏற்பட்டு எண்ணெய் வித்துப் பயிர் களின் வளர்ச்சிப் பருவம் பெரிதும் பாதிக்கப்பட்டது. வடகிழக்கு பருவ மழையும், தேவையான அளவு எல்லா மாவட்டங்களிலும் பொழியவில்லை. எனினும், இறவை நிலக்கடலை விதைப் பதற்கும், இதர எண்ணெய் வித்துக்களான எள், சூரியகாந்தி முதலியவை பயிரிட நிலம் தயார் செய்யவும் விதைக்கவும் உதவியாக இருந்தது.

பருவ மழை தவறிய நிலையிலும், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவு, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது பரப்பளவைப் பொறுத்தவரை சிறிது கூடுதலாகவே உள்ளது. அவைகளின் விவரம் கீழே தரப்படுகிறது:—

| | 1982-83 (சனவரி 1983 முடிய). (இலட்சம்.) | 1981-82 (சனவரி 1982 முடிய). (எக்டேரில்.) |
|---|---|---|
| 1. நிலக்கடலை .. .. | 10.84 | 11.07 |
| 2. எள் .. .. .. | 1.29 | 1.11 |
| 3. சூரியகாந்தி .. .. | 0.95 | 0.75 |
| 4. ஆமணக்கு .. .. | 0.18 | 0.19 |
| மொத்தம்.. | 13.26 | 13.12 |

தற்போதுள்ள பாசனத் தண்ணீர் நிலைமை பெருகுமானால், கீழ்க்கண்ட அளவு எண்ணெய் வித்துக்கள் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி இலக்குகளை (இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளபடி.) இந்த நிதியாண்டிற்குள் அடையலாம் என நம்பப்படுகிறது. சூரியகாந்தியைப் பொறுத்தவரை தற்போதுள்ள நிலை நீடிக்குமானால், 1.25 இலட்சம் எக்டேர் சாகுபடிப் பரப்பை அடையமுடியும்.

| | 1982-83 பரப்பளவு (இலட்சம் எக்டேரில்.) | 1982-83 உற்பத்தி (இலட்சம் டன்களில்.) |
|---|---|---|
| 1. நிலக்கடலை .. .. | 11.50 | 11.80 |
| 2. எள் .. .. .. | 1.50 | 0.50 |
| 3. சூரியகாந்தி .. .. | 1.25 | 0.10 |
| 4. ஆமணக்கு .. .. | 0.17 | 0.04 |
| | 14.42 | 12.74 |
| 5. தேங்காய் .. .. | 1.40 | 133 கோடி தேங்காய்கள். |

**தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் இணையம்.**

தேசிய பால் வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் செயல்படும் கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் இணையம், தமிழகத்தில் 3-1-1981 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த



இணையம் 7 ஆண்டு காலம் செயல்படும். 500 கூட்டுறவு எண்ணெய் வித்துச் சாகுபடியாளர் சங்கங்களை கடலூர், விருத்தாசலம், திருவண்ணாமலை, செங்கம், போளூர், வந்தவாசி, செய்யாறு, திண்டிவனம், செஞ்சி, திருக்கோவிலூர், மதுராந்தகம் ஆகிய வட்டங்களில் ஏற்படுத்துவதும் 1.75 இலட்சம் எக்டேர் நிலக்கடலை பரப்பிற்குத் தேவையான விதை பயிர் பாதுகாப்பு, இதர தொழில் நுட்பங்களை வழங்கும் இக்கூட்டுறவு சங்கப் பகுதிகளில் உள்ள நிலக்கடலை சாகுபடியாளர்களின் மகசூலை இச்சங்கங்கள் கொள்முதல் செய்து, தரம்பிரித்து பதப் படுத்தி சேமித்து விற்பனை செய்ய வகை செய்கிறது. இதன்மூலம் சாகுபடியாளர்கள் நியாய விலை பெறுவதுடன் கூட்டுறவு சங்கத்தின் இலாபத்தில் 50 சதம் ஊக்கத் தொகையாக சாகுபடி யாளர்கள் வழங்கிய நிலக்கடலை அளவிற்கேற்பப் பெறுவார்கள். இந்தத் திட்டம் 11.45 கோடி ரூபாய் திட்ட மதிப்புடன் 7 ஆண்டு காலம் செயல்படும். இதுவரை 100 சங்கங்கள் ஏற்படுத்தப பட்டுள்ளன.

தென்னை உற்பத்தி முன்னேற்றம்.

தமிழகத்தில் தேங்காய், எண்ணெய்க்காக மட்டுமின்றி சமை யலுக்கும் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. தற்சமயம் தமிழ கத்தில் ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரத்திற்கு 1.6 தேங்காய் மட்டுமே கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது மிகவும் குறைவு. 1999-2000 ஆண்டிற்குள்ளாக குடும்பம் ஒன்றிற்கு வாரத்திற்கு 4.6 தேங்காய் கிடைக்க வகை செய்யும் நீண்டகாலத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை செயல்படுத்து முகத்தான், தற்சமயம் செயல்பட்டுவரும் தென்னை நாற்றங்கால் களுடன், உயர் விளைச்சல் தரும் மூன்றாவது ஒட்டு ரக தென்னை நாற்றங்கால் மதுரைப் பகுதியில் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் தென்னை தீவிர சாகுபடித் திட்டம் 1981-82-ல் அரசால் அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மேலும் மூன்று மாவட்டங்களுக்கு விரிவு படுத்தப்பட்டு 1982-83-ம் ஆண்டில் செயல்பட்டு வருகிறது. நகரங்களில் தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம், தற்போதுள்ள தென்னை மரங்களை வளப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கும் திட்டம், முதலியவற்றுடன் தென்னையைத் தாக்கும் தஞ்சவூர் வாடல் நோய் ஒழிப்புத் திட்டம் கேரள வாடல் நோய் ஒழிப்புத் திட்டம் முதலியனவும் 1982-83-ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தீவிர தென்னை சாகுபடித் திட்டத்தின்கீழ் மாவட்ட நிலைகளிலும் கிராமப்புறநிலைகளிலும் 1983-84-ம் ஆண்டில் பணியாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தி திட்டப் பணிகள் செம்மையாக நிறைவேற்றப்படும்.

1981-82-ம் ஆண்டில் 24.18 இலட்சம் நெட்டைத் தென்னங் கன்றுகளும், 2.07 இலட்சம் நெட்டை×குட்டை தென்னங்கன்று களும் வழங்கப்பட்டன. 1982-83-ம் ஆண்டில் 30.25 இலட்சம்

நெட்டை தென்னங்கன்றுகளும், 4.00 இலட்சம் நெட்டை× குட்டை தென்னங்கன்றுகளும் வழங்க முடியுமென எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த முனைப்புடன் 1983-84-ம் ஆண்டில் 30·25 இலட்சம் நெட்டைத் தென்னங்கன்றுகளும், 5.75 இலட்சம் நெட்டை× குட்டை தென்னங்கன்றுகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. புதிய பரப்பில் அதிக அளவு தென்னை சாகுபடி செய்து தேங்காய் உற்பத்தி 141·70 கோடிக்கு உயர்த்தப்படும். மைய அரசினால் நிறுவப்பட்டுள்ள தென்னை வளர்ச்சி வாரியம், தமிழ்நாட்டில் தென்னை உற்பத்தியைப் பெருக்குவதற்கு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது. அரசுக்குச் சொந்தமான தென்னை நாற்றங்கால்களில் கூடுதலான நீர்ப்பாசன வசதிகள் செய்வதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூபாய் 15 இலட்சம் செலவில் 1982-83 ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகள் பரவலாகச் செயல்படுத்தப்படும். இதற்காகும் செலவைத் தென்னை வளர்ச்சி வாரியம் முழுவதும் மானியமாக ஏற்றுக் கொள்ளும். இத்திட்டத்திற்காக 1982-83-ம் ஆண்டிற்கு ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உயர்ரகத் தென்னங்கன்று தோட்டங்கள் அமைப்பதற்கான திட்டமொன்றும் தொடங்கப்பட்டுள்ளது. வட்டார நாற்றங்கால்களில் 12 முன்னோடி விதை ஆய்வு நிலையங்கள் தொடங்கப்படும். இதற்காகும் செலவினை தமிழக அரசும் தென்னை வளர்ச்சி வாரியமும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்ளும்.

**எண்ணெய் வித்துக்கள் முன்னேற்றம்.**

பாசனத்தின்கீழ் நிலக்கடலை சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்துடனும் இதர எண்ணெய்வித்துப் பயிர்களை வாய்ப்புள்ள இடங்களில் பயிரிடும் நோக்கத்துடனும் விளக்கக் கூட்டங்கள் இவ்விலாக்கா பணியாளர்களால் கடந்த ஆண்டு நடத்தியதைப் போல இந்த ஆண்டும் நடத்தப்படுகின்றன. பாசனத்தின்கீழ் பயிரிடப்படும் நிலக்கடலைப் பயிருடன், ஊடுப் பயிராகவும் கலப்புப் பயிராகவும் சூரிய காந்தியைச் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீர்த் தேக்கப் பகுதிகளிலிருந்து குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி நிலக்கடலை, எள்



போன்ற எண்ணெய்வித்துக்களைப் பயிரிட ஆவன செய்யப்பட்டு வருகிறது. மேலே கூறப்பட்ட நடவடிக்கைகளின் விளைவுகளைக் கொண்டு 1983-84 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன.—

| | 1983-84 | |
|---|---|---|
| | பரப்பளவு (இலட்சம் எக்டேரில்). | உற்பத்தி (இலட்சம் டன்களில்). |
| 1. நிலக்கடலை .. .. | 11·57 | 12.00 |
| 2. எள் .. .. .. | 1.55 | 0.60 |
| 3. சூரியகாந்தி .. .. | 1·25 | 0.59 |
| 4. ஆமணக்கு .. .. .. | 0·17 | 0.06 |
| | 14·54 | 13.25 |
| 5. தேங்காய் .. .. .. | 1.46 | 142 கோடி தேங்காய்கள். |

மேலே கூறப்பட்டுள்ள இலக்கினை அடைய கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படும். 1981-82 ஆம் ஆண்டு வரை நிலக்கடலை சாகுபடிப் பரப்பில் 2 சதவிகித பரப்பிற்கு மட்டுமே இலாக்காவினால், தரமான விதை வழங்கப்பட்டு வந்தது. 1982-83 ஆம் ஆண்டில் இது 3 சதவிகிதத்திற்கு உயர்த்தப்பட்டது. இதன்படி 34,500 எக்டேர் சாகுபடிப் பரப்பிற்கு 6,900 டன் தரமான விதை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1983-84 ஆம் ஆண்டில் 4 சதவிகித சாகுபடிப் பரப்பிற்கு இத்துறையால் தரமான விதை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி 46,280 எக்டேர் பரப்பிற்கு 9,250 டன் தரமான விதை வழங்கப்படும்.

தற்சமயம் அரசுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் கருவித்து, ஆதாரவித்துக்களின் உற்பத்தியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் முறைப்படுத்தப்

பட்டு வருகிறது, கருவித்து, ஆதாரவித்து, பதிவு செய்யப்பட்ட வித்து, சான்றிதழ் பெற்ற வித்து இவைகளின் தொடர்பை சீராக முறைப்படுத்தி இதன்மூலம் தரமான விதை 9,250 டன் உற்பத்தி செய்து 1983-84-ம் ஆண்டில் 4 சதவிகித நிலக்கடலை சாகுபடிப் பரப்பிற்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. சான்றிதழ் பெற்ற விதைகள் போதிய அளவு உற்பத்தி செய்யப்படும் வரை, உண்மைச் சான்றிதழ் விதைகள் உற்பத்தி செய்யப்படும். தேவையான அளவு சான்றிதழ் பெற்ற நிலக்கடலை விதை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் நான்கு விதைப் பண்ணைகள் 1981-82-ல் ஏற்படுத்தப்பட்டன. இரண்டு ஆதார விதைப் பண்ணைகள், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள முசரவாக்கத்தில் ஒன்றும், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வெள்ளாள விடுதியில் மற்றொன்றும் 1982–83-ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1983-84-ம் ஆண்டில் மேலே கூறப்பட்ட நிலக்கடலை விதையுடன் 56 டன் தரமான எள் விதையும், 640 டன் சூரிய காந்தி விதையும் 23 டன் ஆமணக்கு விதையும் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்படும். திருத்திய சாகுபடி முறைகளை எண்ணெய் வித்து சாகுபடியாளர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு செயல் விளக்கப் பாத்திகள் சிறு விளக்கப் பாத்திகள் சோதனை வயல்கள் முதலியவற்றை அவர்கள் நிலங்களிலேயே அமைத்து விளக்கிக் கூறுவதுடன் மானியங்களும் வழங்கப்படுகின்றன. உண்மைச் சான்றிதழ் நிலக்கடலை விதை வழங்கும் விவசாயக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 100 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதுபோல் மாநில அரசு உதவியுடன் எள் விதை சுத்தம் செய்துதருவதற்கும், செயல் விளக்கக் கூடங்கள், சிறு விளக்கங்கள் முதலியன அமைக்கவும் மானியங்கள் 1981-82-ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிர் பாதுகாப்பு, எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் முக்கியத்தைக் கருதி ஒட்டு மொத்தப் பயிர் பாதுகாப்பு 60,000 எக்டேரில் செய்யப்படுகிறது. இதற்கு பூச்சி, நோய் கொல்லி மருந்துகள் 50 சத விலையிலும் மருந்தடிக்க எக்டேருக்கு ரூபாய் 15 வீதம் மானியமும் வழங்கப்படுகிறது. 1983-84-ம் ஆண்டில் 65,000 எக்டேர் பரப்பில் ஒட்டு மொத்தப் பயிர் பாதுகாப்பு செய்யப்படும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் தீவிர எண்ணெய் வித்துக்கள் வளர்ச்சித் திட்டம், எண்ணெய் வித்துக்களைப் புதிதாக பாசனத்திற்குள்ளாகும் பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் திட்டம் மற்றும் சூரியகாந்தி வளர்ப்புத் திட்டங்கள் பற்றிய நிதி ஒதுக்கீட்டு அட்டவணை பதிய 20 அம்சத்



திட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்பினைக் கருத்திற்கொண்டு வளர்ச்சிப் பணிகள் கணிசமான அளவு ஊக்குவிக்கப்பட்டுள்ளன என்பதை தெளிவாகக்காட்டுகிறது:—

| திட்டங்கள். | 1979–80 | 1980–81 | 1981–82 | 1982–83 |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | | |
| தீவிர எண்ணெய் வித்துக்கள் வளர்ச்சித்திட்டம் மற்றும் புதிய பாசனம் பகுதிகளுக்கு எண்ணெய் வித்துத் திட்டங்களை விரிவுபடுத்துதல். | 14.41 | 36.18 | 77.47 | 137.67 |
| சூரியகாந்தி வளர்ப்புத்திட்டம். | 6.83 | 11.77 | 13.03 | 13.74 |
| மொத்தம் .. | 21.24 | 47.95 | 90.50 | 151.41 |

நுண்ணூட்டச்சத்து, ஜிப்சம் முதலியவற்றை நிலக்கடலைப் பயிருக்கு இடுவதால், உற்பத்தி அதிகரிக்கிறது என்பதைப் பயிரிடுவோர் நன்கு புரிந்து கொண்டார்கள். ஆகவே 1983–84ஆம் ஆண்டில் 500 டன் நுண்ணூட்டச்சத்தும், 25,000 டன் ஜிப்சமும் சாகுபடியாளர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

1983–84ஆம் ஆண்டில் சூரியகாந்தி விதை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் நேர்த்தி விதைப் பண்ணை ஒன்று ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1983–84-ம் ஆண்டில் எண்ணெய் வித்துக்களை சேர்த்து வழங்கும் பொருட்டு, விதை சேமிப்புக் கிடங்குகள் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப் பணிகளை அடிமட்டத்திலிருந்து தீவிரப்படுத்துவதற்காக 1983–84ஆம் ஆண்டில் களப்பணி அலுவலர்கள் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்படும்.

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

தமிழகம் மாறுபட்ட தட்பவெப்ப நிலைகளில் வளரக்கூடிய அனைத்து தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களின் வளர்ச்சிக்குரிய வளங்களை பெருமளவில் தன்னகத்தே கொண்டுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் செழிப்பினை பெருக்கிட 1979 ஆம் ஆண்டு முதல் தோட்டக்கலை வளர்ச்சிக்கென தனியொரு இயக்கம் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது.

[1983 மார்ச் 18

2. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தியானது கணிசமான முறையில் உயர்த்தப்படும். திட்டமிடப்பட்டுள்ள 1983-84 ஆம் ஆண்டு குறியீடு பின்வருமாறு:—

| விவரங்கள். | ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் அடிப்படை ஆண்டு. | 1983—84 ஆண்டு இலக்கு. | ஆறாவது ஐந்தாண்டு திட்ட கால இலக்கு. |
| --- | --- | --- | --- |
| | உற்பத்தி. (இலட்சம் மெட்ரிக் டன்.) | | |
| பழங்கள்— | | | |
| 1. வாழை .. .. | 12.31 | 13.92 | 14.38 |
| 2. மா .. .. | 5.33 | 6.29 | 6.30 |
| 3. எலுமிச்சை வகைகள். | 0.46 | 0.56 | 0.62 |
| 4. இதர கனிகள் .. | 0.10 | 0.12 | 0.13 |
| மொத்தம் .. | 18.20 | 20.89 | 21.93 |
| காய்கறிகள்— | | | |
| 1. உருளைக்கிழங்கு | 0.83 | 1.00 | 1.04 |
| 2. சர்க்கரைவள்ளிக் கிழக்கு. | 0.55 | 0.79 | 0.80 |
| 3. வெங்காயம். | 2.75 | 3.33 | 3.52 |
| 4. இதர காய்கறிகள். | 2.00 | 2.43 | 2.58 |
| மொத்தம் .. | 6.13 | 7.55 | 7.94 |



1983 மார்ச் 18]

தோட்டக்கலைப் பண்ணைகள்.

குறைந்தபட்ச ரீதியாக மாவட்டத்திற்கு ஒரு அரசு தோட்டக் கலைப் பண்ணை நிறுவப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இரண்டு பண்ணைகள அமைக்கப்பட்டதுடன் மேற்கூறிய அரசின் கொள்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இப்பண்ணைகளில் இருந்து ஏறத்தாழ 17 இலட்சம் எண்ணிக்கையளவில் உயர்ந்த தரமான பல்வேறு நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்கட்கு 1982-83 ஆம் ஆண்டில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2. நாள்தோறும் பெருகி வரும் நடவுச் செடிகளின் தேவையை சீர்படுத்தும் வண்ணம் மேற்கூறியபடி 16 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் தவிர 6 மாபெரும் பழப்பண்ணைகளும் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. 100 ஏக்கர் பரப்பில் நவ்லாக் என்னுமிடத்தில் பெரியதொரு பண்ணையும் நிறுவப்பட்டுள்ளது. வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் ஜீனூர் என்னுமிடத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் நேமம் என்னுமிடத்திலும் இரு பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. கன்னியாகுமரியிலும் ஒரு பழத்தோட்டம் 32 ஏக்கரில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இவையன்றி உதகமண்டலத்தின் தேவையினை பூர்த்தி செய்திட அரசு பழத்தோட்டங்கள் கல்லார், பர்லியார் மற்றும் கூனூர் போன்ற இடங்களிலும் உள.

வாழை.

புதுமுறை சிக்கன சாகுபடி முறைகளை உழவர்களிடையே புகுத்திட வாழை கட்டுக்கோப்பு சாகுபடி திட்டமானது பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களில் தீவிரமான செயலாக்கத்தில் உள்ளது. உயர்ரக வாழையின் தரமான கன்றுகளை உற்பத்தி செய்வதற்கென 350 ஏக்கர் பரப்பில் நவ்லாக், முதலைப்பட்டி மற்றும் சின்ன கல்லராயன் மலைப்பகுதிகளில் மூன்று உயரிய வாழைத் தோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. சின்ன கல்ராயன் மலைப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மலைவாழைக் கன்றுகள் முடிக்கொத்து நோயால் முன்பு தாக்கப்பட்டு முழுமையும் அழிக்கப்பட்ட கீழ்பழனி மற்றும் மேற்கு மலைத் தொடர்ச்சி பகுதிகளில் வாழை சாகுபடியினை புதுப்பிக்க விநியோகம் செய்யப்படும். சராசரி மகசூல் எக்டேருக்கு ஏறத்தாழ 28.5 டன் 1982-83 ஆம் ஆண்டு எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மா :

தற்போது நிலவி வரும் மா உற்பத்தி திறனை அதிகரிக்கும் வண்ணம் உயர்ந்த அதிக மகசூல் தரவல்ல மா ஒட்டுச் செடிகள் 1982-83 ஆம் ஆண்டில் சுமார் மூன்று இலட்சம் அளவில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. வியாபாரத்திற்கு உகந்த இரகங்களில் ஒட்டுச் செடிகளே பெருமளவில் உற்பத்தி செய்யப் படுகிறது. வறண்ட மற்றும் தரிசு நிலங்கள் இப்பயிரின் கீழ் அதிக அளவில் கொண்டுவரப்பட்டுள்ளமையால் இதன்பரப்பானது சுமார் 0.39 இலட்சம் எக்டேர் உயர்ந்தப்படும் என கருதப் படுகிறது.

காபி.

இவ்வாண்டு சுமார் 90 எக்டேர் பரப்பில் மாதிரி காப்பித் தோட்டம் சின்னக்கல்ராயன் மலையில் நிறுவப்பட்டு பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அன்னாசி.

நமது மாநிலத்தில் நிலவிவரும் அன்னாசி வளர்ச்சி வளத்தினை நன்முறையில் பயன்படுத்திடவும், உற்பத்தியினை பெருக்கிடவும், உயர் ரகமான "கியூ அன்னாசி" சாகுபடி செய்திடவும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டம் கொல்லி மலையிலும், கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை யிலும் 50 ஏக்கர் பரப்பில் 'கியூ அன்னாசி' நடவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கென இரு அன்னாசி நாற்றங்கால்கள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன நடப்பு ஆண்டில் சுமார் 5 இலட்சம் அளவில் கன்றுகள் உழவர்கட்கு விநியோகம் செய்யப் படுகிறது.

எலுமிச்சை.

எலுமிச்சை சாகுபடியில் நச்சுரி நோயின் தாக்குதலால் அதிக அளவில் சாகுபடி பரப்பு பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, இதனை எதிர்க்கும் பொருட்டு ஆண்டுதோறும் சுமார் இரண்டு இலட்சம் அளவில் நச்சுரி நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட எலுமிச்சை செடிகள் குடுமியான் மலைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

முந்திரி.

இதன் உற்பத்தி அளவினை பெருக்கிட நவீன முறையில் இச்செடிகளின் தரத்தினை உயர்த்திட உதவும் வண்ணம் மூன்று முந்திரி பண்ணைகளானது 120 எக்டேர் பரப்பில் பிச்சிவாக்கம், நாட்டுமங்கலம் மற்றும் தேவக்கோட்டை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. 1982—83 ஆம் ஆண்டில் சுமார் 6,000 எக்டேர் முந்திரி பரப்பானது ஒருங்கிணைந்த தரைவழி பயிர் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்



மரவள்ளி :

மானாவாரி மற்றும் இறைவை நிலைகளுக்கு உகந்த இரு பயன் கொண்ட உயர்ரக மரவள்ளியாக 'எம்.வி.டி. 1' இரகமானது இத்துறையின் கீழ் இயங்கிவரும்மரவள்ளி முல்லுவாடி பரிசோதனை நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இதன் மகசூல் ஏக்கருக்கு 34.5 டன்களாகும். இது ஏனைய உள்ளூர் இரகங்களைவிட 34 சதவீதம் கூடுதலாகும். இது 35.6 சதவீதம் மாவுச் சத்தினை கொண்டுள்ளது. இது தவிர இலைப்புள்ளி எதிர்ப்புத் திறனும், வறட்சியும் தாங்கவல்லது.

எம்.வி.டி. 1 அல்லாமல் ஸ்ரீவிசாகம் மற்றும் ஸ்ரீசாக்யா போன்ற இரகங்களையும் பெருமளவில் சாகுபடி செய்திட ஆவன செய்யப்படுகின்றன. 142 ஏக்கரில் உயர்ரகங்களின் கரணைகளை உற்பத்தி செய்வதற்கென இரு மரவள்ளி உற்பத்தி மையங்கள் நாட்டுமங்கலம் மற்றும் தேவக்கோட்டையில் இயங்கிவருகின்றன.

மஞ்சள் :

ஏற்றுமதிக்கு வழிவகுக்கும் பயிராக மஞ்சள் திகழ்கின்றது. நமது ஏற்றுமதித்திறனை அதிகப்படுத்திட விஞ்ஞான முறையில் மஞ்சளை பதப்படுத்தும் முறையினை உழவர்களுக்கு எடுத்தியம்பு வதற்காக 30 செயல் விளக்கங்கள் சேலம், பெரியார் மற்றும் கோவை மாவட்டங்களில் இவ்வாண்டு நடத்தப்பட்டுள்ளது.

காய்கறி விதை உற்பத்தி மையங்கள் :

காய்கறி விநியோகத்தை அதிகரிக்க தேவையான சான்றிதழ் விதைகளின் உற்பத்தி உறுதிப்படுத்தப்படுகிறது. இதனை முன்னிட்டு 6 காய்கறி விதை உற்பத்தி மையங்கள் வல்லத்திராக் கோட்டை, நவ்லாக், மருங்குளம், இனுங்கூர், தேவக்கோட்டை மற்றும் சின்னக்கல்ராயன் மலைப்பகுதிகளில் ஏறத்தாழ 87 ஏக்கர் பரப்பில் நிறுவப்பட்டது. இம்மையங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வண்ணம், மேம்பாட்டுப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர உதகை மாவட்டம் கூனூரில் அமைந்துள்ள காய்கறி விதை உற்பத்தி மையத்தில் இருந்து "நீலகிரி சிவப்பு முள்ளங்கி" "கிபோ ஜயண்ட் பூக் கோஸ்" "வாட்டக்ஸ் பீன்ஸ்" போன்ற காய்கறி விதைகள் ஏறத்தாழ 10 டன்கள் அளவில் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப் பட்டு உழவர்கட்கு விநியோகிக்கப்படுகின்றது. சிம்லாவில் உற்பத்தி செய்யப்படும் 'செப்டம்பர் முட்டை கோசு' 'சினோ கேரட்' விதைகள் உதகை உழவர்களுக்கு வழங்கப்படுகிறது.

நகர காய்கறி அபிவிருத்தித் திட்டம் :

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் நகரங் களில் இத்திட்டமானது செயலாக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 1982-83 ல் ஒதுக்கீடு ரூ. 21.12 இலட்சமாகும். குறைந்த

விலையில் புத்தம் புதிய காய்கறிகளை தேவையான அளவு, நகர மக்கள் பெற்றிட இது உதவுவதுடன் நமது மாநில மாத்த காய்கறி உற்பத்தியையும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்க வழி வகுக்கிறது. ஏறத்தாழ இத்திட்டத்தின் மூலமக 780 கிலோ காய்கறி விதைகளும், 8 முதல் 10 இலட்சம் எண்ணிக்கை கொண்ட காய்கறி நாற்றுகளும் விநியோகம் செய்யப்படுவதுடன் பலர்க பழச் செடிகளும், சுமார் 5 இலட்சம் எண்ணிக்கையளவில் வீட்டுக்காய்கறித் தோட்டத்தில் பயிர் செய்வதற்காக இவ்வாண்டு விநியோகிக்கப்படுகிறது.

மலர்கள் :

அழகுத் தோட்டங்கள், பூங்காக்கள் போன்றவற்றை அமைத்திட அனைத்து நிலைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இது தவிர சுற்றுப்புற சுகாதாரத்தை பாதுகாக்க, பொது நிறுவனங்களால் அமைக்கப்படும் அழகு பூங்கா தோட்டங் களுக்கும் குறிப்பிட்ட தொகையானது இத்திட்டத்தின் மூலம் அந்நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகிறது. வாணிப ரீதியில் மலர்கள் அபிவிருத்தி மற்றும் மலரியல் நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் கொண்டுவர இடுபொருள்களுக்கு 50 சதவிகித மான்யம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

மலைப்பயிர்கள் :

காபி, தேயிலை, ஏலக்காய் போன்ற மலைப்பயிர்களை மேம் படுத்த பலதரப்பட்ட பண்ணைக்காட்டில் மத்திய நாற்றுப் பண்ணை, ஏற்படுத்தப்பட்டு இவ்வியக்கத்தின் கீழ் இயங்கி வருகிறது. மலைப்பயிர் அபிவிருத்திக்காக கீழ் பழனி பகுதிகளில் 400 எக்டேர் நில அளவு செய்யப்பட்டுள்ளது. மலைப் பயிர்கள் வளத்தினை தெரிந்தெடுத்து இப்பயிர்களின் வளர்ச்சியினை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஆய்வுப்பணிகள் 1981-82 ஆம் ஆண்டில் 500 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.

விரிவாக்கப்பணி சீரமைப்பு :

உதகமண்டல தோட்டக்கலை விரிவாக்க அமைப்பானது பயிற்சி வழி தொடர்பு திட்டத்தின் கீழ் மாற்றியமைக்கப்பட்டு, அடிக்கடி வேளாண் பருமக்களை சந்தித்து நவீன சாகுபடி முறை களை அவர்கள் பின்பற்ற உதவுகின்றது. மேலும், பல்வேறு நிலை விரிவாக்க அலுவலர்களுக்கும் உழவர்களுக்கும் நடைமுறை பயிற்சிகள் அவ்வப்பொழுது அளித்திடவும், இத்திட்டம் ஏதுவாய் திகழ்கிறது.

மிளகு

மிளகு அபிவிருத்திக்கென இரு திட்டங்கள் செயலாக்கப் படுவதுடன் கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலும் உதகமண்டல மாவட்டம் கூடலூரிலும், மிளகுநாற்றங்கால்கள் இரண்டு, 13 ஏக்கர் பரப்புளவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



உதகையில் வாசனைப் பயிர்கள்.

அந்நியச் செலாவணியை ஈட்டவல்ல இந்த வாசனைப் பயிர் களின் மேம்பாட்டிற்கென தனியொரு திட்டம் உதகையில் அமுலாக்கப்பட்டு வருகிறது. இதன்கீழ் 50 சதவீத மான்யம் அனைத்து இடுபொருட்களுக்கும் அளிப்பதுடன், 1982-83 ஆம் ஆண்டில் ஏலம், கிராம்பு, மிளகு, சாதிக்காய், காபி, கோகோ, தேயிலை இன்னபிற பயிர்களின் கீழ் சுமார் 164 எக்டேர் பரப்பானது சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிரந்தர பயிர்கள் பயிரிடப்படுவதால், மண் அரிப்பானது தடுக்கப்படுகிறது.

மரம் வளர்ப்புத் திட்டம்.

தரிசு மற்றும் பயிரிடப்படாத அதிசரிவான பகுதிகளில் மண் வளத்தினை பாதுகாக்கும் பொருட்டும் பசுமையானதொரு சுற்றுப் புற சூழ்நிலையை உருவாக்குவதற்கும் ஒரு திட்டம் தீட்டப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இவ்வாண்டு சுமார் 5 இலட்சம் பழக்கன்றுகள் ஓடைகளின் ஓரங்களிலும், காலி நிலங்களிலும் நடுவதற்கு 50 சதவீத மான்யத்தில் வழங்கப்படும்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், வட ஆற்காடு, தருமபுரி, சேலம், மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளிலுள்ள வளத்தினை தோட்டக்கலை வளர்ச்சிக்கு சீரிய முறையில் பயன்படுத்திடவும், அதிக வருவாய் தரவல்ல நிரந்தர பயிர் பயிரிட 50 சதவீத மானியத்தில் அனைத்து இடுபொருட்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன,

ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்.

பதினைந்து பகுதிகளில் வாழும் ஏறத்தாழ 3,000 ஆதிவாசி குடும்பங்கள் இவ்வாண்டு தெரிந்தெடுக்கப்பட்டு இவர்களுக்கு 50 சதவீத மானியவிலையில் பல்வேறு இடுபொருட்கள் விநியோகிக்கப் படும். தென்னாற்காடு மாவட்டத்தில் இம்மானியத்தின் சதவீதம் 75 ஆகும். இத்திட்டத்தின் கீழ் இதுகாறும் ஆதிவாசிகள் பகுதி மேம்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்தது. இவ்வாண்டு தொடங்கி இது ஆதிவாசிகள் குடும்ப முன்னேற்றத் திற்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கான உரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. தனியார் பழப்பண்ணைகள் ஒவ்வொரு ஆதிவாசிகள் பகுதியிலும் 50 ஏக்கர் பரப்பில் நிறுவப்பட்டு (50 குடும்பங்களுக்கு) ஏக்கருக்கு ரூ. 500 வீதம் பதினைந்து பகுதி களுக்கும் செலவு செய்யப்படும்,

1981-82-ல் நிரந்தர பழச்செடிகள் விநியோகிக்கப்பட்ட சுமார் 1212 ஏக்கர் பரப்பும் இவ்வாண்டு தொடர்ந்து பராமரிப்பின் கீழ் (இடைவெளி நடல், பயிர்பாதுகாப்பு, உரமிடல்) கொண்டு வரப்படும். இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கருமாந்துறை மாபெரும் பழப்பண்ணையானது தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்வதுடன், ஆண்டு முழுமையும் ஆதிவாசிகளுக்கு வேலைவாய்ப்பினை நல்குகின்றது.

ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் ஆதிவாசிகள் உழவர் பயிற்சி நிலையம், கருமாந்துறை மாபெரும் பழப்பண்ணையில் நிறுவப்பட்டு ஆதிவாசி உழவர்களுக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்படும்.

பழங்கள் அதிகமாக விளையும் காலத்தில், விவசாயிகளுக்கு நட்டம் வருவதைத் தவிர்க்க பழம் பதனிடும் முறைகளில் பயிற்சி அளித்திட, இந்த உழவர் பயிற்சி நிலையத்தில் சிறிய அளவிலான பழப்பதப்படுத்தும் செயல்விளக்க நிலையமும் அமைக்கப்படும்.

ஊரக வளர்ச்சிக்கென சிறப்புத் திட்டங்கள்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 11.97 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த தரையழி மா பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 6000 எக்டேர் கொண்டுவரப்படும். இரண்டு மாபெரும் பழப்பண்ணை ஜீனூரில் 200 ஏக்கரிலும், நேமத்தில் 70 ஏக்கரிலும் இருக்கின்றன.

இது தவிர தருமபுரி மாவட்டத்தில் பெல்ராம்பள்ளி என்னுமிடத்தில் ஒரு மாதிரிப் பழப்பண்ணை அமைப்பதற்கும், ஓசூரில் விதைமையம் ஒன்றினை ஏற்படுத்திடவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறப்பு மற்றும் பின்தங்கிய பகுதித் திட்டங்கள்.

1982-83 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ரூ. 154.51 இலட்சம் உதகையில் மலைமேம்பாடு திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. மரவள்ளி, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய் இன்னபிற பயிர்களின் வளர்ச்சிக்கு இத்திட்டத்தின் கீழ் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உற்பத்தி காலங்களில் ஏற்படும் வியாபாரத்திற்கு அதிகமான அளவில் உள்ள பழங்களை பதப்படுத்தி, வேளாண் பெருமக்களுக்கு ஏற்படக்கூடிய நட்டத்தினை சரிசெய்யும் பொருட்டு பழம் பதனிடும் மையம் ஒன்று கூனூரில் இயங்கி வருகிறது. இம்மையத்தில் இருந்து ஆண்டுதோறும் சுமார் 15 மெ.டன் அளவில் பல்வேறு வகையான பழப்பதப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு நியாயவிலையில் விற்பனை செய்யப்படுகிறது.

தோடர்கள் நலத்திற்கென அவர்களது நிலங்களில் கிணறுகள் தோண்டி, மின் இணைப்பு செய்து தருவதுடன், தேயிலை பதியன்களும் நடவு செய்து கொடுக்கப்படுகின்றன.

சுற்றுப்புற தூய்மையைப் பாதுகாக்கும் பொருட்டு மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், இந்நிலங்களில் நிரந்தர செடிகளும் பயிரிட தேவையான நடவுப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மண் பாதுகாப்பிற்காக இவ்வாண்டு 940 கல் சுவர்கள் கட்டப்படும்.





மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்

சென்ற ஆண்டு இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட மூன்று திட்டங்களுக்கும் 1982-83 ஆம் ஆண்டிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 14.60 இலட்சம் சிறுமலையில் 200 ஏக்கர் பரப்பில் நிறுவப்பட்ட பெரும் பழப்பண்ணையில் 30 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டது.

மலர் கண்காட்சி.

கடந்த ஆண்டுகளைப்போல் உதகை மற்றும் கோடைக்கானலில் மலர் கண்காட்சியும் கூனூரில் பழக்கண்காட்சியும் நடத்தப்பட்டது. உதகையில் நடைபெற்ற மலர் மற்றும் பழக்கண்காட்சிக்கு ரூ. 1.35 இலட்சம் செலவிடப்பட்டு 1.73 இலட்சம் வருவாயாக பெறப்பட்டது.

மா கண்காட்சி:

மத்திய அரசு கூட்டு முயற்சியுடன் முதல் அகில இந்திய மா கண்காட்சி ஜூன் திங்கள் 1982-ல் சென்னையில் சிறப்புற இத்துறையினரால் நடத்தப்பட்டது.

1983-84 ஆம் ஆண்டு திட்டங்கள்.

தோட்டக்கலை விரிவு மற்றும் வளர்ச்சிக்கென மாவட்ட தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்கள் முதன்முறையாக வட ஆற்காடு, இராமநாதபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 5.42 இலட்சத்தில் செயலாக்கப்படவுள்ளது.

அதிக அளவில் வருவாய் ஈட்டவும் நிலங்களை அவற்றின் உயர்ந்த நிலையில் பயன்படுத்திடவும் பயிரிடப்படாமல் உள்ள நிலங்களில் பயிர் செய்திடவும் இத்திட்டம் வழி வகுக்கும். இதன் செயலாக்கத்தினால் பயிர் மாற்றம் ஏற்படும்.

வெற்றிலை கொடிக்கால் சிறு உழவர்கட்கு உதவும் திட்டம்.

இதுகாறும் வெற்றிலையினை அதிக அளவில் பாதித்து வந்த வாடல் நோயினை எதிர்த்தும், வெற்றிலை சிறு மற்றும் குறுநில உழவர்களுக்கு உதவும் பொருட்டும், இத்திட்டம் மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டங்களில் 1.78 இலட்சம் நிதி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

முந்திரி அபிவிருத்தி.

உலக வங்கி உதவியுடன் தமிழகத்தில் முந்திரி அபிவிருத்தித் திட்டமானது செயல்படுத்தப்படுவதற்காக, திட்ட கருத்துரு ரூபாய் 39.50 கோடி நிதி மதிப்பீட்டில் தமிழ்நாடு வனக் கழகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

தோட்டப்பண்ணைகளுக்கு பாசன வசதிகள்

மாதவரம், கண்டியான்குப்பம், கூடப்பட்டு, அரசு பழப் பண்ணை, கன்னியாகுமரி மற்றும் மரவள்ளி மையம், நாட்டு மங்கலம் ஆகிய இடங்களில் அரசு தோட்டப் பண்ணைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் தண்ணீர் வசதிகள் செய்வதற்கு ரூபாய் 0.50 இலட்சம் கொடுக்கப்படும்.

வெப்பப் பிராந்திய பழப்பண்ணை, குடுமியாமலை மற்றும் பெரும் பழப்பண்ணை, நவ்லாக் ஆகிய இடங்களிலும் கிணறு மற்றும் பூமிக்கடியில் தண்ணீர்க் குழாய் இணைப்புகள் அமைக்க ரூபாய் 1.00 இலட்சம் வீதம் நிதி கொடுக்கப்படும். இது தவிர மகாத்மா காந்தி ஊரக பழப்பண்ணை, வல்லத்திராக்கோட்டைக்கு கம்பி முள்வேலி 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 0.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

விதைச் சான்றீட்டுத் துறை.

விதைச் சான்றீட்டுத் துறை, 24-10-1979 முதல் தனித் துறையாக துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இத்துறை செயல்படத் துவங்கிய நாள் தொட்டு, இதனைச் சார்ந்த ஆதாரப் பணிகளின் செம்மையையும், பணிகளை முடிக்க வேண்டிய விரைவுத் தன்மையையும் கருத்தில் கொண்டு, இயன்ற முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

முன்னேற்றமும்—சாதனைகளும்:

விதைச் சான்றளிப்புத் திட்டத்தின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 31,768 ஏக்கர்களாக இருந்த பரப்பு 1980-81-ல் 31,812 ஏக்கர்களாகவும், 1981-82-ல் 43, 65 ஏக்கர்களாக அதிகரித்தன. 1981-82 ஆம் ஆண்டு சான்று வழங்கப்பட்ட விதைகளின் அளவு 13,900 டன்கள்.

விதை உற்பத்தித் துறைகளான வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் எண்ணெய் வித்துக்கள் துறை, தாங்கள் உற்பத்தி செய்யும் சான்றிடப்பெற்ற விதைகளின் அளவை அதிகரிக்க, பல்வேறு திட்டங்களைக் கையாள்வதால், இத்துறையும், மேற்கண்ட துறைகள் உற்பத்தி செய்யும் விதைகளை சான்றீட்டு செய்ய துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

விதை உற்பத்தியைக் குறித்து, விவசாயிகளுக்கு, அவர்கள் நடைமுறையில் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் உழவர் பயிற்சி நிலையம் துணைக்கொண்டு பல பயிற்சித் திட்டங்கள், பல மையங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய வானொலி நிலையம், கோவை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சென்னை வானொலி நிலையங்களின் வாயிலாக ஒலி பரப்பும் "பண்ணைச் செய்திகள்" வரிசையில் "தொழில் நுட்பக் குறிப்புகளையும்", "சிறப்புரைகளையும்", "விதை சான்றீட்டின் அவசியமும், நன்மைகளும்" என்ற பொருளில் ஒலிபரப்பி விவசாயிகளுக்கு எளிதில் விளங்கும் வண்ணம், விவரிக்





தோட்டப் பயிர்களில் முதல்படியாக உருளைக் கிழங்கையும், பச்சைப் பட்டாணி, விதைச் சான்றீட்டின்கீழ் ஏற்றுக்கொண்டு, சான்றீட்டுப் பணி நடைபெற்று வருகின்றது. 1981-82 ஆம் ஆண்டில், உருளைக் கிழங்கில் 57 டன்களும், பச்சைப் பட்டாணியில் 30 டன்களும் விதைகள் சான்றிடப்பட்டன. சிம்லாவிலிருந்து பெறப்பட்ட "குப்ரி ஜோதி" (Kufri Jyothi) எனப்படும் மூல விதையை ஓசூர் மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் விதைக்கப்பட்டு 50 டன் எடையுள்ள விதைகளுக்கு சான்றிடப்பட்டன.

1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய, 29,597 ஏக்கர் நிலப்பரப்பு "சான்றீட்டுத் திட்டத்தின்" கீழ் பதிவு செய்யப்பட்டது. குறியீட்டு இலக்கான 35,000 ஏக்கர் பரப்பளவு, 1982-83 ஆம் ஆண்டு முடியும் முன்பே, இலக்கை எட்டிவிடும். 1982-83-ல் குறியீட்டு இலக்கான 638 மற்றும் 877 ஏக்கர்கள் முறையே எண்ணெய் வித்துக்களுக்கும், காய்கறிகளுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 1-4-1982 முதல் 31-12-1982 முடிய உள்ள காலத்தில் 695 ஏக்கர்கள் எண்ணெய் வித்துக்கள் வகையிலும், 532 ஏக்கர்கள் காய்கறிகள் வகையிலும் இலக்கை எட்டிவிட்டிருக்கின்றன.

1-1-1983 முதல் 31-3-1983 வரை, எண்ணெய் வித்துக்களில் 100 ஏக்கர்களையும், காய்கறி வகைகளில் 200 ஏக்கர்களையும் எட்டிவிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இருபது அம்சத் திட்டத்தின்கீழ் மிக முக்கியத்துவம் பெற்ற, பயறு மற்றும் எண்ணெய் வித்துக்களின் விரைவு உற்பத்தித் திறன் காரணமாக, மேற்கண்ட விதைகளை உடனுக்குடன் சான்றீட்டு செய்ய தனிக் கவனத்துடன் தனியாக, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1983-84 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

1983-84-ம் ஆண்டு இலக்கிற்கென 40,000 ஏக்கர்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

உதவி வேளாண்மை இயக்குநர் (விதைச் சான்று) அலுவலகங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள "சிறு விதை ஆய்வுக் கூடங்களின்" உதவி, விதை மாதிரிகளின் விரைவு சோதனைகளுக்காகவும் பல்வேறு விதைகளின் உறக்க நிலை முதலியன பற்றிய கருத்துக்களை அறியும் பொருட்டு பயன்படுத்தப்படும்.

கொல்லிமலைப் பகுதிகளில், சான்றிடப்பட்ட உருளைக் கிழங்கு விதைகளை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை, இத்துறை நடைமுறையில் ஆராயும். மேலும், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறி வகைகளின் சான்றீட்டிற்கென பெரும்பான்மையான பரப்பை, செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கின்றது.

மேலும் விதை மாதிரிகளின் இனத்தூய்மை முதலியவை பற்றிய தேர்வு நடத்துவதற்கான, 1982-83-ல் கோவையில் ஒரு கண்ணாடி கூடம் நிறுவ அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனால், மேற்குறிப்பிட்ட தேர்வுகளை, முன்போன்று வயல்களிலும், அரசு விதைப் பண்ணைகளிலும் அல்லாது, இக் கண்ணாடி கூடத்தின் உதவி கொண்டு மேலும் சிறப்பாக மேற்கொள்ள இயலும்.

1966 ஆம் ஆண்டின் இந்திய விதைச் சட்டத்தை அமுல்படுத்தல்

விதை விநியோக நிறுவனங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு விதை ஆய்வு அலுவலகங்களைச் சார்ந்ததாகும். இவை, விவசாயிகளுக்குத் தேர்ந்த தரமான விதைகளை வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன. விநியோக நிறுவனங்களின் வரிசையில் பலதரப்பட்ட முகவாண்மையகங்களின்கீழ் இயங்கும் விநியோக நிலையங்களும் அடங்கும். 1983-84-ல் 5,000 விதை விற்பனைக் கூடங்களை ஆய்வு செய்யவும், 5,000 விதை மாதிரிகளை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதாகவும் திட்டம் உள்ளது. இதன் முக்கிய நோக்கம் போலி மற்றும் தரக் குறைவான விதைகள், எந்தவொரு விநியோகஸ்தர்களாலும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதைத் தடுப்பதேயாகும்.

வேளாண்மை விற்பனைத் துறை

வேளாண்மை விற்பனைத் துறை கீழ்க்கண்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்துகிறது:—

பருத்தி தரம் பிரிக்கும் மையம்

இந்தத் திட்டத்தின் நோக்கம் விவசாயிகளிடமிருந்தும், ஒழுங்குமுறை கூடங்களிலிருந்தும் மாதிரி பருத்தியை வாங்கி, அதனை நுட்பமான கருவிகளின்மூலம் பரிசோதனை செய்தலாகும். ஏழு மையங்கள் முறையே பெருந்துறை, சத்யமங்கலம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, புதூர், கோவில்பட்டி மற்றும் சங்கரன்கோயில் ஆகிய ஊர்களில் நிறுவப்பட்டுள்ளன. இவை தவிர தேனி, இராஜபாளையம் மற்றும் திருப்பூர் முதலிய இடங்களிலும் மூன்று மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திலும் ஒரு வேளாண்மை அலுவலர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் பருத்தியை தரம் பிரித்து விவசாயிகளின் பருத்தியின் தரத்தை தெரிந்துகொள்வதற்கு உதவி செய்கிறார்.

வணிகமுறை தரம் பிரிப்பு திட்டம்

இந்தத் திட்டம் ஒழுங்குமுறைக் கூடங்களில் நடைபெறுகிறது. இந்தத் திட்டத்தின்படி விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏதுவாகும். இதனால் விவசாயிகள் தரம் பிரித்தலினால் உண்டாகும் நன்மைகளை உணரச் செய்கிறது.



1979-80 ஆம் ஆண்டில் 25 தரம் பிரிக்கும் மையங்கள் அனுமதிக்கப்பட்டன. ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு வேளாண்மை அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார். தவிர 50 மையங்கள் செயல்படுகின்றன. அவைகளில் ஒரு உதவி வேளாண்மை அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

எல்லா மையங்களிலும் நவீன விஞ்ஞானக் கருவிகள் வைக்கப்பட்டு அதன் மூலம தரம் பிரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. விவசாயிகளுக்கு மேலும் இந்த வசதியை அளிக்க 1983—84 ஆம் ஆண்டில் மேலும் 25 வணிக முறை தரம் பிரிப்பு மையங்களை நிறுவும் செயற்குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நெய் மற்றும் எண்ணெய் தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்கள்

நாம் அன்றாடம் உபயோகிக்கும் உணவுப் பண்டங்களில் கலப்படத்தைத் தவிர்க்கவும், நுகர்வோருக்கு சுத்தமானதும், தரமானதுமான பொருள்கள் கிடைக்கச் செய்வதற்கு விஞ்ஞான முறையில் நெய், எண்ணெய் முதலிய பண்டங்களை பரிசோதனை செய்து, தரமிக்க பொருள்களையே விற்க வழி செய்ய இந்த ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்களில் தகுதி வாய்ந்த வேளாண் அலுவலர்கள் அங்கீகாரம் பெற்ற உற்பத்தியாளர்களிடம் குறைவான கட்டணம் பெற்றுக் கொண்டு விற்பனைப் பொருள்களை பரிசோதனை செய்து தரம் பிரித்து தெரிவிக்கிறார்கள்.

1978-79 ஆம் ஆண்டில் 15 அக்மார்க் ஆய்வுக்கூடங்கள் செயல்பட்டு வந்தன. 1979-80 ஆம் ஆண்டில் திண்டுக்கல், காங்கேயம், கும்பகோணம், தூத்துக்குடி, நாமக்கல் முதலிய இடங்களில் 5 அக்மார்க் ஆய்வுக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன 1980-81-ல் 10 ஆய்வுக்கூடங்களும், 1981-82—ல் மேலும் 6 ஆய்வுக் கூடங்களும் ஆரம்பிக்கப்பட்டன. தற்பொழுது மொத்தம் 36 கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுக் கூடம் மற்ற ''அக்மார்க்'' ஆய்வுக் கூடங்களின் வேலைகளை ஒருங்கிணைத்து ஏற்கனவே மற்ற ஆய்வுக் கூடங்களில் தரம் பிரித்த பொருள்களின் மாதிரிகளை ஆய்வு செய்கிறது.

ஆய்வுக் கூடங்களுக்கான கட்டடப் பணிகள்

மதுரையில் உள்ள ஆய்வுக் கூட கட்டட வேலைகள் முடிந்துவிட்டன. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் நாகர்கோவிலுள்ள 'அக்மார்க்' ஆய்வுக்கூடங்களுக்கு கட்டடம் கட்டுவதற்காக ஆய்வுக் கூடம் ஒன்றுக்கு ரூ. 1.75 இலட்சம் வீதம் ரூ. 5.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

### பயிற்சி நிலையம் அமைப்புத் திட்டம்

இந்தப் பயிற்சி நிலையம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வரும் வரத்துக்களை தரம் பிரிக்கவும், விவசாயிகளுக்குத் தரம் பிரிப்புப் பற்றி விளக்கவும் செய்கிறது. ஒவ்வோர் ஆண்டும் 60 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்துடன் வேளாண் விற்பனைத் துறையில் உள்ள வேளாண் அலுவலர்களுக்கும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பணிபுரிகிற மேற்பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### தேசிய அளவில் கிராமச் சேமிப்புக் கிடங்குகள்

இத்திட்டம் மத்திய அரசால் ஆதரவளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், தங்கள் அருகாமையில், விளைபொருள்களுக்கு நவீன சேமிப்பு வசதிகள் பெற்று அவற்றின் மூலம் தங்கள் பொருள்களின் மேல் கடன் வசதி பெற வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால் குறைந்த விலையில் விற்பனை செய்வதால் ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்க முடியும். மொத்த செலவில் மத்திய அரசு 25 சதவிகிதமும், மாநில அரசு 25 சதவிகிதமும் மான்யமாக வழங்க, விற்பனைக் குழு மீதி 50 சதவிகித செலவையும் ஏற்றுக்கொள்ளும். நடப்பு ஆண்டில் 89 கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன.

### தமிழ்நாட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அபிவிருத்தி

விற்பனைக் கூடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் வரத்துகளும் அதன் வருமானமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | 1979-80. | 1980-81. | 1981-82. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1. | விளைபொருள் வரத்துக்கள் (இலட்சம் டன்களில்). | 4.86 | 4.22 | 4.01 |
| 2. | விற்பனைக் குழுவின் சாதாரண வருமானம் (இலட்சம் ரூபாயில்). | 354 | 429 | 452 |



மத்திய அரசிடமிருந்து கடந்த மூன்று ஆண்டுகளில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளர்ச்சிக்குப் பெறப்பட்ட நிதி உதவி பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுளளது:—

| | | ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள். | நிதி. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1979-80 ஆம் ஆண்டு | .. | 25 | 25.00 |
| 1980-81 ஆம் ஆண்டு | .. | 9 | 7.50 |
| 1981-82 ஆம் ஆண்டு | .. | 12 | 11.00 |

**உலக வங்கி உதவி:**

வாய்ப்புள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக 127.76 கோடி ரூபாய் நிதி உதவி உலக வங்கியிடமிருந்து கோரி மத்திய அரசுக்கு ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்மேல் மத்திய அரசுக்கு ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்மேல் மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்திற்கான செலவனைத்தும் கரும்பு ஆலைகளிடமிருந்து வசூல் செய்யப்படும் "செஸ் நிதி" நிதியிலிருந்து ஏற்கப்பட்டு வருகிறது. பாண்டிச்சேரியில் உள்ள ஓர் ஆலையுடன் பதினேழு சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் நடைபெறும் சாலை வேலைகளைத் திறம்பட கண்காணிக்க திருச்சியை தலைமை இடமாகக் கொண்டு பணியாற்ற ஒரு வட்ட அலுவலகமும், திருச்சியிலேயே கூடுதலாக ஓர் கோட்ட அலுவலகமும அமைக்கப்பட்டன. சென்னை கோட்டம் கடலூருக்கு மாற்றப்பட்டது. அதையடுத்து 1981 ஆம் ஆண்டு முதல் சேலத்தில் மற்றுமோர் கோட்ட அலுவலகம் அமைக்கப்பட்டது.

மழைக்காலங்களிலும் கூட கரும்பு தடையின்றி ஆலைகளை வந்தடைய கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய சாலைகள் அமைப்பதும், மண் சாலைகளில் சரளைக்கல் பரப்புதலும், தற்போது இருக்கும் சாலைகளைச் சீர்திருத்தலும், தார் போடுதலும் மாவட்ட பெரிய சாலைகளின் தரத்திற்கு செய்யப்பட்டு வருகின்றன. பாலங்கள், தரைப்பாலங்கள், சிறு பாலங்கள், குறுக்குச் சாக்கடைகள் ஆகியவை கட்டுவதிலும் தனிக் கவனம் செலுத்தப்படுகின்றது.

இத்திட்டச் சாலைகள், ஆலைகள் தங்களின் முழு அரவைத் திறனைப் பயன்படுத்தத் தேவையான கரும்பு விநியோகத்தைத் தடையின்றி விரைவாகப் பெறவும் கரும்பு உலர்வதைத் தடுக்கவும் பெரிதும் உதவுகின்றன. இத்திட்டத்தின் மூலம் போடப்படும் நல்ல சாலைகளின் உதவியால் ஆலைகள் கரும்பினை வயலில் வெட்டியவுடன் விரைவாகப் பெற்று நல்ல சர்க்கரை (சத்து) கட்டுமானம் பெறுகின்றன. இதன் மூலம் அவைகளின் லாபமும் அதிகரிக்கின்றது. மேற்படி லாபங்களினால் விவசாயிகள் கரும்புக்குக் கூடுதலான விலையும் பெறமுடிகிறது. ஆக கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் கிராமங்களின் எல்லா வகையான வளர்ச்சிக்கும் வழி செய்துள்ளது.

1979-80 முதல் 1982-83 வரை இத்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட தொகையும் 1982-83 ஆம் ஆண்டின் இலக்கும் அடைந்த நிலையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வருடம். | செலவிடப்பட்ட தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) |
| 1979-80 .. .. .. | 150.00 |
| 1980-81 .. .. .. | 180.41 |
| 1981-82 .. .. .. | 230.24 |
| 1982-83 .. .. .. | 207.07 (1982 டிசம்பர் வரை) |

1982-83 ஆம் ஆண்டில் கரும்பு சாலை திட்டத்தின்கீழ் இலக்கும் அடைந்த நிலையும்:

| சாலைகள். | 1982-83 இலக்கு. | அடைந்த நிலை 31-12-1982 வரை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 புதிதாகப் போடப்பட்டவை (கி.மீ.) | 83.387 | 36.470 |
| 2 சரளைக்கல் பரப்பப்பட்டவை (கி.மீ.) .. .. | 157.362 | 72.420 |
| 3 தார் போடப்பட்டவை (கி.மீ.) | 203.052 | 103.940 |
| 4 சிறு பாலங்கள் (கல்வெர்ட்) .. | 312 | 137 |
| 5 பாலங்கள் மற்றும் தரைப் பாலங்கள் .. .. | 16 | 3 |





விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்ப்பாசனமற்ற இதரத் திட்டங்கள்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே அதிக அளவில் நிலநீர் அளகுகள் பயன்படுத்தப்பட்டதை யொட்டி மேலும் சிறுபாசனத் திட்டங்கள் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்தமையால், பிரதம நிலவள வங்கிகளின் செயல்முறைகளை வரிவாக்கும் பொருட்டு விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கி உதவியுடன், செயல்படுத்துவதற்காக சிறு பாசனத் திட்டங்கள் அல்லாத, தோட்டபயிர்களான, காப்பி, தேயிலை, ரப்பர், கோக்கோ, சுராம்பு, தென்னை மற்றும் திராட்சை முதலியவற்றை சாகுபடி செய்வதற்கான திட்டங்களும் மற்றும் பலநோக்குத் திட்டங்களான பால்பண்ணைத் திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம், கோழிவளர்ப்புத் திட்டம், மற்றும் கைவண்டிகள் வழங்குதல் போன்ற திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. விவசாயிகள் அதிக வருமானம் பெறும் பொருட்டு தோட்டப் பயிர்கள் சாகுபடிக்கான திட்டங்களும் விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் பயன்பெறும் பொருட்டு பல நோக்குத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல நோக்குத்திட்டங்களுக்காக நீண்ட காலக் கடன்களை, நிலவள வங்கிகள் மூலம் பெருவாரியாக வழங்குவதற்கு வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டம் தகுந்தபடி திருத்தி அமைக்கபபட்டு மேற்படித் திட்டங்களின் கீழ் பெருவாரியான அளவிற்குக் கடன்கள் வழங்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் நில அடமானப் பிணை இல்லாமல் அரசின் உத்திரவாதத்தின் பேரில் மட்டும் நீண்ட காலக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவான வகையில் மேற்படி சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட திருத்தங்களின் அடிப்படையின் பெயரில் நிலமற்றவர்களுக்கு நில அடமானப் பிணை இல்லாமல் அரசின் உத்திரவாதத்தின் பேரில் மட்டும் நீண்ட காலக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவான வகையில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேற் மேற்படி சட்டத்தின் வழிவகைகள் அடிப்படையின் பேரில் நிலமற்றவர் கண்ட திருத்தங்களின் அடமானப்பிணை இலலாமல பல நோக்கு காரியங்களுக்கு நில அடமானப்பிணை இலலாமல பல நோக்கு காரியங்களுக்காக நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க அரசாணை எண் 511, உணவு மற்றும் கூட்டுறவு, நாள் : 3-10-1980-ல் ரூ. 5 கோடிக்கு அரசின் உத்திரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

பலநோக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதில் இதுவரை 1,496.24 இலட்ச ரூபாய் அளவிற்குக் கடன் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 1,751.71 இலட்ச ரூபாய் அளவில் 81 சிறுபாசனமற்ற பல நோக்குத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் 1982–83-ல் 700 இலட்ச ரூபாய் கடனாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 1982 ஆம் ஆண்டு

டிசம்பர் திங்கள் வரை, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்டது உட்பட 284.78 இலட்ச ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பிரதம நிலவள வங்கிகள் கடன் வழங்கும் தகுதியைய நிர்ணயம் செய்ய விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கியால் வழங்கப்பட்டிருக்கும் தளர்த்தப்பட்ட விதிமுறைகளைபயன்படுத்தி பல நோக்குத் திட்டங்களில் அதிக அளவில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

செயற்பட்டு வரும் திட்டங்கள் தவிர 1641.71 இலட்சம் ரூபாய் அளவில் 54 புதிய திட்டங்கள் தற்போது பல்வேறு நிலைகளில் தயாரிப்பில் இருந்து வருகின்றன. இந்திட்டங்கள் அனைத்தும் 1983-84 ல் விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கியால் ஒப்புதல் அளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டங்கள் ஒப்புதல் பெற்ற பின்னர் செயல் படுத்தபபட்டும், 1982-83 ஆம் ஆண்டில் தவணை கடந்த கடன் பாதாகைகளை வசூல் செய்வதில் சிறந்த முன்னேற்றம் இருந்தால் மட்டுமே இத்திட்டங்களின்கீழ் 1983-84 ஆம் ஆண்டுக்கு 750 இலட்ச ரூபாய் கடன்கள் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

நகர்புற கலவை எருத்திட்டம் மற்றும் கழிவுநீர் உபயோகதிட்டம்

நகர்ப்புற கலவை எருத்திட்டம் 1944 ஆம் ஆண்டில் துவக்கப் பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலுமுள்ள எல்லா கழிவுப் பாருட்களையும் பல்வேறு விதமான பயனற்ற குப்பைகளையும் கலவை எருவாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்,

கலவை எருக்கிடங்குகளிலும் பொதுவாக அபிவிருத்தி செய்யவும், கலவை எரு உற்பத்திக்கு நிலங்களை வாங்கவும், லாரிகள், டிராக்டர்கள் மற்று டிரெயிலர்கள் வாங்குவதற்கும், மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும், 973-74 ஆம் ஆண்டு வரை நீண்ட கால கடன்கள் வழங்கப்பட்டன.

1974-75 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதை அரசாங்கம் நிறுத்தி விட்டது. இருப்பினும்' நகராட்சிக் கழிவுகளை மாற்று உபயோகத்திட்டத்தின் தொழில் நுட்ப மற்றும் நிதியுதவி கமிட்டியின் சிபாரிசின் பேரில் சமீபத்தில் அரசு மீண்டும் கடன் வழங்கவும் மானியம் வழங்கவும் சம்மதித்துள்ளது

நகராட்சிகளின் இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நகராட்சிகளும் நகரிய குழுக்களும் நடப்பு ஆண்டில் 3,86,300 மெ. டன் கலவை எரு உற்பத்தி செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



சிறந்த கலவை எரு தயாரிக்கும் உள்ளாட்சி நிறுவனங் களுக்கு சுழற் கேடயம் பரிசளிக்கப்படுவதுடன் தரமான கலவை எரு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பண முடிப்பும் பரிசாக வழங்கப்படுகின்றது.

கழிவுநீர் உபயோகத் திட்டம்

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள கழிவுநீரை வேளாண்மைக்கு பயன்படுத்துவது நகர்ப்புற கலவை எருத் திட்டத்தின் ஓர் அங்கமாகும். வடிகால் முறையை மாற்றி அமைத்தல், கட்டுமானம் செய்தல், சாக்கடை நீரை சேகரித்து பக்குவப்படுத்தி கழிவுநீர் பண்ணைகளில் பாசனத்திற்குப் பயன் படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும்.

தற்போது தீவிர திட்டத்தின் கீழ் 23 உள்ளாட்சி நிறுவனங்கள் கழிவுநீர் பண்ணைகளை பராமரித்து வருகின்றன.

புல் மற்றும் இதரப் பயிர்கள் கழிவுநீர் பண்ணைகளில் பயிராகின்றன. இப்பண்ணைகளை முறைப்படி பராமரிக்க உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் இம்மாநிலத்தில் இராமநாதபுரம் தருமபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் நான்கு வட்டாரங்களுக்கு விரிவுப்படுத்தப் பட்டுள்ளது. பல அபிவிருத்தி பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சித் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், வறட்சி தாக்குதலினால் இப்பகுதிகளில் ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும் மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன.

(2) 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூ. 606.159 இலட்சம் அளவில் பலதரப்பட்ட பணிகளை இராமநாதபுரம், தருமபுரி, ஆகிய இரு மாவட்டங்களில் நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு இம்மூன்று மாவட்டங்களுக்கும் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 450 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம்

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம், 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் வேளாண்மை கால்நடை பராமரிப்பு, மீன்வளம் கோழி

ளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் கையில் வ சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் ணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல் ஆகும்.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும்' இதில் ரூ. 360 இலட்சம் மதிபுள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில்தமிழ்நாடு அரசு 195 இலட்சமும் இந்திய அரசுரூ. 16 இலட்சமும் சலுத்தியுள்ளது.

### உர விற்பனை

பல்வேறு வகையான உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு இக்கழகம் குறிப்பிட்ட நிறுவனங்கள் தயாரிக்கும் பல்வகையான உரங்களை விநியோகம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது.

இக்கழகம் 1982 83 ஆம் ஆண்டும் 1983-84 ஆம் ஆண்டும் முறையே சுமார் ரூ. 827 60 இலட்சம் மதிப்புள்ள 35,000 மெ. டன் அளவுள்ள உரங்களையும் சுமார் ரூ. 1,166.40 இலட்சம் மதிப்புள்ள 50,000 மெ. டன் அளவுள்ள உரங்களையும் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. டிசம்பர் 82 வரை 26,782 மெ. டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### டிராக்டர்கள் பவர் டில்லர்கள் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை

இக்கழகம் விவசாயிகளுக்குத் தேவையான நல்ல உதிரி பாகங்களையும் டயர் மற்றும் டியூப்களையும் மின் லன்களை யும் தேவையான நேரத்தில் நியாயமான விலையில் சீராக தமது விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகம் செய்து வருகின்றது. தற்சமயத்தில் இக்கழகம் நமது மாநிலத்தில் 13 விற்பனை நிலையங்களும், பாண்டிச்சேரியில் 2. விற்பனை நிலையங்களும் மொத்தம் 15 விற்பனை நிலையங்களையும் கொண்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ. 165.29 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. 1982–83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 66 இலட்சத்திற்கும் ரூ. 170 இலட்சத்திற்கும் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இக்கழகம் 1981-82 ஆம் ஆண்டு 82 டிராக்டர்களையும் 39 பவர் டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. 1982-83 ஆம் ஆண்டு இக்கழகம் 85 டிராக்டர்களையும் 76 பவர் டில்லர்களையும் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டின் விற்பனைக் குறியீடாக 96 டிராக்டர்களும் 80 பவர் டில்லர்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கழகம் இதுவரை 2,921 டிராக்டர்களை விற்பனை செய்துள்ளது.



### பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்புத் திட்டம்

1972 ஆம் ஆண்டு இக்கழகம் பிரசித்தி பெற்ற பி. எச். சி. 10 சதவிகிதம் போன்ற பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்க ஆரம்பித்தது. தொடக்கத்தில் இக்கழகம் பூச்சிக் கொல்லி மருந்துகளை தனியார் நிறுவனங்களின் உதவியால் தயாரித்து வந்தது. இப்பொழுது இக்கழகம் தனது சொந்தத்தி ரூ. 9.79 இலட்சம் முதலீட்டில் அம்பத்தூரில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தியது. இந்தத் தொழிற்சாலை தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் ஆரம்பித்தது. பெருகி வரும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் தேவையை ஈடுகட்ட ரூ. 4 இலட்சம் செலவில் தனது இரண்டாவது ஆலையை ஏற்படுத்தி யுள்ளது.

1981-82 ஆம் ஆண்டு 2,575 மெ. டன் அளவு தூள் மருந்துகளும், 8,712 லிட்டர் அளவு திரவ மருந்துகளும் ரூ. 28.40 இலட்சம் மதிப்பிற்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

1982-83 ஆம் ஆண்டில் (டிசம்பர் திங்கள் வரை) ரூ. 19.52 இலட்சம் மதிப்புள்ள 1,450 மெ. டன் அளவுள்ள தூள் மருந்துகளும் ரூ. 3. 94 இலட்சம் மதிப்புள்ள 11.785 லிட்டர் அளவு திரவ மருந்துகளும் விற்பனை செய்யப்பட்டன. 1983 ஜனவரி திங்கள் முதல் மார்ச்சு 1983 இறுதிவரை இக்கழகம் ரூ. 20.41 இலட்சம் மதிப்புள்ள 1503 மெ. டன். அளவு தூள் மருந்துகளும் ரூ. 2,42 இலட்சம் மதிப்புள்ள 8,250 மதிப்புள்ள திரவ மருந்துகளும் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 42.80 இலட்சம் மதிப்புள்ள 3,105 மெ. டன் தூள் மருந்துகளும் ரூ. 11.15 இலட்சம் மதிப்புள்ள 30,250 லிட்டர் அளவு திரவ மருந்துகளையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம்

நைலான் நூலினாலும், பாலித்தின் நூலாலும் ஆண்டிற்கு 60 மெட்ரிக் டன் அளவு மீன்பிடி வலைகளைப் பின்னுவதற்காக கிண்டியில் ஒரு ஆலை அமைந்துள்ளது.

1981-82ம் ஆண்டு இவ்வாலையில் தயாரிக்கப்பட்ட ரூ. 28·66 இலட்சம் மதிப்புள்ள 28.5 மெ. டன் மீன்பிடி வலைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 25.79 இலட்சம் மதிப்புள்ள 24.! மெ. டன் அளவும் ரூ. 31.71 இலட்சம் மதிப்புள்ள 28.5 மெ. டன் அளவும் மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது

### இலைப்புரத மாவுத் திட்டம், உடுமலைப்பேட்டை

சிறு விவசாயிகள் தங்களது உற்பத்திக்கேற்ற விலையைப் பெற வேண்டி கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் தேவையான முக்கிய உணவாகிய இலைப்புரதமாலை லூசரின் என்ற புல் வகையைப் பக்குவப்படுத்துதல் மூலம் தயாரிக்கும் தொழிலகத்தை முன்னோடியாக உடுமலைப்பேட்டையில் இக்கழகம் அமைத்துள்ளது.

இக்கழகம் 1981-82 ஆம் ஆண்டில் 640 மெ. டன் அளவுள்ள லூசரின் புல்லைப் பக்குவப்படுத்தியது. 1982-83 ஆம் ஆண்டு 1,250 மெ. டன் அளவும் 1983-84 ஆம் ஆண்டு 2,250 மெ. டன் அளவும் பக்குவப்படுத்துமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம், போச்சம்பள்ளி

ரூ. 56 இலட்சம் மதிப்புள்ள போச்சம்பள்ளியில் அமைக்கப்பட்ட சூரியகாந்தி விதைகளிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியிலான உற்பததியை துவக்கியது. 1981-82 ஆம் ஆண்டு வாங்கிய 2,012 மெ. டன் விதைகளும் 1980-81 ஆம் ஆண்டு வாங்கிய 700 மெ. டன் விதைகளையும ஒப்பிடுகையில் இக்கழகம் 1982-83 ஆம் ஆண்டு (டிசம்பர் 1982 முடிய) வாங்கிய 2,250 மெ. டன் அளவு சூரியகாந்தி விதைகள் குறிப்பிடத்தக்கது.

இக்கழகத்தின் சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி விதை எண்ணையான ''சனோலா'' மிகவும் பிரசித்தி பெற்று விட்டது. ''சனோலா'' பாலித்தின் பார்க்கெட்டுகளிலும் நிரப்பப் பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அண்டை மாநிலங்களான கர்நாடகத்தில் சென்ற ஆண்டிலிருந்தும் ஆந்திரப் பிரதேசத்தில் இவ்வாண்டிலிருந்தும் ''சனோலா'' கிடைகக வழிவகை செய்யப் பட்டுள்ளன.

### கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, நாமக்கல்

இக்கழகம், செக்கு பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பொருட்களைத் தயாரித்து விற் பனை செய்யும் நாமக்கல் கூட்டுறவுத் துறை இணையகம் என்ற நிறுவனத்திடமிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் தொழிற்கூடம் ஒன்றை எடுத்துக் கொண்டுள்ளது.

புதிய எரி வாயு கொதிகலன் நிறுவப்பட்டு 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இவ்வாலை தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பெற்றும் தொடர்ந்து ஏற்பட்ட மின் பற்றாக்குறை காரணமாக இதன் உற்பத்தி தொடக்கம் மேலும் தாமதப்பட்டுவிட்டது. மீண்டும் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் டீசல் ஜெனரேட்டரை நிறுவி தனது வர்த்தக



ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. 1982-83 ஆப் ஆண்டின் இறுதி காலாண்டில் 1,500 மெ. டன் அளவுள்ள கடலைப் பிண்ணாக்கை கரைத்தெடுக்க மதிப்பிடப்பட்டுள்ளது 1983-84 ஆம் ஆண்டில் 5 000 மெ. டன் அளவு கடலைப் பிண்ணாக்கையும் 2,500 மெ. டன் அளவுள்ள அரிசித் தவிட்டை யும் கரைத்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### கரைத்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை, பொனக்குளம்

இக்கழகம் காதி மற்றும் கிராமப்புறத் தொழில்கள் வாரியத் தினரால் பட்டுக்கோட்டையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருந்த எண்ணெய் பிழிந் தடுக்கும் தொழிற்கூடத்தை ஏற்றுக் கொண்டது. தொழிற்கூடம் அமையவிருக்கும் இடத்தினருகி லேயே மூலப்பொருள் பெரும் வாய்ப்பினைக் கருதியும் பிற்பட்ட மாவட்டங்களுக்கு அளிக்கப்படும் அரசுச் சலுகையைப் பெற வதற்காகவும் இக்கழகம் தொழிற்கூடம் நிறுவவேண்டிய இட ாகிய தஞ்சாவூர் என்னும் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்ட என்னும் டத்திலிருந்து தஞ்சாவூருக்கு 10 கி. மீ. தள்ளி அமையப்பெற்ற புதுக்கோட்டை மாநிலத்தைச் சேர்ந்த பொனக்குளம் என்ற இடத்திற்கு மாற்றியுள்ளது. இவ்வாலை 1983 ஆம் ஆண்டு இடையே உற்பத்தியை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கான மூலப்பொருள்களைத் தயாரித்தல்

மெஸர்ஸ் இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடன், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் கேரள மாநிலங்களின் வேளாண் தொழில்கள்-கழகங்களுடன் கூட்டுத் தயாரிப்பில் இக்கழகம் இணைந்துள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கோவூர் என்னும் இடத்தல் அதன் மூலப் பொருட் களை உற்பத்தி செய்யும் முதலாவது உற்பத்த பிரிவு நிறுவப் படும். அதன் தற்போதய விரிவான விலை மதிப்பீட்டை இந்திய அரசு அங்கீகரித்துள்ளது. 1984 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத்திட்டம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சாண எரிவாயு கலங்கள் செய்தலும் நிறுவுதலும்

தேசிய திட்டத்தின்கீழ் இக்கழகம் தென் ஆற்காடு மாவட்டத்திலும் வட ஆற்காடு மாவட்டத்திலும் சாண எரிவாயு கலன்கள் செய்து நிறுவ மேற்கொண்டுள்ளது. முதலாவதாக இக்கழகம் விற்பனைக்கேற்ற முறையில் 300 சாண எரிவாயு கலன்களைச் செய்ய நிறுவ உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இக்கழகத்தின் ஒவ்வோர் கலனுக்கும் ரூ. 200 நிறுவன ஆதரவாக ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்படும். 1983-84 ஆம் ஆண்டில் இக்கழகம் 500 சாண எரிவாயு கலன்கள் அமைத்துத்தர உத்தேசித்துள்ளது.

### தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம்

தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம் 1974 டிசம்பரில் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கம் இம்மாநிலத்தில் பயிர் விளைச்சலுக்கு ஏற்ற ஏராளமான தரிசு நிலங்களைப் பயிர் விளைச்சலின் கீழ் கொண்டு வருதலும், உணவு, வணிகப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதுமே ஆகும். இக்கழகத்தின் மற்றொரு முக்கிய நோக்கம், சமூகப் பணியை அடிப்படையாகக் கொண்டதாகும். அதாவது இக்கழகம் அமைத்துள்ள பல பண்ணைகளில் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் அவர்களுக்கு புதுவாழ்வு அளிப்பதாகும். பண்ணைக் கழகம் இதுவரை 3,100 ஏக்கர் பயிரிடப்படாதநிலத்தை விளைநிலமாக மாற்றி அதன் முன்னேற்றத்தை காட்டியுள்ளது. 1,043 ஸ்ரீலங்கா அகதிகள் குடும்பத்தினருக்கு இக்கழகத்தின் பண்ணைகளில் மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

2. இக்கழகம் அமைக்கப்பட்டதிலிருந்து நட்டத்தில் செயல்பட்டு வந்தது. எனவே தமிழ்நாடு அரசுப் பண்ணைக் கழகத்தை பாதிக்கும் பிரச்னைகள் அனைத்தும், அரசால் விரிவாக விவாதிக்கப்பட்டது. ஒவ்வோராண்டும் இக்கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டதன் காரணமாக, அரசு மேலும் மேலும் நிதயுதவி அளித்தாலும் கழகத்தின் நிதிநிலைமை சீரடையாது என்று அறியப்பட்டது. எனவே மேலும் இழப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்காக கழகத்தின் நடவடிக்கைகள் 31-8-82 முதல் நிறுத்தப்பட்டது. அதன்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டது. பண்ணைகளில் வேலை பார்த்து வந்த ஸ்ரீலங்கா அகதிகள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 வீதம் உதவித்தொகை வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப, அதன் திட்டங்களை செயல்படுத்த கழகத்திடமிருந்து நிலங்கள் அவைகளுக்கு மாற்றப்பட்டன.

### தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக்கூட்டுறவு இணையம் 1972 ஆம் ஆண்டு 220 வட்டார அளவிலான வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களும், 12 மாவட்ட அளவிலமைந்த கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்களும் இணைந்த மாநில அளவிலான கூட்டுறவு சங்கமாக அமைக்கப்பட்டது.

2. விவசாய, பொறியியல் சேவைகளை, விவசாய சேவை மையங்களை தொடங்குவதின் மூலம், கிராமப்புறங்களில் அளித்தலும், விவசாய உபகரணங்கள், கருவிகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வாடகை மூலமும், விற்பனை மூலமும் வழங்குவதும் இவ்வமைப்பின் முக்கிய குறிக்கோளாகும்.



3. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் ஒரு கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 31-12-82 அன்று ரூ. 23.98 இலட்சங்களாகும். 30-6-82 அன்று முடிவுற்ற நிதியாண்டில் இவ்விணையம் ரூ. 1,04,937.93 நிகர லாபம் ஈட்டி முந்தைய வருடங்களின் கூடுதல் நஷ்டத்தையும் ஈடு செய்துள்ளது.

### இணையமும் மற்றும் அதனைச் சார்ந்த மையங்களின் தற்போதய பணிகள்.

1. ஒருங்கிணைப்புத் திட்டம்

ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ், இணையம் டீசல் என்ஜின்கள் மற்றும் மின்சார மோட்டார் பம்பு செட்டுகளை நியாயமான விலையில் பிரதம நிலவள வங்கி கடன்தாரர் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

2. மற்ற வியாபார நடவடிக்கைகள்

இவ்விணையம் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்களின் மூலமும், நேரடியாகவும், விவசாய இடுபொருட்களையும் மற்றும் வேளாண் கருவிகளையும் விநியோகம் செய்து வருகின்றது. 1982-83 ஆம் ஆண்டில் (1-7-82 முதல் 31-12-82 வரை) இணையம் ரூ. 63.96 லட்சம் மதிப்புள்ள இடுபொருட்களையும், இணையத்தைச் சார்ந்த மையங்கள் ரூ. 257.76 லட்சம் மதிப்புள்ள இடுபொருட்களையும், விவசாயக் கருவிகளையும், விவசாயிகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

3. வாடகை பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள்;

என்கோ பெட்டுடன் இணைந்த சங்கங்களிடம் விவசாயிகளுக்கு சேவை செய்வதற்கென 233 டிராக்டர்கள், 183 டிரெய்லர்கள், 167 டீசல் என்ஜின்கள், 310 விசைத் தெளிப்பான்கள் மற்றும் 14 பாறை பிளக்கும் கருவிகள் ஆகியவை உள்ளன. அது மட்டுமல்லாமல் டிராக்டர்களுடன் இணைந்த டிரெயிலர்கள் மூலம் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகிக்கும் பணியினையும் மேற்கொண்டது. கிராமப்புறப் பகுதிகளில் சாலை வசதிகளை அமைக்கவும், மேம்படுத்தவும் ஊராட்சி சாலைகளுக்கு மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வாடகைக்கு விடுவதற்காக இணையம் 3 சாலை உருளைகளை வாங்கியுள்ளது. இதன் மூலம் 1982-83-ம் ஆண்டில் 31-12-82 முடிய ரூ. 2.57 லட்சம் வருமானம் ஈட்டியுள்ளது.

4. தானிய சேமிப்பு மற்றும் உலோக குதிர்கள் விநியோகம்

மத்திய அரசின் "தானிய பாதுகாப்பு திட்டத்தின்" கீழ் நவீன தானிய சேமிப்பு உலோக குதிர்களை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் திட்டத்தை என்கோ பெட் தொடர்ந்து செயல் படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கான ரூ. 57 லட்சம் கடனாக அரசால் இணையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இணையத்தை சார்ந்துள்ள மையங்களின் மூலம் இதுவரை 12,322 உலோக குதிர்கள் தயாரித்து விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

5. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்

வட ஆற்காடு, ராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள மாவட்ட மற்றும் வட்டார மையங்கள் முதலமைச்சரின் சத்துணவு திட்டத்திற்கான 281 சத்துணவு கூடங்களின் கட்டுமான பணிகளை மேற் கொண்டுள்ளது. இப்பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 60 லட்சமாகும்.

எதிர்காலப் பணிகள்

கிராமங்களிடையே சாலை வசதிகளை மேம்படுத்த சாலை உருளைகளை தேவைப்படுவதால், இணையம் மேலும் சாலை உருளைகள் வாங்க உத்தேசித்துள்ளது. இணையம், கிரிஷ்பவர் டில்லர்கள் மற்றும் உதிரி பாகங்கள் விநியோக உரிமமும் பெற்றுள்ளது. இவற்றைப் பற்றி சிறப்பு பிரச்சாரமும் மேற் கொள்ளப்பட்டுள்ளது. அரசின் பட்டு உற்பத்தித்துறை மற்றும் இதர துறைகளுக்கும் இவை விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களிடம் இருந்தும் தனி நபர்களிடமிருந்தும் இதனைப் பற்றிய விவரங்கள் கேட்டு கடிதங்கள் வந்துள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

கல்வி

1982-83-ஆம் ஆண்டின் சாதனைகள்:—

1. பல்கலை கழகத்தில் 1982-83 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்ட வகுப்புகள் தொடங்கப் பெற்றுள்ளன.

(அ) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் தடுப்பு மருந்தியல், கால்நடை நோயியல் ஆகிய பிரிவுகளில் பி.எச்.டி. படிப்பு.

(ஆ) சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால் நடைப் பொது நல்வாழ்வியல், கொள்ளை நோயியல் ஆகிய பிரிவுகளில் எம்.வி.எஸ்.சி. பட்டப்படிப்பு.



(இ) தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் எம்.எஃப்.எஸ்.சி. பட்டப்படிப்பு.

2. பட்டுப்புழு வளர்ப்பியலில் பயின்ற முதுஅறிவியல் டிப்ளமோ படிப்புமுதல் பிரிவு மாணவர்கள் 39 பேர் 1982-83ல் தங்கள் படிப்பை முடித்துள்ளனர்.

3. ஆய்வு மற்றும் கல்வித் தொடர்பான செயல்முறைகளை வலிமைப் படுத்த, காட்டுப்பாக்கத்தில் கால்நடைச் சத்தூட்ட நிலையம், கோயம்புத்தூரில் பயிர் பாதுகாப்பு முதுநிலை ஆய்வு மையம் மற்றும் கோயம்புத்தூரில் நீர் வள உத்தி ஆய்வு மையம் ஆகிய மூன்று மேல் நிலை ஆராய்ச்சி மையங்கள் தொடங்கப் பெற்றுள்ளன.

4. மாநில விற்பனைக் குழுவின் நிதி உதவியுடன் வேளாண்மை விற்பனை நிர்வாகத்தில் ஒரு பதவி உருவாக்கப் பட்டது.

5. வேளாண்மைப் பொறியியல் கல்விப் புலத்தில் வேளாண் சக்தியியல் துறை என்ற புதிய துறையும் உயிர்சக்தியியலில் ஒரு வட்டார மையமும் தொடங்கப் பெற்றுள்ளன.

6. வட்டார ஆராய்ச்சி நிலையங்கள், பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சியில் முதுநிலைப் பட்டம் மற்றும் பி. எச். டி, பட்டம் பெறுவதற்கான நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன.

1983-84 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

(i) வேளாண்மை விற்பனை நிர்வாகப் பிரிவில் 1983-84ல் பட்டமேற்படிப்புக் கல்வி தொடங்கவும்;

(ii) பி.வி.எஸ்.சி. பட்ட வகுப்பில் ஆறுமாத காலப் பயிற்சியென்று தொடங்கவும்;

(iii) பல்வேறு பிரிவுகளில் சிறந்த தரமான பி.எச்.டி. பட்ட ஆய்வுரைகள், அறிவியல் நூல்கள் ஆகியவற்றைப் புதிப்பிக்கும் திட்டம் அமல் செய்யவும்;

(iv) பல்கலைக் கழக மட்டத்தில் கல்வி ஆலோசனைக் குழு, ஒன்று அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2 ஆராய்ச்சி

அ வேளாண்மை

1982-83—ஆம் ஆண்டின் சாதனைகள்

1982-83 ல் உழவர் பெருமக்களின் பயன் கருதி கீழ்க்கண்ட 20 புதிய பயிர் இரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவை வருமாறு—

1 கோ. 43 நெல்,
2 கோ. 44 நெல்.
3 பொன்மணி நெல்.
4 கோ. எச். 1. மக்காச்சோளம்.
5 எக்ஸ். 5 கம்பு.
6 எம்.சி.யு. 10 பருத்தி.
7 சி. என். 1. கம்பு-நேப்பியர் தீவனப்பயிர்,
8 கோ. 1 சணப்பு.
9 எட்ஜ் குதிரைமசால்.
10 கோ. அவரை.
11 கோ. 4 தட்டைப்பயிறு.
12 கோ. 1 சூரியகாந்தி.
13 கோ. 1 எள்.
14 கோ. 1. மாதுளை.
15 கோ. 3 பப்பாளி.
16 கோ. 4 பப்பாளி
17 கோ. 1 மஞ்சள்.
18 கோ. 1 வெந்தயம்.
19 கோ. 1 சுரைக்காய்
20 கோ. சி. 8201 கரும்பு

2. பயிர் நிர்வாகப் பிரிவில், சீரிய கண்டுபிடிப்புகள் வருமாறு:—

(1) நெல்லுக்குத் தழைச்சத்தைப் பிரித்துப் போடுவதை விட, யூரியாவைக் குறுணையாக்கிய கம்போஸ்டுடன் கலந்து போடுவது சிறந்ததாக இருந்தது.

புன்செயில் கரிசல் நிலப்பகுதியில் சோளம் மற்றும் கம்பு விதைகளைக் கார்போஃபியூரானுடன் கலந்து பருவம் வருவதற்கு நான்கு வாரம் முன்னதாக விதைத்தால் விளைச்சல் அதிகரிக்கிறது.

(2) மானாவாரிப் பயிரில் மக்காச் சோள விதைகளை விதைப்பதற்கு 1½ மணி நேரம் முன்னதாக தண்ணீரில் ஊற வைப்பதால் விளைச்சல் அதிகரிக்கிறது.

(3) ரைசோபியம் மற்றும் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் நாசிக்களைக் கலந்து செலுத்துவதால் தட்டை பயிரில் 30 சதவிகிதம் விளைச்சல் அதிகரிக்கிறது.



(4) டி. எம். வி. 7 நிலக்கடலையில் மேட்டுபாரில் வைக்கோல் மூட்டம் போடுவதால் விளைச்சல் 40 சதவிகிதம் அதிகரிப்பதோடு இலைவழிப் பூச்சித்தாக்குதலும் குறைவாக உள்ளது.

(5) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2 என் இரகத்தில் ஒரு எக்டருக்கு 15 கிலோ தழைச்சத்து 20 கிலோ மணிசத்து 600 கிராம் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் ராசி ஆகியவற்றைக் கலந்து போடுவதால் 35 சதவிகிதம் அதிக விளைச்சல் ஏற்படுகிறது. மேலும் தேவையான தழைச்சத்தின் அளவும் குறைகிறது.

(6) ஒரு எக்டருக்குச் சோடியம் மெடாசில்விகேட் 12 கிராம் அளவை 6-வது 8-வது 10—வது மாதங்களில் பிரித்துப் போடுவதால் கரும்பில் சர்க்கரை சத்து 2.17 சதவீதம் அதிகரிக்கிறது.

(7) பயிர் பாதுகாப்பு நிலையில், நெல்லில் பெந்தியான் 0.1 சதவீதம் அளவை இலைவிடும் பருவத்தில் ஒரு முறையும் இருவாரங்கள் கழித்து ஒரு முறையும் தெளிப்பதால் வெள்ளை நுனி நூற்புழு நடமாட்டம் குறைகிறது.

(8) கரும்புப் பயிரில் ரிடோமல் மருந்தை ஒரு எக்டருக்கு 8 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்வதாலும் 0.1 சதவீதம்அளவு மருந்தை விதைத்த 20 நாளைக்கு பின்னர் இலை வழியே தெளிப்பதாலும் அடிச்சாம்பர் நோய் தடுக்கப் படுகிறது.

9 பண்ணைத் தொழு உரக்குழிகளில் மெட்டாரைஸீயம் அனிசோபிலை பூசனத்தைப் போட்டு வைப்பதால் தென்னைப் பயிரில் காண்டாமிருக வண்டுப்புழு முற்றிலும்கட்டுப் படுத்தப்படுகிறது.

3. பல்கலைக் கழகம் கீழ்க்கண்ட சாதனங்களையும் கருவிகளையும் உருவாக்கியுள்ளது:—

(1) விதைக்கும் பார் தயாரிப்புக் கருவி
(2) சமப்படுத்தும் கருவி.
(3) இயந்திரக்கலப்பை.
(4) பல நிலை உழும் கருவி.
(5) விதை நனைப்பான்.
(6) ஒற்றை வரிசை விதைக்கும் கருவி.
(7) பார் அமைக்கும் இயந்திரக்கருவி
(8) மண் அமைத்தல் மற்றும் விதைக்கும் கருவி
(9) பயிர் பாதுகாப்புக் கருவிகள்—மும்முகத் தெளிப்பான் மற்றும் நீண்ட தடைப்பான்.

(10) மஞ்சள் விதைக்கும் கருவி.

(11) நிலைக்கடலைப் பிடுங்கும் கருவி.

(12) மரவள்ளிக்கிழங்கு வெட்டும் கருவி.

(13) உழவர் பெருமக்களுக்குத் தேவையான கருவிகள்.

(14) இயற்கை எரிவாயு பர்னர்.

(15) இலைப்புரதம் பதனக்கருவி.

(16) பாக்கு—தரம்பிரிக்கும் கருவி.

(17) மிளகாய் விதைப்பிரிக்கும் கருவி.

(18) நெல்புழுக்கும் கலன்.

(19) பருப்பு உடைக்கும் கருவி.

(20) குறைந்த செலவிலான காகித வார்ப்படக்கருவி.

1983–84 ஆம் ஆண்டிற்கான திப்பில்கள்

கீழ்க்கண்ட ஆராய்ச்சித் திட்டங்களை இவ்வாண்டில் செயல்படுத்தப் பல்கலைக்கழகம் திட்டமிட்டு உருவாக்கியுள்ளது.

(அ) பயிர் தட்பவெட்ப ஆராய்ச்சி மற்றும் தட்பவெப்ப நிலையை சமப்படுத்த பொருத்தமான உத்தி முறைகளை உருவாக்குதல்.

(ஆ) புன்செய் நிலத் தொழில் நுணுக்கம் பற்றி செய்முறை ஆராய்ச்சித்திட்டம்.

(இ) பெரியார், இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் தீவனப்புல் வகைகள் மற்றும் பயிறு வகைப் பயிர்களை மேம்படுத்துதல், மேய்ச்சல் புல்வெளிகளை மேம்படுத்துதல்.

(ஈ) ஈதனால் உற்பத்திக்குப் பொருத்தமான சர்க்கரை வள்ளிக்கிழங்கு மற்றும் மரவள்ளிக்கிழங்கு இரகங்களை மேம்படுத்துதல்.

(உ) எரிபொருள் சக்திக்குப் பயன்படும் மரக்காடுகளை ஆராய்தல்.

(ஊ) பல்வேறு பயிர் சாகுபடி முறைகளில் ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாட்டு நிர்வாகம்.

(எ) தேனீ வளர்ப்பில் மரபியல் மேம்பாட்டு ஆராய்ச்சி.

(ஏ) நெல் மற்றும் பழம் அடிப்படையான வேளாண் தொழில்கள் பற்றிய ஆய்வு.

(ஐ) ஆள் திறனை மிச்சபடுத்தும் சாதனங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் வடிவமைத்தலும் உருவாக்குதலும்.



**ஆ. கால்நடை மற்றும் விலங்கின அறிவியல்**

1982–83 ஆம் ஆண்டின் சாதனைகள்

1. கலப்பினப் பசுக்களுக்கு கருக்கொள்ளும் காலம் நடுத்தர வெயில் காலத்திலும் தென்மேற்குப் பருவக்காற்று வீசும் காலத்திலும் அதிகமாக இருக்கும் என அறியப்பட்டுள்ளது. வெக்கை நோயைக் கண்டறிய புதிய முறை ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. எலும்புருக்கி நோய் மருந்துகளை கண்டறிய ஸ்டார் மோண்ட் சோதனை மிகுதியும் பயன்படும் எனத் தெரிந்தது.

2. வெள்ளை லெகான் இனத்தில் முட்டை எடை மற்றும் சதை எலும்பு விகிதம் கூட்டுக்குள் வளரும் போது அதிகமாக இருந்தது வெளியில் வளர்க்கப்படும் கோழிகளுக்கும் மஞ்சள் கருவின் நிறம் அதிகமாக இருக்கிறது. எனவே 72 நாள் வயது வரையுள்ள வெள்ளை லெக்கான் குஞ்சுகளுக்கு 5 சதவீதம் மீன் சத்து நிறைந்த உணவைக் கொடுத்துச் சிக்கனமாக வளர்க்கலாம் என இந்த ஆராய்ச்சியால் அறியப்பட்டுள்ளது அதிகபுரதச் சத்துமிகுந்த உணவைத் தந்தால் கோழிகளின் இறைச்சியிலும் புரத சத்து அதிகம் உள்ளது. மற்றச் சத்துகளின் அளவு குறைந்த அளவே உள்ளது.

3 இறைச்சித் தொழில் நுணுக்கத் துறையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம், தெளிப்பான் மூலம் சுத்தம் செய்யப் பட்ட வெள்ளாட்டு இறைச்சியில் 20 பிபிஎம் எஞ்சிய குளோரின் உள்ளது என்றும் இ இறைச்சியில் நுண்ணுயிர்களை குறை கிறது என்றும் இதனால் இறைச்சியின் தரம் பாதிக்கப்படுவதில்லை என்றும் அறியப்பட்டுள்ளது. தெளிப்பான் மூலம் சுத்தம் செய்ய ஒரு ஆட்டின் இறைச்சிக்கு 5 பைசா மட்டுமே செலவாகிறது.

1983-84-ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

விலங்கின அறிவியல் பிரிவில் கீழ்க்கண்ட செயல் முறைகளைச் செய்யப் பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது.

(அ) தமிழ்நாட்டில் செயற்கை இறைச்சி ஆட்டு வகையை உருவாக்குதல்.

(ஆ) அம்மைப்பால் ஆராய்ச்சி மையம் அமைத்தல்.

(இ) முட்டை உற்பத்திக்கான வாத்துக்களை இனப் பெருக்கம் செய்தல்.

(ஈ) இறைச்சிக்கான முயல்களை உருவாக்குதல்.

மீன் வள அறிவியல்

1982-83 ஆம் ஆண்டின் சாதனைகள்

1. கழிவு நீரினால் உண்டாகும் தூய்மைக்கேடு பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. இதில் அறியப் பெற்ற முடிவுகள். மீன் பிடிப்பு துறை தண்ணீரில் பாஸ்பரஸ் கிடக்கை அதிகமாக உள்ளது. மொத்த தரையும் பாஸ்பரஸி அங்கக கரையும் பொருளின் அளவு 60—80 சதவிகிதம், உப்பங்கழி நீர்ப்பகுதியில் பிஓடி. மதிப்பு சுமார் 200 பி.பி.எம். அளவும் கரைந்த உயிர்வலி மதிப்பு ஒரு லிட்டருக்கு 3.2 மி.லி அளவும் இருந்தன. திலேப்பியா முதலிய தீவிர வளர்ச்சியுடைய மீன் வகை போன்றவை 50 சதவிதம் அளவு கழிவு நீர் கலந்த உப்பங்கழிகளில் வளர்கின்றன. ஆனால் மூங்கில் மீன் வகைகள் போன்றவ 10 சதவிகிதத்துக்கு மேல் கழிவு நீர் கலந்த உப்பங்கழிகளில் வளர முடியாது என்றும் அறியப்பட்டுள்ளது.

2. நான்கு வகை மற்றும் ஆறு வகை மீன்களின் கலப்பு மீன் வளர்ப்பில் ஒரு ஆண்டுக்கு ஒரு எக்டருக்கு முறையே 3,398 கிலோ, 6,160 கிலோ மகசூல் கிடைத்தது. இதில் கட்லா மீன் வகை இரு வகை வளர்ப்பிலும் அதிகமாக வளர்ச்சி விகிதம் பெற்றிருந்தது,

3. துடுப்பு மீன் வகை வளர்க்க ஜி.ஐ. குழாய்கள், 1 செ.மீ வலைத்தகடு ஒற்றை இழை அமைப்புடன் கூடிய மிதவைக் கருவியுடன் கூடிய வளர்ப்புத் தொட்டி ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. தண்ணீரில் 3.5. மீட்டர் ஆழத்துக்கு மிதவைக் தொங்கிக் கொண்டிருக்கும் சாதாரண மீன் வளர்ப்பு முறைகளை விட அதிகமான அளவில் இம்முறையில் மீன் இருப்புச் செய்யலாம்.

4. சில்லா, செராடா என்ற மீன் வகையில் மிகுதி பரவல் ஆகியவை பற்றி தூத்துக்குடி கடற்கரையோரப் பகுதியில் ஆராய்ச்சி செய்யப்பட்டது. புல்லவழி என்ற புதர்ப் பகுதி நீர் துறையில் இம்மீன் வகை அதிகம் காணப்பட்டது. ஆய்வுக்கூடச் சூழலில், நண்டுகள் நத்தை இறைச்சியை உண்டு நன்றாக வளர்ந்தன. பெண் நண்டுகளின் முட்டைகள் 15—20 நாட்களில் முதிர்ச்சி பெறுகின்றன. நண்டு பிடிக்கும் கருவிகள் உருவாக்கப் பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் சோதனை செய்ததில் 15 நிமிடங்களுக்கு 1 நண்டு வீதம் பிடிக்கப்பட்டுள்ளது.

5. இறால் மீன் வகை ஒரு குளத்தில் வளர்க்கப்பட்டது. அதன் உப்புத் தன்மை 5—8 சதவீதம் இருந்தது. பிடிக்கப்பட்ட இறால்கள் 4 மாதத்தில் 10—14 செ.மீ.நீளமும் 10—17 கிராம் எடையும் உள்ளனவாக இருந்தன. இவற்றின் நிலைபெற்று விகிதமும் அதிகம் இருந்தது.

6. கூடார அமைப்புக் கொண்ட சூரிய வெளிச்சத்தில் மீன் உலர்த்தும் கருவி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு மூங்கில், கருப்பு மற்றும் வெள்ளை பாலிதீன் பயன்படுத்த



பட்டது. இதில் 40 டிகிரி சென்டிகிரேடு வெப்பம் இருப்பதால் இந்த கருவி விரைவாகவும், சீராகவும் உலர்த்தும் பணியைச் செய்கிறது. சோதனைக்காகச் செய்யப்பட்ட இக்கருவி கடந்த ஆறு மாதத்துக்கு மேலாக நன்கு பயன்பட்டு வருகிறது.

1983-84 ஆம் ஆண்டிற்கான திட்டம்

மீன் மற்றும் இறால் மரபியல் வளங்கள் வீண வகைத் தடுக்கவும் அதனைச் சீரிய முறையில் நிர்வகிக்கவும் ஆராய்ச்சிகளை தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது உழவர் பெருமக்களின் வருமானத்தையும் வேலை வாய்ப்பையும் பெருக்க நலிவுற்ற கிராமங்களில் பயிர்சாகுபடி—கால்நடைப் பாரமரிப்பு மீன்வளர்ப்புப் பண்ணையம் ஆகியவற்றை செயல்முறை படுத்தும் நோக்கத்தோடு மறு சுழற்சி முறையில் பண்ணைக் கழிவுகளைப் பயன்படுத்தியும் துணை உற்பத்திப் பொருள்களைப் பயன் படுத்தியும் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்புப் மற்றும் கால்நடைப் பராமரிப்பு முறைகளைச் சீரிய முறையில் தொடங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(3) விரிவாக்கக் கல்வி

1982-83-ம் ஆண்டின் சாதனைகள்

(அ) தொழில் நுணுக்கச் செய்திகளைப் பரப்பும் நோக்கில் விரிவாக்க் கல்வி நெறியகம் கீழ்க்காணும் பல்நோக்கு அணுகு முறைகளைப் பின்பற்றியுள்ளது:—

(1) பண்ணை அறிவியல் நிலயம் தலைமையிடத்திலும் வெளியிடங்களிலும் பயிற்சித் திட்டங்கள் நடத்தியது இதனால் ஆண், பெண் உழவர் பெருமக்கள் 8,200 பேர் பயன் பெற்றனர்.

(2) ஆய்வுக்கூடத்திலிருந்து பண்ணைக்கு ஏற்ற திட்டத்தின் கீழ் சுமார் 3,000 கிராமப்புறக் குடும்பங்கள் ஏற்கப் பட்டுள்ளன.

(3) சுமார் 200 ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் பதிவு செய்யப்பட்டு வானொலியின் மூலம் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

(4) 17 புத்தகங்களும் சிறு புத்தகங்களும் வெளியிடப் பெற்றுள்ளன.

(5) பல்கலைக் கழகம் வழங்கும் அஞ்சல் வழிக் கல்வியில் சுமார் 500 விவசாயிகள் சேர்ந்துள்ளனர்.

(6) வானொலியின் பண்ணை ஒலிபரப்பின் மூலம் 52 பாடங்கள் ஒலிப்பரப்பப்பட்டுள்ளன.

(7) விவசாயிகள் எழுப்பிய சுமார் 4,000 ஐயக் கேள்விகளுக்கு தகவல் தொடர்பு நிலையம் விடையளித்துள்ளது.

(8) பல்வேறு பயிர்கள் பற்றி 68 அனுசரணை ஆராய்ச்சி சோதனைகள் நடத்தப் பெற்றன. ரூபாய் 2, 67 இலட்சம் மதிப்புள்ள 59 டன் பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) பால்பண்ணையம், பட்டுப்புழு வளர்ப்பியகு ஆகியவற்றில் புதிய அறிவியல் முறைகளில் பெண்களுக்கு பயிற்சியளிக்க புதிய திட்டம் தொடங்கப் பெற்றுள்ளது. இதற்கு ஃபோர்டு நிறுவனம் நிதியுதவி அளித்துள்ளது.

(இ) தேசிய அளவில் 27 கருத்தரங்குகளும் அனைத்துலக அளவில் 1 கருத்தரங்கும் 1982-83-ல் நடத்தப் பெற்றுள்ளன.

136003
சென்னை-600 008
Y811.31 N83
N83. 45-4